

வாகீசகலாநிதி, முனைவர்

கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.d

அவர்களின்

மணி விழா மலர்

06.04.2013



Dr. Kanagasabapathy Nageswaran's

MANI VIZHA

Felicitation Volume

மலர் ஆசிரியர்

எஸ். வை. ஸ்ரீதர்

முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சர்வகலாசாலை பல்கலைக்கழகம்

சமர்ப்பணம்

அறுபதாவது அகவை நிறைவுற்றுள்ள

சித்தாந்தபண்டிதர், வாகீசகலாநிதி, அருட்கலைமாமணி

டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.d

அவர்களைப் பாராட்டு முகமாக இம் மலரைப்

பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

Dedication

This special volume is presented to

Dr. Kanagasabapathy Nageswaran

in appreciation and affection to felicitate

him upon the Completion of

his sixtieth year.

உ

சிவமயம்

சித்தாந்தபண்டிதர், வாகீசகலாநிதி,

அருட்கலைமாமணி

டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன், M. A., Ph. d

அவர்களின்

மணிவிழா மலர்

மலராசிரியர்

எஸ். வை. ஸ்ரீதர்

முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

SIDDHANTA PANDIT, VAKEESA KALANITHI,

DR. KANAGASABAPATHY NAGESWARAN'S

Mani Vizha Felicitation Volume

EDITOR

S. Y. SIRITHAR

SENIOR LECTURER, DEPT. OF LANGUAGES

SABARAGAMUVA UNIVERSITY OF SRI LANKA. BELIHULOYA.

வெளியீடு :

மணிவிழாக்குழு

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

06.04.2013

நூல் : கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலர்

பதிப்பாசிரியர் : எஸ். வை. ஸ்ரீதர்

உரிமை : எஸ். வை. ஸ்ரீதர்
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா.
தொ. பே. : 071 4453444

விலை : ரூபா 400 /=

முதற்பதிப்பு : ஏப்ரல் 2013

அச்சிட்டோர் : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13
தொ. பே. 011 – 2330195

வெளியீடு : மணிவிழாக் குழு,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம், இலங்கை.

Title : Dr. Kanagasabapathy Nageswaran's Felicitation Volume

Author : S. Y. Sirithar

Copy Right : S. Y. Sirithar
Senior Lecturer, Dept. of Languages
Sabaragamuva University of Sri Lanka.
Belihuloya.
Tel : 071 4453444

Price : Rs. 400 /=

First Edition : April 2013

Printed by : Unie Arts (Pvt) Ltd.
48B, Bloemendhal Road, Colombo 13
Tel : 011 2330195

Publishers : Mani Vizha Committee
Chulipuram East, Chulipuram, Sri Lanka.

ISBN : 978-955-4745-06-3






நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள்




கலாநிதி நாகேஸ்வரனின் தாயும் தந்தையும்



கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்



கலாநிதி நாகேஸ்வரன் தம்பதி


கலாநிதி நாகேஸ்வரன்
குடும்பத்தினர்

UNIVERSITY OF PERADENIYA
SRI LANKA



This is to certify that

Kanagasabapathy Nageswaran

having successfully completed the prescribed Courses of Study and the Examinations of this University was admitted to the Degree of

DOCTOR OF PHILOSOPHY

on

13th August, 2008

and

was awarded this certificate at the Convocation holden in Peradeniya on Twenty Sixth February, 2009.

Witness our hands this Twenty Sixth Day of February in the Year Two Thousand Nine.



Vice-Chancellor

Acting Registrar

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

This is to certify that

Kanagasabapathy Nageswaran

was admitted to the Degree of

Master of Arts

on

23rd July 1987

and was awarded this certificate

at a Convocation

holden in Jaffna on *26th November 1988*

Witness our hands this *Twenty Sixth Day of Novembe*

One Thousand Nine Hundred and *Eighty Eight*

Vice-Chancellor

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்

சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பியப் பெருவிழா

தொல்காப்பியர் ஆண்டு 5008 / கி. பி. 2008

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற

சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பியப் பெருவிழாவில்

சிலப்பதிகாரச் சிறப்புப் பற்றி மிக உயரிய சிறப்புரை நிகழ்த்திய

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு

அவர்களின் ஆய்வுத் திறனைப் பாராட்டிச்

"செம்மொழிப் புலமையாளர்" எனும்

சிறப்பு விருது வழங்கப்பெற்றது.

12-12-2008
திகதி

தமிழ்வேள் இ. க. கந்தசுவாமி
கழகச் செயலாளர்

பதிப்புரை

எம் பெருமதிப்பிற்கும், பேரன்பிற்கும் போற்றுதற்கும், பாராட்டுதற்குமுரிய முதுநிலை விரிவுரையாளர் அருட்கலை மாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீச கலாநிதி, சொற்பேராழி டாக்டர் கனகசபாபதி நகேஸ்வரன், M. A, Ph d. அவர்களது மணிவிழாவையொட்டி இம் மலர் மணிவிழாக் குழுவினரால் வெளியிடப்படுகிறது. மணிவிழாவை யொட்டி வெளியிடப்படும் இந்நூலில் அவர் பற்றிய செய்திகள் வாழ்த்துக்கள் என்பன இடம் பெற்றுள்ளன.

கலாநிதி க. நாகேஸ்வரன் நாவலப்பிட்டி கனிஷ்ட வித்தியாலயத்திலும், நயினாதீவு மகாவித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கல்வியைக் கற்றுப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே கலாநிதிப்பட்டத்தைப் பெற்றவர். முத்தமிழிலும் பாண்டியத்தியமும், திறமையும் கொண்ட வாகீசகலாநிதி தமிழிலே புலமையும் வித்துவமுங் கொண்ட சான்றோர் பலரிடத்தும் தொடர்புள்ளவர். வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதை புனிதவதி, நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதப்பிள்ளை, பண்டித வித்துவான் ப. க. குகதாசன் அதிபர் சபா. ஆனந்தர், ஆத்மஜோதி நா. முத்தையா, அறிவொளி த. சண்முகசுந்தரம், மகாஜனச் சிற்பி தெ. து. ஜெயரத்தினம், பேராசிரியர்கள், கலாநிதிகள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், நா. சுப்பிரமணியன், கா. இந்திரபாலா, சித்திரலேகா மௌனகுரு ஏ. ஜே. கனகரட்னா, நா. பாலகிருஷ்ணன், கா. கைலாசநாதக் குருக்கள், ப. கோபாலகிருஷ்ணன், க. அருணாசலம், பேராசான் சி. பத்மநாதன் ஆகியவர்களிடம் விரிவுரைகள் கேட்டவர். இலங்கை வானொலியிலும், ஈழநாடு பத்திரிகையிலும் பணியாற்றியவர்.

நேர்முக வர்ணனையாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளர் என்று இன்றும் கலைப்பணி புரிபவர். பண்ணுடன் திருமுறைகளைப் பாடவல்ல இவர் ஒரு வில்லிசைக் கலைஞருமாவார். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் குடும்பத்திலும், நயினை வரகவி நாகமணிப் புலவர் பரம்பரையிலும் உதித்தவர். நல்ல சமயச் சொற்பொழிவாளரான கலாநிதி நாகேஸ்வரனின் விரிவுரைகள் மாணாக்கரை ஈர்த்துப் பிணிக்கவல்லன. பல்கலைக்கழகத்திலே மொழிப்பீடத்திலே கற்கும் அனைத்துமாணவரின் அன்பிற்கும் பாத்திரமானவர் இவர். புலமையும், வித்துவமும். எழுத்தாற்றலுஞ் சிந்தனை வளமும் நிரம்பப் பெற்ற முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரனின் எழுத்து வளத்தையும் மதிப்பையும் புலமையும் இம்மலர் பறைசாற்றுகிறது. இம்மலரை வெளியிடுவதில் மணிவிழாக் குழு மிகுந்த பேருவகையும் மகிழ்ச்சியுமடைகிறது. இன்னும் பல அரிய சிந்தனை ஆழங் கொண்ட கட்டுரைகளையும், ஆய்வுகளையும் எழுதியும், வெகுவிரைவிலே தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியுயர்வினைப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்தியமைகிறேன்.

மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

அன்புடன்
எஸ். வை. ஸ்ரீதர்
பதிப்பாசிரியர்
மணிவிழாக் குழு

முகவுரை

இந்நூல் கல்விமானும், கலைஞரும், ஆய்வறிஞருமான கலாநிதி கனகசபாபதி நகேஸ்வரன், M.A.Ph.d அவர்களது மணி விழாவை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலராகும். நாடறிந்த பேராசான், சொற்பொழிவாளர், வெகுஜன ஊடகவியலாளர், நேர்முகவர்ணனையாளர் எமது விழா நாயகர் அவர்கள். அவரது வாழ்க்கை, கல்வி, உயர்கல்வி, செயற்பாடுகள், முயற்சிகள், சாதனைகள், நட்புறவுகள் இன்னும் பல அம்சங்களைக் குறிக்கும் தகவல்கள் இச் சிறப்புமலரிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகு சிறப்புமலரொன்றை வெளியீடு செய்து தமிழ் கூறு நல்லுலகிற்கு உபசரிப்பதையிட்டுப் பெருமையும் பெருமிதமும் அடைகிறோம்.

மணிவிழா நாயகர் பணிகள் சிறக்கட்டும்
வாழ்த்துக்கள்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

இங்ஙனம்
மணிவிழாக் குழுவினர்
28.01.2013



மணிவிழாக்குழுவினரின் வாழ்த்து



மக்கள் மனதில் குடிகொண்டவர், வெகுஜன ஊடகங்களிலே தமது புலமையாலும், திறமையாலும், இசைவளத்தாலும் பல்வேறு கலாசார சமய நிகழ்வுகளிலே பங்கேற்றுச் சைவத்திற்கும், தமிழுக்கும், இலக்கியத்திற்கும் பெருந்தொண்டாற்றுபவர். தமது எழுத்தாளுமையினாலே பல நல்ல நூல்களை எழுதியவர், ஏறக்குறைய இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர், கல்விமான் பேராசான். இளகிய உள்ளம் படைத்த அறங்காவலர்; அன்பர்; எம் நெஞ்சங் கவர்ந்த வாகீசகலாநிதி, சொற்பேராழி, அருட்கலைமாமணி, அருள்மொழிச் செல்வர், நவரஸக் கலைஞானி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு மணிவிழாக்குழுவினரின் சார்பில் இவ்வாழ்த்தினை எழுதுவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

இவர் எமது சப்ரகமுவபல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சொத்து. ஆழ்ந்த புலமை, எழுத்துவன்மை, சிந்தனைத்திறன், மும்மொழி ஞானம், சமயபக்தி ஈடுபாடு, மொழிபெயர்ப்பு ஆகியவற்றிலே தன்னிகரற்ற ஆசானாகத் திகழ்கிறார். பட்டதாரிகளின் நெஞ்சில் உறையும் திருவுருவினர். மிக விசாலமான குணநலப் பண்புகளைக் கொண்டவர். எவரையும் சுலபமாக ஈர்த்து வழிப்படுத்தும் சால்பினர். வேண்டிய போது உதவிகளைச் செய்யும் பரோபகாரி. மிகவும் உற்சாகமுடையவர். 1996 ஆம் ஆண்டு சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையிலே சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவியேற்றார்.

தற்போது தரம் I இல், பணியாற்றுகிறார். பல்கலைக்கழக சேவையில் இருபத்தொரு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளார். இவர் தமது கலாநிதிப்பட்டத்தினைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்துறையிலே பெற்றுக் கொண்டார். இவரது ஆய்வுமுயற்சிகள் எம் போன்றோருக்கு வழிகாட்டுகின்றன எனலாம்.

இவரிடம் கற்ற பலர் யாழ். பல்கலைக்கழகத்திலும், சப்ரகமுவபல்கலைக்கழகத்திலும் இருந்து வெளியேறியுள்ளனர் என்பதுடன் கொழும்பில் Tamil Virtual University எனப்படும் தமிழ் இணையப் பல்கலைக்கழக வளவாளராயும் பணியாற்றுகிறார். கலாநிதி நகேஸ்வரன்

அவர்கள் தமிழ்க்கவிதை, கட்டுரை, விமர்சனம் என்னும் துறைகளில் ஈடுபாடுமிக்கவராவார். மிகவும் ஆழமான நகைச்சுவையுணர்வு கொண்டவர். இவரது வசனிப்பு எவரையும் ஈர்க்கவல்லது. எப்போதும் மாணவ மாணவியரின் உயர்ச்சிகளிலும், கல்வி மேம்பாடுகளிலும் அக்கறையுடன் ஆர்வத்துடன் செயற்படுவார்; உதவிகளும் புரிவார்.

இவர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார். வாகீசகலாநிதியின் மணிவிழாவினை ஏற்பாடு செய்து நடத்துவது எமக்கெல்லாம் பெருமை தரவல்லது. எமது குழுவினர் மிகமிக உளமகிழ்வடைகின்றனர். தன்னலமற்ற தொண்டன், கீர்த்திமான், இன்னிசைச் சொல்வேந்தன், டாக்டர் நாகேஸ்வரன் மேன்மேலும் தமது அன்புமனையாள், பிள்ளைகளுடன் சுகமாகவாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

நடராசா சத்திய ரூபன்

பட்டதாரி ஆசிரியர்,

அமைப்பாளர்,

(மணி விழாக்குழு சார்பில்)

சுழிபுரம் கிழக்கு,

சுழிபுரம்.



மணிவிழாக் குழுத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

சிந்தனைத்திறன், சொற்றிறன், செயற்றிறன் மிக்கவர்



பெருமதிப்புக்குரிய வாக்சகலாநிதி, முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவினையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வடைகிறேன். கால்நூற்றாண்டுக்கு மேலாக அவருடன் தொடர்புடையவன் என்றவகையில் அன்னாரின் சிந்தனைத்திறன், சொற்றிறன், செயற்றிறன் யாவும் அறிந்த நிலையில் அவராற்றி வரும் அறப்பணிகளும், தமிழ்ப்பணிகளும் உச்சமானவை. இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகள் பலவற்றிலும் கருத்தரங்குகளிலும், சமயச் சொற்பொழிவுகளிலும் கலந்துகொண்டு இத்துறைகளில் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர்.

அறுபதாண்டுகளைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவருக்கு அவர் தம் மாணவர்களும் அன்பர்களும் ஒன்றிணைந்து மணிவிழா எடுத்து அவரது பணியை ஏற்றியும் போற்றியும் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நாளில் வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு எனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
அதிபர்
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.



மணிவிழாக்குழு இணைத்தலைவரின் வாழ்த்துச் செய்தி



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும், மணிவிழாக் காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை வாழ்த்தக்கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மனமகிழ்ச்சியடைகிறேன். நயினாதீவில் பிறந்து வளர்ந்து இலங்கையின் பலபாகங்களிலும் தமது சொற்பெருக்கினையாற்றித் தன் சேவையை வழங்கிப் பல மாணவர்களை உருவாக்கியவர். அவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் இன்று பல்வேறு நிறுவனங்களில் ஆளுமை மிக்கவர்களாக மிளிர்வது அவரின் சேவையை வெளியுலகிற்கு உணர்த்திநிற்கிறது.

Dr. க. நாகேஸ்வரன் அவர்கள் பல்வேறு ஆளுமைப் பண்புகளை உடையவர். சிறந்த கல்வியாளர், இலக்கிய ஆய்வாளர், கலைஞர், சிறந்த சொற்பொழிவாளர் என்று பல துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி மிளிர்ந்தவர். இவர் சிறந்த எழுத்தாளருமாவர். இவ்வாறான சிறப்பு அம்சங்களைக் கொண்டு விளங்கும் நாயகனை மணிவிழாக்காணும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதிற் பெருமையடைகிறேன். இன்னும் பல சமூக சேவைகள், கல்விப்பணி, பேருரைகளாற்றிப் பல ஆண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்.

கு. விமலன், M.Ed,
அதிபர், யாழ்/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி



மணிவிழாக் குழுச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



எனது பல்கலைக்கழகப் பிரவேசம் சுன்னாகம் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலிருந்து இலங்கைச் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு அமைந்தது. இப்பிரவேசம் எனது வாழ்வின் ஒரு மகிழ்ச்சியான திருப்பத்தினை ஏற்படுத்தியது என்றே கூறுவேன். 2000 ஆம் ஆண்டு சிங்களப்பிரதேசத்தில் எனது உயர்கல்விக்கான வாய்ப்பைப் பெற்றபோது, தலைகால் புரியாத சந்தோஷத்தினையும் மறுபுறம் இனந்தெரியாத பயத்தினையும் ஒரே நேரத்தில் அனுபவித்தேன். அவ்வேளைதான் எனது கல்லூரியில் எனது நல்லாசானாய் இருந்த செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் எனது உயர்கல்வியை மேலே தொடரவேண்டும் என்பதில் குறியாய் இருந்ததினால், "சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே எனது நண்பர் ஒருவர் சிரேஷ்ட விரிவுரையாளராய் இருக்கிறார்: அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன்: உமக்கு வேண்டிய உதவிகள் செய்வார்; உடனே பல்கலைக்கழகம் செல்லும்" என்று கூறி ஓர் அறிமுகக் கடிதத்தினைத் தந்து அனுப்பிவைத்தார். அன்று ஏற்பட்ட அறிமுகமும், நட்புணர்வும் தான் இன்று எனது குருவாய் அமையும் மணிவிழா நாயகர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். உண்மையில் நான் இவரது மாணவி என்று கூறிக்கொள்வதில் இப்பிறவியின் பயனைப் பெற்றுவிட்ட பெரும்பேறாகவே கருதுகிறேன்.

சமூக விஞ்ஞான மொழிகள் பீடத்தில் நான் தமிழ்மொழியைப் பிரதானபாடமாயும், கணினி விஞ்ஞானத்தினைத் துணைப் பாடமாயும் மேற்கொண்டு 2003ஆம் ஆண்டு மொழித்துறையில் சிறப்புப்பட்டம் பெற்று வெளியேறினேன். எனக்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியமும், புலமையும் பெறும் வகையிலே மதிப்பார்ந்த விரிவுரையாளராயும், சிறந்த வழிகாட்டியாயும் தொழிற்பட்டவர் எனது ஆசான் கலாநிதி நாகேஸ்வரன் அவர்களே. இவரது பன்முகப்பட்ட ஆளுமைகளை எனது நண்பர்கள் வட்டம் மட்டுமல்ல பரந்தளவிலான, புலம்பெயர் நாடுகளில் வாழும் இவரது மாணவர்களின் மட்டமும் பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை. இன்று இலங்கையில் மட்டுமல்லாது, பல ஐரோப்பிய நாடுகளிலேயும் தன் நாவன்மையை நிலைநாட்டிய இவரது ஆளுமையை இன்று யாழ். மண் மணிவிழாவில் கண்குளிரக் கண்டுகொண்டிருக்கிறது என்று எண்ணும் போது உள்ளம் களிபேருவகையடைகிறது.

எங்களது அன்பான குருவிற்கு மணிவிழா என்றதும் விழிப்படைந்தோம். எமது சிரேஷ்ட மாணவ சகோதரர்களையும், எம்மோடு கற்ற சகபாடிகளையும், எமது கனிஷ்ட சகோதரர்களையும் அழைத்து ஆலோசித்து மணி விழாவினை வெகு சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று தீர்க்கமான முடிவினை எடுத்துக் கொண்டோம். இவ் விழாவிலே 'மணிவிழாச் சிறப்புமலர்' ஒன்றையும் நாம் வெளியிட வேண்டும் என்று எண்ணினோம். அந்தவகையில் பன்முக ஆளுமைகளும் கொண்ட கலாநிதி நாகேஸ்வரனின் வரலாறுபேசும் இச் சிறப்புமலருக்கு மணிவிழாக்குழுவின் செயலாளர் என்ற வகையிலே எனது குடும்பத்தினது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, எதிர்காலத்தில் கலாநிதி அவர்கள் உயர்புகழும், பெரும் பதவிகளும், குடும்ப சுகமும், நீண்ட ஆயுளும் பெற்று வாழவேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"குருவில்லா வித்தை பாழ்"

திருமதி சசிரஜனி குகானந்தன்,
(பட்டதாரி ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.)



மணிவிழாக் குழு உபச்செயலாளரின் வாழ்த்துச்செய்தி

ஒரு தந்தையாக நல்ல நண்பனாகப் பழகிய பேராசான்



"சொற் பேராழி", "வாகீசகலாநிதி" டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவில் எனது பங்களிப்பும் இருப்பதையிட்டு நான் பேருவகை அடைகிறேன். அருட்கலைமாமணி, கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பெலிகுல்லோயா சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளர் என்பதையே பெரும்பாலானோர் அறிவார்கள். ஆனால் அதனை விடவும் மேலாக, இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து கல்வி பயில வரும் தமிழ் மாணவர்களுக்கு ஒரு தந்தையாக, ஒரு நல்ல நண்பனாக எங்களிடம் பழகிய பேராசான் ஆவார்.

நாங்கள் 1999/2000 கல்வியாண்டு மாணவர்களாகப் பல்கலைக்கழகத்தில் கால் அடிவைத்த வேளை மீசையுடனும் மிடுக்குடனும் சித்தாந்த பண்டிதர் டாக்டர் K. நாகேஸ்வரன் அவர்களை தூரத்தே கண்டபோது, ஒரு தமிழ் இந்துவாக இருப்பார் என எண்ணினோம். எமது எண்ணம் பொய்க்கவில்லை. இனிமையாக உரையாடி எங்களை எல்லாம் அரவணைத்தார். எமது பேராசான் சொற்பொழிவு ஆற்றும் போது கேட்போர் செவிகள் இனிக்கத் தமிழ் பேசுவது மட்டுமல்லாது நகைச்சுவையுடன் சொல்ல வந்த செய்தியைச் சொல்வது இவரது திறமை. மேலும் சிங்கள மாணவர்களுக்கும் தமிழைக் கற்பிப்பதோடு மட்டுமல்லாது தமிழ் (சினிமா)ப் பாடல்களை அதன் கருத்தோடு கற்றுக் கொடுத்துச் சிங்கள மாணவர்களையும் தமிழ்ப்பாடல் பாடவைத்த பெருமை இவரையே சாரும்.

இதனால் சிங்கள மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றவராவார். மேலும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பரம்பரை அறங்காவலர் வழி வந்த எம் பேராசான் எமக்குக் குருவாகக் கிடைத்தமை நாம் செய்த பெரும் பாக்கியம். 06.04.2013 சனிக்கிழமை மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனையும் அவர்தம் பாரியாரையும் குடும்பத்தினரையும் பல்லாண்டு காலம் எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துவதோடு மணிவிழா மலர் சிறப்புற்று எல்லோர் கைகளிலும் தவள மனமார வாழ்த்தும்,

இராசன் சதீஸ்கரன்

சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி, சொற்பேராழி,
முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின்

மணிவிழாச் செயற்குழு

தலைவர் :

சிவஸ்ரீ வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
(அதிபர், விக்ரோறியா கல்லூரி, சுளிபுரம்)

இணைத் தலைவர்கள் :

வைத்திய கலாநிதி S. ஸ்ரீபவானந்தராஜா
(பணிப்பாளர், அரசினர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி T. பேரானந்தராஜா
(வைத்திய நிபுணர், அரசினர் போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்)

திரு. க. வேல்சிவானந்தன்
(அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

திரு. K. விமலன்
(அதிபர், இந்துக்கல்லூரி, சண்டிலிப்பாய்)

திரு. நடராசா சத்தியரூபன்
(பட்டதாரி ஆசிரியர், இந்துக்கல்லூரி, சண்டிலிப்பாய்)

போஷகர்கள் :

பேராசிரியர் வி. சிவசாமி
பேராசிரியர் சபா. ஜெயராசா
பேராசிரியர் துரை. மனோகரன்
பேராசிரியர் வி. மகேஸ்வரன்
பேராசிரியர் மா. வேதநாதன்
கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
பேராசிரியர் வை. நந்தகுமார்
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
பேராசிரியர் சி. சிவலிங்கராஜா
பேராசிரியர் கி. விசாகரூபன்
பேராசிரியர் நா. வி. டீ. நவரத்தினம்
திரு. கி. கிருபானந்தா

செயலாளர் :

திருமதி சசிரஜனி குகானந்தன்
(பட்டதாரி ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

இணைச்செயலாளர் :

திரு. இராசன் சதீஸ்கரன்

பொருளாளர் :

திரு. எஸ். நந்தன்
(பட்டதாரி ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி)

பதிப்பாசிரியர் :

திரு. எஸ். வை. ஸ்ரீதர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

செயற்குழு அங்கத்தவர்கள் :

திரு. ந. கணேசமூர்த்தி *(யாழ்ப்பாணம்)*
திரு. S. சண்முகநாதன் *(கொழும்பு)*
திருமதி த. சத்தியா *(ஏழாலை)*
திரு. க. மணிவண்ணன் *(காரைநகர்)*
திரு. பா. பாலசுப்பிரமணியம் *(மாதகல்)*
பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் *(வட்டுக்கோட்டை)*
திரு. க. சோமசேகரம் *(காரைநகர்)*
மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் *(காரைநகர்)*
சைவமணி S. சண்முகரெத்தினம் *(காரைநகர்)*
திரு. துரை. சோதிநாதன் *(கொடிகாமம்)*
திரு. சோதிநாதன் சிவகுமார் *(சண்டிலிப்பாய்)*
திரு. T. G. அகிலன் *(குளவிசுட்டான்)*
செல்வி இ. கிருத்திகா *(முல்லைத்தீவு)*
செல்வன் தேவராசா ஹென்ஸ்மன் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வி சுவேதா - விஜயகுமார் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வி ஷிரோமி - சத்தியசீலன் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வி ஷாலினி - பரமசிவம் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வி றுபிகா - தயாளன் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வி சிவயோகராணி கதிரவேலு *(சமாதான நீதவான், சுன்னாகம்)*
செல்வி ம. ஆராதனா *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*
செல்வன் யூசுப் அப்துல் பாஸித் *(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*



மணிவிழாச் சிறக்கட்டும்



மனிதர்களுடைய வாழ்நாளில் நான்கு பருவங்கள் உள்ளன. பால, கௌமார், யௌவன, வார்த்தக்யம் என்பன அவையாகும். பால குழந்தைப் பருவம்; கௌமார – பாடசாலைக் கல்விகற்கும் பருவம்; யௌவன இளமைப் பருவம்; வார்த்தக்யம் வயதுமுதிர் பருவம். இதில் வார்த்தக்ய பருவத்தின் ஆரம்பத்தில் மணிவிழாக் கொண்டாடப்படுகிறது. முதல் மூன்று பருவங்களிலும் இல்லாத சோர்வு வார்த்தக்யத்தில் ஆரம்பமாகும்.

ஆகவே மனிதர்களை உற்சாகப்படுத்தி அவர்களை வீரத்தோடு செயல்பட வைப்பது மணிவிழாக்கள்தான். எங்கள் மதிப்புக்குரிய முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தனது மணிவிழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் அவரை உள்ளன்போடு வாழ்த்துகிறேன்.

அறங்காவலராகவும் சிறந்த உபன்னியாசகராகவும் சிறந்த விரிவுரையாளராகவும் சமயப்பிரசாரகராகவும் தன்பணியை இறைபணிக்கு அர்ப்பணித்து வாழ்ந்துவரும் நாகேஸ்வரனுக்கு நயினை நாகபூஷணியம்மை நலமெலாந்தரப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

சிவஶ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
இணுவில்.



ॐ

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி
கிரியா கலாப முக்தாமணி
சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்

International Hindu Priests' Gurupeedaathypathy
'Kriyakalapa mukthamani'
SIVASRI S. MAHESWARA GURUKKAL

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம் — Atheenaguru, Sri Nagabhooshani Amman
ஆதீன குரு, நயினாதீவு - 1 — Devasthanam, Nainativu.
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,பிரதம குரு — Chief Priest,Sri Buvaneswari Amman Devasthanam,
சுதுமலை, மானிப்பாய், இலங்கை. — Suthumalai, Manipay, Srilanka.

☎ 021 225 5641 Fax: 021 222 3578, 021 222 2746.

ஆசியுரை

தமிழ் உலகம் உய்ய உதவிய பெருமைவாய்ந்த நண்பன் – நயினை நாகம்மை தமிழ் உலகம் உய்ய உதவிய பெருமை வாய்ந்த நண்பன் – பேராசான் கலாநிதி கனக. நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவுக்கு ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. நயினையம்பதியில் அருளாட்சி செய்கின்ற அன்னை நாகராஜேஸ்வரி அருளாலும் பாரம்பரியமாயப் பரிபாலனம் செய்து வந்த உயர் பரம்பரையில் உதித்தவருமான கனக. நாகேஸ்வரனின் மணிவிழாச் சிறப்பாக நடைபெற முதற்கண் அம்பிகையை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். மணிவிழா நாயகரின் தந்தை, பேரன், பூட்டன் ஆகியோராலும் அம்பிகையின் மேல் அசையாத நம்பிக்கையும் பற்றும் கொண்டமையால் அவர்களால் அம்பிகையைப்பற்றிப் பல பாடல்கள் பாடப்பெற்று இன்றும் நடைமுறையில் உள்ளன. அப்பேர்ப்பட்ட மூதாதையருடைய தமிழ்ப் பண்பாடு, பேச்சுதிறமை, ஆளுமை, பண்பு, பத்தி, பற்றுப் போன்ற பல குணாதிசயங்கள் வருவது மணிவிழா நாயகன் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது ஒரு சிறப்பம்சமாகும். இவர் அன்னையின் ஆலயத்தில் பல திருப்பணிகளைச் சீரான முறையில் நிறைவேற்றி, கும்பாபிஷேகம் செய்த பெருமையுடையவர். இவர் தமிழ்ப் பண்பாளர்; நல்ல மனம் படைத்தவர். இவரின் நாவிலே சரஸ்வதி தாண்டவமாடுவது இவரது பேச்சுத் திறமையில் அறியக்கூடியதாகவுள்ளது. இவரது மணிவிழாச் சிறப்பாக அமைய அம்பாளின் திருவருள் கைகூடும் என்பதில் ஐயம் இல்லை. சகல மங்களங்களுடன் நீடுழி வாழ வாழ்த்தி ஆசிகூறுகிறேன்.

"பெருமையுடையவர் ஆற்றுவார்ஆற்றின் அருமையுடைய செயல்"
"தீர்க்காயுஷ்மான் பவ"

ச. மஹேஸ்வரக்குருக்கள்

Sakithya Siromani, Sivasri
V.M.P. Muthukumarasamy Sivacharyar
Nainai Athina Chief Priest
Nainathivu Sri Nagapoosani Amman Temple.

"Sivananthakuru Vasam"
Kurukkal Lane,
Kopay North, Kopay.

T.P.: 021 223 0016,
021 300 8648



சாகித்ய சிரோமணி
சிவஸ்ரீ வை. மு. ப. முத்துக்குமாரசாமி சிவாச்சார்யார்
நயினை ஆதின பிரதம சிவாச்சார்யார்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில்.

"சிவானந்த குருவாசம்"
குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

ஆசியுரை



அருள்வளர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருள் ஆசிகள் பல்லாண்டு நீடூழி வாழ நலமே பல ஆசிகள். அம்பிகையின் பாத கமலங்களில் உமது திருவருட்பேற்றை அகமகிழ்ந்து வாழ்த்தும் பேறு பெருமை மிக்கது. அம்பிகை பரம்பரை வழித்தோன்றல்கள் யாவரும் அம்பிகையின் அருளாட்சி, சந்தத சந்தத வழித்தோன்றல், அழியா முத்தி ஆனந்தமே என்றவாறு தாங்களும் உறவுகளும் கலையாத கல்வியும் பல பேறும் பெற்று தர்மம், அர்த்தம், காமம், மோஷம் என்னும் புருஷார்த்தங்கள் பெற்று வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இறைபுகழ் பாடிப் பரப்பி, பரம்பரைச் செல்வங்களின் பெருவாழ்வு கண்டு இன்புற வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல அம்பிகையை சிந்தனை செய்யும் நன்றியுடன்.

சுபம்

20.11.2012

குருமணி,

சிவஸ்ரீ ப. முத்துக்குமார சாமிக்குருக்கள்





கைலாஸநாத வேத சிவாகம பாடசாலை

379/7B இருபாலை வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2230331
0773726132
Email: kailasanathan@gamail.Com
www: kailasanathan.Com

ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
1ம் வட்டாரம்
நயினாதீவு.
தொ.பே. 0213219513
0213734535

திகதி...../...../.....

ஆசியுரை

நயினையின் புகழ் மிக்க நாயகியாகிய அன்னையின் அருள் பெற்ற மைந்தன் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள்

அன்னையின் அறப்பணிக் குடும்பமான பரம்பரையில் வந்து உதித்து பல்கலைகளும் பயின்று பலதுறைக் கல்வியிலும் சிறந்து விளங்கி, இன்று மொழித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகத் திகழும் பேராசான் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் சிறந்த பண்பாளரும், சிறந்த பக்திமானாகவும், தலைசிறந்த பேச்சாளராகவும் திகழ்வதோடு திருமுறை ஓதுவதில் அடியார்களை மனம் உருகச்செய்யும் சிறந்த குரல்வளமும் பக்திவளமும் திருமுறையின் பொருள் உணர்ந்து ஓதும் தன்மையும் கொண்ட பெரிய மனிதர். தன்வாழ்வில் 'எல்லாமே அம்பாள் செயல்' என்று கூறும் திருமதி கோகிலாம்பாளின் தலைமகன் நாகேஸ்வரன் அவர்கள். எல்லோரிடமும் அன்பாகப் பேசி அரவணைத்துப் போகும் மனப்பாங்கு கொண்டவர். இன்று அவர் மணிவிழாக் காணுகிறார் என்றால் அது கூட அம்பிகையின் திருவருள் தான் காரணம்.

இலங்கையில் மட்டும் இல்லாமல் வெளிநாடுகளுக்கும் சென்று சமயம் வளர்த்து சமயப்பிரசாரம் செய்து நயினை மண்ணின் பெருமையை உலகறிய வைத்த பெருமைமிக்கவர். அம்பிகையின் திருப்பணியில் தன்னை அர்ப்பணித்து நிரந்தர பரம்பரை அறங்காவலராக இருந்து அம்பாளின் திருவருளைத் தவிர வேறு எதுவும் தீண்டாமல் அறத்தை மட்டும் காக்கும் அறங்காவலராக விளங்கும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் நீடூழி வாழ வாழ்த்துகிறேன். அவர் குடும்பத்தினரும் அவரின் சந்ததியினரும் பல்லாண்டு வாழ அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பாளையும் ஆன்மநாயகனான கைலாசநாதகுருவின் ஆசியும் என்றும் கிடைக்கப் பிராத்திக்கிறேன்.

இவ்வண்ணம்

சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக்குருக்கள்.



ஆசியுரை



நாக தீபத்தில் நாகேஸ்வரி அன்னையின் திருநாமத்தில் உதித்த பேராசான் அவர்களுக்கு நந்தன வருடத்தில் மணிவிழா. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற முது மொழிக்கிணங்க வாழ்ந்து அகவை அறுபதை எட்டியிருக்கும் கல்விமான், அருட்கலைமாமணி அவர்கள் வயதால் அறுபதை எட்டியிருந்தாலும் உருவாலும், உயர்ந்த உள்ளத்தாலும் இருபதைத் தொட்டவர். அன்னையின் அருட்கடாக்ஷத்தால் முழு நிறைவோடு செந்தண்மை பூண்டு ஒழுகி வாழும் வாகீச கலாநிதி அவர்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும் ஆவார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவராகவும், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும் கடந்த 25 வருடங்களிற்கு மேலாகக் கடமையாற்றி, தமிழிற்கும் தமிழ் உலகிற்கும் இறை உலகிற்கும் அருந் தொண்டு புரிந்து வந்துள்ளார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன் கலம் நன் மக்கட் பேறு

என நன் மக்களைப் பெற்ற உவகையோடு அறுபதை எட்டுங்கால் சதமானம் பவதி – சதாயு; புருஷ ; என்னும் வேத வாக்கிற்கு இணங்க ஆண்டாண்டு காலம் தம் பரம்பரையினருடன் தம்பதி சமேதராக நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள், குறைவற்ற செல்வம் இன ஜன சம்பத்து மித்திரசகிதம் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பேரானந்தப் பெரு வாழ்வு வாழ நயினாப் புரியின் அன்னை என்றென்றும் அருள் புரிய வேண்டி ஆசி கூறி வாழ்த்தி நிற்கிறோம்.

நாகேஸ்வர குரூணாம் ஹி ஷஷ்டி வயச திநேசுபே
மங்களம் குரு நாம் தேவௌ கஜாநந ஷடாநநௌ
சக தர்ம பத்ந்யா – புத்ர பௌத்ர சமன் வித;
தீர்க்க மாயுர் தரும் கீர்த்திம் லபதாம் ஸர்வஸம்பத;
சுபமஸ்து

என்றென்றும் நல்லாசிகளுடன்

சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்

பரம்பரை ஆதீன குருமணி,

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினாதீவு.



உ
சிவமயம்

கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
பிரம்மஸ்ரீ
ப. மனோகரக் குருக்கள்
பிரதமகுரு
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
☎ 021-2263337



'Kriya Krama Jothy', 'Kriya Kalapa Mukthamani'
BRAHMASRI
P. MANOHARA KURUKKAL
CHIEF PRIEST
VALAMBIGA SAMETHA
VAITHEESWARA SWAMI TEMPLE
VALVEDDITHURAI.

200

இந்துமத குருபீடாதிபதியின் நல்ஆசிகள்



கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவை ஒட்டிய சிறப்பு மலர் ஒன்று வெளிவருவதை இட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வல்வை மண்ணிலே தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகளாகச் சிறப்புச் சொற்பொழிவு நடாத்தி மக்களின் நன் மதிப்புப் பெற்றவர். முதுநிலை விரிவுரையாளராக இன்று அதிஉயர் பதவி வகிப்பதை இட்டு நாம் பெருமையடைகிறோம்.

வல்வை மண்ணிலே சொற்பொழிவு நடாத்திய 90ஆம் ஆண்டு காலப்பகுதியின் முருகன் சிவலிங்க உருவில் குருக்களிடம் வருவான் என்று கூறினார்கள். நிச்சயமாக அவர் வாக்குக் கூறியது போல் ஒரு மாதத்திற்குள் பதினைந்து சிவலிங்கங்களை மக்கள் கொண்டு வந்து தந்தார்கள். அன்று தொடக்கம் மணிவிழா நாயகனுக்கும் எனக்கும் மிக இறுக்கமான தொடர்பு ஏற்பட்டது. இன்று அவர் சிறப்புப் பதவி பெற்று மணிவிழாக்காண்கிறார் என்றால் எல்லாம் இறைவன் செயலன்றி வேறுஒன்றுமில்லை. மணிவிழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் இன்னும் கிடைத்தற்கரிய செல்வப் பேறுகள் பெற்று நீடூழி காலம் வாழ இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன்.

மணிவிழா ஒட்டி, காலத்தின் தேவை கருதி மணிவிழா மலர் ஒன்று வெளிவருவதையிட்டு எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து.

தங்களன்புடன்
ப. மனோகரக்குருக்கள்
பிரதம குரு., வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோவில், வல்வெட்டித்துறை.





ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்
ශ්‍රී රාජරාජේස්වරි අම්මන් කෝවිල
SRI RAJARAJESWARY AMMAN KOVIL

சிவஸ்ரீ வெ.சுப்பிரமணியக் குருக்கள்
(உடுவில்)
ஆதீன கர்த்தா, ஈசான சிவாச்சாரியார்
வயலின் இசைஞான சாகரம், கிரியாகலாப முக்தாமணி,
ஆன்மீகத் திலகம், ஜோதிடர்.
A12, G3, சொய்சாபுர,
மொரட்டுவ.

සිවශ්‍රී වේ.සුබ්‍රමනිය කුරුක්කල්
(උඩුවිල්)
ආදීන කර්තා, ඊශාන දේවඥාර්,
වයලින් වාදන විද්‍යාදර, ඉරියකලාව මුක්තාමණි,
අන්මීගතිලගම්, ජ්‍යෙදිෂඥ.
A12, G3, සොයිසාපුර,
මොරටුව.

Sivasri V. Subramaniya Kurukkal
(Uduvil)
Adhina Kartha, Esana Sivachariyar,
Vayalin Esaignana Sagaram, Kiriyakalapa Mukthamani,
Annmeega Thilagam, Astrologist.
A12, G3, Soysapura,
Moratuwa.

Tel : 011-2637427

மணிவிழாக் காண்போர் கொடுத்துவைத்தவர்கள்

சூரியக் குடும்பத்தில் சுழலும் கோள்மண்டலங்களில் பூகோளம் தனித்துவமானது. இதில் மாத்திரம் ஜீவராசிகள், தோன்றி மறைந்து தோன்றுகின்றன. இவ்வாறான தோற்றங்களில் உன்னத தோற்றமே மனித உடம்பு. இவ்வுடம்பில் உள்ள ஜீவனின் ஆயுள் நூறு ஆண்டிற்கு மேல் இருக்க வேண்டியது நியதி. எனினும் கலியுக தர்மமும், காலச் சுழற்சியின் வேகமும் அதனை மட்டுப்படுத்திக் குறைத்து விட்டது. இவ்விடத்தில் நமது புண்ணியப் பயனாக, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து" மணிவிழாவைக் காண்போர் கொடுத்துவைத்தவர்கள். இவ்வாறு கொடுத்து வைத்து புதிய மிலேனியம் ஆண்டின் மணி விழா அகவைகளின் நிறைவைக் கொண்டாடுவர் எனது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய அனைவராலும் நன்கு அறியப்பட்ட அருட் கலைமாமணி டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் ஆவார். இவர் கொழும்பு, யாழ்ப்பாணம், மலையகம், ஆசிய ஐரோப்பிய நாடுகளிலும் கதாபிரசங்கம், சொற்பொழிவுகள், ஆன்மீக உரை எனும் சமயப் பணிகளை செம்மையே நடாத்திய பெரும் மகன். இவருடைய கதாப்பிரசங்கத்திற்கு பல மேடைகளில் பக்கவாத்தியமாக வயலின் இசைத்ததையிட்டு மிகமிகப் பெருமை அடைகிறேன். மணி விழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் 1000 பிறை கண்ட பூரண வாழ்வையெய்தவும், எல்லாம் வல்ல அருள் மிகு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்

ஈசான சிவாச்சாரியர் 'கிரியாகலாப முக்தாமணி, ஆன்மீகத் திலகம், ஜோதிடர்,
சாகித்ய மணி, வயலின் இசை ஞான சாகரம்.
சிவஸ்ரீ. வெ. சுப்பிரமணியக் குருக்கள்
(உடுவில்) ஆதீன கர்த்தா, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்,
A 12, G3 சொய்ஸா புர தொடர்மாடி, இரத்மலானை.



சிவமயம்

இந்து வித்யாநிதி பிரம்மஸ்ரீ **சோ. குஹானந்த சர்மா.**
நித்தியகர்ம குரு, இந்துசமய ஆலோசகர், எழுத்தாளர், தூல்லெழுத்தாளர், ஒலிபரப்பாளர்
හින්දු විද්‍යාවිධි බ්‍රහ්මශ්‍රී ඒ. ඇස්. කුහානන්ද ශර්මා ස්වාමී
හින්දු ආගමික උපදේශක, හින්දු ලේඛක හා ගුප්ට කතෘ.
HINDU VIDYANITHI BRAHMASRI **S. KUHANANTHA SARMA**
HINDU PRIEST, HINDU RELIGIOUS ADVISOR, WRITER , PUBLISHER & BROADCASTOR

136/28 ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை, கொழும்பு-13.
ජෝර්ජ් ආර්. ඩී. සිල්වා මාවත, - කොළඹ - 13
George R. De. Silva Mawatha, Colombo - 13.

2330459 தொலைபேசி
දුරකථන
T. Phone

11/10/2012

சர்வ மங்களானி பவந்து!

நயினாதீவு தந்த நன்மகனே
நாகபூஷணி அம்பாளின் அருட்செல்வமே
நன் நிகழ்ச்சிகளை நன்றே ஒலிபரப்பிய ஒலிபரப்பாளனே
நாட்டு மக்களுக்கு புராண உட்பொருளை எடுத்தியம்பும் கதாப்பிரசங்கியே
நல்லறிஞரைப் பல்கலைக்கழக மூலம் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து
உருவாக்கும் கல்விமானே
நாகதேவியைப் பூஜித்து வழிபடும் கனகசபாபதி தம்பதிகளின் செல்வக் குமாரனே,
கலாநிதி க. நாகேஸ்வரனே!
நின்பணி என்றும் நிலைத்து எல்லோருக்கும் நன்மை பயக்கட்டும்.

ஷஷ்டியப்த பூர்த்தி எனும் மணிவிழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு கொழும்பு, ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர், நயினை நாகபூஷணி அம்பாள் முதலான மூர்த்திகளை வணங்கி,

சகல சௌபாக்கியங்களையும் பெற்று தீர்க்காயுளுடன் மங்களமாக வாழ வாழ்த்துகிறேன்!

சர்வ மங்களானி பவந்து!

சோ. குஹானந்த சர்மா
பரம்பரை ஆதீனகர்த்தா, ஆதீன குரு,
புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவைச் சித்திவிநாயகர் கோவில்.
காரியதரிசி – அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்.
உபதலைவர் – சர்வ மத சம்மேளனம்
ஆலோசகர் – கல்விஅமைச்சு (இந்து சமயம்)
ஒய்வு பெற்ற சிரேஷ்ட அரச அலுவலர்.





இந்து குருமார் அமைப்பு
HINDU PRIEST'S ASSOCIATION

(Reg No : HA / 04 / CBO / 140)
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwala, Sri Lanka.



ஆசிச் செய்தி

"தாம் இன்புறுவது உலகு இன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

அகவை அறுபதை அடையும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் குடும்பத்தில் அவதரித்த தெய்வீகப் பண்பாளர், இவர் தாம் கற்ற கல்வியின் பேற்றால் மாணவர்கள் பயனடையவும், இந்து சமயப் பணியை வளர்க்கவும், இவர் ஆலயங்களில் ஆற்றும் சொற்பொழிவுகளும் மறை உரைகளுமே இவரது வித்துவப் புலமைக்குச் சான்று.

இப்பண்பாளர் பல இந்து ஆலயங்களில் யாம் அறியச் சமய உரைகள், கதாப்பிரசங்கங்கள், பண்இசையோடு தெய்வீக அருள் பாலிக்க ஆற்றிய தொண்டுகள் அனேகம்.

இவர் மணிவிழா ஞாபகார்த்தமாக வெளிவரும் மலருக்கு ஆசி வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமயத்துக்குப் பணிபுரிய ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் கிடைக்க வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்
சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள்
தலைவர்



உற்சவங்களில் வானொலி நேர்முகவர்ணனை நேரில் தரிசித்த உணர்வைத் தரும்

சஷ்டியப்தபூர்த்தி மணிவிழா மலரில் இணைந்து, வாகீச கலாநிதி டாக்டர் கனக. நாகேஸ்வரனை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

எது எப்படி இருந்தாலும், சிறந்த அர்ப்பணிப்பு உணர்வுடன் எந்த இலாப நோக்கமும் இன்றிப் பல்துறை – பரந்த அறிவை – மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் உலக அறிவை விரியச் செய்து உத்தரவாதமான எதிர்காலத்தைத் தொடர்ந்து வழங்கி மாணவத் தலைவர்களை இன்று உலகத் தலைவர்களாக்கிய பெருமை டாக்டர் நாகேஸ்வரன் ஐயா அவர்களையே சாரும்.

கற்றல், கற்பித்தல் என்பதே அவரின் தாரக மந்திரமாக இருந்தது. இத்தகைய கலாநிதி சமூக உருவாக்கத்தின் மூல ஆதாரங்களாகத் திகழ்ந்தவர். இவரைப் போற்றவும், புகழவும், கௌரவிக்கவும், பொருத்தமான நாளிது. கலாநிதி அவர்கள் தமிழைச் செந்தமிழாக உரையாடுபவர். அவரது சொற்பொழிவைக் கேட்டு நான் தமிழ் கற்றதுண்டு. அவரது பக்தி மணம் கமழவைக்கும் சிவத்தோற்றம் எம்மை மெய்சிலிர்க்க வைக்கும். ஆலய காலங்களில் வானொலி நேர்முக வர்ணனையைக் கேட்டால் எமக்கு உற்சவத்தை நேரில் தரிசித்த உணர்வு ஏற்படும். எமது ஆலயத்தில் நவராத்திரி, தேர் உற்சவகாலத்தில் வர்ணனையை நான் நேரில் இரசித்ததுண்டு.

பேராசான் கலாநிதி கனக. நாகேஸ்வரன் அவர்களுக்கு நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும், தீர்க்க ஆயுளும் பெருமான் அளித்து அவர்களைக் காத்து ரக்ஷிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல மகா விஷ்ணு மூர்த்தியை வணங்கி நீடுழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க அவர்களது தமிழ்ப்பணி"

நன்றியுடன்

"விஷ்ணுவித்யாசாகரம்" – பிரம்மஶ்ரீ

சத்தியநாராயண குருக்கள்

மகாவிஷ்ணுமூர்த்தி தேவஸ்தானம்,

தெஹிவளை



வரம் மிகப் பெற்ற வாகீச கலாநிதி

ஒரு மனிதனுக்கு அறுபதாண்டு நிறைவு என்பது முக்கியமான ஒன்று. தமிழ் வருடங்கள் அறுபது. இவ்வாறாக அறுபது வருட நிறைவை வாழ்வின் ஒரு சுற்று (பாகம்) நிறைவாக நமது முன்னோர்கள் கருதியிருக்கிறார்கள். எனவே, இதனை "ஷஷ்டியப்த பூர்த்தி" என்று சிறப்பாகக் கொண்டாடி, நூறாண்டு வாழப் பிரார்த்தனை செய்யுமாறு நமது சாத்திரங்கள் விதித்துள்ளன. இத்தகு உயரிய அறுபது வயது நிறைவை "மணி விழா" என்று தமிழர்களும் உயர்வாக மதித்து விழா எடுத்து மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் நமது வாகீச கலாநிதி அவர்களுக்கும் மணிவிழா நடக்க இருப்பதறிந்து மகிழ்கிறோம்.

இவர் எத்தனையோ உயர் விருதுகளையும் பதவிகளையும் அலங்கரித்த போதும் நம் மனதில் முப்பதாண்டுகளுக்கு முன் கண்ட இளமையும் சுறுசுறுப்பும் நிறைந்த உருவமே பதிந்து நிற்கிறது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவராக, முதுநிலை தமிழ் விரிவுரையாளராக, கலாநிதியாக கல்வித்துறையில் பிரகாசிக்கும் கனகசபாபதி நாகேஸ்வரனின் ஆன்மீகத்துறையும் சிறப்பானது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகை ஆலயத்தின் மரபுவழி அறங்காவலர் – சிறந்த சொற்பொழிவாளர், ஆன்மீக எழுத்தாளர் – குரு பக்தி, இறைபக்தி மிக்க பண்பாளர் என்று இது விரியும். எமது தந்தையாரான சிவஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்களுடன் மணிவிழா நாயகரான இவருக்கு, நீண்ட தொடர்பும் உறவும் இருந்தது.

'கலைமகள்' பத்திரிகை ஆசிரியரான வாகீசகலாநிதி கி.வா. ஜ. ஐயரவர்கள் நமது இல்லத்தில் தங்கியிருந்த போது, அவரது அன்பையும் ஆசியையும் பெற்ற பாக்கியவான் இவர். இவைகளை விட, தன் பெருமை தானறியா தலைவராய் பணிவோடும் பக்தியோடும் பழகும் பாங்கே உயர்வு... உயர்வு... இவ்வாறாக, பல்துறை ஆற்றலும் சிறப்பும் அறிவும் நிறைந்த நயினையூர் தந்த கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் இன்னும் ஒரு அறுபது காண வேண்டும்.எல்லாம் வல்ல நாம் தினமும் பூஜிக்கும் நீர்வை கடம்பக் கந்தன் அவருக்கு ஸகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வை அனுக்கிரஹம் செய்யட்டும் என்று அவன் தாழ் பணிந்து, ஆசிகளையும் அன்பையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறோம்.

சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள்

பிரதம குரு,

நீர்வைக் கந்தசுவாமி தேவஸ்தானம்.



ஆசியுரை

என்மீது அளவற்ற குருபக்திமிக்கவர்

யாழ்ப்பாணம் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது அன்பிற்குரிய மாணாக்கனும் நயினையம்பதி ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாள் தலைவரும் முதுநிலைத்தமிழ் விரிவுரையாளருமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது அறுபதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் எனது மனப்பூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கலாநிதி நாகேஸ்வரன் யாழ்ப்பாண வளாகத்தில் ஆரம்பகாலங்களில் தமது பட்டப் படிப்பினை மேற்கொண்டவர். தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்று பட்டதாரியானவர். என்னிடம் யாழ்ப்பாண வளாகத்தில் இந்துநாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்றவர். இந்து மாணவர் மன்றத்தின் வழி என்னோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். என்மீது அளவற்ற குருபக்தி மிக்கவர். இற்றைக்கால இளந்தலை முறையினர்க்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கக் கூடிய பண்புமிக்கவர். மனஉறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டவர். எனவே தமது வாழ்வில் சந்தித்த எத்தகைய சவால்களையும் சமாளித்து வெற்றி கொண்டு அவர் அறுபதாண்டு அகவையில் காலடி எடுத்து வைப்பதற்கு அம்பிகையின் திருவருளும் பெரியோர்களினதும் குருமார்களினதும் ஆசியுமே காரணமெனில் மிகையில்லை.

அன்பர் நாகேஸ்வரன் நயினை நாகபூஷணி அம்பாள் மீது அளவற்ற பக்தி மிக்கவர். சிறந்த சொற்பொழிவாளர். அதன் பெறுபேறாக "வாகீச கலாநிதி" என்ற விருதினைப் பெற்றவர். இசையுடன் கூடிய கதா காலட்சேபங்களை நிகழ்த்தி மக்களது பாராட்டைப்பெற்று அருட் கலைமாமணியாகத் திகழ்பவர். கலாநிதி நாகேஸ்ரன் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சிறப்புறக் கல்விப்பணியாற்றி நன்மாணாக்கர் பலரை உருவாக்கி மனநிறைவுடன் வாழ்ந்து வருபவர். அவரது மாணாக்கரும் அவர்மீது உயர்ந்த குருபக்திமிக்கவர்கள். தனது துறைசார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றையும் மற்றும் நூல்களையும் வெளியிட்டுக் கல்விவளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பைச் செய்து வருகிறார். பட்டப்படிப்புச் சார்ந்த ஆய்வுத்துறையிலும் தம்மை ஈடுபடுத்தியவர் கலாநிதி நாகேஸ்வரன். இத்தகைய

வெற்றிகளைத் தமது அறுபதாண்டு கால வாழ்வில் பெற்று மணிவிழாக் காணப் போவதையிட்டு அவரை மனதாரப் பாராட்டுகிறேன்.

நன்மாணாக்கனாக, ஆலயப்பரிபாலகராக, நல்லாசானாக, நல்ல சிந்தனையாளனாக, ஆய்வாளனாக, கலைத்துறைக் கலைஞனாக விளங்கும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருட் கடாட்சத்தினால் சகல நலன்களும் வளங்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் பல்லாண்டுகாலம் இனிதே வாழ்ந்து மேன்மேலும் சமயம், கலை, சமூகம், சார்ந்த துறைகளிலும் மற்றும் கல்வித் துறையிலும் அரிய பணிகள் ஆற்றிச் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கலாநிதி நாகேஸ்வரனின் மணிவிழா இனிதே நடைபெறவும் மணிவிழா மலர் வெளியீடு சிறக்கவும் அம்பிகையின் திருவருள் துணை நிற்பதாகுக!

பேராசிரியர், இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்

வாழ்நாள் – பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.,

யாழ்ப்பாணம்



உ
நெல்லியடி விநாயகர் துணை

பிரதிஷ்டா வித்தகர், சிவாகமஞானசாகரம்
கிரியாகானகலாமணி, வேதாகமஜோதி,
கிரியாகலாபமணி
சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்கள் J.P
(மட்டுவில்)

"Pradhistavithagar, Sivagamagnanasgaram,
Kiriyaganakalamani, Vedhaagamajothi,
Kiriyakalabamani"
Sivasri K. Somasunthara Kurukkal J.P.
(Madduvil)

பண்ணிசை, கதாப்பிரசங்கத்தால் மக்களைப் பக்திவெள்ளத்தில் ஆழ்த்துபவர்

எல்லாம் வல்ல விநாயகர் பாதம் பணிந்து,
ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை
அண்டமெலாம் பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை
புவியடங்கக் காத்தாளை அங்குச
பாசமங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே

இன்று அம்பிகையைப் பிரார்த்தித்து நயினை அருள்மிகு நாகபூஷணி அம்பாள் அடியவரும் தேவஸ்தானத்தின் பரம்பரை மரபு வழி அறங்காவலருமாகிய வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி உயர்திரு. கனகசபாபதி நகேஸ்வரன் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி மணிவிழா நடைபெறுவதறிந்து மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

மனிதன் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, நற்றுறையில் உயர்ந்து, ஆசானாகி, விரிவுரையாளராகி, இறைபணி பண்ணிசை விரிவுரை என்பவற்றில் உயர்ந்து வருகின்ற போது அகவை அறுபது ஆகிறது. இவ்வண்ணம் ஒருவர் வாழ்வில் அறுபது ஆண்டுகள் நிறைவுபெற்று பின் அடுத்த அறுபது வருட சுற்று ஆரம்பமாகும் பொழுது கிரகமண்டலங்களில் பலமாற்றங்கள் ஏற்படுகின்றன. உடற்கூறுகளிலும் பல மாற்றங்கள் உண்டாகின்றன. அதிலிருந்து ஏற்படுகின்ற மாற்றங்கள் கிரக சேர்க்கைகளினுடைய தன்மைகள் நன்றாக அமையப்பெற்று மேலும் பல்லாண்டு காலம் வாழ நவக்கிரக தேவர்கள், ஆயுர்த்தேவர்கள், வருட தேவர்கள் ஆகியோரிற்குரிய வழிபாடு செய்து அவர்களிடம் சுகபலன்களைப் பெறுகின்றோம்.

இவ்வண்ணம் பெரியோர்களின் ஆசியுடன் ஷஷ்டியப்த பூர்த்தி விழா – மணிவிழாக் காணும் உயர்திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் எமக்கு மிகவும் பரிட்சயமானவர்கள். நான் சாவகச்சேரியில் வதியும் போது பல ஆலயங்களில் எமது அன்புக்குரிய அழைப்பின் பெயரில் சிறந்த சொற்பொழிவுகள், பண்ணிசைகள் என்பன நிகழ்த்தி மக்களை பக்தி வெள்ளத்தில் திழைக்கச்செய்து உள்ளார். குறிப்பாக சாவகச்சேரி துர்க்கையம்பாள் ஆலயத்தில் அவர் ஆற்றிய சமயப் பிரசங்கம், பண்ணிசை என்பன அடியார்களை பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது இன்றும் நினைவு இருக்கின்றது.

இவ்வண்ணம் சைவப்பண்பில் உயர்ந்த பெரியார் – மணிவிழா நாயகர் அவர்கள் அறுபது அகவை தாண்டி எழுபது, எண்பது அகவை வாழ்ந்து ஆயிரம் பிறைகண்டு, சதாபிஷேகம் பெற்று நூறாண்டு காலம் வாழவும், அவரும் அவர் குடும்பத்தினரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், நல்ல கலைஞானமும் பெற்று வாழவும் என் மனத்துறையும் விநாயகரைப் பணிந்து அனைவர் மனத்துறையும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவடிகளை வணங்கி அனைவரையும் வாழ்த்தி அமைகிறேன்.

வாழ்க! வளர்க! வணக்கம்!

42/11, சுவி சுத்தாராம வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு

இவ்வண்ணம்
அன்புடன்
இ. சோமசுந்தரக்குருக்கள்
(மட்டுவில்)



ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
SRI NAGAVARATHA NARAYANAR THEVASTHANAM

அருட்கவி சீ. விநாசித்தம்பி ஸ்ரீ நாகேஸ்வரம், NAKESWARAM
ARUDKAVI S. VINASITHAMBY அளவெட்டி. ALAVEDDI
(இலங்கை) (Sri Lanka)

தமிழ்மலைச்சிகரமே நாகத்தாய்வரம் பெருகி வாழி வாழி

ஞானமுயர் வாகீச கலாநிதி ஸ்ரீ கனக
நாகேஸ்வரன் பேரினாய்,
தேனமுத மதுரகவிக் கிசைத்தபா ராட்டினைச்
சிந்தித்து மனங்குளிர்ந்தேன்
தானமுயர் செல்வனே, தமிழ்மலைச் சிகரமே
தரணியில் தாங்கள் இன்னும்
வானமதி சூடுவான் பங்கிலுறை நாகத்தாய்
வரம்பெருகி வாழி வாழி!

அன்புடன்
அருட்கவி
சீ. விநாசித்தம்பி
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம், அளவெட்டி





தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் இந்துசமய நிகழ்ச்சிகள் தயாரிப்பாளரும் நேர்முக வருணனையாளரும் பகுதிநேர அறிவிப்பாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளருமாகிய

திரு. கனகசபாபதி - நாகேஸ்வரன், B. A. (Hons)

அவர்கள் 1987ஆம் ஆண்டு முதுகலைமாணிப்பட்டம் (M.A) பெற்றமையைப் பாராட்டு முகமாகத்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

நிகழ்த்திய பாராட்டு விழாவில் மனமுவந்து வாசித்தளிக்கப்பட்ட

வாழ்த்துப்பா

இனித்தநறும் நாகம்மை அருளாம்வித்து
இருந்துமுளை கிளைஒச்சிக் காலந்தோறும்
கனித்தசுவை அதைமாந்தித் திருப்பாத பூசை
கண்டுகளி கூர்ந்ததொரு கருவின் தோன்றல்
பனித்த தமிழ்(ச்) சொல்லாளன் பழகத் தோழன்
பார்வையினில் அறிவொளியைப் பாய்ச்சும் நம்பி
தனித்ததொரு இளந்தென்றல் தமிழன் தோற்றம்
தளதளக்கும் மீசையினால் தாங்கும் தம்பி.

புலமையினால் நிர்ஒட்ட யாகம்பாடிப்
புகழ்பூத்த நாகமணிப் புலவன் பின்னோன்
தலைமையுறத் தலம்பரவி ஆய்வும் செய்து
தகைசான்ற முதுமாணிப் பட்டம் பெற்றோன்
கலைதெரியும் அரங்கேறி நடிப்பாலென்றும்
கண்களிப்பப் பாத்திரங்கள் ஏற்கும் வல்லோன்
நிலையுயர நூல்ஆய்ந்து தமிழர் சால்பு
நிலைநிறுத்தத் தலைநிமிர்த்தி நிமிர்ந்தே நிற்போன்.

ஒலிபரப்பில் ஒன்றிணைந்து தமிழின் ஓசை
உலகுவப்பக் குரல்கொடுத்துக்; கற்றோர்க்கெல்லாம்
கிலிபிடிக்க நம் அறிஞர் கருத்தையெல்லாம்
கிள்ளியவை மெய்சிலிர்த்துக் கேட்கச் செய்து
மொழிதுலக்கி(ச்) சொற்சுவையை மக்கள்மாந்த
முத்தமிழை நித்தமுமே முன்னேவைத்தோன்.

துறைதோய்ந்த தமிழறிஞர் நிறைந்து ஆற்றல்
துலங்குபுகழ் யாழ்பல்கலைக்கழகம் தன்னில்
நிறைவார்ந்த அறிவோங்கு குழாத்தின் உள்ளே
நின்றுதமிழ் விரிவுரைகள் நிகழ்த்தும் ஆசான்
முறைசார்ந்த நூற்கல்வி யோடும் வேறு
முதுகலையும் புதுமைகளும் முனைந்தே கற்றோன்
தகைசான்ற பெருங்குணத்தான் தக்கோர் போற்றும்
தன்மையுளான்; நயினையுளான் சான்றோன் தானே!

வேறு

பல்கலை தேர்ந்து தூயபைந்தமிழ் ஆய்ந்து சுவர்ந்து
தொல்கலை நுட்ப மெல்லாம் துருவியே துலக்கி மேலாம்
கல்வியின் உச்சமான "கலாநிதி" யாகி என்றும்
வல்லவனாக எல்லா வளங்களும் பெற்று வாழ்க.

(ஆக்கம்: நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை, B. Sc. **அவர்கள்)**

இங்ஙனம்,
பழைய மாணவர் சங்கத்தினர்
மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை



"நற்றமிழ் வேந்தன்"

நயினை பெற்றெடுத்த 'நற்றமிழ் வேந்தன்',
நாவிலைசக்கப் பேசுவதனால் நா(க்)கேஸ்வரனானார்,
நிமயகுரு 'மகாஜன' அன்னையைக் கூப்பியதால்
நித்திலத்தில் 'கலாநிதி'யாய் நீடு வென்றார் பணிந்து.

ஆசிரிய நண்பன்
கே. எஸ். சிவஞானராஜா
கொக்குவில்



நல்லவுயர் குரவன் : புகழ்பூத்த நடையன்

(எண்சீராசிரிய விருத்தம்)

நா டெல்லாம் போற்றுயாழ்பல் கலைக்கழகம்
நாலாண்டு படித்து, நீ சிறப்பு பட்டம் பெற்றாய்
தேடரிய எம் ஏயும் பெற்ற நீ சென்று
தென்னிலங்கை சப்ரகமுவ **பல்கலையிற்** சேர்ந்து
நீடங்கே பணி செய்யென சொல்லுவதுபோல் தூண்ட
நிகரில்லா நாகேஸ்வரன் நினைத்தங்கே சென்று
ஏடெல்லாம் பாராட்ட தான்பொருளாய் அமர்ந்தே
இரும்பெரிய ஆசானாய் இன்றுவரை வாழ்வான்!

தன்னலமே பிறர் நலமாய்ச் சாதிக்கும் பெரியோன்
சங்கநூல் சமயநூல் சார்ந்தபெரும் அறிஞன்
தொன்மைசேர் சப்ரகமுவ பல்கலையில் சேர்ந்து
சிறந்தவுயர் மாணாக்கர் சிந்தனைவாழ் ஆசான்
நன்மைசேர் அங்கமர்ந்த பட்டதா ரிகளின்
நாடறிவும் பசிதீர்த்த நல்லவுயர் குரவன்
புன்மைவழி போகாத புகழ்பூத்த நடையன்
பொருந்திமணி விழாக் காணும் **புண்ணியன் நாகேஸ்வரனே**

மேடைகளிற் சொன்மாரி **முழங்கிப்பெயும்** மேகம்
மிக்கத்தமிழ் சமய நெறி **விளங்கவிரிக்கும்** பானு
பீடுசால் ஒழுக்கத்தில் பெரியவொரு ஞானி
பேரான தமிழ்நூல்கள் **பிறங்கக் கற்ற** புலவன்
ஈடில்லாக் கொடைநடையில் இழுக்கில்லா தருமன்
எல்லோர்க்கும் இதமான இரும் பெரிய நண்பன்
நாடுபுகழ் நல்லாசான் கலாநிதிநாகேஸ் வரனை
நான்பாடி, ஆண்டுபல வாழ, வாழ்த்து வேனே

முதுபெரும் புலவர், கலாபூஷணம், புலவர்மணி, ஆசிரியர்
வை. க. சிற்றம்பலம்
இணுவில், அளவெட்டி



மணியான மாணவரால் மாபெரிய புகழ் பெறுவீர்

(வெண்பா)

செந்தமிழ்நற் சொல்லெடுத்துத் தித்திக்கும் நின்குரலால்
நந்ததமிழர் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் – சுந்தரனே
நண்ணும் மணிவிழா நாயகன்நா கேஸ்வரன்நீ
திண்ணமுற வாழ்வீர் சிறந்து.

(விருத்தம்)

நயினைநாக பூஷணியின் அறங்காவல் பெருமை பெற்ற
நற்குலத்தில் வந்துதித்த புகழ்க்குரிய நாகேஸ்வரன் நீ
பயிலுமகா ஜனமாதா மாணவனாய் மாண்புற் றோங்கி
பல்கலைக்காம் கழகத்தின் பார்புகழும் ஆசான் ஆகி
இயலிசைநா டகம்முதலாம் பல்கலையிற் புலமை பெற்று
எண்ணரிய விருதுகளும் பட்டங்கள் பரிசும் பெற்று
நயமாகப் பேசுதற்கோர் நன்மனிதர் இவரே என்று
நாற்றிசையும் போற்றிடவே நல்வாழ்வு கண்டீர் வாழி

மணியான சொற்பொழிவால் மக்களைநீர் கவர்ந்திடுவீர்
மணியான புன்னகையால் மனங்களைநீர் வென்றிடுவீர்
மணியான எழுத்தாலே மாநிலத்தை வாழவைப்பீர்
மணியான மாணவரால் மாபெரிய புகழ்பெறுவீர்
மணியான மனிதனென மாநிலத்தோர் போற்றிடவே
மணியான இல்லறத்தில் மாண்புடனே திகழ்கின்றீர்
மணிவிழாக் கண்டேநீர் மனையாளும் மக்களுமாய்
மகிழ்ந்தென்றும் வாழ்ந்திடுவீர் வாழியவே பல்லாண்டு.

வாழ்த்துவோர்

'கலாபூஷணம்' சைவப்புலவர் சு. செல்லத்துரை

ஓய்வுநிலை அதிபர்,
இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்,
இளவாலை.



வல்லவனே நீ வாழ்க பல்லாண்டு

நா கேஸ் வரனெனும் நற்றமிழ்ச் செல்வ
பாரோர் போற்றும் பண்புகள் மிக்கோய்
மணிமே கலைதரும் மணிபல் லவமாம்
நயினை தந்த நல்லதோர் சேயே
கண்ணியம் மிக்க கனக சபாபதி
தன்னொடு சேர்ந்த தையல்நல் லாளும்
பெற்றே தந்த பெரும்புக ழாழ
அகத்தின் அழகை முகமது கூற
முத்தமிழ் வல்ல முதுபெரும் புலவ
உன்னறி வதனை அளவிட லரிது
சொற்பெருக் கதனைச் சொல்லலும் இயலுமோ
மணிவிழா வொன்றில் அன்றுமைக் கண்டேன்
மனமதிற் புகுந்த மகனும் நீரே
பெரியோர்ப் போற்றும் பெருமக னாவீர்
ஆசான் மாரை அன்புடன் தொழுமுமை
யாவரும் போற்றிட வாழுகின்றீரே
உம்மிடம் கற்ற சபர கமுவ
மாணவர் போற்றிட மனதிற் கொண்டனர்
அதன்பெறு பேறே மணிவிழா வாகும்
டாக்டர் நாகேஸ் வரனும் நாளும்
கடவுட் கொள்கை தன்னை உடையீர்
சொற்சுவை பொருட்சுவை இசைச்சுவை தன்னொடு
பிரசங்க மாரிபொழியவல் லீரே
கேட்டார்ப் பிணிக்கும் தகையன அன்றோ
எல்லாச் சிறப்பும் ஒருங்கே கொண்ட
வல்லவ னேநீ வாழ்கபல் லாண்டு
மனைவி மக்கள் சுற்றம் தன்னுடன்
மனையறம் சிறக்க வாழ்கபல் லாண்டு
நயினை அம்மனை இதயத் திருத்தி
வாழ்த்தி நின்றேனே வாழ்க வாழ்க

பண்டிதை திருமதி, பொன். பாக்கியம், *சுழிபுரம்*



வையத்தென்றும் இலங்கி நீடூழி வாழி

1. ஞங்கையும் மதியும்சூடும் கடவுளருள் தினமும் காக்க
நங்கையர் திலகமுடன் நாகேஸ்வர நம்பி நலமோங்க
சங்கையுறு சான்றோர் கொண்டாடும் மணிவிழாநாயகனாய்
மங்களம் பொங்க மாநிலத்தென்றும் வாழிய வென்று வாழ்த்துதுமே

2. தானுயர்ந்த தவத்தால் தாரணியில் தகைமை சேர் பேராசானாகி
வானுயர்ந்த வரத்தால் மணிவிழா நாயகனாம் நாகேஸ்வரனை
தேனுதிரும் மலர்தூவி தேசமெல்லாம் புகழோடு வாழியென்று
மேனுயர்ந்த தேவர்களும் வாழ்த்திசைக்க வாழி நூறாண்டு!

3. தேவாரத் திருவாசகத் தெள்ளமுதை தேன் கலந்த தீஞ்சுவையில்
நாவாரப்பாடும் நாகேஸ்வரன் நாள்தோறும் நலமோங்க
பூவாரும் போற்றிப்புகழ புவி மீது பொன் பொருளோடு புகழ் சேர,
பாவாலே பாராட்டிப் பாருலகம் பயன்பெற வாழ்த்துதுமே

4. மாமணத்தில் சேர்ந்த மணவாளத் தம்பதிகள் மலர்ந்திங்கும்
பூமணம் போல் பொன்னோடதன் ஒளியும்போல் புகழோடு புவிமீது
தேவமலர்க்காவினில் சிந்துபாடும் சிங்கார வாழ்வினில்
காமனும் ரதியுமாய் நாகேஸ்வரன் துணையாளுடன் வாழியவாழியவே

-புலவர் செ.து. தெட்சணாமூர்த்தி

'மதுரகானம்'

கந்தர்மடம்



உன்போன்றோர் உண்டோ உரை!



மணிவிழாக் கண்ட முனைவனே நின்னை
நனிபுகழ்ந் தேற்றுமிந் நாளில் – இணைந்தே
மனநிறை வோடுநான் வாழ்த்துவேன் வாழி
தினந்தினம் பேரோங்கி யே.

உள்ளும் புறமும் ஒருவகைத் தாம்மனங்
கள்ளங் கபடம் அறியாதே – உள்ளதனை
உள்ளபடி ஓதும் உயர்மனத்தோய் செந்தமிழின்
வள்ளலே வித்தக னே.

உன்னால் உயர்ந்தவர்கள் ஒன்றோ இரண்டோமோ
பன்னூறு காட்டிப் புகழ்படைத்தாய் – என்னளவில்
நீசெய்த தென்றும் நினைவில் இருக்குமையா
கூசா துரைப்பே னதை.

தானேதான் வேறொன்றித் தாரிணியில் வேண்டாமென்
ஈமனங் கொண்டவர்கள் வாழ்புவியில் – தானாக
முன்னின்று மற்றவரை மேலுயர்த்தும் பண்புடையோய்
உன்போன்றோர் உண்டோ உரை.

பன்னூல் பதித்துப் பிறர்ஞானங் கொள்ளவெனும்
நன்நோக் குடைத்தாய் நலம்பெற்றோம் – இன்னுமின்னும்
பன்னூறு நூல்கள் படைத்தளிப்பாய் பாவலனே
பின்னோர் பயன்கொள்ளு மால்.

செந்தமிழிற் பேருரைகள் சைவஞ்சார் சொற்பொழிவு
புந்திசால் மாந்தருடன் பட்டிமன்றம் – சந்ததமும்
சோர்வின்றிச் செய்யுஞ் திறன்படைத்தாய் நாவலனே
பார்போற்றும் உன்றன் பணி.

ஆய்வுத் தடத்தில் அரும்பங்கும் ஆற்றுகின்றாய்
வாய்த்ததுன்றன் பாற்பலவாம் பொக்கிஷங்கள் – ஓய்வின்றி
ஆழ அடிபுக்கி ஆகுவன அத்தனையும்
நாள்கடந்தும் பேர்சுமக்குஞ் சீர்.

பல்துறையில் பாதம் பதித்துயர்ந்து சீர்பெற்றாய்
எல்லோர்க்கும் மாட்டா இயல்பதுவாம் – வல்லவனாய்
வேரூன்றிப் போனாய்நீ வித்தகனே எஞ்ஞான்றும்
பார்போற்றும் உன்றன் பணி.

தாய்நாடு தன்சமூகம் தாய்மொழி தன்மார்க்க
நேய முடைத்தவனே நல்மனிதன் – நீயோ
அனைத்தும் உடைத்தவனாய் ஆகுகின்றாய் ஐய
மனிதருள் நல்மனிதன் நீ

வாழ்த்த வயதுண்டு வாழ்த்துகின்றேன் நெஞ்சத்தில்
காழ்ப்பில்லாப் பேர்நாங்கள் நின்வாக்காம் – ஆளறிந்தே
வாழ்த்துதலும் வேண்டும்நீ வாழ்த்த உகந்தவனே
நீள்நெடுநாள் வாழியவிப் பூ.

'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

தலைவர், இலங்கை இஸ்லாமிய ஆய்வகம்



நாகேஸ்வரன் புகழ் நவரத்தின மாலை

1. **நா**கேஸ் வரனென்னும் நல்லகலை ஞானமுள்ள
   வாகீ சகலா நிதி, நயினை – நாகேஸ்
   வரிதேவி கோயில் வழிவழி காவல்
   புரியும் புகழே புகழ்

2. ஓயாத பேச்சில் உதிரும் பகடிகள்
   ஆயாதே சொல்லும் அருங்கருத்து – வாயாரப்
   பாடிப் பரவுமருட் பண்ணிசையைக் கேட்டாலோ
   ஓடி ஒழியும் துயர்

3. போகும் இடமெல்லாம் மேவும் புகழாம்
   வாவும் பரிகளென வந்துதிர்ந்து – தாவும்
   தமிழில் சபையோர் தலைகால் புரியாதே
   மகிழ்செய் பேச்சு மழை.

4. இட்டம்போல் ஏகும் இடமெல்லாம் எப்போதும்
   பட்டங்கள் பாராட்டுப் பத்திரங்கள் – மட்டுமல்ல
   பேரா சிரியரெனும் பேறும் பெறுகின்றார்
   ஆரால் இயலும் இவை.

5. அகவை அறுபதென ஆச்சரியம் மேலோங்கும்
   சுகத்திலோ அன்றி அழகு – முகத்திலோ
   முதுமையைக் காணோம் முயன்றுபார்த் திடினும்
   இதுபிறர்க் கேலா இயல்பு.

6. வானொலியில் வந்து வசீகரிக்கும் வார்த்தைகள்
காணொளியில் காட்சிதரும் கட்டழகு – மாணவரை
மற்றுமுள மாந்தர்களை மேவி மனமுவந்து
பற்றுமிகப் பாராட்டுப் பண்பு.

7. மகாஜனக் கல்லூரி மைந்தன் எனும்போது
சுகானந்தம் காணுபவன்; வஞ்சம் – புகாநெஞ்சன்
ஆசிரியர் தம்மை அனுதினமும் நெஞ்சேற்றில்
பூசித்தல் உன்தன் புகழ்

8. சைவம் எனும்போதும் செம்மைத் தமிழுய்யச்
செய்வம் எனும்போதும் சேர்ந்தித்த – வையம்
முழுதும் அலைந்துமுழு மூச்சாய் இயங்கும்
பழுதில் பணியுன் பணி.

9. அறுபதாம் ஆண்டு நிறைவிலா னந்தம்
உறுவதாய் உய்கதி யாவும் – தருவதாய்
நாகேஸ் வரனுக்கு நல்லதொரு பொற்காலம்
நாகேஸ் வரிசெய் நலம்.

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஓலுவில்



இன்சொல்லும் இன்முகமும்
இங்கிதமும் உன் வேதம்

I

நல்லவன் வல்லவன் நாலும் தெரிந்தவன்
எல்லோரும் ரசித்தடவே இனிதாகப் பேசுபவன்
துணிவோடு தன் கருத்தை பணிவாகச் செப்புபவன்
பிணி நீங்கிப் பெருவாழ்வு வாழ்ந்திடவே வாழ்த்திடுவோம்

II

சமயமா, இலக்கியமா, சமூகமா, ஆய்வுப்பணியா
எதுவேண்டும் சொல் மனமே, ஆங்காங்கு உதவிடுவான்
கற்றல், கற்பித்தல், கதைசொல்லல், பாடுதல்,
எழுத்தாற்றல், அத்தனையும், உன்சொத்து இது உண்மை உன் சொத்து

III

இன்சொல்லும் இன்முகமும் இங்கிதமும் உன்வேதம்
புன்னகையும் புரிந்துணர்வும் உன் இனிய படைபலங்கள்,
ஏதும் உதவியா 'இதோ நான் இருக்கின்றேன்' – எனும்
சலியாத நல்லுணர்வு, உன் நற்பண்புக்கோர் உதாரணம்

IV

நல்லாசன் நற்றோழன் நயமாய்ப் பழகிடுவாய்
எல்லாமாய் நீ தோன்றி நற்சிந்தனை வழங்கிடுவாய்
தத்துவமாம் உன்பேச்சுத் தனித்துவமாய் ஒலித்திடுமே
எத்துணை நாம் சொல்வது! எல்லாமே ஏற்றம் ஐயா!

V

மனம் மகிழ மணிவிழா, மனம் போலக் கொண்டாட,
மணியான பணிகள் பல மேன்மேலும் ஆற்றிட
நலம் தரும் நயினைத்தாய் நல்லருள் பொழிந்திடுவாள்
நாமும் உனை மனமார வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!

"கலாபூஷணம்" திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு-



குமரனாய் இருக்கிறாய் இன்னும்

அதி அன்புமிகு எங்கள் தமிழ்க்காவலரே! – நீர்
அளவில்லாக்காதலன்றோ தமிழ் மீது கொண்டீர்
மகாஜன மண்ணின் மைந்தனே! மணி விழா நாயகனே!
அகவை அறுபது ஆனதுவோ உனக்கும்
ஆனாலும் குமரனாய் இருக்கின்றாய் இன்னும்
இன்றளவும் நரை விழுந்திலையோ உனக்கு
இலக்கியப் பேரொளியாய்ப் பயன்தருவாய் பிறர்க்கு
முனைவர் நாகேஸ்வரன்
முத்தான நல்லாசான்
வாகீச கலாநிதி
அருட் கலைமாமணி
வித்தகக் கலைஞன்
விரிவுரையாளன்
இத்தனை எதற்கு?
இன்னும் நீயோர் நூலாசிரியன்
நயினையின் அறங்காவலனே!
நாகேஸ்வரா – உன் பெருமை உண்டு
மகாஜன அன்னை பெருமிதம் கொள்கின்றான்
அன்பும் அறமும் வளர்த்தருள் புரியும்
அமிழ்தத் தமிழ்த்தாயின் அருளால்
இலக்கியப் பணி செய்து
இளமையுடன் திகழ்க!
என்றும் பதினாறு போல்
வாழ்க நீ வாழ்க வாழ்கவே!
பொங்கும் தமிழ்த்திறத்தால் சபையாளும்
மகிழ நீ நீடூழி வாழியவே!

ம.மணிசேகரன்
பிரதி அதிபர்
யா/ மகாஜனக்கல்லூரி



மனிதருள் மாணிக்கமாய்த் திகழ்ந்திட்ட மணியே

உலகும் அகவை அறுபதில் தடம் பதிக்கும்
இலங்கை மகன் கனகசபாபதி நாகேஸ்வரன்
துலங்கிட மண்ணில் விளங்கிட புகழாகி
சிலமாந்தரின் உமைக்கண்டு மகிழ்கிறோம் நாம்

இனிய நல்வாழ்த்தின் முனைவரே பெருமை
புனிதமாய்க் கொண்டிலங்கும் கல்வி மகானே
தனி மனித விழுமியம் காத்திட்ட பெருமகனே
மனிதருள் மாணிக்கமாய்த் திகழ்ந்திட்டமணியே

இல்லறம் காத்து இனிதுறை மைந்தரைப் பெற்று
தொல்லறமுடன் புனிதம் பண்பு காத்திலங்கும்
அல்லல்களை வாகீச கலாநிதியே பண்பின்னே
இல்லை ஒரு மாதவம் என பெற்ற புகழ்நிதியே

சேர்ந்திட்ட சொந்தமுடன் கல்வி காத்து பலவாயிரம்
ஊர்திகழ கல்வியலாளரை உருவாக்கி உயர்வாகி
பேரான் புகழ்நிதியனே நல்லாசானே எம்
சீரான புகழாகி வாழியவே பல்லாண்டு பல்லாண்டு

என்னுடன் கல்விதனை கற்று என்றும்
உன்னிடம் காணும் பண்பு கண்டு மகிழ்ந்தேன்
இன்னமுதமான தமிழ்க் கலாநிதியே என்
மன்னவருடன் வாழ்த்துகிறேன் பல்லாண்டு

திரு. திருமதி கங்காதரன்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ்
இல.361, டாம் வீதி, கொழும்பு 12



[இன்று மணிவிழா நாயகனாய்த் திகழும் அன்புநண்பர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A., Ph.d அவர்கள், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மரபுவழி அறங்காவலர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவர், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர்.

இன்னும் நீண்டநாள் வாழ்ந்து அறப்பணியும் தமிழ்ப்பணியும் செய்து பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டும் என்று

எல்லாம் வல்ல நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை
வாழ்த்தி வணங்கிப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.]

நினதுபுகழ் நிலைக்கட்டும் பல்லாண்டு

கண்ணியமும் கடமையும் கட்டுப்பாடும் கொண்டு
காருண்யசீரலாய் நல்ல கல்விமானாய்த் திகழ்ந்து
புண்ணியமே செய்திட்ட புருஷோத்தமரே! நல்லாசானே!
பூவுலகில் நயினை நாகபூஷணி அம்மன் அருளாலே
எண்ணிலாக் கருமங்களை ஏற்றமுடனே செய்திட்ட
ஏழைபங்காளரே! எங்கள் அண்ணாவின் அன்புநண்பரே!
மண்ணிலே என்றும் நல்ல மாண்புடனே வாழ்ந்து
மாபெரும் புனிதராய் இன்று மணிவிழா கண்டுவாழியவே!

சிந்தனைச் சிற்பியாய் நல்லறிவுப் பெட்டகமாய்
சீர்திருத்தம் பல செய்து தமிழ்மொழிதான் வளர
உந்தனையே அர்ப்பணித்து உன்னத சேவையாற்றி
ஊர் போற்றப் பார் போற்ற நல்லுத்தம மனிதராய்
எந்தனையும் எம் அண்ணனையும் மகிழ்வித்து
ஏற்றங்கள் பலபெற்று மாற்றங்கள் பல செய்து
வந்தனைசெய்தே நயினை நாகபூஷணியை வழிபட்டு
வாழியவே பல்லாண்டு வாழ்நாளில் வளமுடனே!

பத்தரைமாற்றுத் தங்கமெனக் பாரினிலே பணிசெய்து
பல்கலைக் கழகமதில் பல அறிஞர்களை உருவாக்கி
இத்தரைமீதி லென்றும் இனியவராய் இன்சொல்பேசி
ஈஸ்வரன் அருளாலே பல புத்தகங்களை வெளியிட்டு
முத்திரைபதித்தாற் போல எங்கும் முழுநிலவாய் ஒளிவீசி
மூதறிஞராய்த் திகழ்ந்து நல்ல பேச்சாளராய் மிளிர்ந்து
புத்தரை வாதில் வென்ற வாதவூர் வாசகம் போல்
பூவுலகில் நினது புகழ் நிலைக்கட்டும் பல்லாண்டே!

அன்புடன் வாழ்த்துபவர்

செல்வி க. சிவயோகராணி, ஜே.பி

ஆன்மீகத் தொண்டரும்

பண்ணிசை, அறநெறி ஆசிரியரும்

கந்தரோடை,

சுன்னாகம்.



உங்கள் புனிதப்பணி தொடரட்டும்...

அறுபதாம் ஆண்டு விழாக்காணும் கலாநிதி நாகேஸ்வரன் அயராது தம் சேவை தொடர இறையருள் என்றும் துணை நிற்கவேண்டி எமது அன்பும் நல்வாழ்த்தும் உமைச் சேர்வதில் எமக்கின்பம்.

மனிதரை விலங்கினின்றும் பிரிப்பதுதான்
பண் பாடாயின் அதுவே கல்வியுமாம்
மனித வாழ்வில் சமயம் வாழும் வழிகாட்டும்
அது பண்பாட்டின் அடிப்படையாம்

கல்வி, சமயம், மாணவச் செல்வங்களின் அடிமனம் இருத்தி
பதியவைக்கும் பணியைச் செய்தீர்
அக அழகு தேக்கி அறிவழகால் திறம்காட்டி
தகவுடையார் என் பல்கலையும் புகழ்பாட

உமை நாடி வந்த மாணவச் செம்மலர்கள்
நிறைவு பெற்று மகிழ்ந்த நாள் மட்டுமல்ல
சைவசமயம் என்றும் தன்வழியே நடையில
உங்கள் புனிதப்பணி தொடரட்டும்

சித்தமது குதூகலிக்க சிறந்ததொரு
பாராட்டை முத்தெனவே வைப்பதோடு
நிறைவான வளத்தோடும் நிலைபெற்ற சுகத்தோடும்
என்றென்றும் சேவை பிறர்க்காக்கி

இறையருள் என்றும் நல்லாசி உமக்காக
இதயம் வழியோடி எம் வாழ்த்து உரித்தாக.

அன்புடன்,

திருமதி மனோஹரி சீவரெட்ணம்

மட்டக்களப்பு இணைப்பாளர்– இலங்கை இந்துப் பேரவை

தலைவி, மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம்



M. Thirunavukarasu J.P.U.M
Attorney at Law & Notary Public,
Rtd. District Judge.
127/7A, Temple Road, Jaffna.
T.P: 021 222 2326

மு. திருநாவுக்கரசு,
சட்டத்தரணி,
ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி,
127 / 7A, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

அருட் கலை மாமணி சீருடன் வாழ்க சிறந்து

Uண்பினன் பழகுதற்குப் பாகுபோல்வான்
கண்ணியன் கடமை வீரன்
மண்மிசை தமிழைப் போற்றும்
மாண்பினால் கலை மாமணிமானான்

சொல்லினில் இனிமை கொட்ட
சேர்விலாது நூல்கள் கற்றான்
வல்லவன் தன் உரையினாலே
"வாரியாரை" நினைவூட்டுகிறான்
சொல்வளம் இசையும் சேர
சுவைகொட்ட உரைகள் செய்வான்
அல்லும் பகலும் உமையாள்
அடியினை மறவா நண்பன்

நற்பெரு நயினை நல்லூர்
நாயகி தன்னை எண்ணி
அற்புத இசைப் பேருரைகள்
ஆற்றுவான் அவளை எண்ணி
கற்பனை சுரந்து மேவ
காரணம் அவளே என்பான்
பற்பல பட்டம் பெற்றும்
பண்பிணை இழந்தாயில்லை

உத்தமி நயினை அன்னை
உணர்வினில் கலந்ததாலே
வித்தகனாகி விளங்கினாய் புவியிலின்று
அத்தனையும் அவள்தந்த பரிசாமன்றோ?
சத்தியம் தமிழை வெல்ல இந்த
தரணியில் மொழிவேறில்லை
நித்தமும் அவளை எண்ணி
நீழ்புவி நிலைத்து வாழி

மு. திருநாவுக்கரசு, ஜே.பி.யு.எம்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.



சொக்கிப்போகும் சொர்க்கம் நும் சொல்வன்மை

கல்விக் கண்ணைக் கசடறத் திறந்தவர் – நம்மைக்
கண்களாகக் கொள்பவர் – நல்லாசான்
நற்பணியாளர் நம் நாகேஸ்வரன் ஐயா
நன்றியுடன் நல்வாழ்த்து நவில்கிறேன்

நற்கருப்பஞ் சாறு போலே நாச்சியார் திருமொழியினை
நயமாக உரைத்தீர் இன்றும் என்றும்
என் ஆசான், நற்பேராசான் தங்களை என்
நினைவில் நிலைநிறுத்திப் போற்றுகிறேன்

விகடகவி என்றும் வியக்க வைக்கும்
வித்தாரகவி நுமைப் போற்றுவேன்
ஏத்துவேன் இன்றமிழ் தனை இன்றும்
இனிப்பாகச் செப்பும் நம் வன்கவியினை
வாயார வாழ்த்துகிறேன் வாழ்க பல்லாண்டு

சொக்கிப் போகும் சொர்க்கம் தும் சொல்வன்மை இதனாலன்றோ
சொற்பொழிவாளர் எனும் தகைமை பெற்றீர்
கசடறக் கற்ற கல்வியால் கல்விமானானீர்
கலக்கும் கலம்பகச் கலைநூட்பத்தால் கலைஞரானீர்

வியத்தகு ஆற்றலால் விந்தை மிக்க விரிவுரையாளனானீர்
நுட்பமான நூலாய்வாலே நுண்ணறிவு மிக்க நூலாசிரியரானீர்
எப்படி ஐயா இத்தனை பெருமை பெற்றீர்
நுமை வியக்கின்றேன் நூறுகோடி வருடங்கள்
நீர் வாழ் நாநூறு கொண்டு வாழ்த்துகிறேன்.

அன்புடனும், நன்றியுடனும் நினைவு கூரும் மாணவி,

திருமதி ப. செல்வராஜா அன்ரனி

தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை.



இன்பத்தமிழ் வளர்த்த பெருமை

உமைச்சாருமையா

முத்தமிழ் அன்னை ஈன்றெடுத்த மணிகளுள் ஒரு மணியாம் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் அறுபதாவது அகவை மணிவிழா நிகழ்விற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அகமகிழ்ந்து அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

அரும்பினைப் போல் உள்ள தமிழை
அருவியைப் போல் பாய்ந்திட
அலைபோல் திரண்டிட வைத்தீரையா!
அழகுத் தமிழ் மொழியை
அறுபது ஆண்டென்ன கண்டீர்
அறுபதுக்கு அறுபது ஆண்டுகள்
அகிலத்தில் நிலைத்திட
அமுதத் தமிழ் வளர்த்திடுவீரையா!

இனிய செம் மொழியாம்
இலங்கைத் தமிழ் மொழியாம் எம்
இதயம் கவர்ந்து என்றும்
இனிதாய் இனித்திடும் தமிழை
இமைகள் மூடாமல் எம்
இன்பத் தமிழ் வளர்த்த பெருமை
இனிய ஆசானாம் கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்
ஐயாவையே சாருமையா!

கல்விமானும், கலைஞரும், சொற்பொழிவாளரும் நூலாசிரியருமான ஆசானை, பார்போற்றும் பண்பாளனை பல்லாண்டு காலம் மேலும் பல பேறு பெற்று வாழ்க! வளம்பெருக! என வாயார வாழ்த்துகிறேன்.

நன்றி

தமிழன்பி,
ஜனுல்வாஹிதா முபாரக்
(இக்கிரிக்கொல்லாகமுவ.)



பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் முனைவர் பட்டம் பெற்றமைக்காக

மனமுவந்தளித்த வாழ்த்துப் பா

செந்தமிழை ஆய்ந்தறிந்து தொன்மைப் புகழ்காத்துப்
புந்திசால் மாந்தர் புலமோங்கிச் – சொந்தம்
எனக்கொண்டான் வாழ்வில் இணையில்பல் பேறு
முனைவர் : நா கேஸ்வர னே

கனக சபாபதி கோகிலாம்பாள் செல்வன்
தனைத்தமிழுக் கீந்ததமிழ்ச் செல்வன் – கனவான்
எனப்போற்று வாறுவுயர் பண்பாளன் சான்றோன்
முனைவர் : நா கேஸ்வர னே

செஞ்சொல்லால் மன்றில் சிறக்கும் உரைகேட்பின்
புஞ்செய் மனஞ்செழிக்கும் பக்திகொளும் – நஞ்சில்
பனையூறு நற்பாகின் பாற்படு சொல்லாள் புலவன்
முனைவர் : நா கேஸ்வர னே

பட்டங்க ளாற்பேர் பெறுவோர் பலர் : பதர்கள்
பட்டங்கள் பேர்கொள்ளும் சிற்சிலரால் – பட்டம்
உனையேற்றுப் பேர்கொண்ட பேறுற்ற தைய
முனைவர் : நா கேஸ்வர னே

நாவலர்போல் நாவல்லான் நற்றமிழின் காவலன்நீ
நாவலர்போல் சைவநெறி நற்றமிழ்த்தேன் – காவும்
பணிகொண்டாய் புண்ணியனே பார்போற்ற வாழ்வாய்
முனைவர் : நா கேஸ்வர னே

இனத்தால் எவர்வேறு என்றாலும் நோக்கான்
தனித்ததவன் நோக்கு : தமிழ் தாமே – மனத்தால்
அனைவரையும் நேசிக்கும் அன்புடையான் நண்பன்
முனைவர் : நா கேஸ்வர னே

சுதேச மருத்துவத்தின் சீராய்த லோடு
அதேநூல்கள் கொண்டதமிழ்க் கோன்மை – மதிசுவர்
தனித்துவமும் ஆய்ந்தறிந்து சான்றுடனே கோத்த
முனைவர் : நா கேஸ்வர னே

பூவில் மதுவூறும் பொன்னில் அழகொளிரும்
கூவுங் குயில்குரலில் தேன்பாயும் – நாவில்
நனிமாந்து மாசில் அருள்கொண்ட சான்றோன்
முனைவர் : நா கேஸ்வர னே

தாய்மொழியை மாந்தத் துணைசெய்வார் மாணாக்கர்
ஆய்ந்தறிய வேண்டுவன ஆய்ந்தளிப்பார் – தூய்தாம்
முனைப்பவர்க்கு மற்றவரும் முன்னேற்றம் காண
முனைவர் : நா கேஸ்வர னே

மனத்தா லுயர்ந்த மனிதர்சீர் கல்வித்
தனத்தைக் கொடுத்துயர்த்துந் தக்கோன் – தனித்தோன்
மனமருள வேண்டுகின்றேன் வாழ்விலவர் ஓங்க
முனைவர் : நா கேஸ்வர னே

"ஜின்னாஹ் ஷரிபுத்தீன்"



உனதகம் ஏற்க ஓங்குக பல்லாண்டே

உலகம் உவப்ப பலமுறும் ஆற்றலில்
நலமுடன் ஆளும் நாகேஸ்வரனே!
அருளும் அன்பும் அறமும் பண்பும்
திருவும் நிறைந்த செழுமையும் சிறப்பும்
கற்றவை பற்பல கனிந்தவை யாவையும்
பெற்றவை யாண்டும் பெருமையில் பீடுற
மணிபல்லவத்தின் மாண்புறும் சக்தியாய்
அணிதரும் உலகை ஆண்டிடும் தாயாம்
நாகதீபமென்று ஆன்றோர் உரைத்திடும்
நாகம் மலரிட்டு ஏற்றிடும் நாயகி
நயினைப் பதிவளர் அன்னையின் கருணையில்
வியப்புறும் ஞானமும் வித்தைசேர் சித்தமும்
பொழிந்திடும் மழையென நின்னா பொழிந்திடும்
பொழிவில் பல்துறை ஆற்றலும் பொலிவும்
விவேகமும் வேகமும் வீரமாய்த் துள்ளும்
தவமாய் ஞானம் தனித்துவம் கொள்ளும்
பல்கலைக் கழக பாங்குயர் ஆசான்
பல்கலைத் துறையின் சொல்கலை நிபுணன்
மொழித் துறை வல்லோன் முத்தமிழ் ஆற்றலின்
நளினம் நிறைந்திடும் நயப்புறும் இசையோன்
புன்னகை வதனம் மென்னகை கூப்பும்
என்னகம் நிறைந்த இன்புறும் அன்பன்
எத்தனை மாணவர் இவன் வழி நின்றோர்
அத்தனை பேரும் ஆற்றலால் உயர்ந்தோர்
இத்தனை தகுதிகள் இன்னும் எத்தனை எத்தனை
சித்தகம் நிறைந்த சீர்மாமணியே
நின்பெருவிழாஅறிந்து அகம் மகிழ்ந்தோம்
மணிவிழா கண்டு மாண்புறும் தகைமையில்
நனி பெறும் வாழ்வில் நனைந்தீர் வாழ்க.

அன்னை காளி அருட்பதத் துணையும்
நன்னவன் சிவனின் நமசிவாயமும்
வேழமுகவனின் வெண்பிறை மருப்பும்
வேலனாம் அறுமுகன் வெற்றிசேர் வேலும்
மாலவன் கரத்தில் மாண்புறும் சக்கரம்
சாலவன் வடுகனின் தாங்குமெய்ச் சூலமும்
ஒன்பது கோளின் உச்சத்து அருளும்
அன்புறும் உனக்கு அனைத்துமே துணையாம்
சித்தர்கள் ஞானியர் வித்தக அறிஞர்கள்
முத்துக்குமார சுவாமியின் குருவருள்
இத்தகு சீர்தவம் நித்திலம் ஆகுக
கனகசபாபதி நாகேஸ்வரனே
கனகமாய் பொலிக பவள நல் விழா
எனதகத் தன்பின் இன்புறும் வாழ்த்தினை
உனதகம் ஏற்க ஓங்குக பல்லாண்டே.

இவ்வண்ணம்
உங்கள் அன்புசார்
வை. இ. எஸ். காந்தன் குருக்கள்
கண்மணிதாசன் – ஏரூரான்

பிரதமகுரு, ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், பெரியபோரதீவு
பிரதமகுரு, ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், ஏறாவூர்

ஸ்ரீ காளிபுரம்,
பெரிய போரதீவு.
10.09.2012



இனியன செய்க! இனிதே வாழி

(வெண்பா)

மணிவிழாக் காணும் முனைவர் மகுடம்
அணிசெயும் நாகேஸ் வரன்தன் – பணிநலம்
பாராட்ட நாடும் நயினைவாழ் அம்மனும்
சீராட்ட வாழி சிறந்து.

(ஆசிரியப்பா)

நாக தீபமென நாடறி தீவாய்
நானிலம் போற்றும் நயினையந் தீவில்
நாக பூஷணி நல்லருள் பாலிக்க
மரபு வழிவழி அறங்கா வலராய்
அருட்கலை மாமணி அருளொளி விளங்க
திருவருள் வாகீச கலாநிதிக் கீர்த்தி
நாடு போற்ற நயவுரை பெற்றே
வீடு தோறும் விரும்பிக் கேட்க
நாளும் நல்லநற் சிந்தனை வழங்கி
வாழும் மக்கள் வாழ்த்தினைப் பெற்றாய்
மொழித்துறைத் தலைவராய் மொழிவளம் கண்டாய்
முனைவர் பட்டம் முடிமேற் சூடி
அனைவர் கல்வி அழகுறச் செய்தாய்
பட்டதாரி மாணவர் பலராய்ப்
பாங்குறப் பணிகள் பலவும் செய்தாய்
சுப்ர பாதமும் சீராய்ப் – பாடி
நயினை அம்மன் நல்லருள் பெற்றாய்
சப்ர கமுவ பல்கலைக் கழக
பண்பாய்ப் பயின்ற பட்ட தாரி

எண்ணில் ஆசிரி யர்களும் வாழ்த்த
தமிழும் வாழச் சைவமும் வாழ
இமிழ்கட லுலகில் இனியனசெய்க
இறையருள் பெருக இனிதே வாழி.

(கலிவிருத்தம்)

வாழிய செம்மொழி வாரிதி வாழியே
ஏழிசை போலினி தாகியே ஓங்கிட
ஆசிரி யர்பலர் ஆகிடச் செய்திடும்
சீரிய பண்பெலாம் சேர்ந்திட வாழி

பன்மொழிப்புலவர்
'கலாபூஷணம்' த. கனகரத்தினம்
பி. ஏ (இலண்டன்) கல்விடிப்புளோமா



கனகசபாபதி மைந்தன் நாகேஸ்வரன் நலமே வாழி

மொழியினிலே புலமையுள்ளோன் மொழிவதிலே திறமையுள்ளோன்
மொழித்துறையின் தவிசாளன் இனிக்கும் மொழிப் பேச்சாளன்.

சைவம் தமிழ் இரண்டும் தன் விழியாய்க் கொண்ட தொண்டன்
சைவத் தமிழ் உலகின் சாதனையால் வென்ற தொண்டன்.

சிந்தையிலே தெளிந்தவற்றை சந்தனத்தில் சாந்து சேர்த்து
செந்தமிழ் தேனில் தோய்த்து தித்திக்கப் பேசும் நாவான்.

புரவலர் பலர் எனினும் புலவர்கள் சிலரேயாவர்
குரல் வளம் கொடையேயாகும் கோடியில் உனக்கேயாகும்.

வாகீச கலாநிதியாய் வருணணை செய்யும் போது கோகிலம் கூவக்
கேட்ட கோலமாம் மஞ்ஞையாவோம்.

தமிழினில் சைவம் பேசி இரண்டையும் தளைக்கச் செய்த அமிர்தனுக்கு
அகவை இன்று அறுபது ஆயிற்றம்மா.

கவியினைப் பொருந்தப் பாடி கல்லையும் கனிய வைப்பார்
நவில் தொறும் நயமேயூட்டும் செவிநுகர் கனிகள் தந்தார்.

நண்ணுவார்க்குதவும் நாகேஸ்வரன் நலமே வாழ
வண்ணமாய் வாழ்த்தும் வாய்ப்பு வாய்த்தது எனக்கும் வாழ்க வாழ்க.

இறைபணி செய்தல் என்ற துறைதனில் தோய்ந்த செம்மல்
மறை ஒளி காட்டி மக்கள் மனவிருள் நீக்கும் செம்மல்.

செம்புலப் பெயல் நீர் போல சைவமும் தமிழும் சேர்த்து
உம்பரும் உவக்கப் பேசும் நாகேஸ்வரன் வாழி வாழி.

பண்புடன் பணிவு கண்டேன் பழகிடும் அன்பு கண்டேன்
எண்ணத்தில் ஏற்றம் கண்டேன் எளிமையும் துணிவும் கண்டேன்.

கனகமாய் தாயைப் போற்றும் நயினையின் அறங்காவலன்
கனகசபாபதி மைந்தன் நாகேஸ்வரன் நலமே வாழி.

கலாபூஷணம் - ஆறுமுகம் - அரசரெத்தினம்
களுதாவளை, மட்டக்களப்பு.



Sri Ramakrishna Sarada Sevashrama,
Point - Pedro,
Sri Lanka.

உன்னதவாழ்வியற் செயற்பாடு போற்றுதற்குரியது

அருட்கலைமாமணி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாச் சிறப்புற அமைய அடியேனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்களுடன் யாம் பலகாலமாகப் பழகிவந்துள்ளோம். இவரது உன்னத வாழ்வியற் செயற்பாடு போற்றுதற்குரியது. எல்லாம் வல்ல தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி சகல நலன்களை நல்கும்படி அன்னையிடம் மனதார வேண்டுகிறோம்.

இறைபணியில்
அன்புள்ள
அன்னையின் அடியவன்.



எழில் திகழ் தமிழின் பேராசான்

நட்புக் கிலக்கணமாய் விளங்கும்
நண்பர் கனக நாகேஸ்வரன்
தட்ப வெப்பம் போல என்றும்
தன்னைமாற்றிக் கொள்ளாதவர்
உட்பொருள் அறிந்து உரைத்திடுவோர்
உன்னதமான பேச்சாளர்
எட்டுத் திசையும் அறிந்த எங்கள்
எழில்திகழ் தமிழின் பேராசான்!

தேடித் திரட்டிக் கொண்டவற்றை
தேன்திகழ் நூலாய் ஆக்கியவர்
கூடிப்பேசி குலவிடவும்
குணநலனுள்ள பெரியாராம்
நாடிச்சென்றார் தமக்குஎன்றும்
நல்லறிவாற்றலைத் தந்திடுவார்
சாடிப் பேசி வாதிடவும்
சற்றும் தயங்க மாட்டாரே!

நயினை நாகபூஷணியாள்
நமக்குத் தந்த பெருஞ்செல்வம்
பயனைப் பிறர்க்குதவும்
பண்பின் மிக்கார் தானிவரே
சயனம் செய்யும் வேளையிலும்
சிந்தனை வயப்பட்டே இருப்பார்
அயனும் படைத்தான் அவனியிலே
இவர் புகழுடனே வாழ்க என்போம்

'சிவநெறிப்புலவர்'
சி. ஏ. இராமஸ்வாமி
செயலாளர், இந்துமா மன்றம் – வவுனியா



வாழ்த்து

கலை இலக்கிய உலகில் ஒரு மைல்கல்
அறிவும் ஆற்றலும், ஆளுமையும்
வழிநடாத்தும் அருந்தவப் புதல்வன்
வானொலியில் பல வருடங்கள் முத்திரை பதித்தார்.
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில்
சில வருடங்கள் அரும்பணி ஆற்றினார்.
கதை, கட்டுரை, கவிதை, மேடைப்பேச்சு
இவரது அலங்கார அணிகள்
மேடையில் ஏறினால் மண்டபமே அதிரும்
ஆற்றொழுக்குப் போன்ற அழகான தமிழில்
அலுப்பில்லாமல் பேசுவார்.
சமயப் பேச்சுக்கள் இவரின் தனித்துவம்
இலக்கியப் பேச்சுகள் எண்ணிலடங்கா
இந்த வயதிலும் அன்று போலவே இளைஞன்
சமயப்பணி, சமூகப்பணி, இலக்கியப்பணி,
கல்விப்பணி, கலைப்பணி, கலா சாரப்பணி
இவற்றுக்கு ஒரு கனகசபாபதி நாகேஸ்வரன்
காலத்தால் அழியாத இவரது ஆளுமை
நிலைக்க வாழ்த்துக்கள்

அன்புமணி
'தவபதி' - ஆரையம்பதி



சமயம் பார்த்துச் சங்கதி சொல்வான்



சூழ்கடல் நயினைச் சுடர்விடு அம்பிகை
தாழ்பணி மரபிடைத் தலைமக னான
வாழ்நிலை பக்திப் பண்ணிசை வாயான்
நீள்புகழ் கனக சபாபதி புனைந்த
தமிழிடைத் தென்றல் தண்டமிழ் விறலோன்
அமிழ்தினுக் கினிய ஆழ்ந்தநற் புலமையில்
இமயம் போற்றும் தமிழ்ப்பே ராசான்
சமயம் பார்த்து சங்கதி சொல்வான்
சுவையும் நகைப்பும் சுகந்தமும் சேர்க்க
சபையில் சாற்றிடு சான்றுரை யாளன்
எவர்க்கும் இனிய பண்புநல் லுரைஞன்
நமக்குநல் மணிவிழா நாய னானான்
என்றும் வாழி இலதென வாழி

வே. ஞானகாந்தன்
அதிபர்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்

SVICH Swami Vipulananda Children Home
ESTD:29/04/1992 சுவாமி விபுலாநந்தா சிறுவர் இல்லம்

Regd.No:	NEP/PCC-CE-13-07/11/1996 SS/NEP/AM/AV/AP/21/03-05/01/1994	HA/7/56/2/25-22/10/92 HA/4/AM/68/24/02/98	Kurukula Road, Alayadivembu Division,
Bankers :	People's Bank, Akkaraipattu HNB , Akkaraipattu	A/C No: 063100150000480 A/C No: 078020016275	Akkaraipattu- 7/2, Sri Lanka.

இனித்திடுவார் நாகேஸ்வரன்

கனக சபாபதியின் அருட்கலை மாமணியார்
முனைவர் கல்விமான் நாகேஸ்வரன் – சபையிலே
மனங்கவரத் தமிழதனை அமுதமதாய் அளித்திட்டார்
இனங்கவர்ந்த பேச்சாளர் இவர்.

தங்கமென எல்லோரும் தாங்கி உவப்பெய்தும்
சங்கத்தமிழ் புலம்பும் பேராசான் – நெஞ்சினிலே
நீங்காத நினைவாக நிலைக்குந் தமிழ்குவித்தான்
எங்குங் கமழுதம்மா தமிழ்

மணிவிழா காணும் மாண்பான பேராசான்
நனிதுவக்கப்பேசி நகை தருகையிலே – அவைதனக்கு
கனிவான வதனமதில் தெளிவான ஒளிவீசும்
இனித்திடுவார் நாகேஸ் வரன்

இனியவனே உன்னை ஈந்தனையோ தமிழுக்கு
இனிக்கின்றாய் எல்லோர்க்கும் தேனாக – இவ்வுலகில்
பணிக்கின்ற மேதைகளும் பாவலரும் புரவலரும்
நனிதுவக்க வாழ்த்துகிறோம் விரைந்து

– நன்றி –

இறைபணியில், இறைபணிச்செம்மல்,
த. கயிலாயபிள்ளை, J P
தலைவர், சுவாமி விபுலாநந்தா சிறுவர் இல்லம்,, அக்கரைப்பற்று – 07



பொங்கு தமிழிசையரசன் பங்கமிலாமல் வாழ்க

நயினை அன்னையின் நல்லருள் பெற்றவன்
நல்லோர் அகத்தினை இன் தமிழால் ஆள்பவன்
கனகசபாபதி பெற்றெடுத்த அருள் மைந்தன்
கல்வியினால் உயர்ந்திட்ட பேரறிவாளன்

வாய்மையினால் உயர்வு கண்டு வள்ளலானவன்
வண்டமிழால் பெருமை கொண்டு திருமகனானவன்
ஆயிரமாய் மாணவரை ஆக்கி வைப்பவன்
ஆண்டவனாய் போற்றுகின்ற அருமை பெற்றவன்

அறநெறி வாழ்வுதன்னை உரைத்து நிற்பவன்
அன்புடனே அனைவரையும் நேசித்து வாழ்பவன்
கடமைதன்னைக் கண்ணெனவே கருதி வாழ்பவன்
மடமை போக்க மாணவர்க்காய்த் தன்னையீந்தவன்

சீர்தமிழின் பெருமை தன்னைச் சாற்றி நின்றவன்
சீலம் நிறை பண்பாளனாய் வாழ்ந்து காட்டியவன்
மானுடத்தை நேசித்து மாண்பு பெற்றவன்
மாணவர்தம் நெஞ்சங்களை வென்று நிற்பவன்

பொங்கு தமிழிசையரசனாகி நின்றவன்
பொதிகை மலைத் தென்றலாய் வீசி நின்றவன்
எங்கணுமே புகழ்கொண்டு வாழ்ந்திடவேண்டும்
இறையருளால் அவர் வாழ்வு ஒளிர்ந்திடவேண்டும்

வாழ்க வளமுடன் !

வாழ்த்தும் நெஞ்சங்கள்
மு. கிருஷ்ணபிள்ளை
உதவிக் கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்விப் பணிமனை, கம்பளை.



உணர்வுகளுடன் கலந்துவிட்டீர்

தமிழ்த்தின் சிரசினிலே
நாகபூசணித் தாயின் மடியில் பிறந்து
நாவலப்பிட்டியில் வாழ்ந்த
நகேஸ்வரன் ஐயாவே வாழ்க நீர்!

நாவுக்கு சுகம் தரும் உமது பேச்சும்
மனதுக்கு இதம் தரும் உமது கருத்துக்களும்
நீர் செய்யும் கதாப்பிரசங்கமும் என்
கண்முன்னே இன்று காணொளியாய்,

பல்கலைக்கழகப் பட்டம் பெற்று – என்
தாய்மொழியில் பாண்டித்தியம் பெற்று
தமிழை தளிர்விடச் செய்யும் உம்
பணிதனைக் காண்கையிலே

தமிழன்னை மடியில் தவழ்ந்துவரும்
குழந்தை போல உம்மைக் காண்கிறேன்!
வள்ளுவனிற்கு வாசுகிபோல
வாக்குக்கே ஈசராகத் திகழ்கின்றீர்

உம்மைக் கண்ட இரு நாட்களில்
உணர்வுகளுடன் கலந்துவிட்டீர்,
முத்தமிழுக்கும் நீர் "மணிமகுடம்"
சூட்டி விட்டீர்.

அன்பின் பிறப்பிடமாய்
ஆழ்ந்த ஆற்றலுடன்
இன்புற்று நீவாழ
ஈசனருள் வேண்டி

உம்பனாக நீ சிறக்க
ஊழி முதல்வனின் தாழ் பணிகின்றேன்
எல்லி முழுவதும் உம்மை
ஏக பிண்டனாக நினைந்து
ஜந்தவி உம் நாவிலே உறைகிறாள்
ஒளியுடன் உம் பாதையை திறந்துவிட
பாராட்டினையும் நீர் அடைய – உம்
மாணவியாகிய நான்
வாழ்த்துகிறேன்.

செல்வி. சாம்பவிலோஜினி இராஜரெட்ணம்

பிரதான வீதி,
தம்பிலுவில் – 02



இன்தமிழ்போல் நீடு வாழ்க கனக. நாகேஸ்வரனே!

ஆதி திராவிடன் கண்ட தமிழ் – எங்கள்
சுந்தரச் செந்தமிழ் பைந்தமிழே
தேனினும் மேவிய தீந்தமிழே
தெருத்தோறுமே பாடுவோம் உன் புகழே!

மூவர் மணிமுடி மேலிருந்து
மூவுலகையும் ஆண்ட தமிழ்
வித்தகர், பாமரர் நாவில் நின்று
விந்தை புரிந்திடும் அன்னைத்தமிழ்!

வள்ளுவன் கோலினில் வாழ்ந்த தமிழ்
பாரதி பாட்டினில் நின்ற தமிழ்
கம்பன் கவியிடைத் தான் தவழ்ந்து
மன இன்பம் கொடுத்திடும் முத்தமிழே!

எத்தனை எத்தனை மொழிகளுண்டோ – அவை
அத்தனையும் உந்தன் அடி வணங்கும்
மங்காத மொழி எங்கள் தமிழென
சங்கும் முழங்கி சந்ததம் பாடும் சங்கே முழங்கு!

செல்வி. செல்வமலர் சம்புநாதன்
(பட்டதாரிப் பயிலுனர்)
பழைய தபாலக வீதி,
விநாயகபுரம் – II
திருக்கோவில்



ஓம்



குப்பிளான் சொக்கவளவு
சோதிவிநாயகர் ஆலய நிர்வாகசபைப் போஷகர்
பிரார்த்தனைச் சபைத் தலைவி

சிவமயச்செல்வி, சைவநன்மணி புலவர்மணி,
கலாநிதி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி,
சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய மணிமண்டபம்,
குப்பிளான், யாழ்ப்பாணம், இலங்கை

Kuppilan, Jaffna,
Sri Lanka.

திருமுறைகள் பண்ணிற்பாடி உலாவரும் வாகீச நாகேஸ்வரன்



திருமுகில் தோயும் கோபுரம், கடல்சூழ்
திருநிறை நயினாதீவில் தோன்றிய
திருநிறை வாகீச கலாநிதி நாகேஸ்
வரனின் மணிவிழா! வாழ்க வாழ்கவே!

பல்கலைக் கழகத்திற் பல்லோர் புகழ
நல்லதோர் விரிவுரை யாளராகி நாளும்
அல்லல் களையும் அறிவுரை, அரங்கில்
கல்லும் கனியப் பிரசங்கம் செய்வார்!

பக்தியால் உருகிப் பண்ணிசை பாடி
முத்தி பயக்கும் திருமுறை மாண்பை
சித்த சுத்தியுடன் பிரசங்கம் செய்து
அத்த னருளால் மணிவிழா எடுத்தார்.

மண்ணில் நல்ல இல்லறம் நடாத்த
கண்ணுக் கினிய கன்னியை மணந்தே
எண்ணி லறம்பல அவனியி லாற்றி
விண்ணவர் வாழ்த்த மணிவிழா அடைந்தார்.

நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும்
என்றும் சக்தியின் மந்திரம் ஓத்தி
நன்றே நாளும் நல்லன நினைந்து
மன்றுகள் வாழ்த்த மணிவிழா அடைந்தார்.

உள்ளக் கொதிப்படங்கி உள்ளே ஆனந்த
வெள்ளம் நதிபோல் பெருக்க எண்ணி
வள்ளல் பிரானாம் சிவனார் அற்புதம்
தெள்ளு தமிழிசைத் தேன்போற் பாடி,

பக்தி வெள்ளம் பெருக்கி நவநாத
சித்தரின் திருவடியை யொற்றி வாழ்வில்
நித்தம் நித்தம் யோகமாய் வாழ
சித்த சுத்தராய் மணிவிழா அடைந்தார்.

கஜனருள் பெருக, கண்டவர் வாழ்த்த
வயமுடை நாகேஸ்வரனாம் கவிஞன்
நயமளி நயினை அம்மன் அருளால்
ஜெகமதில் யாண்டும் வளமுடன் வாழ்கவே

அறுபத சுவையொடு அறுபதாய்ப் பெருக
உறுபவம் நீக்கி உமைசிவ னருளால்
நறுமலர்போல் மலர்முகமாய் நாற்றிசையும் வாழ்த்த
நறுங்கனியின் தன்மைபோல் நாளும் வாழ்கவே

வடவிலங்கைத் தவப்பயனால் மூவர் தமிழை
விரிவுரைபோல் விளங்கவைத்து ஈழத் தமிழ்வாழ்
இடமெங்கும் பக்திவளர இரவு பகலாய்
இன்பமளி கதாப்பிரசங் கம்செய் ததனால்
நடமாடும் நூலகம்போல் யாவரும் நயக்க
நயந்தரும்நூல் பார்த்து உலகம் புகழும்
கடல்சூழ்ந்த நயினையில் உதித்த வாகீச
கலாநிதி நாகேஸ்வரனார் மணிவிழா வாழ்கவே

கலாநிதிசெய் தமிழ்கற்றுப் பலரும் வாழ்த்த
கலங்கரைவி ளக்காய்மா ணவரை ஆக்கி
உலாவரும்சூ ரியசந்தி ரர்போல் நின்றே
உலகனைத்தும் உவப்படையும் நீருண் ணிபோல்,
பலாவின்இன் நறுங்கனிபோல், பலநூல் யாத்தும்
பவப்பிணிதீர் திருமுறைகள் பண்ணிற் பாடி
உலாவந்த வாகீச நாகேஸ்வரனின்
அறுபதகவு மணிவிழாவை வாழ்த்தி வணங்குவோம்.

சுபம்.

கலாநிதி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி



நெஞ்சில் நின்ற வாகீசவாணருக்கு.....

அன்பெனும் அறம் விளக்கி
ஆன்மீகம் மிக உரைத்து
இன்புறும் மொழி பகர்ந்து
ஈகையின் அறம் உரைத்து!

உண்மையாம் மெய்ப்பொருளின்
தார்மீகம் தனை விளக்கி
தம்மதம் காக்க என்றும்
பற்றுடன், தற்றுறுதி தந்து!

முத்தமிழ், கலைகளோடு
வதிவிடப் பயிற்சி தன்னில்
பெற்றேனே பெருவிருந்தாய்
தீம் மொழி குழைத்த உம் செந்தமிழை!

நயம்பட நீர் உரைத்த
நன்மொழிகள் யாவுமையா
என் மனம் தன்னில் நீர் பொதித்த
பொற்சுவடு ஐயமில்லை!!!

செல்வி. செல்வமலர் சம்புநாதன்

பழைய தபாலக வீதி

விநாயகபுரம் – 02.

திருக்கோவில்.



பண்பான ஆசானே நன்றிகள் பல

கண்ணிமைக்கும் நேரத்தில்
கலந்திட்டாய் செஞ்சத்தில்
கல்வியை கண நேரத்திலே
கற்பித்த எம் நேசனே,

புன்னகையால் எம்மை ஈர்த்த
புலமை மிகு கலைஞரே
புரவியின் வேகத்தை
புரளவிட்டாய் நாவினிலே.

ஈழமொரு முத்தாம்
ஈழமளித்த நீயுமொரு முத்தாம்
ஈன்றபொழுதினும் உன் தாயை
ஈகையடைய வைத்தாயே.....

இறைவனுக்கும் எம் நன்றி
இயல்பாயும்மை எமக்கு வந்த
இகபர வாழ்வின் ஆசானே
இதயப்பூர்வ நன்றிகள் பல.

நாகபூஷணி அம்மனின்
நல்லறங் காவலரே
நல் வாழ்த்தை நவின்றோமே
நன்னாளில் நாமின்று,

பல்கலையும் பயின்றிடவே
பாட்டதாரி ஆகிடவே
பயிற்றிட்டாய் எம்மை
பண்பான ஆசானே.

செல்வி. ஐ. எப். நபீலா
B. A Special (Languages)
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
நாவலப்பிட்டி.



எம்மனதையும் குளிரவைக்கும் மலைஅருவி

முன்னை முழுமுதலே மூத்த கணபதியே நின் தாள் பணிந்து,
சீர் புகழ் கனக சபாபதியின் சிருஷ்டி தவப்பயனே
நயினைப் பதியுதித்த பாரெல்லாம் அறிந்த வள்ளல்
"நாகேஸ்வரனெனும்" நாமங் கொண்ட எம் மனதையும்
குளிர வைக்கும் மலை அருவியே!

முத்தமிழின் இன்பம் கண்டு
அதில் முழுவதும், மூழ்கித்
தீராக் காதல் கொண்டு
பள்ளியிலே நல் மாணாக்கராய்
பல்கலைக் கழகமதில் சிறந்த விரிவுரையாளராய்
மேன்மைமிகு பேராசிரிய ரெனும் தகைசார் பண்பறிந்து
பெரும் பணியாற்றி வரும் தங்களின் ஆசிரியத் தொண்டுகளுக்கு
கிடைத்த வெகுமதிகள் குறைவென்றாலும்
தங்கள் சேவை கணக்கிட முடியாத ஆற்று வெள்ளத்தின் ஓட்டம்
இது யாவருமறிந்த உண்மை
அறியப்படாத தொன்றல்ல
தமிழ் மொழியின் புலமை அறிந்து
அதனைப் புரிந்து
அதன் ஆழம் காண
நாடி நரம்பு பிடித்து
துடிப்புடன் சேவை செய்யும் மனப்பாங்கும்
அயல் மொழியும், இணைமொழியும், கசடறக் கற்று
அதில் ஓர் எல்லை கண்டவர்
தங்களுக்கு நிகர் தாங்களேதான்!
மாரி மழை போன்ற உன்றன் சிரிப்பொலியும்
அட்சர சுத்தியுடன், சொற்பொழிவு செய்யும்
உங்கள் திறமைகள், கேட்போர் நெஞ்சம் யாவும்

கண்ணன் குழலிசை கேட்ட மாத்திரத்தில் வயித்து நிற்க
என்றென்றும் வாகீச கலாநிதியாய்
நிலைத்து நிற்க
தங்கள் செயல்களின் வெற்றிக்கு
என்றும், பதினாறுதான்
தங்கள் சேவைகள் தொடரவும்
தங்கள் உடல் உள நலத்துடன்
துணைவி, பிள்ளைகள் சிறப்பாக இருக்கவும்
அறுபதிலும், மேன்மையுறும், பண்புகளுடனும்
அம்பிகையின் அருட்கடாட்ஷங்கள் உங்களுக்கு கிடைக்கவும்
எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நன்றி

திருமதி. ஸ்ரீ நாகபூஷணி அரங்கராஜ், BFA(Hons)., M. A

விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்



உலகின் மூத்தமொழிப் பேராசிரியர்

அம்பிகை அருளோங்கும் நயினைவளர்
அமுதமாய் பெருகும் ஆனந்தக்கடல்
கனகசபாபதி நாகேஸ்வரன் பெருந்தகையோன்!
உவகையுடன் மணிவிழா பொலிய – நல்
அறிஞன் கலைகள் ஆய்ந்து பாமணக்க
தெய்வ மருத்துவ, மகத்துவ மொழி உலகின் மூத்த மொழிப்
பேராசிரியனாய் மெய்ப்பொருள் திறம்பட உரைத்து
கலாநிதியாய் சமைத்த ஆய்வுப்பணி நூல்கள்
அறிகில் நாமணக்கும் கேட்பவர் தம் செவிமணக்கும்
தமிழ்நூலின் தேன் மணக்கும் பாவுடன் இணைதலால்
தமிழிசை மணக்கும் திருவும் கல்வியும்
மருவ அதிகாரமும் ஒருங்கு அமைந்த திருமகன்
பல்லாண்டு பல்லாண்டு மாட்சியுடன் வாழ்க!
தமிழ்மொழியே மொழி தமிழிசையே இசையெனத்
தாவின்றி நிறுவும் தமிழ்நற்கோமான்

இன் தமிழாய் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!
ஏழ்கடல் அரசி தாயவள் மகவாய்
தமிழிசையாய் வாழ்க என்றென்றும்
தமிழ்ப்புவியிலே தமிழரசோச்சி நீடு பீடுடன் வாழ்க!

அகம் மகிழ வாழ்த்துவோர் :

திரு. திருமதி பரந்தாமன் சிவவதனி

குழந்தை சிவபரன்

விரிவுரையாளர், இசைத்துறை,

யாழ்.பல்கலைக்கழகம்.



மணிவிழாக் காணும் வாகீச கலாநிதிக்கு மதுரகவியின் வாழ்த்துப் பாமாலை



அகவை அறுபதைக் காணும் ஆசானே!
உவகை அடைகிறேன் என் குருநாதனே
தகமைகள் ஆயிரமாயிரம் சேர்த்த செம்மலே
தமிழெடுத்து கவி வாழ்த்திசைத்து வணங்குகிறேன்.
அன்னை வயிற்றினில் குடியிருந்தீர்கள்
அடுத்து வந்தே அவனியிற் பிறந்தீர்கள்
கண்ணை விரித்தே உலகை ரசித்தீர்கள்
மெல்லச் சிரித்து மழலை மொழிந்தீர்கள்
பள்ளி சென்று பாடம் பயின்றீர்கள்
பல்கலைக்கழகம் புகுந்தே பட்டம் பெற்றீர்கள்
பாருலகு வாழ பணிசெய்து உயர்ந்தீர்கள்
ஆசிரியராய் விரிவுரையாளராய் பேராசிரியராய்
ஆன்மீகச் செஞ்சொற்புலவனாய் மொழித்துறைத் தலைவராக
வாஞ்சையுடன் புதியதோர் உலகம் படைத்த பொன்மகனே
வரலாற்று நாயகனே! வானொலி வர்ணனையாளனே
ஊரறிய உலகறிய உயர்விருதுபெற உதித்த திருமகனே
நாகபூஷணியாள் நல்லருள் பெற்ற நயினைநாயகனே
நற்றமிழ்வல்ல நாடறிந்த கதாப் பிரசங்க வாரிதியே
தாயினும் பரிந்து தாங்கிடும் தெய்வமனனே
தமிழைச் சைவத்தைக் காத்தருளும் காவலனே
தத்துவத்தின் தனிஞானப் பேரொளியே
தண்ணமுதப் பேருரை மழை பொழியும் ஞானமுகிலே
அருள்மொழியால் அவனியின் இருளகற்றும் ஆதவனே
திருவருள் பொழியும் தெய்வாசிபெற்ற அருளாளனே

நிறைவுக்கோர் நிலையமாக வாழி வாழி
நெடுமறைப் பொருளேயாக வாழி வாழி
துறைதொறும் சோதியாக வாழி வாழி
தொன்மை "செந்தமிழ்கலை ஞான வாரிதியாய்" வாழி வாழி
இறையருள் ஆணையேற்று வாழி வாழி
இலங்கிடும் முத்தமிழ் முனிவனாய் வாழி வாழி
மறையுள்ள வரையும் மானிலம் போற்றிட வாழி வாழி
மதுரகவியாம் உன் அன்பனின் வாழ்த்தினையும் ஏற்று வாழி !

அன்புசால் ஆசானுக்கு வாழ்த்துக்கவி இயற்றி மகிழ்பவர்
செந்தமிழ்க் கலைஞானி, செஞ்சொல்ஞானவாரிதி, கவிமாமணி,
மகாகவி சாகரம், அருளருவி, சிவநெறித்தொண்டர்,
வர்ணனைக் கலாநிதி, மதுரகவி,
காரை எம். பி. அருளானந்தன்
(வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்)
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்,
ஆசிரியர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி.



மணிவிழாக்காணும் நயினைத்தவப்புதல்வன் நாகேஸ்வரன் எனும் ஆசான்

சங்கத் தமிழர் மரபினிலே நீலத்திரைக் கடல் ஓரத்திலே
மணியல்லவம் எனும் தீவினிலே சங்குகளும் முத்துக்களும்
கைகோர்த்து உலாவி வர கடலலையின் ஓசை காதோரம் தவழ்ந்து வரும்
சப்த தீவுகளில் ஒன்றான ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருளாட்சியில்
மங்காத புகழோடு வந்துதித்த மாதவச் செல்வராய்
நாகங்களின் ஈஸ்வரனாய் நாகேஸ்வரன் நாமம் கொண்டு நல்லுலகில் வந்துதித்தார்
கனகசபாபதி எனும் அருள்மாமணிக்கும் அவர் தம் வித்துவாட்டி கோகிலாம்பாள்
எனும் கவிமாணிக்கும் சிரேஷ்ட புத்திரனாய் வந்துதித்தார் நாகேஸ்வரனார்.

புவனத்தை ஆளுகின்ற புவனேஸ்வரி பீடத்தின் மரபுவழி அறங்காவலராய்
பணிசெய்த பரம்பரையில் வந்துதித்த பாலகனாம் வாகீசகலாநிதி
கல்விக்கே உரித்தான பலகலையும் பயின்று
பேராசான் ஆகி பெரும் புகழும் சேர்த்திட்டார்
கலாநிதி கைலாசபதியின் கணிப்பீட்டிலே
கலையுலகம் தந்த கலைமாமணிச்சிறப்பு பட்டத்தையும் பெற்றார்
இலக்கிய உலகின் வித்தகராய் இன்னிசைச் சொற்பொழிவுகளை
இதமாக ஆற்றிடுவார் அவர் நாமம் வாழ்க!

தன்னிகரில்லாத் தலைவனாக தமிழ்த்துறைதனை வளர்த்து
பண்ணிசைக்கலைச் செல்வர் ஆனார் பாரினிலே
மொழித்துறைதனிலே முதுநிலைப்பட்டம் பெற்று விரிவுரையாளரானார்
மங்காத தமிழ்மொழி எங்கும் மணம் பரப்ப தொண்டுகள் பல செய்து
பண்பாடுதனை வளர்த்த பண்பாளர் பேராசான்
நாகேஸ்வரன் நாமம் கொண்டார்
மங்காத புகழோடு செந்தமிழை வளர்த்துவிட
மானிடராய் பிறந்துவிட்டீர் இப்பாரினிலே!

பண்பாட்டுக் கல்வியையும் கலை இலக்கிய துறைகளிலும்
காலடிகள் பலபதித்து கலங்கரை விளக்கானீர்
மாணவர்கள் கற்றலுக்காய் மாபெரும் சேவையாற்றி
மாண்புடனே மொழித்துறையின் முதுநிலை விரிவுரையாளரானார்
சேவைக்கால வேளையிலே ஆய்வுக்கட்டுரைகள் பலபுனைந்து
அறிவுத்துறையை வளர்த்து விட்டார்
பத்திரிகைத் துறைக்காக பணிகள் பல புரிந்து
முத்தான தமிழை முன்னின்று வளர்த்து விட்டார்
அன்பான அறிவிப்பாளராய் அரும்பணிகள் பல புரிந்து
முத்தான தேன்மதுரத் தமிழோசை உலகெலாம் முழங்கிடவே
வாழிய செந்தமிழ் வாழ்க நற்தமிழ் என
சீரிய முயற்சிகள் செய்துவிட்டீர் இப் பாரினிலே
தமிழ்ச்சேவை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வித்தகராய் பணியாற்றி
முத்தான தமிழ் மொழியை சொத்தாகக் கொண்டு
நேர்முக வர்ணனைகளையும் அருளமுதம் நிகழ்ச்சி மூலம்
அருள் மொழிகள் பல பேசி ஆச்சரியமூட்டிய ஆசானே உன்புகழ் பரவட்டும்

சைவமும் தமிழும் தழைத்திட வேண்டி தவறாது பணிசெய்த
நாடறிந்த நல்லாசான் நாகேஸ்வரனார் நாமம் கொண்டு
நற்பணிகள் தொடரட்டும் நாநிலமும் போற்றட்டும்
உம் பணிகள் சிறக்க உளமார வாழ்த்துகிறேன்
மணிவிழாக்காணும் நாயகரே நாகத்தின் ஈஸ்வரனே
நயமாக உம்பணிகள் நானுரைத்தேன் பிழையாக கூறிவிட்டால்
பொறுத்திடுவீர் ஆசானே பணிக்கே முதன்மை தரும் பண்பான ஆசானே
பார்புகழட்டும் உம் பணியை பாராட்டி விடைபெறுகிறேன் பண்பான ஆசானே !

ஆக்கம் : அன்புடன் மாணவி
கவிமணி திருமதி. கிரிஜா சண்முகரத்தினம்,
BA Hons., Dip. In. Education
ஆசிரியர்,
வ/ஒமந்தை. ம. கல்லூரி



அகவைகள் அறுபதில் அகமகிழும் ஆசானுக்கு.....

எனது மதிப்பிற்கும், பேரன்பிற்கும் உடைய அன்பு ஆசான் முனைவர், கல்விமான், வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி, கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை முன்னாள் தலைவர், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர் அவர்களுக்கு அகவை அறுபதில் அகமகிழ்ந்து சூட்டும் மணிவிழா மலரிலே அன்னாரை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதை பெறும் பேறாகக் கருதுகிறேன்.

அன்னாரின் செந்தமிழ் திறம் உரைக்கும் ஒண் தமிழ்ப் பணியும் அகவைகள் ஆயிரம் கடந்தும் ஆண்டாண்டாய்த் தொடர்ந்திட உளங் கனிந்து உதிர்க்கின்றேன் வாழ்த்து மலர்களை. அறநெறி ஆசிரியர் வதிவிடப் பயிற்சியில் இரு நாட்களில் அறிமுகமாகி என் இதயத்தை விட்டு அகலாத தமிழ் ஆசான்களில் ஒருவராய் என் மொழியினை வழி நடாத்திச் செல்லும் தமிழ்ச் சான்றோர் வரிசையில் நீங்கா இடம் பிடித்தே தீரும், நின் தமிழ்ப் பணிகளும் நீடூழி வாழட்டும்!..... அவை நிலை பெற்று நிற்கட்டும்!

பனைவளரும் தேசம் தந்த – எங்கள்
புகழ் வளரும் ஆசானே!
அகவை அறுபதில் அகமகிழ்ந்து

மணிவிழா மகுடம் சூடி
செந்தமிழ் நாத்திறத்தால்
ஒண் தமிழ் ஒளி பரப்பி
அந்தமில் ஆசி பெற்று – பலர்
நெஞ்சினில் நீடு வாழ – கருணை
பொங்கு நல் ஈரன் கழலை
ஏத்துவேன் நாளும்.... நாளும்.....

வாழ்க !! பல்லாண்டு வாழ்க!!
அகவைகள் ஆயிரங்கடந்து
வளம்நிறை மொழி பகர்ந்து.....

செல்வமலர்

பழைய தபால் நிலைய வீதி, விநாயகபுரம் II
திருக்கோயில்



ஓம் கணபதி துணை



வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
பரிபாலன சபை

Vavuniya Sri Sinthamani Vinayagar Temple
Committee of Management

(Regd No 6, 3, Va. P. 7)
OUTER CIRCULAR ROAD,
VAVUNIYA.

(பதிவு இல. 6, 3, வா. பி. 7)
வெளிவட்ட வீதி.
வவுனியா.

ஆற்றொழுக்கான அழகு தமிழ்ப் பேச்சாளர்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாட் தலைவரும் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M. A. Ph. d. அவர்களது மணிவிழாவினையொட்டி வெளியிடப்படவிருக்கும் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் நீண்ட காலமாக சிந்தாமணி விநாயகர் ஆலயத்தோடு நெருங்கியதொடர்புகொண்டவர். விசேடதினங்கள் பலவற்றில் சிறப்புச் சொற்பொழிவுகளாற்றி இங்குள்ள அடியார்கள் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டவர். தமது ஆற்றொழுக்குப்போன்ற அழகுதமிழ்ப் பேச்சாலும் நெஞ்சிலே நிறுத்தி மீண்டும் மீண்டும் அசைபோடச் செய்யும் ஆழமான ஆன்மீகக் கருத்தாலும் தமிழ்மக்கள் மத்தியில் நீங்காத இடம்பிடித்த கலாநிதியவர்களுக்கு, வாகீச கலாநிதி, அருட்கலை மாமணி முதலிய பல்வேறு பட்டங்களையளித்து ஆலயங்களும் தமிழ் இலக்கிய மன்றங்களும் நிறைவு கண்டன.

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கமையக், குன்றின் விளக்கென உயர்ந்து நின்ற போதும் தற்பெருமை கொள்ளாது, பணிவுடையவராக, எல்லோருடனும் இன்மொழி பேசுபவராக எளிமையோடு வாழ்கின்றவர். தமது மனம், மொழி, மெய்களால் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனையும் ஏனைய கடவுளரையும் வழிபடுகின்றவர்.

பல ஆலயங்களிலும் ஆன்மீக அமைப்புக்களிலும் திருமுறைத் தேன் குழைத்து மதுரத்தமிழால் அடியவர்களின் உள்ளங்களை இறைவனோடு இசைய வைப்பவர். திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதில் வல்லவர். இவரது இசைஞானம், இவரின் சமயச் சொற்பொழிவுகள் சிறக்க உதவுகிறது. உள்ளத்தைக் கவர்ந்திட, இறைவன் மீது குவிந்திட, நினைத்து நினைத்துச் சுவைத்திடச் செய்யும் ஆற்றல் இவரது பேக்சுக்களுக்கு உண்டு.

தமது பல்கலைக்கழகக் கடமைகளோடு ஆன்மீகப்பணிகளையும் ஆற்றியவருக்கு, முழுமையாக ஆன்மீகப் பணியை முன்னெடுத்துச் செல்ல இறைவன் வழிசமைத்துள்ளான். 60 வயதினை நிறைவு செய்து மணிவிழாக்காணும் வாகீச கலாநிதியவர்கள் பல்லாண்டு காலம் பூரண நலத்துடன் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் காலத்தால் அழியாத காத்திரமான சேவைகளைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையாரின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறோம்.

வணக்கம்

அன்பன்

V. S. **தேவகுமாரன்**

தலைவர்

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபை.



ஓ
சிவமயம்
SIVAMAYAM

அருள்மிகு குறிஞ்சிக்குமரன் கோவில்
பேராதனைப் பல்கலைக் கழகம்
Grace Bestowing Kurinchik Kumaran Temple
University of Peradeniya

சிவஸ்ரீ. பா. நித்தியாநந்த குருக்கள்
குறிஞ்சிக்குமரன் கோவில்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

SIVASIREE B NITHIYANANTHA KURUKKAL
Kurinchik Kumaran Temple,
University of Peradeniya,
Peradeniya.
தொ. பே. இல. / Tel. No. 08-88139

..... 19.....

படித்த பண்பாளர்

சர்வ விக்னஹரம் தேவம், சர்வ விக்ன விவர்ஜிதம்
சர்வசித்திப் பிரதாதாரம் வந்தேகம் கணநாயகம்.

படித்தவர்கள் என்றால் பண்பாளர்கள் என்பது சமுதாயத்தின் கருத்தாகும். அவ்வாறான அறிவாளிகளை உருவாக்கும் மேன்மையான ஆசானாகவும், சமயப்பணி, சமூகப்பணி ஆகிய உன்னத தொண்டுகளைச் செய்து மணிவிழாக் காணும் அருட்கலைமாமணி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் சகல விக்கினங்களும் நீங்கி பல்வகைச் சித்திகளும் பெற்று நிறைந்த ஆரோக்கியத்துடன் நீடூழி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து. நற்கதிபெறவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

சுபமஸ்து

இங்ஙனம்
அன்பின்
சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள்



"வெல்லாமகேஸ் வரவாநீதி
மன்றுக்க உலகாவ்வர்"

சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

பதிவு இல. Regd. No. } HA / 5 / JA / 567

தொலைபேசி Telephone } யாழ்ப்பாணம் Jaffna } 060 2213024

நயினாதீவு
Nainativu
Sri Lanka.
12.10.2018

பாண்டித்தியம் பெற்ற பேராசான்



ன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் (ன்) நிலையில் இருந்து நயினை மண் பெற்றெடுத்த நற்றமிழ் ஆசானை, மணி விழாக்காணும் மைந்தனை, முத்தமிழ் வித்தகனை மனதார வாழ்த்துகிறேன். சமய, இலக்கிய, இசை, இயல் துறை அனைத்திலும் தனக்கென ஒரு பாண்டித்தியம் பெற்ற பேராசான் இவர் என்றால் மிகையாகாது. "வேர் வழி ஓடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி ஓடிய கன்று" என்ற முதுமொழிக்கு இலக்கணமாய், இலக்கியமாய்த் திகழ்பவர்; தந்தை வழியும், தந்தையின் தாய் வழியும் புகழ் பூத்த நயினையின் மூத்தகுடிகள்; அன்னை ஸ்ரீ நயினை நாகபூஷணியின் அடிபரவி வரும் மரபுவழிப் பரம்பரையினர். இந்த வகையில் மரபு வழி அறங்காவலராக இருந்து பணிபுரியும் ஒரு வித்தகர். நயினை புராண வித்தகர் குட்டிப்பிள்ளையார் என அழைக்கப் பெற்ற தியாகரும், நயினை நாகமணிப்புலவரும், இவரின் தாய்வழி, தந்தைவழி பூட்டன்மார்களாவர். கருவிலே திருவுடையவராக நயினை மண்ணில் பிறந்த மணிவிழா நாயகர்; கலைத்துறைப் பட்டதாரியானபின் இலங்கை வானொலியில் சமய, கலை இலக்கியத் துறைகளில் பொறுப்பாளராகப் பணிபுரிந்த காலத்தில் இவர் ஆற்றிய தொண்டுகள் மகத்தானவை. இதனை இன்று பலரும் அறியார். அன்றும் இன்றும் இவரின் சேவையை இலங்கை வானொலி தொடர்ந்தும் பெற்று வருவதும் ஒரு சிறந்த பண்பாகும்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாட் தலைவராக இருந்து இன்று முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிந்து வரும் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன், M.A. Phd அவர்கள் மணி விழாக்காண்கிறார். இவரைப் பல்துறைசார் கல்விமான்கள் எல்லோரும் வாழ்க வாழ்கவென வாழ்த்தும் இவ் வேளையில், ஒரு தந்தையாகவும், நயினை ஸ்ரீ நாகபூஷணித் தாயின் மரபு வழி அறங்காவலர் சபைத் தலைவராகவும் இருந்து ஆசிகூறுவதில் பெருமையடைகிறேன்.

இன்று போல் என்றும் நன்று நீர் வாழ்க.

ஆ. தியாகராசா

தலைவர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு

வெள்ளவத்தை அருள்மிகு நாகபூசனி அம்மன் ஷேஸ்த்திரம்
(துன்பம் தீர்க்கும் கலியுக ஞான சஸ்வரி)
Arul Miku Nagapoosani Amman Seshthiram, Wellawatta.
பதிவு இல. HA/6CBO/163

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"



ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருட்குழந்தை ஆன்மீகத் தொண்டர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் இயல்பாகவே ஆன்மீக ஈடுபாடு கொண்ட அன்பர். நயினையிலே பிறந்த இவர் எமது திருக்கோயிலின் ஆரம்ப காலமுதல் இன்றுவரையும், இனியும் ஆன்மீக அருளுரைகளை – சமயக் கருத்துக்களை – இனிய இசையுடனும், திருமுறைப்பாடல்களுடனும் பக்தர்களுக்கு எடுத்துரைத்து வருபவர். நல்ல தமிழ் வளமும் பண்ணிசைவளமும், கருத்துவளமுங் கொண்ட சைவப்பேரறிஞராவார். அம்பாள் மீது அளவிலாத நம்பிக்கையும், பக்தியும் கொண்டவர், உளவிரிவு கொண்ட கல்விமான்.

அநுபூதி நெறியாளர்களுடனும் அருளாளர்களுடனும் பேரீடுபாடு கொண்டவர். சமயத்தோடு கூடிய கடவுள் நம்பிக்கையோடு இணைந்த ஞானச் செல்வமான உயர்கல்வியைப் பெற்றுள்ளர் இவர் பல்கலைக்கழக ஆய்வாளர்; முதுநிலைவிரிவுரையாளர் எனத் தகும் பெருமை கொண்டவர். அம்மாவின் ஆசிகளை நாடித் தேடி ஓடிவரும் நமது தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. தமது அறுபதாவது அகவை மணிவிழாவில் பல்வளமும், நீடிய சுகானந்தப் பெருவாழ்வைக் குடும்பத்தினருடன் அனுபவிக்கவும் வாழ்த்தி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளை வேண்டி ஆசி கூறுகிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

துன்பம் தீர்க்கும் கலியுக ஞான ஈஸ்வரி அம்மா.



ஓம்

ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம் பரிபாலன சபை

ශ්‍රී කාලියම්මන් දේවස්ථානම් පරිපාලන සභාව

Sri Kaliamman Dhevasthanam Paripalana Sabai

Regd.No. HA / 6 / BDL / 8.
Telephone : 055 - 2223241

ROCK - HILL IMBULGODA
BADULLA
SRILANKA

மலையக மக்களின் இதயங்களில் நீங்காத இடங்கொண்ட

கலாநிதி நாகேஸ்வரன்

அன்பர், அறிஞர், சொற்பொழிவாளர் கதாப்பிரசங்கி, மும்மொழி அறிஞர், தொண்டர், பண்ணிசைச் செல்வர், வாகீசகலாநிதி, அருட்கலை மாமணி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் எமது பதுளை றொக்கில் காளி அம்மன் ஆலயத்தின் மீது நிரம்பிய பக்தியும், நம்பிக்கையும் கொண்டவர். காளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக வைபவத்திலே சிறப்பாகக் கலந்து கொண்டு ஆன்மிக, பண்ணிசை நிகழ்ச்சிகளாலே மக்களது மனதைப் பெரிதும் வசீகரித்துக் கொண்டவர். பக்திபூர்வமாகப் பண்ணிசையை நிகழ்த்தியும், பஜனைப் பாடல்களைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்தும் சமய வழிபாட்டுத் தலத்தில் அடியார்களை ஈடுபடுத்தும் வல்லமை பெற்றவர். கல்வி, சமயஞானம், தெய்வநம்பிக்கை, தேவாரஇசைவளம், பண்பாடு என்பனவற்றை இளஞ் சமுதாயத்தினர்க்குக் கையளித்து ஊக்குவிக்க வேண்டும் என்னும் பேராவல் கொண்டவர் கலாநிதியவர்கள். றொக்கில் காளி அம்மள் ஆலய மகோற்சவ காலங்களிலே ஐயா அவர்களுடைய பஞ்சபுராண பாராயணம், சமயப்பேருரை, பண்ணிசை என்பன ஆலயத்துள்ளும், வெளியிலும் நிகழ்வது வழமை. எமக்கும், மலையக மக்களுக்கும் சமய அறிவையும் தமிழறிவையும் அள்ளி வழங்கும் கலாநிதியவர்கள் இன்னும் பல்லாண்டுகள் இறைபணியில் இன்பங்கண்டு வாழ றொக்கில் ஸ்ரீ காளியம்மனின் திருவடி தொழுது இறைஞ்சுகிறேன்.

கே. பி. ஜெயநாயகம்

ஆயுட்காலத் தலைவர்,
பதுளை றொக்கில் ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானம், பதுளை.





ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள்
தேவஸ்தானம்
Regd No: HA/5/JA/843
Sri Vasanthanagapoozani Ambal Thevasthanam
"Vasanthapuram"
Kalapaboodai,
Erialai South. Erialai.
Sri Lanka.
"வசந்தபுரம்"
களபாபோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை,
இலங்கை.

16-09-2012

நாவினிக்க அன்னைபுகழ் பாடுபவர்

நயிலையுறை நாயகியின் அடிமலர் பணிந்தேத்திய பண்பதனால்
அன்னை வசந்தநாகபூஷணியின் அடிமலரினையும் தொழுதேத்தி
அம்மையின் அருட்பிரவாகத்தைத் தன் நாவின் செம்மையால்
சொல்லி நின்ற பெருந்தகையாளன் நாகேஸ்வரன்.

கல்வியின் சிறப்பால் பெற்ற பெருநிலையால் மானிலத்தில்
கல்வியின் சிறப்பை விரிந்துரைக்கும் பெருமகனாய்
மிளிர்ந்து செய்த பலபணிகளின் மேன்மையால்
ஒளிர்ந்து நிற்கும் ஒப்பற்ற பெருந்தகையாளன்.

நாகபூஷணித்தாயின் கருத்துரைக்கும் கவின் மிகுமன்றில்
நயம்படு தமிழால் நாவினிக்க அன்னைபுகழ் பாடியோன்
மெய்மையாய்த் தொண்டுள்ளம் கொண்டு அன்னை
செய்பணிகளுக்கு ஆர்வமுடன் கரம் தந்தோன்.

நல்லாசானாய் நற்பணிபுரிந்து நல்மாணவ மணிகளை
சொற்றிற மிக்கோராய்த் துலங்கவைத்த தூய்மையாளன்
செல்லுமிட மெங்கும் மிக்கோனாய் மிளிர்ந்திட்ட
வெல்லுமியல் மிக்கோன் வாழிய! வாழியவே!!

அன்னை நாகபூஷணியின் அருள்என்றும் நிறைகவே
பொங்குதமிழ்த் தாயின் புனித ஆசிகள் என்றும் நிறைகவே
குன்றாத வாழ்வுடன் வளம் பல பெற்று வாழ்கவே!
எங்கும் புகழ்பரப்பி என்றென்றும் வாழ்கவே

அன்னையின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வழங்கும்
அருளாசிகள் என்றும் என்னாசிகளாய் நிறைகவே!
வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்கவே
வையமுள்ளளவும் புகழ் பெற்று வாழ்க வாழ்கவே!

சுபம்.

- அம்மன் தாயார் -



சிறந்தென்றும் நீ வாழ்க

I

கணபதியை உமாபதியை கைக்கவப்பித் தொழுதாலும்
மணமலர்போல் மனநிறைய மகிழ்ந்துகுல தெய்வமாம்
குணமகளாம் நயினையூர் குலநாக பூஷணியை
கணமேனும் மறவாக் கனக நகேஸ்வரன் வாழ்க.

II

கருவிலே திருவுடைய கனகசபா பதிபெற்ற
பெருமகனாய் பூஷணியின் பேரருளால் கற்றோங்கி
மருவியொரு பட்டதாரி மணியாகி, எம்.ஏ யும்
திருவருளால் பெற்றவனே சிறந்தென்றும் நீ வாழ்க!

III

உள்ளமே கோயிலதால் உத்தமியாம் பூஷணியும்
வள்ளலிவன் என்றுன்னி வந்திருந்தாள் ஆதலினால்
புள்ளியாய்க் கல்வியுலகம் போற்ற வாழ் கின்றாயால்
கொள்ளைபுக ழோடென்றும் குலம்விளங்க வாழ்த்துகிறேன்.

IV

சங்கநூல் பின்வந்த சார்ந்தவிலக்கிய நூல்கள்
தங்கமாய்க் கற்றுணர்ந்த தன்மையால் எதிர்காலம்
சிங்கமென அவைமுன்னே சென்று சொன்மழை பொழிய
பங்கயத்தின் வாணியுனைப் பாராட்டு வாள் உண்மை.

V

அத்திவா ரத்தில் கல்வி ஆசாறவே கற்றதனால்
சித்தியா யிவ்வுலகில் சீர் பெரிய புலவனுமாய்
பத்தியாய்ச் சமயத்திலும் பருருஞ் சித்தாந் தத்திலுமே
புத்தியாம் பெற்றவுனை புகழ்பூக்க வாழ்த்துவனே.

VI

பொதுநலனில் புகுந்து பல புண்ணியகா ரியமியற்றி
புதுமையுற கல்வியெனும் புகழ்பூத்த கற்பகமாய்
முதுமையிலும் பேரறிஞர் முன்னின்று போற்றியுனை
துதிசெய்து வாழ்த்தவும் நீ தொன்மைபோல் வாழ்வாயே.

VII

காத்திரமாம் இலக்கியங்கள் கனத்தபல கட்டுரைகள்
தோத்திரநூல் பற்பலவை தூயவர்கள் போற்றும்படி
நேத்திரம்போல் வெளியிட்டளை வித்துவானே, நயினையூர்ப்
பாத்திரமாய் ஈழமெங்கும் பாராட்ட வாழுதியால்.

VIII

நவகோள்கள் வரிசையிலே நாயகனாம் வியாழனுக்கு
புவனமெல்லாம் போற்றுகின்ற பொன்னான பேரதுதான்
தவமான வாகீசத் தனிப்பெயர் அவ்விருதினை நீ
உவமையால் குருவெனவே பெற்று விட்டாய் உயர்ந்தாயே.

IX

திரிகரண சுத்தியுள்ளாய் சிறந்த நல்ல உள்ளத்தினை
ஒருபெரிய கோயிலென உவந்து நாக பூஷணியம்மை
புரிந்திருந்தா ளாதலினால் பொருந்து காரியமெல்லாம்
விரும்புமாறு கைகூடும் வெற்றிக்கொடி யுடனுனக்கே!

X

அடியேனும் சிவகாமி அன்னையரு ளாளிதெல்லாம்
வடிவாகப் பாடியுன்தன் வாழுமனை மக்களையும்
குடியோடு ஒன்றாகக் குவலயத்தில் நன்றாக
படியேத்த வாழ்த்துகிறேன் பல்லாண்டு வாழியவே!

வணக்கம்

பெரும் புலவர், கலாபூஷணம்
புலவர்மணி
வை. க. சிற்றம்பலம்
ஆசிரியர் அவர்களின் வாழ்த்துக்கவி
2011 ஆம் ஆண்டு



தமிழமுதத் தடாகத்துத் தாமரையே! தனிமலரே!

மணிபல் அணிநல் நாகேஸ் பாகே! இசையோடு இசையோடு இருபது வருகிறது சுறுசுறுப்பாய் அறுபதுவாய் இடம்பெயர்ந்து படம்போல வவுனியா செவிகுளிர வேப்பங் மாப்பிள்ளை இருபத் வருபத் சிவன்கோவில் சிவனருளால் நல்லதோர் எல்லோரும் வானொலியில் ஆனபல நாகேஸ் பாகே! தமிழமுதத் தமிழாக மனைவியொடு அனைவருமே அன்பன் இன்பம்

லவத்தீவாய் நயினையுறை வரனே! தமிழே! கலந்த வாழும் களில்கண்ட என்நினைவில். இப்போதும் விட்டதுவா வந்து இப்போதும் மண்ணில் நீசெய்தாய் குளத்து போலே தொருநாட்கள் தருக்கெல்லாம் மலரான பொறுப்பேற்றுச் நறுமலராய் நினைவுகொள்வார். பேச்சு, திறமைகளைக் வரனே! தமிழே! தடாகத்துத் நீவாழ்க! பிள்ளைகளும் வாழ்த்துரைக்கும் அகளங்கன் பெருகட்டும்

மணிமே அம்மன் நல்லதமிழ்ப் பண்புநிறை இனியதமிழ்ப் இனியபெருந் இனியமுகம் வளாகத்து சுழன்றியங்கும் அதற்குள்ளே எம்மண்ணில் படர்கிறது வந்துதங்கி சிறந்த விநாயகரின் மலர்மாலை எழிலாய் வழிகாட்டி சிவதத் சிறப்பாக நல்கியதோர் எந்நாளும் வர்ணனை, காட்டி நல்லதமிழ்ப் பண்புநிறை தாமரையே! தனிக்கதிராய் மற்றும் அரியதிரு வாழ்த்துமிக் எல்லாம்

கலைபோற்றும் அருள்பெற்ற பெரியோனே! இன்னமுதே! பேச்சுகளால் தமிழ்நிதியே! இப்போதும் வாழ்க்கையது. உனக்கிப்போ வயதாகி. வாழ்ந்ததெல்லாம் என்கண்ணில். வாழுகையில் பிரசங்கம். சந்நிதியில் தோளசைய உரையாற்றி நின்றவன்நீ. துவமலரைச் அச்சேற்றி சிறப்பதனை கதைக்கின்றார். நூல்வெளியீடு அசரவைத்த பெரியோனே! இன்னமுதே! தனிமலரே! ஜொலித்திடுக! உறவுகளும் நன்னாளில் கவிதையினால் சிறக்கட்டும்.

கலாநிதி அகளங்கன்.



சிவமயம்

என் கடன் பணி செய்து கிடப்பதே



அசந்த போது என் துயர் கெட மாமயில் வரவேண்டும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்

தினண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தானய

SRI THENDAUTHAPANI SWAMY DEVASTHANAM

பொகவந்தலாவ.

மக்கள் மனதில் வாழ்கின்ற அன்பர்

ஈழத்திருநாட்டில் நயினையம்பதியில் அறங்காவலர் மரபில் உதித்து இலங்கை – இந்து மக்கள் வாழும் இடமெல்லாம் சிவஒளி பரப்பிவரும், எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் அன்பர் அறிஞர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழாக் கண்டு மகிழ்ந்து நிற்கிறோம். கலாநிதி – முனைவர் – அருட்கலைமாமணி – சித்தாந்த பண்டிதர். வாகீச கலாநிதி – இலக்கிய ஆய்வாளர் – சொற்பொழிவாளர் – கலைஞர்– நூலாசிரியர் எனப் பலப்பல முகங்களில் செயல்பட்டவராக நாம் இவரைக் காணுகிறோம்.

பலநிலையில் செயல்பட்டாலும் அறிவிலும் அடக்கம் – முகத்தில் சிவசின்னத்துடன் தெய்வீக ஒளியும் புன்னகையும் – பணிவான பண்பு, சொல்லிலும் செயலிலும் அன்பு தவழ்தலும், இடத்துக் ஏற்ற உடை, எல்லாவற்றாலும் மக்கள் மனதில் வாழ்கின்ற அன்பர்; அறிஞர். நாளெல்லாம் புதியதைத் தேடலும் எழுதலும் ஆகப்பெற்ற அறிவை மூடிவைக்காமல் எல்லோரையும் கவர்ந்து சலிக்காது – வெறுக்காது கேட்கும் அளவிற்கு மனதில் பதியும் அளவிற்கு அறிவோடு பொருளோடு, இசையோடு, நகைச்சுவையோடு சொல்லுகிற பாங்கு, அவருக்கு இறைவன் கொடுத்த வரம். நாகபூஷணி கலைமகளாக நாவில் இருந்து நடாத்தும் விளையாட்டு! வாகீச கலாநிதி அல்லவா? மக்களாலும் அரசாலும் பல பாராட்டு பட்டங்கள் பெற்றாலும் இறைதொண்டன், சிவன் அடியான் என்ற பேறு பெற்றவர், அறுபது ஆண்டென்ன இன்னும் பல ஆண்டு நூறாண்டு வாழ்ந்து சமய சமூக அறிவுச் சேவையில் புத்தொளி காட்டி வழிகாட்டியாக இருந்து செயல்பட வேண்டும் என்று இறைதுணை கொண்டு வாழ்த்துகிறேன் – வணங்குகிறேன். எங்கள் ஆலயத்துக்கு அழைத்த போதெல்லாம் வந்து அறிவுரை – அருளுரை ஆற்றும் அன்பர். ஈழத்துப்பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி உடலுறுதியும் உள்ள உறுதியும் ஞானமும் அருளி வாழ வளர வைப்பான் என வேண்டுகிறேன். இன்பமே சூழ்க. பால்லாண்டு வாழ்க.

அன்பன்

சைவ சித்தாந்த வித்தகர்,

டாக்டர் முருகு. நல்லசேகரம்பிள்ளை, J. P

செயலாளர்,, ஈழத்துப்பழனி – அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், பொகவந்தலாவ.

வாக்சகலாநிதி மணிவிழா

இலங்கை இந்துப் பேரவை
ශ්‍රී ලංකා හින්දූ සභාව
Hindu Council of Sri Lanka
Reg.No : S / 2270

President: Mr.V.Rajendra—Tel: 2721785
Immediate Past President : Mrs.S.Duraisamy—Tel: 2588891
Secretary General: Mr.P.Paramapathan – Tel: 2365633
Treasurer: Mrs.Y.Thangavelu – Tel: 2360993
Project Officer: Mrs.V.Sumatharan-Tel :2366483
Web:www.hinducouncilsl.com

9,Castle Lane,
Colombo-04,
Sri Lanka.
Tel: 2588891

இலங்கை இந்துப் பேரவையின் அறநெறிப் பயிற்சிப்பட்டறை வளவாளர் கலாநிதி கனகசபாபதி- நாகேஸ்வரன் - விதப்பு



இலங்கை இந்துப் பேரவையின் தலைவர் திரு. வி. இராஜேந்திரா, உபதலைவி திருமதி சிவானந்தினி துரைசுவாமி ஆகியோரின் வழிகாட்டலில் 15. 09. 2012 : 16. 09. 2012 இருதினங்கள் இவ்வதிவிடப் பயிற்சிப்பட்டறை அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி கபாலீஸ்வரானந்த மகராஜ் அவர்களும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோயில் பூசகரும் ஆசியுரை வழங்கினார். முதல் நாள் நிகழ்வில் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திரு சீ. யோகேஸ்வரன் அவர்கள் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்.

பயிற்சிப்பட்டறையின் பிரதான வளவாளராக சப்ரகமுவ பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீச கலாநிதி, முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் கலந்துகொண்டார். சமயவாழ்வு பற்றியும், அறநெறி ஆசிரியர்களின் பங்குப் பணிபற்றியும் மிக விரிவாகவும், மிகச் சுவாரஸ்யமாகவும் எடுத்துரைத்துள்ளதுடன் பண்ணிசைப் பயிற்சியையும் வழங்கிச் சிறப்பித்தார். தம்பிலுவில்

திருநாவுக்கரசு நாயானார் குருகுலத் தலைவர் திரு. கண்ணன் இராஜரட்ணம், செயலாளர் திரு சந்திரேசன் பாபு, மற்றும் பொருளாளர், அங்கத்தவர்கள் குருகுலம் வாழ் மாணவச்செல்வங்கள் ஆகியோரின் பங்கேற்றலுடன் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வில் குறிப்பிடத்தக்க அம்சம் அறநெறி ஆசிரியர்களை அயலிலுள்ள ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு பண்ணிசைப்பயிற்சியும், சுவட்டுப்பிரார்த்தனையும் நடத்தப்பட்டமையாகும்.

சுவட்டுவழிபாட்டைத் தலைமைதாங்கி நெறிப்படுத்தியவர் வாகீசகலாநிதி, சித்தாந்தபண்டிதர், சொற்பேராழி, முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களாவார். இந்துப் பேரவையின் பொருளாளர் திருமதி யோ. தங்கவேலு, உறுப்பினர் திரு. தியாகராஜா, மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திருமதி சீவரட்ணம் ஆகியோரும் கலந்துகொண்டு தங்கள் சேவையை வழங்கினர். திருமதி வளர்மதி சுமாதரன் செயற்றிட்ட அமைப்பாளராகவிருந்து இப்பயிற்சிப்பட்டறையை நெறிப்படுத்தினார். எமது பிரதான வளவாளரும், நாடறிந்த கல்விமானுமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தமது மணிவிழாவில் நீடிய சுகானந்தப் பெருவாழ்வு வாழ்ந்து மேன்மேலும் சைவத்தமிழ் வளர்ச்சிக்குத் தம்மாலான தொண்டினைச் செய்ய எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

திருமதி வளர்மதி சுமாதரன்.
செயற்றிட்ட அமைப்பாளர்,
இலங்கை இந்து பேரவை,
கொழும்பு.





ஓ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

காரைநகர்

மணிவாசகர் சபை

பதிவு இல : HA / 4 / J / 168

ஆரம்பம் : 01.01.1940

Karainagar Manivasagar Sabai

தலைவர்:	பொருளாளர்:	செயலாளர்:
பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை	திரு. ந. பாரதி	திரு. து. நாகேந்திரன்

வாழ்த்துச் செய்தி



எம் இனிய தமிழ்மொழிக்கும், அன்பே சிவமாக விளங்கும் சைவ மதத்திற்கும், சமூகத்திற்கும் தம்மையே அர்ப்பணித்து தொண்டாற்றி வருகின்ற பெருமக்களைப் போற்றிக் கௌரவிக்கப்படுதல் அவசியமாகும். இதனைச் சமுகம் செய்தால் மனித நேயத்துடன் செய்யும் நன்றிக்கடனாகும்.



தொண்டாற்றுபவர்களுக்கும் மனநிறைவைக் கொடுப்பதோடு, அவர்களின் இலட்சியங்கள் முற்றாக நிறைவேற்றுவதற்கும் வழிவகுக்கும். இத்தகைய விழாக்கள் இளம் தலை முறையினருக்கு உந்து சக்தியாக விளங்கும். இவ்வகையில் பெரும் பணியாற்றி மணிவிழா காணும் நயினை தந்த கனகசபாபதி, நாகேஸ்வரன் அவர்களின் சேவை நலன்களைப் பாராட்டிப் போற்றி பெருவிழா எடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மைக் கடலிற் பெரிது" என்றார் வள்ளுவர்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மரபுவழி பரம்பரையில் தோன்றிய கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரியாக (B.A) முதுகலைமாணியாக (M.A) கலாநிதியாகப் (Ph.d) பட்டம் பெற்று பல்கலைகக்கழக

விரிவுரையாளராக, முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர். கல்விப் பட்டங்களுக்கு மேலாகத் தம் நாவன்மையாலும் அறிவாற்றலாலும் பெற்றுக் கொண்ட கௌரவப் பட்டங்கள் ஏராளம். இவற்றில் வாகீச கலாநிதி, அருள்மொழிச்செல்வர், அருட்கலை மாமணி, சித்தாந்த பண்டிதர், செஞ்சொல் வாரிதி போன்றன குறிப்பிடத்தக்கன.

இவர் நாடறிந்த இலக்கிய சொற்பொழிவாளர், ஆன்மீகச் சொற்பொழிவாளர், பட்டிமன்றப் பேச்சாளர், வானொலி, தொலைக்காட்சி அகியவற்றின் பகுதிநேர அறிவிப்பாளர், நேர்முக வர்ணனையாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், முதுநிலை விரிவுரையாளர் எனப் பல்வேறு துறைகளில் செயல்பட்டு வரும் சகல கலா வல்லவனாக விளங்குகிறார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காரைநகர் மணிவாசகர் சபையில் சொற்பொழிவாளராகவும், காரைநகர் கம்பன்கழகத்தில் பட்டிமன்ற பேச்சாளராகவும் காரைநகருக்கு அறிமுகமானவர் நாகேஸ்வரன் அவர்கள். இவர் 2012 மார்கழித் திருவாதிரைத் திருநாளில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின்போது ''உள்ஒளி பெருக்கும் திருவாசகம்'' என்னும் பொருளில் சங்கீத கதாப்பிரசங்க நிகழ்வை பக்க வாத்திய சகிதம், பொருள் செறிந்த கருத்துக்களை அள்ளிவீசியும் நகைச் சுவையாகவும் சிறப்பாகவும் நடத்தி காரைநகரில் பெருமை சேர்த்த பெருமகனாவார்.

வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் பல்லாண்டுகள் பூரண சுகத்துடனும் கீர்த்தியுடன் வாழ்ந்து செந்தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும்பணியாற்ற வேண்டுமென்று ஈழத்துச் சிதம்பரக் கூத்தனை வேண்டிப் பணிந்து வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

திரு. து. நாகேந்திரன்
செயலாளர்

பண்டிதர் M.S. **வேலாயுதபிள்ளை**
தலைவர்

வாகீசகலாநிதி
மணிவிழா

"சேக்கிழானடி சென்னி இருத்துவாம்"



வவுனியா சேக்கிழார் மன்றம்
VAVUNIYA SEKKILAR MANTRAM

தா.அமிர்தலிங்கம்
பொருளாளர்.
Treasurer
குருமன்காடு, வவுனியா.
T.P: 024 2223829

க.ஜயம்பிள்ளை
தலைவர்.
President
12, கற்குழி, வவுனியா.
T.P: 024 2221440

சி.வி.பேரம்பலம்
செயலாளர்.
Secretary.
40,திருநாவற்குளம், வவுனியா.
T.P: 024 2223732

1976 ஆம் ஆண்டு – 24 வயதில் மேடையேறியவர்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர், வாகீச கலாநிதி, அருட்கலை மாமணி, முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன், M.A.Ph.D. அவர்கள் அகவை அறுபதை நிறைவு செய்தமை தொடர்பாக மணிவிழா மலரொன்று வெளியிடப்பட விருப்பதறிந்து பேருவையடைகிறேன்.

நேற்று நிகழ்ந்ததைப் போன்றுள்ளது. 1976 ஆம் ஆண்டு நவராத்திரி விழாக்காலம். கொழும்பு நீர்ப்பாசனத்திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் பதிற் செயலாளரென்ற ரீதியில் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த 24 வயது நிரம்பிய இளைஞன் திரு, கனகசபாபதி நாகேஸ்வரன் இவர்களை அணுகி, எமது கழகத்தால் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் கலைமகள் விழாவிக்குச் சிறப்புரை ஆற்ற வருகை தருமாறு கோரி அவரது சம்மகத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

நவராத்திரியின் இறுதி விஜயதசமியன்று கலைமகள் விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டத்தில் ஆரம்பமாகிறது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம், இளைஞனின் சிறப்புரை அழகுதமிழில் ஆழமான கருத்துகளுடன் விறுவிறுப்பாக நிகழ்கிறது. பூரண அமைதியுடன் மனமொன்றிய நிலையில் சபையினர் உரையிலே வயித்திருக்கின்றனர். பல்வேறு தரத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் மத்திய தாம் நிகழ்த்தும் சமயஞ் சார்ந்த கன்னிப் பேச்செனத் தெரிவிக்கிறார். "இது கன்னிப் பேச்சல்ல. , அரங்குபல கண்ட அறிஞனின் பேச்சுப் போல் இருக்கிறது" எனப்பலரும் நிறைவோடு கூறியதைக் கேட்டு நாமும் பெருமைப்பட்டோம்.

இன்றோ, கலாநிதிப் பட்டம் பெற்ற கல்விமானாக, பல கல்வி மான்களை உருவாக்கிய பேராசானாக, வாகீச கலாநிதியாக, ஆன்மீகச் சொற்பொழிவுகள் மூலம் பலருக்கும் வழி காட்டும் கலங்கரை விளக்கமாக உயர்ந்து, சிறப்புடன் விளங்குகிறார். சமயகுரவர் நால்வருள் அப்பருக்கு "வாகீசர்" – வாக்குக்கு இறைவன் – எனும் நாமம் இறைவனாற் சூட்டப்பட்டது. எமது காலத்தில் தாய் நாடான தமிழ் நாட்டில் வாழ்ந்த அமரர் கி.வா. ஜகந்நாதன் அவர்களுக்கு அறிஞர் பெருமக்களால் "வாகீச கலாநிதி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இப்போது சேய்நாடான ஈழத்தில் கேட்டார்ப்பிணிக்கும் தகைமையுடைய வாக்கின்மூலம் ஆன்மீகச் சுடரேற்றும் பேரொளியாக விளங்கும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு அறிஞர் பெருமக்களால் "வாகீச கலாநிதி" என்னும் மாண்புறுபட்டம் வழங்கப்பட்டது.

வழங்கப் பெற்ற பட்டங்கள் இவரைச் சார்ந்ததால் பெருமையுற்றனருவனப் பெருமைப்படுமளவுக்கு உயர்ந்து விளங்கும் பண்பாளன்; மனித நேய மாண்பாளன்; மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் சீரிய தொண்டாற்ற எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதார விந்தங்களைப் பணிந்து பிராத்திக்கிறேன்.

அன்பின்

க. ஐயம்பிள்ளை

தலைவர், வவுனியா சேக்கிழார் மன்றம்

இளைப்பாறிய பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு





கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Colombo Tamil Sangam Society Ltd.

Reg No. 73

மணிவிழா வாழ்த்து

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் அரிய தொண்டுகள் புரிவதோடு ஆய்வு நிலையிலே தமிழியலை மேம்படுத்தும் தங்கள் பணிகள் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவை.

தங்களின் மணிவிழா சிறக்கவும், பெருநிரையான மாணவர்கள் சங்கமித்து விழாவில் மகிழ்வெய்தவும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் உளமார வாழ்த்துகின்றது.

பேராசிரியர் சபா ஜெயராசா
தலைவர்

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
பொதுச் செயலாளர்



VIVEKANANDA SOCIETY
34, VIVEKANANDA HILL,
COLOMBO 13.

Telephone ; 2422646

FOUNDED IN 1902

'அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம்'

"An Approved Charity"



SWAMI VIVEKANANDA

Our Ref :

சீர் குன்றாப் பண்பாளர்
மணிவிழாக் காணும் மாண்பாளர்

மணிவிழாக் காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் கொழும்பு விவேகானந்த சபை மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

சைவ கலாசார மரபுகளைப் பேணி இறைபக்தியையும் ஆன்மிகத்தையும் வளர்க்கும் பணியில் சேவையாற்றும் விவேகானந்த சபையுடன் நெருங்கிய தொடர்புடையவர் விழா நாயகன் நாகேஸ்வரன் அவர்கள். தனது பேச்சாற்றலால் அனைவரையும் கவரும் ஆற்றல் கொண்டவர். அறிவு ஆன்மீகம், மனிதநேயம் கொண்ட சீர் குன்றாப் பண்பாளர்.

தானங்களில் சிறந்தது கல்வித் தானம் என்ற கூற்றுக்கமைய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையில் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராக இருந்து பல பட்டதாரிகளை உருவாக்கிய நல்லாசான்.

இத்தகைய பெருந்தகையின் சேவையும் நலமும் ஆயுளும் பெருக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவரது உன்னதமான சேவை மேலும் தொடர சபையின் சார்பிலும் எனது சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. விவேகானந்தன்
கௌரவ பொதுச் செயலாளர்,
விவேகானந்த சபை – கொழும்பு.



சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)

இளைஞர் மனதில் விழிப்புணர்வையூட்டுபவர்



வாக்சகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் 60 ஆவது அகவையில் அடியெடுத்து வைத்துள்ளவேளை அவரிடம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று வெளியேறிய மாணவர்கள் நன்றிப்பெருக்கோடு நல்லூரில் மணிவிழா எடுக்கச் செயல்பட்டுவருவதை அறிந்து பெருமிதமாக இருக்கிறது.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றச் சிறப்பு உறுப்பினராக, குழுக்கள் பலவற்றின் உறுப்பினராக, பல்வேறு வழிகளில் சமய, சமூக, ஆன்மீகப்பணிகளாற்றிய ஒருவர். மாமன்றத்தின் நிகழ்வுகளான சமய விழாக்களிலும், நினைவுப் பேருரைகளிலும், புத்தக வெளியீடுகளின் போதும் உரைகளாற்றித் தொண்டு செய்தவர்.

நல்லதோர் இந்துவாக வாழ்ந்து சமயத்தொண்டாற்றி சமூகத்தில் குறிப்பாக இளைஞர்கள் மனதில் விழிப்புணர்வையூட்டி வருபவர்.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் மணிவிழாக்காணும் இவ்வேளை மாமன்றத்தின் சார்பில் எமது உளம் நிறைந்த வாழ்த்தினைத் தெரிவிப்பதோடு, அவரது சமய, சமூகப்பணிகள் மேலும் தொடரவும், நீண்டகாலம் நலமே வாழவும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கந்தையா நீலகண்டன்

தலைவர்

அகில இலங்கை இந்து மாமன்றம்.

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)

நல்லதோர் சமயத்தொண்டர்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினரும், மாமன்றச் சிறப்பு உறுப்பினருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் மாமன்ற செயற்பாடுகளிற் கரம்கோர்த்து நின்று உதவும் நல்லதோர் சமயத்தொண்டர், அவர் 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இவ்வேளை அவரது சமய, சமூக, ஆன்மீக, கல்வித்தொண்டுகள் தொடர்ந்தும் இந்து மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே எனது அவா. மாமன்றத்துடன் இணைந்து கொண்ட காலத்திலிருந்து இன்றுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் சமயச்சொற்பொழிவுகள், நினைவுப் பேருரைகள் போன்றவற்றை ஆற்றிப் பெருமைசேர்த்திருக்கிறார்.

மணிவிழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பில் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவும், அவரது பணிகள் மென்மேலும் சிறப்பாகத் தொடரவும் எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

வி. கயிலாசபிள்ளை

நம்பிக்கை பொறுப்பாளர் சபைத்தலைவர்,

அகில இலங்கை இந்து மாமன்றம்.

வாக்சகலாநிதி
மணிவிழா

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்
(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
Chairman of the Board of Trustees
வி. கயிலாசபிள்ளை
V. Kailasapillai
T.P. 2575566 Fax. 2575472
E-mail. hariomak@gmail.com

தலைவர் / President
கந்தையா நீலகண்டன்
Kandiah Neelakandan
T.P. 2371100 (off) 2580807 (Res)
Fax. 2371111, 2371122
E-mail. neela@mnlaw.lk
Mob. 071-2723456

பொதுச் செயலாளர்
General Secretary
முத்தையா கதிர்காமநாதன்
Muthiah Kathirgamanathan
T.P. 2582139 (Res) Fax. 2361381
E-mail. mknathan21@yahoo.com
Mob. 077-7656070

பொருளாளர்
Treasurer
வே. கந்தசாமி
V. Kanthasamy
T.P. 2586620 (Res)
E-mail. vkandasami@gmail.com
Mob. 071-5349150

தமிழ்ப்பண்பாளன்



சிவந்த நிறம் சிரித்த முகம் அலையையொத்த முடி கண்ணில் கலை வடிவம், கவர்ச்சியான கம்பீரமான தோற்றப் பொலிவு தமிழர் பண்பாடு உடையில் அவர் தான் தமிழரின் வடிவம். பேச்சில் தமிழ் நர்த்தனம் புரியும் இடையிடையே நகைச் சுவையும் சிலேடையும் நளினம் செய்யும். கருத்துக்கள் ஆழமானவை அர்த்தங்கள் பொதிந்தவை சிந்திக்க வைக்கும். சிரிக்கவும் வைக்கும் பல்கலை வித்தகர். பண் இசை தென்றல். பத்துக்குமேல் பட்டங்கள் பெற்றவன். இதைத்தான் பட்டதாரி என்பார்களோ. கலாநிதியைக் கடந்து விட்ட பேராசிரியர் அவன். இவ்வாழ்வில் மணிவிழாவைத் தொட்டு விட்டான். இத்தனையும் பெற்ற நயினை மைந்தன்தான் கனகசபாபதி நாகேஸ்வரன் என்னும் தமிழ்ப் பண்பாளன்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை அறங்காவலர், இலக்கிய சமயப் பேச்சாளர், பன்நூலாசிரியர், பண்இசை, கதாப்பிரசங்க வித்துவான், சொற்பொழிவாளர். இப்படியெல்லாம் தன்னை வளர்த்துக்கொண்ட மணிவிழா நாயகனைப் பார்த்ததும் யாரோ சொன்ன வார்த்தை ஞாபகம் வருகிறது.

அறிவோடு வாழ்வதற்கு இலக்கணம் என்ன என்றால், எப்பொழுதும் சிந்தனை செய்கின்ற பழக்கத்தினைத் துணையாகக் கொண்டு புதிய புதிய கருத்துக்களை வெளியிட வேண்டும்; புதியவைகளைக் கண்டு படிக்க வேண்டும்; கண்டு பிடிக்கவும் வேண்டும். புதிய திட்டங்களை மக்களுக்கு உணர்த்த வேண்டும் இதனைத்தான் பாரதி இப்படிக் கூறினான்.

"உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கிலே ஒளியுண்டாகும்."

மணிவிழாக் கொண்டாடும் நயினை மண்ணின் மைந்தனை மனதார வாழ்த்தி வணங்குகின்றேன்.

மு. கதிர்காமநாதன்
செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்,



வாகீச சக்கரவர்த்தி



மணிவிழாக் காணும் நயினையின் மைந்தன் எனது ஆருயிர் நண்பன் கலாநிதி கனகசபாபதி நகேஸ்வரன் அகவை அறுபதில் காலடிவைக்கும் பிறந்தநாள் விழாவிற்கும் அதையொட்டி அவரை கௌரவிக்கும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மிக மகிழ்வடைகிறேன். இவர் பார்போற்றும் நயினை நாக பூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் பரம்பரையில் கல்விமான்கள் விளங்கும் நயினைப்பதியில் அவதரித்து, தன் நாட்டிற்கும் பிறந்த ஊருக்கும் கல்விகற்ற கல்விக்கூடங்களுக்கும், கல்வி பயிற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் பெருமை தேடியுள்ளார்.

நாகேஸ்வரனின் கால்படாத இந்து ஆலயங்களே இல்லை என்னும் அளவிற்கு அவரின் சமய உரைகள், கதாப்பிரசங்கங்கள், பண்இசைகள் எல்லோர் காதுகளிலும் இன்றும் கேட்டுக்கொண்டே இருக்கும். இவரை ஒருமுறை பார்த்தவர்கள் கண்களில் என்றுமே மறவாதவராகவே இருப்பார். விசேஷமாக எமது மன்னார் மாவட்டத்தில் பல ஆலயங்களுக்கு வருகை தந்து பல சமய உரைகளை ஆற்றியுள்ளார்.

அன்னாரின் தமிழ் சைவசமயப் பணிகளுக்காகவே பல சமய நிறுவனங்கள் இவருக்கு அருள் மொழிச் செல்வர், வாகீச கலாநிதி, செஞ்சொல்வாரி முதலிய கௌரவ விருதுகளை அளித்து புகழாரப் பாராட்டியுள்ளது. இவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக இருப்பினும் இசை ஞானத்தில் வல்லுனராக கற்பிக்கும் நடையில் பண்இசையை வெகுலாவகமாக, ஹாஸ்யமாகவும் எடுத்துரைப்பதில் கைதேர்ந்தவராக எவருக்கும் அஞ்சாத துணிவுடன் எக்கருமத்தையும் எதிர் நீச்சலுடன் செய்பவராகவும் விளங்குகிறார்.

விசேஷமாக தமிழ் பாரம்பரிய வைத்திய முறைகளையும் நடைமுறையில் கற்று அது சம்பந்தமான நூல்களையும் எழுதி அதன் பெருமையை எடுத்துரைத்துள்ளார். எதையும் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்யக்கூடிய ஓர் ஒழுக்க சீலர். அகவை அறுபதை அடைந்தும் இளம் துடிப்புடன் சலிக்காது செயலாற்றுவதில் நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர் எமது வாகீச சக்கரவர்த்தி நாகேஸ்வரன் என்றால் மிகையாகாது. இவரின் சேவை என்னும் பல ஆண்டுகள் தொடர வேண்டும் என்று இறைவன் அருள் அவருக்கு கிட்டும் வண்ணம் பிரார்த்திக்கிறேன்.

என்றும் அன்புள்ள

வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன்

மன்னார்.



நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம்
Nainativu Socio - Economic Education & Cultural Development Society
නයිනාතිවු සමාජ ආර්ථික අධ්‍යාපන හා සංස්කෘතික සංවර්ධන සංගමය

அரும்பெருஞ் சாதனையாளன்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் அகவை அறுபது பூர்த்தியை முன்னிட்டு அவர்தம் பல்கலைக்கழக மாணவர் எடுக்கும் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மணிவிழாக் காணுதல் என்பது மனித வரலாற்றில் முக்கிய நிகழ்வாகிறது.

சாதனைகள் புரிந்து சமூகவாழ்வில் தமக்கென இடம்பிடித்து மேன்மையுறும் போது, மணிவிழா அம்மேன்மையைப் புடமிட்டுக் காட்டுகிறது.

அந்த வகையில் வாழ்க்கையில் தான்சார்ந்த கல்வித்துறையில் அரும்பெரும் சாதனைகளை நிகழ்த்தித் தமிழ், சமயப்பணிகளிலும் தம்மை ஆளாக்கியவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தமிழுலகும் இந்து மக்களும் நன்கறிந்த பேராசான்.

இன்றைய மணிவிழா நாளில் அவரது சேவையையும், சிறப்பையும் பாராட்டுவதுடன் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மேலும் பல சிறப்புக்களையும் தீர்க்க ஆயுளையும் வழங்க வேண்டுவதுடன் எனது நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மிக்க மகிழ்கிறேன்.

சுபம்.

ப. க. பரமலிங்கம் ச. நீ. S. L. A. S.
ஓய்வு நிலைச் செயலாளர்,
வட – கிழக்கு மாகாணசபை.
அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
நயினாதீவு



ஆரம்பம் ESTAD } 1960 | பதிவு இல Regd No } S236

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

வரையறுக்கப்பட்டது

"AMIRTHASURABHI MANDAPAM"
NAINATIVU - 2, SRI LANKA.
Telephone : 021 3213575



"அமுதசுரபி மண்டபம்"
நயினாதீவு – 2, இலங்கை.
தொலைபேசி : 021 3213575

NAINATIVU SRI NAGAPOOSHANI AMIRTHASURABHI ANNADHANA SOCIETY LTD

அறிவெனும் ஞானச் சுடரை ஏற்றுபவர்

மணிவிழாக்காணும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மரபுவழி அறங்காவலரும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாட் தலைவரும், முதுநிலைத்தமிழ் விரிவுரையாளருமாகிய அன்புத்தம்பி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

காலையில் உதிக்கும் சூரியன் தனது கதிர்கள் மூலம் உலக இருளை நீக்கி பூவுலகிற்கு ஒளியைப் பரப்புவது போல், தனது சைவ நற்சிந்தனை மூலம் சிறந்த ஆன்மீகக் கருத்துகளை அதிகாலையில் கூறி, மக்களின் அறியாமை என்னும் அக இருளை நீக்கி அறிவு என்னும் ஞானச்சுடர் ஏற்றுகின்ற இவரது ஆன்மீக நற்பணி போற்றுதலுக்குரியதாகும்.

நாகேஸ்வரத்தில் உதித்த கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாசி பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நலமே வாழ நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் சார்பில் வாழ்த்துகிறேன்.

வணக்கம்

த. சிவானந்தன்,
தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.





மணிபல்லவ கலாமன்றம் - நயினாதீவு
(ஆரம்பம் 1962)
மணிபல்லவ கலாமன்ரம் - நயினாதிவு
MANIPALLAVA KALAMANTRAM - NAINATIVU

மணிவிழாக்காணும் மணிபல்லவ மைந்தன் வாழி



சிலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு வயது அறுபது ஆகிவிட்டதென்றால் நம்பமுடியவில்லை. நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் திருவெம்பாவைக் கூட்டுப் பிராத்தனையில் அதிகாலையில் "ஞான சம்பந்தனாக" "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று பஜனை பாடிவரும் இவரது இளமைக்காலத்து நினைவினை மீட்டுப்பார்க்கிறேன்.

தெல்லிப்பழை யா/ மகாஜனக் கல்லூரியில் இடை நிலைக் கல்வியினை முடித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களினால் வியந்து போற்றப்படும் இவர் விரிவுரையாளர்கள் மத்தியில் "நக்கீரன்". சரியெனப் பட்டதைச் சபையில் சொல்லும் வல்லமையுடையவர். தமிழிலும் சமயத்திலும் மிக்க புலமையுடையவருக்குப் பண்ணும் கைகூடியிருந்தமை சிறப்பம்சமாகும்.

நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பரம்பரை அறங்காவலராகவிருந்து பணி செய்து வருவது போற்றிப் பாராட்டப்பட வேண்டியது. இவரின் தொண்டும் பணியும் சிறக்க வேண்டுவதோடு, உடல் ஆரோக்கியத்துடன் வாழ நாகபூஷணித் தாயை இறைஞ்சுகிறேன்.

இ. சிவபாதசேகரம்
தலைவர்,
நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம்,
நயினாதீவு.



தெல்லீப்பளை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை
TELLIPPALAI MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION
COLOMBO BRANCH
E-mail : mcosacolombobranch@yahoo.com
(2011 - 2012)



மகாஜனக் கல்லூரிக்குப் பெருமை தேடித்தருபவர்

மகாஜன மாதாவின் மைந்தர்களுள் ஒருவரான நயினை மண் நமக்கு ஈந்த கலாநிதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது எமக்குப் பெருமையாக இருக்கிறது.

1966 – 1974 வரை மகாஜனக்கல்லூரியில் கல்வி கற்று, பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகி M. A. பட்டம் பெற்று, கலாநிதியாக உயர்ந்து இன்று மூத்த விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பேராசிரியராகி எமக்கெல்லாம் பெருமை தேடித்தர இருக்கிறார்.

அவர் எமது துணைத் தலைவராக இருந்து எமக்கு பல வழிகளில் உதவி செய்தும் மதியுரை வழங்கியும் வருகிறார்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருளும் கன்னித்தமிழின் காவலன் கந்தனின் கருணையும் பெற்று பாரில் நல்ல வண்ணம் பல்லாண்டு பல்லாண்டு வாழ வையத்தில் மூத்த வண்டமிழால் வாழ்த்துகிறோம்.

கல்வித்துறைக்கும் நயினை மண்ணுக்கும் நலிவுற்றிருக்கும் நம்மினத்துக்கும் அவர் பணி தொடர்வதாக.

நீடுழி வாழ்க!

க. சிங்காரநாதன்
செயலாளர், மகாஜனக்கல்லூரி
ப. மா. சங்கம் – கொழும்புக் கிளை.

வாகீசகலாநிதி
மணிவிழா

சிவமயம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்
SAIVA PARIPALANA SABHAI - JAFFNA
(1888 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பற்று 1931 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பற்றது)

66, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 2227678
021 3202191

66, College Road,
Neeraviyady,
Jaffna.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மைந்தனுக்கு வாழ்த்துக்கள்

யினைவர், கல்விமான், வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுடன் நான் நீண்டகாலமாக நட்புடன் பழகிவருகிறேன். நல்ல பண்பாளர். பழகுவதற்கு இனிமையானவர்.

அவரது சமய இலக்கிய மேடைப் பேச்சுகளைக் கேட்டிருக்கிறேன். சபையோரைக் கவரக்கூடிய முறையில் நல்ல அரிய புதிய கருத்துகளைச் சொல்லிச் சபையோரை மகிழ்விப்பார்.

நல்ல குரல் வளமுடையவர்; திருமுறைகளைப் பண்ணுடன் இனிமையாக பாடுவார்.

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலியில் அவரது சங்கீத கதாபிரசங்கத்தைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந் நிகழ்வு அவரது கன்னி முயற்சியாகும். மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. மறுநாள் காலை அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது வாழ்த்துகளை தெரிவித்ததுடன் அப்பணியில் தொடர்ந்து ஈடுபடுமாறும் கேட்டுக்கொண்டேன்.

இவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மரபுவழி அறங்காவலர் உறுப்பினர்களில் ஒருவராகவும் செயற்படுகிறார். மணிவிழாக் காணும் அன்பர் அவர்கள் நலமுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமயப்பணியைச் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்துகிறேன்.

அன்புடன்

த. சண்முகலிங்கம்

தலைவர், சைவபரிபாலன சபை,, யாழ்ப்பாணம்.



உ
சிவமயம்



நாவலப்பிட்டி இந்து மன்றம்

නාවලපිටිය හින්දු මණ්ඩලම්

NAWALAPITIYA HINDU MANDRAM

தலைவர்
(President)
R. இராஜேந்திரன் J.P.
R.Rajendran J.P.
T.P - 060 2888544
0777 587047

செயலாளர்
(Secretary)
P. திருநாவுக்கரசு J.P.
P. Thirunavukarasu J.P.
T.P - 054 2222521
071 8365991

நிதிச்செயலாளர்
(Treasurer)
S. நடராஜா
S. Nadarajah
T.P - 081 2478016

இந்துமன்றத்தின் ஆலோசகர்

நாவலப்பிட்டி இந்து மன்றம் 2009.01.11 ஆம் திகதி ஆரம்பமாவதற்குரிய காரணகர்த்தாக்களுள் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும் ஒருவர் ஆவர். இவரை நாவலப்பிட்டி இந்து மன்றம் முதன்மை ஆலோசகராகத் தெரிவு செய்வதில் பெருமைபெற்றது. இவரது வழிகாட்டலின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளாக மத்திய மலையகத்தில் குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளில் ஆன்மீக, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதில் அளப்பரிய தொண்டுகளைப் புரிவதற்கு உறுதுணை புரிந்துள்ளார். அவர் எமது நாவலப்பிட்டி இந்து மன்ற விழாக்களில் மிகமுக்கிய சிறப்புப் பேச்சாளராக முத்தமிழ் மூலம் மலையக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து வருகிறார். இவரது பேச்சில் நகைச்சுவை ததும்பியிருப்பதும் மக்களின் விருப்புக்கு மிக முக்கிய காரணியாக அமையும்.

எல்லாம் வல்ல இறையருளினால் தொடர்ந்து தொண்டு செய்வதற்கு நீடூழி வாழப் பிராத்திக்கிறோம்.

மிக்க நன்றி.

சு. இராஜேந்திரன்
தலைவர்.

பி. திருநாவுக்கரசு
பொதுச் செயலாளர்



"Kalabhushanam"

PILLAINAYAGAM THIRUNAVUKKARASU

Justice Of Peace

Musician - Mirudangam Artist

Mediator - Nawalapitiya Mediation Board

(Retired Administrative Officer)

நான் கண்ட பாலகன் – வாக்சகலாநிதி – கலாநிதி –

சான்றோன், ஆன்றோன், வாக்சகலாநிதி, அருட்கலைமாமணி, கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், MA. Ph D, அவர்களின் மணிவிழாவையிட்டு இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை பெறுகிறேன்.

இவரின் தந்தை அமரர் திரு. கனகசபாபதி மலையகத்தின் இதயமாகத் திகழும் நாவலப்பிட்டிப் பிரதேசத்தில் 1959ஆம் ஆண்டளவில் ஒரு பாடசாலையில் ஆசிரியராக கல்வி கற்பிக்கும் காலத்தில் பாலகனாக இருந்த நாகேஸ்வரன் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் மாணவனாகப் படித்த காலம் நான் அறிவேன். "விளையும் பயிரை முளையிலேயே தெரியும்" என்பதற்கேற்ப அவரின் திறமை அக்காலத்திலேயே மிளிரத்தொடங்கியது. கால ஓட்டத்தில் அவர் மிதந்து 1995ஆம் ஆண்டில் நாவலப்பிட்டிக்கு மீண்டும் வந்து வாழ நேரிட்டது. இக்கால கட்டத்தில் இவர் வாக்சகலாநிதியாக, அருட்கலை மாமணியாகத் திகழ்ந்தார். எனவே! இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மலையகப் பகுதியிலுள்ள ஆலயம், வித்தியாலய மண்டபங்களில் இவரின் இன்னிசைப் பேருரைகள், அணிசேர் மிருதங்க இசைக் கலைஞராக நானும் இணைந்து, செந்தமிழையும் சைவத்தையும் மலையகத்தின் பட்டிதொட்டிகளெங்கும் சென்று வளர்ப்பதற்குரிய பெரும் தொண்டினை ஆற்றினார். இதன்பின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவராக பேராசிரியராகக் கடமையாற்றிய போதும் மலையகப் பகுதிகளுக்கு இடையிடையே வருகை புரிந்து மலையகம் வாழ் மக்களுக்கு அரும்பெருஞ் சேவையை தொடர்ந்து கொண்டிருக்கிறார். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் நற்பண்பினைக் கொண்டவர் என்பதால் இவரின் தொண்டுகள் தொடரும் என்பதில் இரண்டு பட்ட கருத்தே கிடையாது.

வாழ்க! வளர்க!! தொண்டுகள் பல புரிக!!!

பி. திருநாவுக்கரசு

Mediator - Nawalapitiya Mediation Board

35/28, Soysakelle,

Nawalapitiya.



சிவாய நம



உலக சைவப் பேரவை
இலங்கைக் கிளை
WORLD SAIVA COUNCIL
SRI LANKA BRANCH
9, JAYA ROAD, COLOMBO 4.
TEL: 2582139 Mobile: 0777-656070 Fax: 2593997
E mail: mknathan21@yahoo.com kthayaparan@sltnet.lk

செயலமர்வுகள், கருத்தரங்குகளில் திறமை காட்டுபவர்

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் எமது மதம், கலாசாரம் ஆகியவற்றிற்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளைப் பாராட்டி எனது வாழ்துகளை அவரது பவளவிழாச் சிறப்பு மலருக்கு அனுப்பிவைப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

இந்த மாபெரும் கல்விமான், சைவ ஆர்வலரை முதன்முதலாக 1992ஆம் ஆண்டு நான் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றும் போது சந்தித்தேன். இதனையடுத்து நான் தலைவராக இருக்கும் இப்பேரவையின் உபகாப்பாளராக இவர் பதவியேற்று இன்று வரை பேரவையின் செயலமர்வுகள், கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார்.

இவர் ஒரு உண்மைச் சைவராக தோற்றமளிப்பதுடன் அவ்வாறே வாழ்ந்தும் வருகிறார். அவரது சேவை மேன்மேலும் வளரவேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

அன்பே சிவம்.

கா. தயாபரன்,
தலைவர், உலக சைவப் பேரவை,
இலங்கைக் கிளை.





ஓ

திருச்சிற்றம்பலம்

"மேனமை கொள் சைவநீதி விளங்குக ஓ வகமெல்லாம்"

மணிவாசகர் சபை - வவுனியா.

MANIVASAGAR SABAI - VAVUNIYA.

ஆரம்பம்:- 28 - 02 - 2002

24, 1st Cross Street,
Vavuniya.
T. P :- 024 - 20070

பதிவு இலக்கம்:-

24, 1ம் குறுக்கு வீதி,
வவுனியா.

தலைவர் / President
"இறைபணிச் செம்மல்"
"திருவாசகச் செல்வர்"
வை. செ. தேவராசா

செயலாளர் / General Secretary
திருமதி. புவநநாயகி ஐயம்பிள்ளை
இளைப்பாறிய உதவிக்கல்வி அதிகாரி

பொருளாளர் / Treasurer
சிவஸ்ரீ க. சிவராசாக் குருக்கள்

"திருவாசகச்செல்வர்" பட்டம் தந்த வாகீசகலாநிதி

கல்விப்பெருந்தகை கலாநிதி, வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M. A. Ph.d. அவர்களின் மணிவிழா அகவையில் சிறப்புப்பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகிறேன். எனது 75ஆவது வயதைக் கடந்தும் வவுனியா இறைபணிச் செம்மல், திருவாசகச் செல்வர் ஈழத்தில் 880 தடவைகளுக்கு மேல் திருவாசகத்தை முற்றும் ஓதுதல் நிகழ்வை நிறைவு செய்துள்ள தொண்டன் ஆகிய எனது பெரும்பணியைப் பல இடங்களிலே பாராட்டியும், கௌரவவிருந்தான "திருவாசகச் செல்வர்" என்ற கௌரவப்பட்டத்தையும், பரிசையும் வழங்கியதையும் நன்றியோடு நினைவு கூருகிறேன். பிறரை வாழ்த்தும் பெருந்தகை நீடு வாழ்க!

எனது தீவு மண்ணில் அதுவும் நயினாதீவு மண்ணில் பிறந்து அந்த மண்ணுக்கும் தீவு மக்களுக்கும் பெரும் சேவையும் பெருமையும் சேர்த்துக் கொண்டு வாழும் தங்களைப் பலவகையாலும் வாழ்த்தி வணங்குகிறேன்.

வணக்கம்

வை. செல்லத்துரை தேவராசா, J. P,
தலைவர், இந்துமாமன்றம், வவுனியா,
தலைவர், மணிவாசகர் சபை, வவுனியா,
உபதலைவர், திருக்கேதீச்சரம் சிவாலயம்,
உபசெயலாளர், கோவிற்குளம் சிவாலயம்.

Km/Km/ RAMAKRISHNA MAHA VIDYALAYAM
KALMUNAI
Tel:067-2220078

காத்திரமும் கனதியுமிக்கவர்

அகவை அறுபதை அடைந்த கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களைக் கௌரவித்து வெளியிடப்படும் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

பல்கலைக்கழகங்கள் பலதரப்பட்ட பேராசிரியர்களை வெளியீடு செய்ய பேராசிரியர்களே பல பட்டதாரிகளைப் படிப்பித்துக் கல்விச் சமுகத்தை உருவாக்குகின்றனர். அவ்வகையில் நாகேஸ்வரன் Sir அவர்களின் பணியும் காத்திரமானது; கனதியானது.

சொல்லாடல் வல்லான், சொற்சுவைதோய் சுவாரஸ்யப் பேச்சாளன், கவித்துவமிக்க கட்டுரையாளன், ஆத்தமார்த்தமான சமயப்பிரசாரகர், பௌராணிகத் தத்துவத்தைப் பலபடப் பகுத்துரைக்கும் கதாப்பிரசங்கி, நடிப்பாற்றல் காட்டும் நகைச்சுவை நடிகன் இப்படியெல்லாம் அடைமொழிப்படுத்தக் கூடிய ஆற்றலுள்ள ஒருவர்.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" எனும் ஆன்றோர் வாக்குக்கமைய கற்றவர் கற்பித்தவருக்குக் காத்திரமாக எடுக்கும் விழாச் சிறப்புற வாழ்த்துவதோடு, கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் நெடுநாள் சுகபலத்துடன் வாழ்ந்து, தமிழ்ப்பணிபுரிய இறையருள் கூடவேண்டுமென்றும் மனதார ஆசி கூறுகிறேன்.

திருமதி அ. பேரின்பராஜா,
அதிபர்,
கமு/ இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்
கல்முனை.





கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம்
மஹனுவர கலா சாஹித்ய ரஸிக சங்கமய
KANDY ART AND LITERATURE ENTHUSIASTS ASSOCIATION
NO.308, D.S. SENANAYAKE VIDIYA, KANDY - SRI LANKA. T' PHONE: 077-1771389,

எழில் கொஞ்சும் மலையகத் தலைநகர் கண்டி 'அகிலம்' ஆசிரியர் அவர்களது

வாழ்த்துச் செய்தி!



அகிலம் அறிவியல் சஞ்சிகை கண்ட அற்புதமான நல்லாசானும், நிறைந்த அன்புள்ளம் கொண்டவரும், உயர்ந்த கல்வித் தகைமைகளை உடையவருமாகிய 'அருட்கலை மாமணி', 'வாகீச கலாநிதி' முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் 60வது ஆண்டு நிறைவு மணிவிழா சிறப்பு மலருக்கு 'அகிலம்' தனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும், நல் ஆசிகளையும் நல்குவதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறது.

மலையக மக்களின் கல்வி, கலை, சமயம், பண்பாட்டு வளர்ச்சியில் அதீத அக்கறையும் ஆர்வமும் கொண்டு முனைப்புடன் தொழிற்படுபவர் இவர். 60ஆவது ஆண்டு மணி விழாவைக் கொண்டாடும் நயினை அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மரபுவழி அறங்காவலர், நாடறிந்த நல்லறிஞர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமான, முனைவர், 'வாகீச கலாநிதி' கனகசபாபதி நாகேஸ்வரன், M. A., Ph.d, அவர்களின் சமய, சமூக, இலக்கிய ஆய்வுப்பணிக்கு பாராட்டும் வாழ்த்துக்களும், நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

மலையகத்திலே நாவலப்பிட்டியில் தமது ஆரம்பக்கல்வியைக் கற்றுயர்ந்தவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன். கண்டி தலதாமாளிகை எசலபெரஹெர நிகழ்வை வானொலியில் நேர்முக வர்ணனை செய்தவர். நயினை மரபுவழி அறங்காவலர் 'அருள்மாமணி' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டவருமான நயினையம்பதி ஸ்ரீமான் பரமலிங்கம் – கந்தசாமி கனகசபாபதி அவர்களுக்கும்

'வித்துவாட்டி' 'கவிஞர்' என்ற கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டவருமான நயினை ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை – கோகிலாம்பாள் கனகசபாபதி அவர்களுக்கும் மூத்த புதல்வனாக 05.08.1952இல் பிறந்தவர் தான் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

இந்து மக்களின் மத்தியில் எழில் முத்தாக விளங்கும் முனைவர், வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், சைவம் தழைத்தோங்கும் நல்லுலகிற்கும் ஓர் ஒப்பில்லாதவர். பிறந்த மண்ணுக்கும் மங்காப் புகழைத்தேடித் கொண்டு சைவ, சமய, சமூகத் தொண்டினையும், தமிழ்மொழிப் பற்றினையும் நிலைநிறுத்தி சிறந்த மாணவச் செல்வங்களை உருவாக்கிய வரலாற்றுப் பெருமைமிக்க சாதனையாளர்கள் வரிசையில் ஒருவராகத் திகழ்கிறார்.

கண்டி கட்டுக்கலை விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழாவை கண்டி வானொலிச் சேவையினூடாக நேர்முகவர்ணனை செய்தவர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முதுமொழிக்கிணங்க பரந்துபட்ட பெருநோக்குடன் தனக்கென வாழாது சைவ உலகிற்கும், தமிழ் கூறும் நல்லுலகிற்குமென வாழ்ந்து வருகின்ற பெருமைமிக்க ஆசானுமாவார்.

நாடு தழுவிய ரீதியில் அவரது சமய, சமூக, இலக்கியப் பணிகள் அமையும். நயினை மாதாவின் அருந்தவப் புதல்வன் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் 60ஆவது ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப்புற நடைபெறும் இவ்வேளையில் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் கல்விமான்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரிகள், மாணவச் செல்வங்கள், சமய சமூகத் தொண்டர்கள் வரிசையில் 'அகிலம்' ஆசிரியர் – வாசகர்கள் அனைவரது சார்பிலும் மணிவிழா வெகு விமரிசையாக நடைபெறவும், 'ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' (பெற்றோருக்கும்) அவரது குடும்பத்தாருக்கும் நன்றி கூறி உளங் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பல்லாண்டு வாழ வேண்டுமென எல்லாம் வல்ல எம்பெருமானை வணங்கி வாத்துவோமாக!

என்றும் அன்புடன்,

'கலாபூஷணம்' K. V. **இராமசாமி,** J. P

ஆசிரியர் 'அகிலம்'

கண்டி.



Minister } 081 2385373 081 2387384
Mobile } 071 6875030
Fax } 081 2387384

Secretary } 081 2384173 081 4929446
Fax } 081 2387410

ANUSHIA SIVARAJAH J.P.
MINISTER

Ministry of Industries, Sports, Women Affairs, Rural Development, Estate Infrastructure Development, Hindu Cultural, Youth Affairs and Education (Tamil)
CENTRAL PROVINCIAL COUNCIL

My Ref. Your Ref. Date

சமூக, கலாசாரப்பரப்புகளில் உன்னத சேவையாளர்

மணிவிழா காணும் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் சேவை, சமூக கலாசாரப் பரப்புகளில் விரிந்து பரவி சமூக நகர்விற்கு உந்துசக்தி அளித்து வரும் ஓர் உன்னத சேவையாகும்.

தமிழ்த்தொண்டும், சமூகத்தொண்டும் முனைவரது சமயத்தொண்டுடன் சால்புற இணைந்து தொடர்ந்தும் பணிசிறக்க வாழ்த்துகிறேன்.

அனுஷியா சிவராஜா

கௌரவ அமைச்சர்

கல்வி தமிழ், இந்து கலாசார அமைச்சு, மத்திய மாகாணம்





திருமதி. விஜயகலா மகேஸ்வரன், பா.உ.
பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்.
விஜயகலா மகேஸ்வரன் மஹத்மிய ப.உ.
පාර්ලිමේන්තු මන්ත්‍රී, යාපනය දිස්ත්‍රික්කය.
Mrs. Vijayakala Maheswaran, M.P.
Member of Parliament, Jaffna District.

தொலைபேசி
දුරකථන
Telephone
+94 11 2473461
+94 11 2360679

தொலைநகல்
ෆැක්ස්
Fax
+94 11 2478732
+94 11 2360679



நீடு வாழ்வீர்! சைவத்தமிழ்ப் பணி புரிவீர்!

ஓனைவர், வாகீச கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்களின் அறுபதாவது அகவை மணிவிழா தொடர்பாக பாராட்டு விழா, மணிவிழா மலர் வெளியீடு நடைபெறுவது பெரும்மகிழ்ச்சியைத் தருகிறது.

அன்னார் ஒரு கல்விமான். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மரபுவழி அறங்காவலர். எமது நாடு ஈன்ற சைவத் தமிழ் அறிஞன். ஆற்றொழுக்கெனப் பேசவல்ல மேடைப் பேச்சாளன். நல்ல எழுத்தாளன். கற்றோர் அவர் படைப்புகளை கண்டு வியப்பர். திருமுறைகளைப் பண்ணோடு, உருக்கத்துடன் பாடவல்லவர்.

அன்னார் உடல் நலத்துடன் நீடு வாழ்ந்து, செந்தமிழ் மொழிக்கும், சிவநெறிக்கும் பணியல ஆற்ற ஈழத்துச் சிதம்பர நடேசப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வண்ணம்

ம. விஜயகலா

(திருமதி. விஜயகலா மகேஸ்வரன் பா. உ.)



සමාජ සේවා අමාත්‍යාංශය
சமூக சேவைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL SERVICES

எமது இல. MSS/
My No. :
உமது இல.
Your No. :
திகதி : 12.02.2013
Date

வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலை தமிழ் விரிவுரையாளருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A.Ph.d அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலருக்குச் செய்தியினை வழங்க எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

கல்விக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த கலாநிதி கனகசபாபதி நகேஸ்வரனின் அளப்பரிய கல்விச் சேவையால் உயர்ந்த கல்விமான்கள் பலர். எளிமையான தோற்றமும், எல்லோருடனும் இனிமையாகப் பழகும் பண்பும் இவரது கல்வி உயர்விற்கு மேலாக அணி சேர்க்கும் அணிகலன்களாகும். சிறந்த கல்விமானாகவும், சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் நயினைத் தாய் ஈன்ற மாணிக்கமாகக் கல்விக்கு முத்தாக ஒளிருவது எமக்கெல்லாம் பெருமையளிப்பதாக அமைகிறது.

கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் மேலும் சிறப்புடனும், நீண்ட ஆயுளுடனும், சிறந்த மனவுறுதியுடனும் மேலும் கல்விமான்கள் பலரை உருவாக்கவும், எம் நாட்டுக்கு அறிவொளி ஏற்றவும் எல்லாம்வல்ல நயினை சிறீநாகபூஷணி அம்மன் அருளை வேண்டி எமது நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் மணிவிழா சிறப்புறத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. திருமதி இமெல்டா சுகுமார்,
செயலாளர்.

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

ஆன்மிக சேவையிலும், கல்விச்சேவையிலும் அரும்பணியாற்றுபவர்



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

ஆன்மீக சேவையிலும், கல்விச் சேவையிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அரும்பணி ஆற்றிவரும் இவரை எல்லோரும் நன்கு அறிவர். இசையோடு ஆன்மீக சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள் என்பவற்றை நடத்துவதில் சிறப்புடையவர். நிறைந்த குரல்வளம் கொண்ட இவரின் இசைச்சொற்பொழிவுகள் கேட்பவர் மனதை ஈர்க்கும்.

எமது திணைக்களத்தின் செயற்திட்டங்கள் பலவற்றுள் பங்கெடுத்தவர். குறிப்பாக, இந்து அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவும் வளவாளர் குழாமில் ஒருவராக இருந்து தனது பங்களிப்பை நல்கி வருகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய, இவ்வுலகில் பிறந்து அறுபது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து மணிவிழா நாயகனாக விளங்கும் இவர் மேலும் பல காலம் சீரும் சிறப்புடன் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன். இவரது சமய சமூக பணிகள் மேலும் சிறப்படையவும் அனைத்து நலனும் பெற்று நீண்டகாலம் வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

சாந்தி நாவுக்கரசன்

(பணிப்பாளர்)



பல்லாண்டு பல்லாண்டு வாழ்க



வாழ்க்கையில் தினம் தினம் எத்தனையோ பேர்களைச் சந்திக்கிறோம். எல்லோரும் மனதில் நிற்பதில்லை. ஒரு சிலரை பல தடவைகள் சந்தித்தாலும் அவர்கள் மனதில் பதிவதில்லை. ஒரு சிலரை எப்போதாவது சந்தித்தாலும், அவர்கள் மனதில் சிலையென பதிந்துவிடுவார்கள். ஒரு முறை சந்தித்தாலும் மீண்டும் சந்திக்க வேண்டுமென எண்ணம் வரும் நல்லவர் தான் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள்.

எந்த மேடையில் அவர் அமர்ந்திருந்தாலும் முறுக்காத அவரது எடுப்பான மீசை அவரைக் காட்டிக் கொடுத்துவிடும். ஆற்றோட்டமான அவரது பேச்சுடன் இனிமையான அவரது பாட்டும் கலந்து கேட்போர்கள் மெய்மறந்து போவார்கள். தன் மனது சரியென்று ஏற்றுக்கொண்ட கருத்தைத் தெளிவாக, வெளிப்படையாகச் சொல்லுவதற்குச் சிறிதும் தயங்கமாட்டார்.

அவரது மாணவர்கள் அவரை பெரிதும் போற்றுவதை நான் கேட்டிருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன் கொழும்புக் கம்பன் கழகம் ஆரம்பித்த ஆரம்ப சில ஆண்டுகளில் தனியே இந்திய பேச்சாளர் மாத்திரமே வழக்காடுமன்றம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். அந்த காலகட்டத்தில் கலாநிதி அவர்கள் "என்னிடம் நீங்கள் நமது பேச்சாளர்களையும் இந்த நிகழ்ச்சியில் சேர்த்துக் கொண்டால் அவர்களும் பயனடைவார்கள், நிகழ்ச்சியும் களைகட்டும்" என்று சொன்னது இன்னும் மனதில் நிற்கிறது.

மணி விழாக் காணும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு நல் உடல் நலத்துடன் விமரிசையாக வாழவேண்டுமென எங்கள் வரதராஜ விநாயகரை பிரார்த்தனை செய்து மகிழ்கிறேன்.

அன்புடன்

தெ. ஈஸ்வரன்

தலைவர்,

கொழும்புக் கம்பன் கழகம்.



சைவமும் தமிழும் வளர்க்கும் பெருநிதி

நயினை மண் உவந்தளித்த நன்மைந்தன் நாகேஸ்வரன். கனகசபாபதியும் அவர்தம் வாழ்க்கைத் துணைநலமும் கடைந்தெடுத்த கலாநிதி – இன்னும், வாகீசகலாநிதி அருட்கலைமாமணி எனும் அருஞ்சிறப்புக்களுக்கு அருகதையுடையவனாய் ஈழத்திருநாட்டில் சைவமும் தமிழும் வளர்க்கும் பெருநிதி.

'மகாஜன' வில் வடித்தெடுக்கப்பட்டவன் ஆனதால் என்குலத்தவன்
அவ்வன்னை மடியில் எனக்கு முன்னே தவழ்ந்து மகிழ்ந்தவன்
என்பதனால் எனக்குச் சகோதரன்.

இச்சகோதரனுக்கு இவ்வாண்டில் அகவை அறுபது செம்மொழித் தமிழ் வளர்த்தும் சமயப் பணிக்குத் தன்னை ஆகுதியாக்கியும் ஆண்டுகள் பலவற்றைப் பிறர் நலத்துக்காகத் தந்துவிட்டவர் இவர்.

இத்திருமகன் அகநலமும் மெய்ந்நலமும் நீடித்து நிலைத்திருக்க, அடுத்தவர்கு அர்த்தமுள்ள கைங்கரியங்கள் பற்பல ஆற்றிட எல்லாம் வல்ல இறையருள் கிட்டவென மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

இளமதி சபாலிங்கம்,

கொழும்பு நிருவாக மாவட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர்/ மேலதிகஅரச அதிபர்.



தமிழிலும் சைவசமயத்திலும் ஆழ்ந்தபுலமையுடையவர்

நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மரபுவழி அறங்காவலர்களில் ஒருவரும், சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரும், முனைவர், வாகீச கலாநிதி, அருட்கலை மாணியுமான கனகசபாபதி நாகேஸ்வரன் M.A, Ph.d அவர்களின் அறுபதாவது அகவை நிறைவையொட்டிய மணிவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளமை குறித்து மிக மகிழ்ச்சியடைகிறேன்.

இவர் ஒரு பல்துறை விற்பன்னர். தமிழிலும், சைவசமயத்திலும் ஆழ்ந்த புலமை உடையவர். ஊடகக்கலையினும் தேர்ச்சியுள்ளவர். இவர் தமிழிலே ஒரு சிறந்த எழுத்தாளர்; பேச்சாளர்; கவிஞர்; விவாத மேடைகளில் நன்கு பங்குபற்றுபவர்; பல ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எழுதி வருகிறார்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முதலியனவற்றிலே வேறுவேறு காலப்பகுதிகளில் கடமையாற்றிய பின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே பல ஆண்டுகளாக நன்கு பணிபுரிந்து வருகிறார்.

இவர் ஒரு சிறந்த ஆசிரியர். மாணவர்களுக்கு நன்கு வழிகாட்டி அவர்களின் நன் மதிப்பினைப் பெற்றிருக்கிறார். அவர்களின் ஒரு சாரார் இவரின் மணிவிழாவினை முன்னின்று நடத்தவுள்ளனர். இவர் என்றும் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்னிற்பவர்; நயினை அம்பாளிடத்து மிகுந்த பற்றுள்ளவர்; ஆசிரியர்களை நன்கு மதிப்பவர். ஒப்பீட்டு ரீதியில் என்னிடம் வரலாறு, பல்துறைக் கற்கைநெறி ஆகியவற்றினைக் குறுகிய காலமே கற்றவராயினும் கடந்த சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக என்னிடம் தொடர்பு கொண்டுள்ளார்.

தனது கட்டுரைகள், நூல்கள் சிலவற்றை எமக்கும் அனுப்புவார். என்னுடைய பேரன்புக்குரிய மாணவர்களில் இவரும் ஒருவராவார். எனவே இவருடைய மணிவிழா மிகச் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருள் நன்கு கிடைக்கப் பிரார்த்திக்கிறேன். அறுபது அகலவ மனித வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தினைக் குறிக்கும். ஆனால் அதற்குப் பின்னரும் ஒருவர் விரும்பும் சேவைகளைச் செய்து சிறப்புறவாய்ப்புகள் உள்ளன.

இந்தவகையில் இவர் தொடர்ந்து தமிழ், சமயம், சமூகம் முதலியனவற்றிற்குப் பலதிறப்பட்டகல்விசார் பங்களிப்புகள் செய்து பேராசிரியர் பதவியையும் பெற்றுச் சிறப்படையும் வண்ணம் மனமுவந்த நல்வாழ்த்துக்களைக் கூறுவதோடு, மணிவிழாச் சிறப்பாக நடைபெறவும் இவரின் ஆக்கபூர்வமான பணிகள் மேலும் தொடரவும் இவர் பேராசிரியராக விளங்கவும் எல்லாம் வல்ல நயினை அம்பாள் இவருக்கு மேலும் திருவருள் பாலிப்பாராக!

இங்ஙனம்

அன்புள்ள

பேராசிரியர், இலக்கிய கலாநிதி வி. சிவசாமி

ஓய்வு பெற்ற சம்ஸ்கிருதப் பேராசிரியர், துறைத்தலைவர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

31, 6வது ஒழுங்கை, பலாலி வீதி

கந்தர் மடம், யாழ்ப்பாணம்



நம்பிக்கைமிகுந்த எதிர்காலத்தைக் காட்டுபவர்

தமக்குரிய தனித்துவமான எழுச்சிகளினால், பன்முகமான ஆளுமைக் கோலங்களை வளர்த்து வருபவர் கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள். அவருக்குரிய ஆக்க ஆளுமைப் பலத்தை அனைத்துத் துறைகளிலும் நீட்சி கொள்ளச் செய்யும் புலமை வீச்சும் கொண்டவர்.

"ஆக்க நிரவங்களை உருவாக்குதல்" (Creation of settings) என்பது அவருக்கே உரிய தனித்துவமான இயல்பு. அத்தகைய உருவாக்கல் வழியாக மாணவர்சமூகத்தைத் தொடர்ந்து உயர்வடையச் செய்வதுடன் தமது ஆய்வு முயற்சிகளையும் முன்னெடுத்து வருபவர். பல்கலைக்கழக மாணவரிடத்து நம்பிக்கை மிகுந்த எதிர் காலத்தைக்காட்டுதல் ஆக்க நிலவரங்களை உருவாக்குதலோடு இணைந்துள்ளது.

கருத்துக் கையளிப்பை "ஆற்றுகைக் கலை" யாக நிலை மாற்றம் செய்து வருதல் பிறிதொரு ஆளுமைப் பரிமாணமாகிறது. அதனால் அவரின் பேச்சிலும், எழுத்திலும் கவர்ச்சி நிலையான தனித்துவம் எழுகோலம் பெறுகிறது.

மாற்றங்கள் விரைந்து நிகழ்ந்து வரும் சமகாலச் சூழலில் செவ்வியல் வடிவங்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அவரின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

அவரின் வாழ்வும் வளமும் நெடிது நீண்டு சிறந்து நயம்பல நல்க வாழ்த்துக்கள்.

சபா ஜெயராசா
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்



அறிஞர்; கலைஞர்; கல்வியாளர்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் ஒரு பல்துறை வித்தகர்; பல்கலைக்கழக முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர்; ஆய்வாளர், எழுத்தாளர், சொற்பொழிவாளர்; பண்ணிசைக் கலைஞர்; நூலாசிரியர்; நிபுணத்துவக் கல்வி ஆலோசகர்; வானொலி மற்றும் தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்; சிறப்பு மலர்கள் பலவற்றின் பதிப்பாசிரியர்; பத்திரிகையாளர்; விமர்சகர்; சைவசமய, சமூக ஆர்வலர்; தேசிய மட்டத்திலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் நன்கு அறியப் பெற்றவர்; அறிஞர், கலைஞர், கல்வியாளர் எனப் பல்துறைகளிலும் தடம் பதித்தவர்; நன்கு பிரகாசித்தும் வருபவர். அவரின் பெருமையும் திறமையும் விற்பன்னரும் சொல்லவும் பெரிதே. அவருக்கு இப்பொழுது அகவை அறுபது, மணிவிழாப் பொலிவைக் காணவுள்ளார். அவரை வாழ்க வளமுடன்; வளர்க அவர் சமய, சமூக, கல்விப் பணிகள் என வாழ்த்தி மகிழ்கிறோம்.

இப் பெருமகனார் இற்றைவரை பெற்ற விருதுகள், பட்டங்கள், கௌரவங்கள்; மற்றும் இவர் சார்ந்துள்ள சமய, சமூக. கலை இலக்கிய, பொதுப்பணிமன்றங்கள்; ஆற்றும் பணிகள், தொண்டுகள் என்பன பலப்பல. அவற்றை விரிக்கில் பெருகும் என அஞ்சி ஈண்டு விரிக்காது விடுகிறேன்.

பல்துறைசார்ந்த புலமையும், திறன்கள், வல்லபங்களும் ஒருவரிடம் உள்ளார்ந்த நிலையில் இருந்து விட்டால் மாத்திரம் போதாது; அவைகள் யாவும் வெளிப்பாடு ஆகித் தமக்கும், பிறர்க்கும், சமுதாயத்திற்கும்; நற்பயன்களை நல்குவனவாயும், எல்லோரையும் வாழ்விப்பனவாயும் அமையவும் வேண்டும். அந்த வகையில், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் புலமையும், பல்துறை வித்தகத் திறன்களும் ஆற்றல்களும், மற்றும் சேவையும் பல்கலைக்கழகம் எனும் தந்த கோபுரத்தின் எல்லைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு விடாமல், வெளிச் சமுதாயத்திலும் பிரவாகித்துப் பெருகி, நற்பயன்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

தானங்களுள் சிறந்தது வித்தயாதானம் என்பர் நாவலர்பெருமான். வித்யாதானம் எனும் கல்வியறிவூட்டல்; விழுமியங்களைத் தனிமனிதரிலும் சமுதாயத்திலும் விழித்தெழச் செய்தல்; ஆன்மிக விழிப்புணர்வினை ஏற்படுத்தல் என்பன அறங்கள் ஆகும். வித்தியாதானம், முறைசார்கல்வியை வழங்கும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களுடன் மாத்திரம் எல்லைப் படுத்தப்பட்டு விடாது, வெளிச்சமூகத்துடனும் பரந்த அளவில் அதன் சமய. ஆன்மிக, சமூக, கலாசார, பண்பாட்டு, ஒழுக்க விழுமியங்களின் தேவைகளை உணர்ந்து, மக்களை

வழிப்படுத்தி அவர்களின் வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தி வளம் படுத்துவதிலும், முறைசாராக்கல்வியாக விரிவு பெறவேண்டும். அது காலத்தின் கட்டாயமாகவும் இன்றுள்ளது. இதனை நன்குணர்ந்து செயலாற்றி வருபவர், நண்பர் நாகேஸ்வரன் அவர்கள்.

ஒருவர் தம்மிடமுள்ள செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதும், அதன் வழி பிறர்நலம் ஓம்புதலும் சிறந்த மனித விழுமியப் பண்புகள் ஆகும். கல்வியும் செல்வமே என்பது யாவர்க்கும் தெரிந்ததே. தாம் கற்ற கல்வி; அதன் பயனாகிய அறிவு, திறன், விழுமியங்கள் மற்றும் பெற்ற அனுபவங்கள் என்பவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் போதுதான், வாழ்வில் நிறைவு, அமைதி முழுமை கிடைக்கப்பெறுகின்றன. அவ்வாறு வழங்குதல், ஈகையாகிறது. அது அறம் ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து, அதன்பின்னர் சப்ரகமுவப் பல்கலைக்கழத்தில், மொழித்துறை விரிவுரையாளராகப் பதவி ஏற்பதற்கு முன்னாட், குறுகிய இடைக்காலப் பகுதியில், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்க் கல்வித்துறையில், நிபுணத்துவ ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். அப்பொழுது, தமிழ்க் கல்வித்துறைக்குப் பொறுப்பான பணிப்பாளராக, நான் இருந்துள்ளேன். அவருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பும், பணிபுரியும் சந்தர்ப்பமும், அளவளாவி மகிழும் பாக்கியமும் அஞ்ஞான்று கிடைக்கப் பெற்றேன்.

பொது நிகழ்வுகள் பலவற்றில் அவருடன் இணைந்து பங்குபற்றும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. அப்பொழுது, அவரின் தமிழ்மொழித்திறன், உரைத்திறன், தொடர்பாடல்திறன், இசைத்திறன், கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறன் நகைச்சுவைத் திறன், விவாதிக்கும் திறன், யாவரையும் தன்பால் ஈர்க்கும் திறன் என்பவற்றைக் கண்டும் கேட்டும் இரசித்தும் மகிழ்ந்துள்ளேன்.

சொல்விற்பனமும், அவதானமும்; கவிச்சொல்ல வல்ல நல்வித்தையும்; கல்விப் பெரும் பேறும்; கட்டுரை வன்மையும்; கலைபயில் தெளிவும் பிற பெருமைகளும் இவருக்கு, நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அளித்த அருட்கொடைகள் ஆகும். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் நயினை அருள்மிகு அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. அம்பாளின் திருவருட் கருணை கிடைக்கப் பெற்றவர்.

எனது மகன், கலாநிதி சோ. செந்தில்குமார், சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில், கணனித்துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றபொழுது, அவரை அன்புடன் வரவேற்று, ஆலோசனைகள் கூறி, வழிநடத்தி நட்புடன் அன்பு செய்தவர், கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள்.

ஓர் ஆங்கிலக் கவிவாணர், "The best is yet to be"எனத் தமது கவிதை ஒன்றில் குறிப்பிட்டுள்ளமை, ஆழ்ந்த பொருள் பொதிந்தது. சிந்தனைக்குரியது, இளமையை விடச்

சிறந்த பருவங்கள், ஒருவரின் வாழ்வில் முதுமையும் மூப்பும் ஆகும். சான்றாண்மை ஒளிரும் பருவம். பிறர் பயன்பெற வாழுகின்ற காலப்பகுதி. ஒருவரின் கால வயது மூப்பு எய்துவதைத் தடுக்க முடியாது. ஆயினும், அவரின் மன வயது, என்றும் இளமையோடு இருக்குமாறு அதனை நன்கு பேண, ஒருவருக்கு இயலக்கூடியதேயாகும்.

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பின் சந்ததமும் இளமையோடிருக்கலாம். மன அழகு நிலைக்கும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஔவை வாக்கு. அகத்தின் அழகு, ஆன்மிக அழகு ஆகும். சித்தம் அழகியர் சாந்தம், அமைதி, நற்சிந்தனை, நல்லெண்ணங்கள், நற்செயல்கள், அறிவு, தெளிவு, பொலிவு, அன்பு, கருணை, ஈகை, ஒழுக்கம், தண்ணளி, மகிழ்ச்சி, நிறைவு என்பவற்றை நிரம்ப உடையவர்கள். இத்தகைய தெய்வீக அழகு முதுமைக்கு இனிமை சேர்க்கிறது. மூத்தோரைக் கனம் பண்ணுதல், மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என மதிப்புக்கொடுத்தல், அவர்களின் அன்புக் கட்டளைகளையும் அனுபவ அறிவுப் பரிமாற்றங்களையும் முழு மனதுடன் ஏற்று நிவேற்றுதல், மரியாதை செய்தல் என்பன மனிதப் பண்பாடு ஆகப் பண்டைய காலத்திலிருந்து வளர்ந்து வந்துள்ளது. முதுமை சுவையாகவும் இனிமையாகவும் அமைவது, அவரவரின் தூய்மையான வாழ்க்கை முறையைப் பொறுத்ததேயாகும். ஒவ்வொருவரினதும் செயலின் தன்மைக் கேற்ப, விளைவின் தன்மை அமைவது இறைநீதியாகும். முதுமையைத், தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் அமைத்து, வாழும் போது, உலப்பிலா உவகை, ஆனந்தம், அமைதி, நிறைவு என்பன கிடைக்கப் பெறுவது உறுதி.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள், தமது கல்வி, சமூக நற்பணிகள் மற்றும் நற்காரியங்கள் அனைத்தையும், தங்கு தடையின்றி, மிகவும் சிறப்பாகத் தொடர்ந்து ஆற்றுவதற்கு வேண்டிய சகல வளங்களையும் நலன்களையும், வல்லமைகளையும், ஆயுள் ஆரோக்கியத்தையும், குடும்ப சுகத்தையும் பெற்று; அவரும் அவருடைய குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என்று, எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து, அவர்களை வாழ்த்தியும் நல்லாசிகளை வாழங்கியும் மகிழ்கிறோம்.

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்.

தமிழால் வாழ்க



எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தோன்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்து முதனூற் பொருளுணர்ந்த நல்லோன்
கட்டறுத்து வீடு பெறும்.

இதுதொல்காப்பியச் சூத்திரவிருத்திச் செய்யுள். ஒரு மொழியிலுள்ள எழுத்துவகை, சொல்வகை, பொருள்வகை முதலானவற்றைத் தெளிவுற உணர்ந்து அறிந்தவனிடத்தே இழிவான குணங்களும், செயல்களும் அணுகமாட்டா; அவனுக்கு இலாவகமாக மொழியைப் பயன்படுத்த கூடிய வாலாயம் அமைந்திருப்பதால் மொழிமுட்டு (மொழித்தட்டுப்பாடு) ஏற்படமாட்டாது. இவ்வாறு மொழிசார்ந்த விடயங்களை அறிந்து வாழ்வின் பேருண்மையைத் தெரிந்து கொண்டவன், வினையின் நீங்கி விளங்கிய அறிவினால் பிறவித்தளைகளை அறுத்து, வீடுபேறாகிய பேரின்பப் பெருவாழ்வை எய்த முடியும் என்பது இச்செய்யுளின் உள்ளுறைப் பொருளாகும். எனவே மாதவச் சிவஞான முனிவர் கற்பித்த இக்கருத்தின்படி 'மொழியறிவினால் இறைவனை அடையமுடியும்' என்னும் பயனுறுதி விளங்குகிறது. இதற்கேற்றாற் போலவே தாய்மொழியாகிய தமிழைப் பயனுறத் தெரிந்து, அதன் இனிமையை மாந்தி, சிறந்ததொரு ஆசானாக, கல்வியாளராக, தமிழறிஞராக, பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளராக, ஆய்வாளராக, எழுத்தாளராக, கவிஞராக, நடிகராக, நாடக வல்லுநராக, இதழாசிரியராக, பத்திரிகையாளராக, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராக – நேர்முக வர்ணனையாளராக – பகுதிநேர அறிவிப்பாளராக, கதாப்பிரசங்கியாக, பட்டிமன்றப் பேச்சாளராக – நடுவராக, சிறந்த சொற்பொழிவாளராக, மொழிபெயர்ப்பாளராக, இசைக்கலைஞராக, சமூக – சமய சேவையாளராக, தமிழ் – ஆங்கிலம் – சிங்களம் ஆகிய மும்மொழிப் பாண்டித்யமுடையவராக, அகில இலங்கைச் சமாதான நீதவானாகப் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தும் நாடறிந்த நல்ல மனிதராகப் புடமிடப்பட்டு விளங்குபவர்தான் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்றார் வள்ளுவப் பெருந்தகை. மரம் கனிகளால் அறியப்படுவது போலவே கலாநிதி நாகேஸ்வரன் அவர்களும் அவர்தம் செயல்களாலும், அறிவின் மாட்சியாலும் இலங்கைத்

தமிழ் கூறும் நல்லுலகத்தோர் மத்தியில் நன்கு மகிமையுடன் அறியப்பட்டவராகத் தம்மை உயர்த்திக் கொண்டுள்ளார். ஆழிக்கடல் நடுவில் அமைந்த அற்புதமாய் அன்னை நாகபூஷணி கோயில் கொண்டமர்ந்ததும், மணிமேகலைப் பெருங்காப்பியம் போற்றும் மணிபல்லவம் என்னும் சிறப்பு மிக்கதும், இலங்கைத்தீவின் நால்வகைச் சமயத்தவர்க்கும் இடந்தந்து சமய சமரசத்தின் ஊற்றாக இன்றும் சிறந்து நிற்பதும் ஆகிய நயினைதீவுச் சிற்றூர்தான், ஆசான் நாகேஸ்வரன் அவர்களின் சொந்தவூர் பிறந்தவூர். அவர் மேழிக்குல மேன்மையும், மேன்மைகொள் சைவநீதிப் பெருமையும் விளங்குகின்ற குடும்பத்தினர். அன்னை நாகபூஷணி அருளாட்சி செய்யும் ஆலய அறங்காவலர் மரபினர். பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் நாகம்மையின் சேவடியே சிறந்து நின்ற சக்தி உபாசகர். தந்தையார் கந்தசாமி கனகசபாபதி அவர்கள் விழுமியம் தவறாத மாண்பினர். கல்வியிற் சிறந்தவர்; 'அருள் மாமணி' எனப்போற்றப்பட்டவர். தாயார் கோகிலாம்பாள். 'வித்துவாட்டி' யாய் விளங்கிடும் கவிஞர். உயர்குடித் தோன்றலான சுந்தரம்பிள்ளை தம்பதியரின் மகள். நாகேஸ்வரன் அவர்கள் குடும்பத்தில் மூத்தபிள்ளை. நவமணிகளெனப் பிறந்த மக்களைத் தவமணிகளாக்கி வாழச் செய்தனர் பெற்றோர். இரண்டு தம்பியரும் ஆறு தங்கைகளும் நாகேஸ்வரப் பெருமகனாரின் உடன்பிறப்புகள். தங்கையரிருவர் நாவலப்பிட்டி நகரில் தத்தம் குடும்பத்துடன் வாழ்கின்றனர். ஏனையவர்களும் பெற்றோர்களும் கனடாவில் வாழ்கின்றனர். ''நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'' என்ற வாசகத்தின் இலக்கணமானது 'வாகீசகலாநிதி' பிறந்தகம்.

இவருக்கு நயினை மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி சின்னக் கதிரேசன் பாடசாலை ஆகியன ஆரம்பக்கல்வியை வழங்கின. இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பெறும் பேற்றினை இறையருள் கூட்டியது. அங்கு நல்லாசிரியர்கள் பலரது உறவு விரிந்தது. ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்த திரு. ச. விநாயகரத்தினம் அவர்களும் குருவாயிருந்து அங்கு வழிகாட்டினார். சமீபத்தில் அன்னாரது பவள விழாச் சிறப்புறக் கொண்டாடப் படுவதில் முக்கிய பங்களிப்பு நல்கித் தன்னுடைய குருபக்தியை நாகேஸ்வரன் அவர்கள் வெளிக்காட்டியுள்ளார். மகாஜனாவில் க. பொ. த. உயர்தரத்தில் பயின்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது அணியைச் சேர்ந்த மாணவர்களில் ஒருவரானார். அங்கு தமிழ்ப்பாடச் சிறப்பு நெறியில் பயின்று, ஈழத்தின் துறைசார்ந்த விற்பன்னர்களான பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, ஆ. வேலுப்பிள்ளை, அ. சண்முகதாஸ் போன்றோரிடம் கல்விபெறக் கூடிய பாக்கியம் கிட்டியது. தனது திறமைகளை வெளிக்காட்டக் கூடிய புலமைசார் களமாகப் பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்திக் கொண்டார். சிறப்புக் கலைப்பட்டதாரியாக 1979ஆம் ஆண்டு வெளியேறினார். இரண்டாம் வகுப்பின் உயர் சித்தி அவருக்குக் கிடைத்தது. 1988இல் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் முதுகலைமாணிப் பட்டத்தையும், (யாழ்ப்பாணம்) 2008 இல் பேராசிரியர்கள் சி. பத்மநாதன் க. அருணாசலம் ஆகியோரின் மேற்பார்வையில் ''தமிழில் சுதேச மருத்துவ இலக்கியங்கள்'' பற்றியாராய்ந்து கலாநிதிப் பட்டத்தினையும் (பேராதனை) பெற்றுக் கொண்டார். நவீன பட்டங்களுடன் மரபுவழிக் கற்றலுடனான 'சித்தாந்த பண்டிதர்' பட்டத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்களது பதவிகளும் பணிகளும் பல்தரப்பட்டவை. 1980இல் 'ஈழநாடு' பத்திரிகையின் உதவியாசிரியராகச் சிலகாலம் பணியாற்றிவிட்டு,

இலங்கை வானொலியில் 1980 –1985 காலப்பகுதியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நேர்முக வர்ணனையாளராகவும், பகுதிநேர அறிவிப்பாளராகவும் கடமைபுரிந்தார். அங்கிருக்கையில் பல்வேறு துறைசார்ந்த நண்பர்கள் வட்டத்தினை வளர்த்துக் கொண்டார். இதற்குப் பின்னர் ஏழாண்டு காலம் (1996 வரை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தற்காலிகத் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவ்வளவு நீண்ட காலம் விரிவுரையாளராகச் சேவை புரிந்த போதிலும், அவரை நிரந்தரமாக்கும் நல்லெண்ணம் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு ஏற்படவில்லை. தமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணிக்காலத்தில் திறமையான மாணாக்கர்களை உருவாக்கும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஒரு சில ஆண்டுகள் சித்தமருத்துவத்துறையிலும் தமிழ் கற்பித்தார். தகுதியும், திறமையும், பன்முக ஆற்றலும் படைத்தவர்களைப் புறந்தள்ளிவிட்டு, ஆற்றல் குன்றியவர்களையும் தமக்கு கும்பிடு போடக்கூடியவர்களையும் கல்வித்துறைக்குள் தள்ளிவிடுவதில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டுக் காரியம் பார்க்கின்ற தன்மையானது எமது சமூகத்தின் சாபக்கேடாக நீடித்து வருகிறது. கலாநிதி நாகேஸ்வரன் அவர்களுக்கு அவர் நம்பியிருந்தவர்களே துரோகமிழைத்தனர். பொறுமையோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் அடிபட்ட மனதில் ஆழப்பதிந்துள்ள மனவடு அவரது நெஞ்சத்தை விட்டகலாநிலையில் 1996 ஆம் ஆண்டுமுதல் நாகேஸ்வரித்தாயின் கருணையினால் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளர் பதவி கிடைத்தது. சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பேறுண்டாயிற்று. தமிழ் மாணவர்களும் வரையறுக்கப்பட்ட அளவில் அவரிடம் கற்றனர். மொழித்துறைத் தலைவராகச் சிலகாலம் பணிபுரியும் நிலையும் ஏற்பட்டது. தற்போது தரம் 1 இனைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளராக விளங்குகிறார். சிங்கள மொழியில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றிருந்தபடியால் இது சாத்தியமாயிற்று. ''இறைவன் ஒருவருக்குக் கொடுக்க நினைத்ததை எவராலும் தடுத்துவிட முடியாது'' என்ற இஸ்லாமியக் கருத்துக்கேற்ப கலாநிதி நாகேஸ்வரன் அவர்களுக்கான கொடை அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

1990களின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்து அசாதாரண சூழ் நிலைகளிலுங்கூட, போர் அபாயங்களின் மத்தியில் பலபட்டிமண்டப நிகழ்ச்சிகளில் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார். அமரர் மதிமுகராசா, ஆசிரியர் குமாரவேல் முதலானவர்களுடன் அவரும் நானும் இணைந்து பட்டிமன்றங்களில் கலந்து கொள்வது வழக்கம். அப்போதுதான் அவருடன் எனக்கு நெருக்கம் ஏற்பட்டது. 'பாட்டுக்கோட்டையார் பாடல்களிலா? கண்ணதாசன் பாடல்களிலா தமிழுணர்வு/ காதல்/ தத்துவக்கருத்துக்கள் முதன்மை பெறுகின்றன?' என்னும் தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன. நடுவர்களாக நம்மில் பலரும் மாறிமாறிப் பணிபுரிவோம். ஒரே இரவில் விசேஷ தளங்களில் மூன்று அல்லது நான்கு நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளோம். நண்பர் நாகேஸ்வரன் அவர்கள், இனிமையான சரீரம் படைத்தவர். மேடைகளில் இசையுடன் பாடி அனைவரையும் கவர்ந்து விடுவது அவரது தனித்துவம். பட்டிமன்றங்களுடன் நிறையச் சொற்பொழிவுகளையும் அவர் ஆற்றியுள்ளார்; ஆற்றிவருகிறார். ஆலயங்களில் தொடர்ச்சியாகப் பல நாட்கள் அவர் உரையாற்றுவார். இடைக்கிடையே மாணவர்களுக்கு போட்டி வைத்து (விடயங்களில்) சிறிய பரிசுகளையும் வழங்கி ஊக்கப்படுத்துவார். சமூகப் பயன்பாடு கருதியதாகத் தமது சொற்பொழிவு அமைய

வேண்டுமென்பதில் அவர் கரிசனை கொண்டிருந்தார். கொழும்பைத் தளமாகக் கொண்டு அவர் வாழ்ந்த காலங்களில் பிரசங்கம், சொற்பொழிவு, இன்னிசை, விமர்சனம், கருத்தரங்கு, ஆய்வு எனப்பலவாறான வாய்ப்புகள் அவரை வந்தடைந்தன. தமது புலமையாலும் மதிநுட்பத்தாலும், தோற்றக் கவர்சியாலும் அனைத்திலும் வாகைசூடியே வந்துள்ளார். மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். வடக்கு மாகாணம் உட்பட மலையகம், கிழக்குப்பிரதேசங்கள், கொழும்புப் பிரதேசம் என அவரது பணிகள் கலைத்துறையிலும் அறிவுத் துறையிலும் விரிவாக்கம் பெற்றன. இந்தியாவின் அலகாபாத் நகரிலும்(1979), மலேசிய நாட்டிலும்(1983), திருச்சியிலும்(2000) நடைபெற்ற சமய இலக்கிய மாநாடுகளில் கலந்து கொண்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் சைவநற்சிந்தனை அருளமுதம், இலக்கிய பேச்சுகள், இந்துசமயப்பேச்சு, சொல்வளம் பெருக்குவோம், கலந்துரையாடல்கள், ஆலயத் திருவிழா நேர்முக வருணனைகள், கதாப்பிரசங்கம் என்றவாறு பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். கொழும்பு தமிழ்ச்சங்கம் உட்பட நாட்டிலுள்ள இந்து ஆலயங்களும் தமிழ்மொழி மூலப்பாடசாலைகளும் அவரை அழைப்பித்து உரையாற்றச் செய்து கௌரவித்து வருகின்றமை கண்கூடு.

கலாநிதி நாகேஸ்வரனின் எழுத்துப் பணியானது 1972 இல் தொடங்கியது. ஈழத்தில் வெளிவந்த – வெளிவருகின்ற ஏராளமான பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் அவரது கட்டுரைகள், விமர்சனங்கள் ஏனைய ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் எழுதிக் கொண்டேயிருக்கிறார். கோமுகி சங்கமம், கலாசுரபி, பராசக்தி, மல்லிகை, செவ்வந்தி, இந்துநெறி, இனமுழக்கம், தமிழ்ஒலி, தேன்பொழுது, ஊற்று, ஆலயமணி, ஜீவசக்தி, உள்ளம் முதலான சஞ்சிகைகளும் ஈழநாடு, உதயன், தினகரன், வீரகேசரி, தினக்குரல் முதலான பத்திரிகைகளும் குறிப்பிடத்தக்கன. வெளிநாடுகளில் வெளிவரும் இத்தகைய ஏடுகளிலும் இவரது சில ஆக்கங்கள் (கனடா, இலண்டன்) பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் கலாசுரபி(1979), தடுத்தாட்கொண்ட புராணம் பாடநூல் (1987), சிவதத்துவமலர் (1996), சத்திதத்துவமலர்(1996), நவநாதம் (1998), பக்திமலர் (2004), இலக்கியக் கட்டுரைகள் (2006) அறுபத்துநான்கு கலைகளும் கலையாயக்கத் திறன்களும் (2004) முதலான நூல்களுக்குச் சொந்தக்காரர் இவர். பலநூறு கல்வெட்டுகளை உறவினர்களுக்காகவும் ஊரவர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் உருவாக்கித் தந்தவர். எழுத்தும் பேச்சும் அவரிரு கண்களெனக் கொண்டு வாழ்பவர். கொடுமை கண்டு பொங்கி எழும் குணம் கொண்டவர். அநீதியை வேரறுக்கும் ஆவேசமனம் படைத்தவர். தன்வாழ்வில் முடிந்தவரை தமிழ்மொழிக்கும் இந்து சமயத்துக்கும் மட்டுமல்லாது எல்லாமனிதர்களையும் நேசிக்கத்தக்கதாக மனிதகுலத்துக்குப் பணி செய்வதே கடனெனக் கருதி உழைப்பவர். பல்வேறு சமூக – சமய – இலக்கிய நிறுவனங்களுடன் தொடர்பு வைத்திருப்பவர். அவை சார்பில் கற்றலோடும் கலையோடும் தொடர்புடைய விரிவுரைகளை ஆற்றுபவர். நல்லையாதீனம், பருத்தித்துறை சாரதா ஆச்சிரமம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அகில இலங்கை கம்பன்கழகம், யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாசார அமைச்சின் கலைக்கழகம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாமன்றம், யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச்சங்கம், Sri Lanka Foundation Institute (S. L. F. I) இந்து சமய கலாசார அமைச்சு, திணைக்களம் ஆகியவை இவருடைய பணியை உவந்தேற்றுக் கொண்ட சில நிறுவனங்களாகும்.

கலாநிதி கனக. நாகேஸ்வரன் அவர்களுக்கு 2009ஆம் ஆண்டளவில் இருதய நோய் காரணமாக Bypass சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தேவி நாகபூஷணியின்னருளால் தப்பிப்பிழைத்து இன்று பழைய துடிப்புடன் இயங்கி வருகிறார். தற்போது பம்பலப்பிட்டியில் வசித்துவரும் இவருக்குக் காலந்தோறும் கௌரவப்பட்டங்கள் பல அளிக்கப்படுள்ளன. வாகீச கலாநிதி, அருள்மொழிச் செல்வர், செஞ்சொல் வாரிதி, இன்னிசைச் சொல்வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக்கலைஞானி சொற்பேராழி, அருட்கலைமாமணி ஆகியவை இவற்றுட்சிலவாகும். எல்லாப் பட்டங்களையும் பணிவுடன் ஏற்றுக்கொண்டபோதிலும் தான் 'நல்லதொரு ஆசிரியன்' என தம் மாணவர்களால் பாராட்டப் பெறுவதையும், தனக்குக் கற்பித்தோர் "எனது மாணவன் நல்லவனாக வல்லவனாக விளங்குகின்றான்" எனக்கூறிப் பெருமை கொள்வதையும் சிறந்த பட்டங்களாகக் கருதுகிறார். எல்லாவற்றிக்கும் மேலாக அன்னை நாகபூஷணியின் அடியவன்; அவளது ஆலய அறங்காவலுக்கு உரியவன் என்பதை இணையிலாப் பெரும் பேறாகக் கருதுகிறார்.

நண்பர் நாகேஸ்வரன் என்னும் பன்முகவித்தகருக்கு அறுபது அகவைகள் நிறையப் பெற்று மணிவிழாக் கொண்டாடப்படவுள்ள செய்தியறிந்து உளப்பூர்வமாக மகிழ்ச்சியடைகிறேன். அவரது மாணவர்களும், நண்பர்களும், உறவினர்களும் ஒன்றுகூடி இக்கைங்கரியத்தில் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். இந்த மணிவிழாவினையொட்டியதாய் மணிவிழா மலர் ஒன்றும் வெளிவரவுள்ளமை பெருஞ்சிறப்பாகும். அதற்காகப் பழைய நினைவுகளில் மதித்து எழுதப்பட்ட கட்டுரையே இதுவாகும். "கொண்டல் மாமழைபொழிந்த நுண்பல்துளியினும் வாழிய பலவே" என்ற புறநானூற்றுப் புலவனைத் துணைக்கழைத்து கலாநிதி நாகேஸ்வரன் அவர்களை வாழ்த்துகிறேன். அவரது உடலும் உள்ளமும் மேலும் மெருகேற இறையருளைப் பிரார்த்திக்கிறேன். தமிழை வாழவைக்கும் அவரைத் தமிழ் வாழ வைக்கும். அன்னை ஸ்ரீ நாகபூஷணியாள் அவருக்கும், அவரது துணைவியார் இரதிமலர்தேவிக்கும், மூன்று பிள்ளைகள் பிரகாஷ், குருபரன், தாரணி ஆகியோருக்கும், உறவினர்கள் – குடும்பத்தவர்கள் ஆகியோருக்கும் துணைநின்று காப்பாள் என்ற நம்பிகை எனக்குண்டு.

அன்புடன்,

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு



அறிவுத் துறைக்குக் காத்திரமான பங்களிப்பை நல்கும் ஒருவர்

வாகீச கலாநிதி டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது மணிவிழா மலருக்கு இவ்வாழ்த்துரையை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரும் தமது மொழி, சமயப்பணிகளால் பல்வேறு பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவருமான கலாநிதி நாகேஸ்வரன் தமிழ்கூறும் நல்லுலகிற்கு நன்கு பரிச்சயமானவர். அவரது சமயச் சொற்பொழிவுகள் ஆழமும், அழகும் பொருந்தியனவாகப் பலரது பாராட்டையும் கௌரவிப்பையும் பெற்றுள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் மூன்று பங்குகளை ஆற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். முதலாவது அவர்கள் தமது துறை சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டு புதிய அறிவினை உருவாக்க வேண்டும். அடுத்தது தாம் கண்டறிந்தவற்றை எழுத்தாலும் பேச்சாலும் பல்கலைக்கழகச் சமூகத்தினர்க்கும் ஏனையோருக்கும பரவலாக்க வேண்டும். இறுதியாக, தமது துறைசார்ந்த ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு தமது மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இவை மாத்திரமின்றி இன்று பல்கலைக்கழகச் சமூகத்தின் தேசிய பிரச்சினைகளின் தேர்வுக்குத் தமது பங்களிப்புகளையும் நல்க வேண்டுமேன எதிர்பார்க்கப்படுகிறது.

கலாநிதி நாகேஸ்வரன் ஒரு பல்கலைக்கழக ஆசிரியன் ஆற்றவேண்டிய பணிகளையும் கடமைகளையும் செவ்வனே ஆற்றி வருகின்ற ஒருவராவார். அத்துடன் சமூகம் சார்ந்த பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவதன் மூலம் தனது சமூகக் கடமைகளையும் நிறைவேற்றி வருகிறார். தமது கலாநிதிப்பட்டத்துக்கான ஆய்வை இன்று நூலாக வெளியிடுவதன் மூலம் அறிவுத்துறைக்கு அவர் காத்திரமான பங்களிப்பை வழங்குவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இவ்வாண்டில் தமது அறுபதாவது அகவையில் கால் பதித்துள்ள கலாநிதி நாகேஸ்வரன் இன்னும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து தேசத்துக்கும் சமூகத்துக்கும் பணியாற்ற வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

தை. தனராஜ்

முதுநிலை விரிவுரையாளர், கல்விப் பீடம்
திறந்த பல்கலைக்கழகம், இலங்கை



தலைசிறந்த மாணவன்

அன்பர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், முதுநிலை விரிவுரையாளர் அவர்களின் மணிவிழா மலரில் இடம் பெறும் வண்ணம் இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்தரவகுப்பு மாணவனாக இருந்த காலந்தொட்டு அவரது பல்துறைசார்ந்த வளர்ச்சியைக் கண்டு நான் பூரிப்படைந்திருக்கிறேன். அக்காலத்திலேயே கல்விச்செயற்பாடுகளில் முன்னிலை பெற்றிருந்ததோடு பொறுப்புணர்ச்சியும் சிறந்த தலைமைத்துவ இயல்பும் கொண்டு விளங்கிய அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பகாலப் பகுதியில் கற்ற தலைசிறந்த மாணவர்களுள் ஒருவர். தமிழைச் சிறப்புப் பாடமாக வரித்துப் பயின்று, புகழ்பூத்த பேராசிரியர்கள் பலரின் அன்புக்குரிய மாணவராகத் திகழ்ந்தவர். பின்னர் உதவி விரிவுரையாளராகப் பதவி ஏற்று வளர்ந்து தற்போது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகத் (தரம் 1) திகழ்கிறார். முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்.

நயினை ஸ்ரீ நாகபூஷணித் தாயாரைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கும் பேறு பெற்றவர். அவ்வன்னையின் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர். சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் 'ஞானச்சுடர்' போன்ற சஞ்சிகைகள், பத்திரிகைகள், கும்பாபிஷேக மலர்கள் போன்றவற்றுக்கு ஆழமான கருத்துக்கள் கொண்ட கட்டுரைகளைத் தந்துதவும் அரிய எழுத்தாளர். சமயம், இலக்கியம் சார்ந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தும் தலை சிறந்த பேச்சாளர். 'வாகீச கலாநிதி', 'அருட்கலைமாமணி' போன்ற பல பட்டங்களைப் பெற்றவர்.

கற்றல், கற்பித்தல், ஆசிரியர்களைப் போற்றுதல், மூத்தோர்களை மதித்தல், இறைபக்தி ஆகிய உயர்ந்த பண்புகளைக் கொண்ட அவர் பல்லாண்டு காலம் நலமே வாழ்ந்து சமயப்பணியும் தமிழ்ப்பணியும் செய்யவேண்டுமென இறையருளை வேண்டி வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன். அவருடைய பணியைப் போற்றி மணிவிழா மலர் வெளியிடும் மலர்க்குழுவினருக்கு எனது பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

சு. விநாயகமூர்த்தி
ஓய்வு பெற்ற சிரேஷ்ட போதனாசிரியர்,
ஆங்கிலத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



"வாழ்க! பல்லாண்டு"

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

(திருமந்திரம்)

உலகில் மனிதர்களாகப் பிறப்பது பெருமையில்லை. மனிதர்களாக வாழ்வதுதான் பெருமை. தனது சொல்லாலும், செயலாலும், மறந்தும் பிறன் கேடு சூழாது, பிறந்த நாட்டிற்கும் மொழிக்கும், சமயத்திற்கும் தொண்டு செய்து வாழ்பவர்களைத்தான் உலகம் தனது நினைவிலே பதித்திருக்கும்.

அப்படி நினைவிலே நிற்கும் நல்ல மனிதர்தான் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். திருமுறையில் பற்று, குரல்வளம், பேச்சாற்றல், மனிதநேயம், நகைச்சுவை, அன்பு எனும் அனைத்தாற்றல்களின் கலவை கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். தான் பிறந்த மண்ணிடத்தும் அன்னை நயினை நாகேஸ்வரியிடமும் தளராத பாசமும் பக்தியும் கொண்டவர். தனது நகைச்சுவையால் தன்னைச் சுற்றியுள்ளவர்களைத் தன்வசம் ஈர்த்து மகிழ்ச்சியை மனங்களில் விதைப்பவர்.

மணிவிழாக் காணும் கலாநிதி க. நாகேஸ்வரன் நயினை அம்பிகையின் அருளால் பற்பல சிறப்புக்களும் பெற்று, ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரோடி நீடு வாழ வாழ்த்துகிறேன்.

நலமே தழைக!

'கலாபூஷணம்' வித்துவான், வசந்தாவைத்தியநாதன்



இவருக்குத் தெரியாத கலை இல்லை

"தா பிதா குரு தெய்வம் – அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்

எனும் பாரதியார் வாக்கினை மெய்ப்பித்து வாழ்ந்து காட்டுகின்ற பண்பாளர். தந்தையையும் தாயையும் குருவையும் தெய்வமாகப் போற்றி வாழ்பவர். மற்றவர்களுக்கு அப்படியே வாழ வேண்டும் எனத் தான் சென்று சொற்பொழிவு நிகழ்த்தும் இடமெல்லாம் தவறாமல் பிரசாரம் செய்பவர். தான் ஆசிரியர் தொழில் புரிவதால் தன்னை குருவென மாணவர் மதிக்க வேண்டும் என்பதுடன் நில்லாமல் அவர்களுக்கு முன் மாதிரியாகத் தன் குருமாரைத் தான் மதித்து வணங்கி வாழ்பவர்.

சிறந்த செந்தமிழ்ச் சொல்லாற்றலும் இசைவன்மையும் நாடகப்புத் திறனும் உள்ள இவர் முத்தமிழ் வித்தகராக விளங்குகிறார். இவருக்குத் தெரியாத கலை இல்லை என்று சொல்லக் கூடியதாகப் பல்கலை வல்லுநராக விளங்குகிறார். எந்த மேடையிலும் தன் சொல்வன்மையினாலும் இசைத் திறனாலும் சபைபோயரைக் கவரவல்லவர். பட்டிமன்றங்களிலும் வாதிடும் வாக்குத்திறம் வாய்க்கப் பெற்றவர்.

மகாஜனக் கல்லூரியில் புகழ் பெற்ற நல்லாசான்களிடம் கல்வி பயின்றதால் மகாஜனன் என்னும் பெருமைக்குரிய பண்புகள் அனைத்தையும் கொண்டவராக விளங்குகிறார். நயனை ஸ்ரீ நாகபூஷணி அம்மையின் பரம்பரை அறங்காவலராக உள்ள இவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மையைத் தன் உயிரினும் மேலாகப் போற்றி வாழும் நல்வாழ்வுடையவர். எந்த நேரமும் புன்முறுவல் பூத்த முகத்துடன் எல்லாருடனும் அன்பான அணுகுமுறையில் பழகும் தனித்துவமான பண்பாளன். ஆதலால் இவருக்கு எல்லாரும் நண்பர்களே. எதிரிகள் என்று எவருமே இல்லாதவர். இவரைக் காணும் தோறும் எனக்கு பின்வரும் குறட்பாக்கள் ஞாபகத்திற்கு வரும். அக்குறட் பாவிற்கான இலக்கணமாக வாழ்கிறார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்
வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு
தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

இவர் எனது பவள விழாவின் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய பெருமைக்குரியவர்.

ச. விநாயகரத்தினம்

ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம்.



கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் மணிவிழா அகவையில் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க

உண்மைக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக, கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன், அடுத்தவர்களை மதித்துப் பாராட்டும் பண்புடன், பெருமையுடனும் தன்னம்பிக்கையுடனும் பேச்சு மற்றும் தொடர்புத்திறனுங் கொண்ட கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், மாணவ சமுதாயத்திற்கும் மற்றைய எல்லோருக்கும் உதாரண கல்விமானாக வாழ்ந்து காட்டி வருகிறார். அவர்களின் மணிவிழாவை ஒட்டி நாங்கள் அவரையும், அவரின் குடும்பத்தாரையும் சீருஞ் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

நன்றி.

அன்புடன்

அத்தான், அக்கா குடும்பத்தினர்

(பா. கணநாதன் குடும்பத்தினர்)



அருந்தமிழ் ஆசான்

இயல்பாய் இனிமையாய் அருந்தமிழை ஈந்து உயர்வாய் உன்னதமாய் மனதில் நிறைந்த கல்விமானும் சொற்பொழிவாளரும், கலைஞரும், நூலாசிரியருமான மணிவிழாக் காணும் பேரன்பிற்குரிய டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை, அறுபதாவது அகவையில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில் மனமார்ந்த வாழ்த்துக்களை அவருக்கும், அவரின் குடும்பத்தாருக்கும் தெரிவிக்கிறோம். மேலும் பற்பல பிறந்த நாட்கள் கொண்டாடவும் புதிதாய் மேன்மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி.

அன்புடன்

மகள், மருமகன், குழந்தை விகாசினி

(முகுந்தன் குடும்பத்தினர்)



அன்னை நாகேஸ்வரியின் தனிப்பெருங்கருணையுடன் வாழ்க!



பெருமை மிகு நயினைப் பதியிருந்து அரசாளும் அன்னை நாகேஸ்வரி, தன் ஆலயத்தின் அறங்காவலன் என்பதன்றி, தினமும் தனைப்போற்றித் துதி செய்யும் தன் பரமபக்தன் என்பதற்காகவும் தங்களிடம் காட்டும் பெருங்கருணையும், வெள்ளைக்கமலத்து மட்டுமன்றி, தனை வணங்கும் அடியவரின் உள்ளக் கமலத்திலும் வீற்றிருந்து, அறிவையும் ஆற்றலையும் அள்ளி வழங்கும் சகலகலாவல்லியாம் அன்னை கலைவாணியின் பேரருளும், கேட்போரைப் பிணிக்கும்வகை, ஆன்மீக இலக்கிய உரைகளை இலகு நடையில் தேன்கலந்த சுவையுடனே, செவிவழியே பாய்ச்சும் திறனுடன், பண் இசையை வெகு சீர்மையுடன் பாடவல்ல நாவன்மையும், பார்ப்பவர்கள் உள்ளத்தைக் காந்தமெனக் கவர்ந்து நிற்கும் சாந்தம் தவழ் புன்னகையும் சேர்ந்தமைந்த மலரன்னஅந்த மதிவதனமும்.

கற்றவரோ அன்றி மற்றவரோ, பொருள் பெற்றவரோ அது அற்றவரோ என்று பார்க்கும் பேதமெதுவும் சிறிதும் இன்றி யாவருடனும் சமநோக்கில் பழகுகின்ற அந்த பரந்த நல்மனப்பான்மையும், வானொலியும் காணொளியும் உள்ளீர்க்க விளைகின்ற வன்மையும் தூய நற்தமிழினிலே, சீரிய நூல்கள் பல யாத்தளிக்கும் தன்மையும் என இவை யாவையுமே ஒருங்கமைந்து உயர்வுற்று விளங்கும் நீங்கள் இன்று, அகவை அறுபதெய்தி, அறிஞரெலாம் அகம் மகிழ்ந்து விழா எடுக்கும் இவ்வேளை, மென்மேலும் வளம் பெற்று, மேன்மைமிகு ஆசிரிய செல்வங்கள் பலரை உருவாக்கும் பேராசிரியராய் மலர்ந்து சிறந்திட வாழ்த்தி அமரர் இடர் தீர்க்கவென அன்று அரனின் அருட்பிரகாஷ ஜோதியிலே தோன்றிய குருபரன், நல்லைத்திருக்குமரன், தனது அருளால் இத்தாரணியை காத்து நிற்போன் அவன் பதம் பணிந்து நிற்கிறோம்.

இவ்வண்ணம்

செ. நாகரத்தினம் குடும்பத்தினர்.

சகலன்



எல்லோருடனும் சுமூக உறவைப் பேணவிழையும் இனியன்



நயினாதீவு, சக்தியின் அருள் பெற்றதீவாக விளங்குவதோடு, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நயினாதீவின் வரலாறு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துடனும், மணிமேகலையின் வரலாற்றுடனும் பின்னிப்பிணைந்துள்ளது. ஆன்மிகப் பொலிவையும், இலக்கியச் சிறப்பையும் கொண்ட இத்தீவில் பிறந்த கல்விமானும், ஊடகவியலாளரும், சொற்பொழிவாளரும், கலைஞரும், நூலாசிரியரும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மரபுவழி பரம்பரை அறங்காவலர்களுள் ஒருவருமான முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் சமய, சமூக, இலக்கிய ஆய்வுப் பணிகளைப் பாராட்டியும் வாழ்த்தியும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக சமூக, விஞ்ஞானமொழிகள் பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவுசெய்த பட்டதாரி மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 60ஆவது அகவை மணிவிழாவின் போது வெளியிடப்படும் மணிவிழாச் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

மென்மையான பேச்சு, பண்ணிசையுடன் திருமுறை ஓதுதல், எவரையும் நோகடிக்கவிரும்பாத செயல்கள், திறமைகளைக் கண்டவிடத்துப் பாராட்டி ஊக்கமளிக்கும் பெருந்தன்மை, சமய – இலக்கிய உலகில் நிறையவே சாதிக்க வேண்டுமென்ற துடிப்பு, ஓயாத உழைப்பு என்பன முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை இனங்காட்டும் அடையாளங்களென யான் கருதுகிறேன். தனது அறிவாற்றலினால் அவருக்குக் கிடைத்த கௌரவப் பட்டங்களோ ஏராளம். அவற்றுள் "வாகீசகலாநிதி" என்ற சிறப்புப் பட்டம், இலங்கையில் இவருக்கு மட்டும் கிடைத்துள்ளதைப் பெருமையாகக் கொள்கிறேன். அந்தவகையில் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் பாராட்டுதற்குரியவர் மாத்திரமன்றிப் போற்றுதற்குரியவருமாவார்.

எதையும் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்பவரும், காரிய சித்தியில் கண்ணாக இருப்பவரும், எல்லோருடனும் சுமுக உறவைப் போண விழையும் இனியமென்மையான முனைவர்

கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் ஆன்மிகப் பணியிலும், இலக்கியப் பணியிலும் இன்னும் பலசாதிக்க வேண்டுமென எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரமாண்டநாயகி அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைக் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி வணங்கிப் பிரார்த்திப்பதோடு, இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற மனதார வாழ்த்துவதுடன் இந்நிகழ்வில் வெளியிடப்படுகின்ற மணிவிழாசிறப்புமலர் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் திறனாய்வுப் பார்வையின் ஆழத்தை அறிய உதவுவதோடு சமய – இலக்கிய உலகில் நிலையான தடம்பதிப்பதற்கு இன்னொரு படிக்கல்லாக அமையும் என்று நம்புகிறேன்.

நத்தம் போற்கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது

வாழ்க வளமுடன்

அம்பலவாணர் சர்வானந்தராஜா

இணைப்பாளர்: நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிருத்திச் சங்கம்.
அறங்காவலர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி தேவஸ்தானம்.



பல்துறை ஆற்றலின் பரிமளிப்பாளர்

அகவை அறுபதில் மணிவிழாக்காணும் என் அன்பு மைத்துனர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு எம் குடும்பத்தாரின் இனிய நல்வாழ்த்துக்கள். நயினாதீவில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் கற்கும் காலத்தில் இருவரும் ஒரே வகுப்பில் ஒரு சாலை மாணாக்கர்களாக இருந்த காலம் மறக்க முடியாதவை. தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனாவுக்குச் சென்று அங்கு தன் பல்துறை ஆற்றலினால் பொறித்த முத்திரைகள் அவரை ஒரு தலை சிறந்த மாணவனாக இனம் காட்டியது. நயினாதீவில் காட்டிய பல்துறைசார் ஆற்றல்கள் மகாஜனாவில் பரிமளித்து பல்கலைக்கழக மாணவனாக விரிவுரையாளராக கலாநிதியாக வளர்வதற்கு வழிகாட்டின.

சிறந்த இசை ஞானமும் வாயினால் வழுக்கி விழும் சொற்பதங்களும் தங்கு தடையற்ற பேச்சாற்லும் இவரது எழுச்சிக்கு வழி காட்டின. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1974இல் ஆரம்பிக்கப்பட்ட போது முதலாவது அணி மாணவனாகச் சேரும் வாய்ப்புக் கிடைத்து தமிழ்மொழியினை ஒரு சிறப்புப் பாடமாகக் கொண்டு தேறி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். யுத்தம் நிலவிய ஒரு காலகட்டத்தில் வேலையிழந்து உள, உடல், பொருளாதார ரீதியாக நொந்து மனம் வெதும்பிய காலம் ஒரு துன்பியல் நிகழ்வாகும்.

1995 இல் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் அவர் சேகரித்த புத்தகங்களையும் கைவிட்டு தென்மராட்சி ஊடாகப் பயணித்து மலையகத்தை ஒருவாறு சென்றடைந்தார்கள். அங்கிருந்து சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு மொழித்துறை இணைப்பாளராகவும் முதுநிலை விரிவுரையாளராகவும் இணைந்து கொண்டார். முதுகலைமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களையும் பல நூல்களையும் ஆக்கி பேராசிரியராக உயர்ந்து உள்ளமை அவரது ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் கிடைத்த பெருவெற்றியாகும். மும்மொழி ஆற்றலுமுடைய இவர் எடுத்த எடுப்பிலேயே ஒரு பேச்சையோ, பிரசங்கத்தையோ, இசை விருந்தையோ, நேர்முக வர்ணனையையோ நிகழ்த்தக் கூடிய பேராற்றல் மிக்கவர்.

இவரது திறமைகளை உணர்ந்து சமூகம் வழங்கிய கௌரவ பட்டங்கள் எண்ணற்றவை.

அருள்மொழிச் செல்வர், செஞ்சொல் வாரிதி, இன்னிசைச் சொல் வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக்கலைஞானி, சொற்பேராழி, சித்தாந்த

பண்டிதர், அருட்கலைமாணி, வாகீசகலாநிதி எனும் பட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இலங்கை நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவான் என்னும் சேவைப்பட்டமும் வழங்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைசிறந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கீழ்பெற்ற பட்டறிவு இன்று அவரை ஒரு பல்துறை ஆற்றலின் பரிமளப்பாளனாக ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மணிவிழா பவள விழா நூற்றாண்டு விழாக்கள் கண்டு நீடூழி வாழ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்க வளமுடன்.

அன்புடன்

கு. சரவணபவானந்தன், J. P

முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர், வேலணை.

பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்,

நயினாதீவு



அறிவு நுட்பமும், திறமையும், அயரா உழைப்பும் மிக்கவர்

சப்ரகமுவ பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனது இலக்கிய, சமய, சமூக சேவைகளைப் பாராட்டியும், வாழ்த்தியும், கௌரவப்படுத்தியும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் கோலாகலமாகக் கொண்டாடி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவரது பல்துறைப் புலமையானது தமிழ் இலக்கியம், சமயம் ஆகியவற்றினூடாகப் பரிணமித்து ஈழத்திலும், தமிழ்கூறும் நல்லுலகத்திலும் வரலாற்றில் முத்திரை பொறித்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. இவரது அறிவு நுட்பமும், திறமையும், அயரா உழைப்பும் தமிழ்ப் புத்திஜீவிகளினால் என்றும் பாராட்டப்பட்டு வந்துள்ளது. என்பதை யாவரும் அறிவோம்.

கலாநிதி க. நாகேஸ்வரன் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மரபுவழி அறங்காவலராகத் திகழ்ந்த போதும் தனது பல் திறப்பட்ட ஆளுமையினால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறார். இவர் ஒரு கல்விமான் மாத்திரமல்ல, ஒரு கலைஞர், இலக்கியவாதி, சமயச்சொற்பொழிவாளர், வர்ணனையாளர். விமர்சகர், ஊடகவியலாளர், நூலாசிரியர் போன்ற பல்வேறு வேடங்களைத் தரித்துத் தனது சமூகத்தொண்டை வழங்கியுள்ளார். நான் பதில் அரசாங்க அதிபராகக் (கிளிநொச்சியில்) கடமையாற்றிய போது ஆனையிறவு அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் எழுத்தருளவிருந்த திருக்கோவிலுக்கான அடிக்கல் நாட்டுவிழா 1990ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது சமயச்சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டபோது என்னுடன் நேரடியாக அறிமுகமான நட்பு, மேலும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்களாக நீடித்திருப்பதையிட்டு பெருமையடைகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1979ஆம் ஆண்டு 'ஈழத்து நவீன தமிழ் காவியங்கள்' என்ற தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், 1988ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்ற இவர் 2008ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார். 1985ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதல்விரிவுரையாளராகவும் யாழ்ப்பாண

சித்த மருத்துவத்துறையிலே தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 1980ஆம் ஆண்டிலிருந்து ஈழநாடு பத்திரிகையின் உதவியாசிரியராகவும் பின்னர் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், பகுதிநேர அறிவிப்பாளராகவும் நேர்முக வர்ணனையாளராகவும் இருந்தமை இவரது ஊடகத்துறை அனுபவத்தைப் பறைசாற்றுகிறது. 1979ஆம் ஆண்டு இந்தியாவிலும் 1983ஆம் ஆண்டு மலேசியாவிலும், 2002ஆம் ஆண்டு இங்கிலாந்திலும், 2004ஆம் ஆண்டு சுவிற்சலாந்திலும் நடைபெற்ற சர்வதேச இலக்கிய சமய மகாநாட்டு மலர்களில் இவரது கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் பூத்துப்பொலிந்து தேமதுரத்தமிழோசை உலகெலாம் பரவியதை, வியாபித்ததை தமிழ்கூறும் நல்லுலகம் மறந்துவிடமுடியாது.

இவர் தனது பாண்டித்தியத்தின் மூலம் யாழ்ப்பாணத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள், கலாசுரபி, தடுத்தாட்கொண்ட புராணம், சிவதத்துவமலர், சத்திதத்துவ மலர், நவநாதம், பக்திமலர், அறுபத்துநான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும், நயினை நாகபூஷணி அம்மன் என்னும் நூல்களைப் பதிப்பித்தும் ஆசிரியராகப் பிரசுரித்துமுள்ளார். இவ்வாறான ஆக்கங்கள் மூலம் அவர் பெற்ற கௌரவப்பட்டங்கள் பற்பல. அவையாவன அருள்மொழிச் செல்வர், செஞ்சொல்வாரிதி, இன்னிசைச்சொல்வேந்தர், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரசக்கலைஞானி, சொற்பேராழி, சித்தாந்த பண்டிதர், அருட்கலைமாமணி, வாகீச கலாநிதி என்பனவாம்.

இவர் சாதாரண சூழ்நிலையில் பிறந்து வளர்ந்துதன் கடின உழைப்பாலும், திறமையாலும் இம்மாதிரியான நல்ல நிலைக்கு வந்தபோதும் தனக்குக் கிடைத்த வாய்ப்புக்களைச் சரியாகவும், சாமர்த்தியமாகவும் பயன்படுத்தி இச்சாதனைகளைப் புரிந்துள்ளார். அது மட்டுமன்றி இவரது தனித்துவமான குணாதிசயங்களும் இரவது வெற்றிக்குப் பின்புலத்தில் இருந்தன. திறமையிலும் பார்க்கத் தன்னைத் தானே கூர்தீட்டித்தயார்ப் படுத்திக்கொண்டதனால் இந்த இலக்குகளை இவரால் நிலை நாட்டமுடிந்தது. இவற்றின் மூலம் தன் பல்துறை ஆளுமையை நிரூபித்துள்ளார். தமிழர் தம் பண்பாட்டுப் பெருமையையும், இந்து சமயத்தொண்டினையும் பாராட்டும் அதேவேளை தமிழுக்கும் சைவத்திற்கும் மேலும் பல நற்பணிகளைச் செய்யவேண்டும். மனைவி, மக்களுடன் தொண்டு தொடரவேண்டும் என வாழ்த்தி அமைகிறேன்.

வாழ்க செந்தமிழ்!
வளர்க நின்தொண்டு!

சொ. அமிர்தலிங்கம்
(அகில இலங்கை சமாதான நீதவான்)
தலைவர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.



ஈழத்தின் தவப் புதல்வர் வரிசையில் இன்றைய தலைமுறைக்கு கிடைத்த அரிய கருநிதியம்

ஈழத்தின் தவப்புதல்வர்கள் பலர் இன்றும் போற்றற்குரியவர்வளாக விளங்குகின்றனர். இவர்கள் வரிசையில் கல்வி, ஆய்வு, சமயம், தமிழ், ஆன்மீகம் ஆகியவற்றின் அரிய கருநிதியமாக நமக்கு கிடைத்திருப்பவர் வாகீச கலாநிதி செஞ்சொற்கோ பேராசான் பேரறிஞர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் என்பது அறிஞர்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துகள் ஆகும்.

ஒரு நல்ல தமிழறிவின் மிக்க மாணவன் கல்விப்புலத்தின் அதி உயர் தரத்தை எப்படி அடையலாம் என்பதை அடைந்து காட்டியதுடன் பல நன்மாணாக்கர்களை ஈழத்தின் பல பாகங்களிலும் கடந்த நான்கு தசாப்தங்களாக உருவாக்கி வரும் பேற்றிற்குரியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், யாழ். பல்கலைக்கழகத்தின் முதல்நிலைத் தமிழ்ச் சிறப்புப் பட்டதாரியாகவும், சிறந்த விரிவுரையாளராகவும், தமிழ் மற்றும் சித்தமருத்துவ துறைகளின் துடிப்பு மிக்க உயர் தமிழ் விரிவுரையாளராகவும் பணிபுரிந்த வாகீசகலாநிதிக்கு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிப்புலம் அரிய வாய்ப்பை நல்கியது. இப்புலத்தின் வடிவமைப்பின், பாடநெறிகளின் பட்டநெறிகளின் பிரதானியாகவும் மொழிப் புலத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றிய காலங்களில் இலங்கையின் நாலா பக்கங்களிலும் இருந்து தமிழ் சிறப்பு மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தை விரும்பிச் சென்றனர். இன்றும் பேராசானிடம் தமிழ் கற்க விரும்பிச் செல்வோர் தொகை ஆண்டுதோறும் அதிகரிக்க அவர் காட்டும் அறிவியல் பாதை மாணவர்க்கு இன்றியமையாததாகக் கருதப் படுகிறது. முதுகலை, கலாநிதி ஆகிய பட்டங்களுடன் மொழியியல் துறைகளின் அதிக பட்டங்களுடனும் மிகுந்த ஆளுமையுடனும் மும்மொழிகளின் சிறப்புகளை தம் திருவாய்மொழியாகவும் ஆய்வு மொழியாகவும் கொண்ட பேரறிஞன் இவர். இவர் பணியாற்றக் கிடைத்த பல்கலைக்கழகங்களும், பயிலக்கிடைத்த மாணவர்களும் பெரும் புண்ணியத்தில் மிகுந்து விளங்கி நிற்றல் காணலாம்.

இவர் ஆய்ந்து எழுதிய ஆய்வின் நூல்கள், சமயம் மற்றும் தமிழ் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் பன்னூற்றின் பாற்பட்டவை. ஈழத்தின் இலக்கிய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகியவற்றின் மறக்க மறைக்க முடியாத படைப்புக்களின் தனயனாக வாகீசகலாநிதி விளங்குவது ஈழத்தின் தமிழ்வளத்தை குன்றிற்றீபமாய் கண்ணுற வைத்தல் காணலாம்.

சமயம் ஆன்மீகம் ஆகியவற்றை வாழ்வின் உயிர் மூச்சாக வாழ்ந்து காட்டி மறு சமயிகளையும் தம்பால், ஈர்க்கும் வல்லமை இவரிடம் காணும் அதிஉயர் சிறப்புகள் எனலாம். "நீறில்லா நெற்றி பாழ்" என்பதை நிலைக்காட்டும் சிவக்கண்ணாடி இவர்

என்பது அனைத்து வர்க்கத்தினர்க்கும் தெரிந்த ஒன்று. ஒரு சைவன் எப்படி வாழவேண்டும் என்ற தர்மத்தைப் போதிப்பதற்கு சைவப் போதியாக நின்று இன்று மணிவிழாவில் தமிழ்ப் பேராசிரியராக "சைவநன்மணியாக" காலடி பதித்துநிற்றல் **சைவசிகாமணியாக** இவரை வெளிக்கொணர்தல் கண்டு நாம் அளவிலின்ப ஆனந்தம் அடைகிறோம். பெருமை, நுண்மை, பேரருள், பேற்றின் அருமை இவர் பால் காணும் பேரெச்சங்கள் எனலாம். தமிழ், சைவத்துறைகளில் அருகி வரும் இன்னிசை விரிவுரையை மறையவிடாது காத்து வரும் இவரிடம் இசை ஞானமும் ஒளிர்வதும் நம்பால் அமைந்து சிறிது காலம் இசை கற்றமையும் பேரானந்தத்தைத் தருகிறது.

திருமுறைகளிலும், சைவசித்தாந்தக் கோட்பாடுகளிலும் தெளிவும் ஆழ்ந்த பெரும் புலமையும் மிக்க இவர் இஞ்ஞான்று காணும் **"இளநாவலர்"** என்று கொள்ளும் தகமையுடையத்தக்கவராக சித்தாந்த பண்டிதர் ஆகிய தகமையுளராக ஆன்மீகப்பாரில் வலம்வருதல் நமது நாட்டிற்கு கிடைத்த பெரும் பேறெனலாம். உலகின் கண்வாழும் சைவத்தமிழர் யாரும் இவர் சிறப்புரையை ஆன்மீக விரிவுரைகளை காணொலியிலும், வானொலியிலும் காணாதிருந்தால் அவை காணாத உணராத அருங்கேள்வி என்றே கொள்ளலாம்.

வாகீச கலாநிதியின் வானொலி விமர்சனங்கள் சங்க இலக்கியத்தூடும் பக்தி இலக்கியத்தூடும் தொல்காப்பியம், நன்னூல் யாப்பிலக்கிணங்களும் பரந்தும், விரிந்தும், ஆழ்ந்தும் செல்கின்ற "செந்தமிழருவி" யாக செஞ்சொற்கோவாக நம்மிடம் அவரை இட்டுச் செல்வது இயம்பலரிது. இத்துணைத் தமிழறிஞனை "சைவசிகாமணி" லை செந்தமிழ் நூல்விரித்தோனை, திருநெறிய தமிழ் விளங்கும் "செந்நெறிக்காவலர்" தமிழ் பேராசானுமாகிய இவர்க்கு இன்று மணி விழா என்பது தமிழ் சைவம், ஆன்மீகம் தமிழாய்வு அதன் விரிவை ஆழ நோக்கும் அருமருந்தன்ன விழாவாக அமைய அவரை ஈன்ற அன்னை நயினை ஸ்ரீ நாகராஜராஜேஸ்வரியின் பொன்னார் தண்ணளிகளைத் திசைநோக்கித் தொழுதும் இவ்வறிஞர் பெருமகன் ஆயிரம் பிறை கண்டவாழ்வின் அகிலத்தில் வாழ்ந்து "சைவத்துறைக்காவலனாக", தமிழின் வியத்தகு பேரறிஞனாக ஆற்றல்கள் அனைத்தும் பெற்று "உலகோர் உவப்ப" வாழ வேண்டும் என வாழ்த்தி, அவர் திருக்குடும்பம் அன்பு மனையாள் ரதி செல்வக் குழந்தைகள் பிரகாஷ், குருபரன் தாரணி, யாவீரும் அனைத்துப் பெருநலன்களுடன் பெருவாழ்வும் பேறும் பெற உலகமாதா ஏகசிவை நாகராஜராஜேஸ்வரியின் பொற்பாதங்களில் அனுதினமும் வேண்டுவோம். நீடு வாழ வாழ்த்துவோம்.

"வாழி வாழி திரு மன்றாய் கண்ட மலர்க்கண்கள்"
"வாழி வாழி பெருமான்புகழ் கேட்ட வார்ச்செவிகள்"
"வாழி வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி"
"வாழி வாழி வாழி வாழி வாழி அவன் சீர் பாடும் வாய்"

வாழ்க வளமுடன்

சங்கீத கலாநிதி, இசைத்தமிழ் வேந்தர், தமிழிசைக் காவலர்
பேராசிரியர் கலாநிதி நா. வி. மு. நவரெத்தினம், M.Phil., Ph.d,
மூத்த இசைப் பேராசான், யாழ்ப்பாண பல்கலைக்கழம்,
பேராசிரியர், மற்றும் புலத்தலைவர் ஆய்வுப்புலம் (இசை)
ஔவை அறக்கட்டளைகள், தஞ்சை, திருவையாறு, தமிழ்நாடு.



இதயத்தால் பிணைக்கப்பெற்ற இனிய நண்பன்

அலைகடலின் மத்தியில் அம்பிகையின்அருள் ஒளியும் அழகான ஆலயமும் வளமிக்க மண்தரையும் விரிவான கடற்கரையும் வீசிவரும் காற்றலையும் நிறைந்த நயினை மண்ணின் பெருமைக்கும் மகிமைக்கும் வளம் சேர்த்து உயிரூட்டிக் கொண்டிருக்கும் முனைவர் கல்விமான், வாகீசகலாநிதி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவருமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் இங்கிதமான மணிவிழாக் கண்டு அகம் மிக மகிழ்கிறேன். அறுபது அகவையைக் கண்டும் தொடர்ந்து பல்திறப்புலமையாளன் படைப்புக்கள் பல படைக்க வேண்டுமென்று உவகை பொங்க வாழ்த்துகிறேன்.

எங்கள் இருவரதும் பாட்டன், பாட்டி, தாய், தந்தை வாழ்ந்த மண்ணில் நாமும் பள்ளித் தோழர்களாய் வாழ்ந்த நாள்களை மீட்டுப்பார்க்கிறேன். நாம் வாழ்ந்த சூழலில் அமைந்திருக்கும் வீரபத்திர ஆலய முன்றலில் ஆடிப்பாடி விளையாடிய நாட்கள் அலை அலையாக என் எண்ணத்தில் எழுகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தைக் கற்ற காலத்தில் நண்பன் நாகேஸ்வரனும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தைக் கற்றார். தொடர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடர்ந்த வேளையில் எமது நட்பு மேன்மேலும் விருத்தியடைந்து பரிணாமம் பெற்று வழுகெழு விழுமியத்துடன் இன்றும் தொடருகிறது.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் அருட்பணிகளாலும் ஆராய்ச்சியாலும் அறிவினாலும் கல்விப்புலம் சார்ந்த சேவைகளாலும் நயினை மண்ணின் பாரம்பரியச் சிறப்புகள் இன்றும் கட்டிக்காக்கப்படுகின்றன. நயினை அம்மன் ஆலய மரபுவழி அறங்காவலராக விளங்கி ஆற்றுகின்ற பணிகளால் எமது தலைமுறைப் பெருமையும் அடுத்த காலத்தவரின் வினைத்திறனை விளைத்திறனால் விரிவுபடுத்தி வருகிறார். கல்விப் புலத்தில் நவீன வில்லேருலவனாகத் தான் பெற்ற ஆராய்ச்சிப் பட்டத்தினால் செயற்படுத்தி வருகிறார். எவ்வழி நல்வழியோ அவ்வழியையே தன்வழியாகவும் கொண்டு தனித்துவத்துணிவுடன் வழிப்படுத்துபவர். எவராயினும் குறுக்கு வழியில் முன்னேறுபவர்களையும் பூசி மெழுக முயற்சிப்பவர்களையும் மாயாயாலம் காட்டுபவர்களையும் நயினையின் குறுமுனியாக விளங்கிக் கண்டிக்கத் தவறமாட்டார். உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே சொற்பெருக்கம் என்பதற்கு அடையாளமாக இதய சுத்தியுடன் ஆற்றுகின்ற

சொற்பொழிவுகள் சான்று பகருகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தன் குரல் வளத்தால் அனைவரையும் ஈர்த்தெடுத்தவர். கனகசபாபதி நாகேஸ்வரன் என்ற நீண்ட பெயருக்கேற்ப ஆன்மிகக் கருத்துகளை ஆழமாக எடுத்துரைத்தவர். இவரது உரைகளில் எமது மதம், இனம், மொழி என்பனவற்றின் மேலாதிக்கத்தன்மையும் வளர்க்கும் போக்கைக் காணலாம். தன்னலம் கருதாது பொதுநலம் கருதிச் சொல்ல வேண்டியதை உறுதிபடச் சொல்வதால் மற்றவருடன் முரண்பாட்டுத் தன்மை ஏற்படும் பொழுது மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் மரபுவழி பண்பிலிருந்து மாறாதவர். ஆயினும் இவரிடம் ஊன்றிக் கிடக்கும் தெய்வ பக்தியால் தளரா மனதுடனும் சலியா உழைப்புடனும் முயற்சித்து சமூகப் பணியாற்றி எல்லோர் மனத்திலும் நல்லவனாக, வல்லவனாகப் போற்றப்படுகிறார்.

இவர் பெற்றிருக்கும் பட்டங்களும் ஆராய்ச்சியும் அனுபவமும் ஆன்மீக வாழ்வுக்கும் கல்விப் புலத்துக்கும் இணைப்பையும் பிணைப்பையும் இனிவரும் காலத்திலும் இடையறாது ஆற்றுவார் என நம்புகிறேன். நண்பன் நாகேஸ்வரன் வாழும் போதே போற்றப்படுவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். அம்பிகையின் அருளால் ஆண்மையும் ஆற்றலும் ஆயுளும் நோயற்ற வாழ்வு பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறேன்.

வீ. கணேசராசா,
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



அர்ப்பிகை துணை

புலமையின் ஊற்று

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

அன்பின் அடையாளமாய் பண்பின் வடிவமாய் புலமையின் ஊற்றாய்ப் பிரகாசிக்கும் எமது குலக்கொழுந்தாம் முனைவர் வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா கொண்டாடும் இக்காலத்தில் அவரால் பெருமைபெற்ற எமது குடும்பத்தின் சார்பாக எமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்ளக்கிடைத்த அச்சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகவே கருதுகிறோம்.

ஏழைக்கு எழுத்தறிவிக்கும் புண்ணியத்தை முதற்கடனாகக் கொண்ட எமது பேராசான் நாடு முழுவதும் நல் மாணாக்கர்களை உருவாக்கி உள்ளார். தீவிர வாசிப்புப் பழக்கமுடைய இவர் கலை, இலக்கியம், சமயம், சமூகம் தொடர்பாக அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் சிறப்பாகத் தன் ஆற்றலை வெளிப்படுத்தித் தமிழ்ச் சமூகத்திற்குப் பெரும் தொண்டாற்றி வருகிறார். இவரது இப்பணி மேலும் மேலும் வளர வாழ்த்துவதில் உவகை அடைகிறோம்.

மண்ணையும் மக்களையும் மறவாத மாண்புமிக்க இவ்வாசான் எங்கள் ஊரின் குல தெய்வமான ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் மரபுவழி அறங்காவலராகவும் விளங்கி, தன்பணியை ஆற்றி வருகிறார். அதுமட்டுமன்றி உயர உயரப் பணிவும், அருளும் அன்பும் சிறக்கும் இவர், எமது குடும்பத்தை அரவணைத்து வழிநடத்திச் செல்லும் மாண்புடையவராகவும் விளங்குகிறார்.

அலை கடல் தாலாட்டும் அன்னையின் அருள் பெற்று என்றும் சீருடனும், சிறப்புடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகிறோம்.

பொ. தியாகமணி குடும்பம்.



நாயகன் "நாகேஸ்வரன்" புதிய பார்வை.....



இலக்கிய வரலாற்றில் பெருமை மிகு நயினையம்பதி என்ற நற்பதி, சாதனையாளர் பலரை முத்துக்களாக ஈன்று பெருமை கொண்டது. அப்பகுதியில் உதித்த முத்துக்களில் முதிர விழைந்த ஆணி முத்துப் போன்றவர் கலாநிதி நாகேஸ்வரன் சேர் ஆவார். அவர் பற்றி நானா? தாம்பூலம் பலருக்கு இலட்சுமி கடாட்சத்தை வழங்கவல்லது ஆனால் அது நம் நாகேஸ்வரன் சேருக்கோ அதரம் சுவைக்கையில் தாம்பூலத்திற்கே ஒரு இலட்சுமி கடாட்சம் கிட்டிவிடும் போல் இருக்கும். அதேபோன்று அவரது நுதலை எந்நேரமும் அலங்கரிக்கும் சந்தன குங்குமக் கலவைக்கும் கூட எதற்கும் இல்லாத ஒரு வசீகரத்தன்மையை அவரின் பாடவேளைகளிலும் பழகும் வேளைகளிலும் பலரும் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

தஞ்சைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் இவரை முதன் முதலில் நான் சந்தித்தபொழுது சாதாரணமாய் விரிவுரையாளர்களிடம் இருக்கும் ஒரு பயம் இவரிடம் மட்டுமே எனக்கு இல்லாமல் இருந்ததிற்குரிய காரணம் அவரினுடைய சாந்த முகம் என்பேன். யாவரையும் இழுக்கும் அவரின் பேச்சாற்றலால் விரிவுரைகள் விறுவிறுப்பாகவே செல்லும் "விரிவுரை" அதற்கு நம்ம நாகேஸ்வரன் சேர் பொறுத்தவரை புதிய விளக்கத்தைக் கூறலாம். விரிவான உரையைத்தான் விரிவுரை என்பர். ஆனால் இவரது உரை விரிந்த பொருளை சுருங்க விரைவாய் விளங்க வைக்கும் விரிவுரை என்பேன். எத்தனை மணித்தியாலம் கேடுக்கொண்டிருப்பினும் அலுப்போ சலிப்போ ஏற்படாது. கேட்போரை அள்ளிப்பிடிக்க வல்லதாகும். என்னைப்பொறுத்தவரை ஏனைய விரிவுரையாளர்களுக்கு வாய் மட்டும்தான் பேசும் என்றால், நம் நாயகருக்கோ வாய் மட்டுமல்ல கண்கள் கன்னங்கள் கூட கதை பேசும். ஏன் கை கால் முழுமேனியுமே கதைபேசும். ஆம் விளக்கப்படும் பாத்திரமாகவே மாறிவிடுவார் பல வேளைகளில்.

பாரபட்சமின்றி யாருக்கும் உதவக் கூடிய உயர்ந்த மனப்பாங்கு கொண்டவர் இவர். கல்விசார்ந்த எந்தச் சந்தேகங்களுக்கும் அவரினுடைய கதவு அவரின் மனம்போல் என்றுமே திறந்திருக்கும். தவறுகள் இழைத்தாலும் தன்மையாய்த் தட்டிக்கொடுத்து அடியே இது அப்படி வராதடி இதை இப்படி மாற்று என உரிமையாய்ப் பேசி ஊக்கமளிப்பார். என் முதுகலை படிப்புக்காக என் மூளையை நான் பயன்படுத்தியதை விட அவரின் மூளையை கசக்கியதே அதிகம். இருந்தாலும் சலித்துக்கொள்ளமாட்டார். இன்று தொலைபேசி எடுத்தாலும் இரண்டு

மணி ஒலிப்பில் அவரின் குரல் கேட்கும் மறுமுனையில். என்றுமே தொல்லை என எண்ணி அலட்சியப்படுத்தியதே இல்லை. பல உள்ளங்களிடம் உதவிகள் கேட்டாலும் நாளை வாருங்கள், பிறகு தொலைபேசி எடுங்கள் எனக்கு இப்பொழுது நேரம் இல்லை, எனத் தட்டிக்கழிக்கும் அறிவாளிகளுக்கிடையில் எதையுமே எதிர்பாராமல் உளம் உவந்து மாணவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு அழியாச்சொத்து எங்கள் நாகேஸ்வரன் சேர்.

யாமறிந்த புலவரிலே கம்பன்போல் வள்ளுவன் போல் இளங்கோ போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றான் பாரதி. பாரதிக்கோ 'பா' ரதி ஆவாள். நம் நாயகனுக்கோ பாரதியே ரதி ஆவாள். ஆம் பாரதியின் படைப்புகளைப்பற்றி விரிவுரை ஆற்றுகையில் தமக்கெனத் தனிப்பாணி அமைத்து முத்திரை பதித்தவர் இவர். கம்பனைப் பாடவா? வம்பனைப் பாடவா? எனக் கேட்டால் வம்பனைப்பாடு என்பார் தைரியமாய். ஆமாம் அது நம் நாயகரால் நம் மாணவ பரம்பரைக்கு ஈயப்பட்ட தனிச்சொத்து ஆகும். மாணவச்செல்வங்களே மரபு மரபு என்று எல்லாவற்றிலும் பழமையில் உளறாது எதிலும் ஒரு புதுமையையும் புரட்சிப்பார்வையும் பார்க்கத் தொண்டியுங்கள் என்று அடிக்கடி கூறிக்கொண்டேயிருப்பார்.

மாணவருக்கு இவர் ஒரு நல்லாசான்: பேராசான்: அதேவேளை தமிழ்ச் சைவமக்கள் சமுதாயத்தில் இவர் பணி மகத்தானது. இதனாலேயே வாகீச கலாநிதி, அருட்கலை மாமணி போன்ற பட்டங்கள் இவரைச்சார்ந்தன. குறிப்பிடப் படாத பட்டங்கள் பற்பல. அவ்வகையில் கோயில்களில் இவரால் நிகழ்த்தப்பட்ட சமய, இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் தனிச்சிறப்பு வாய்ந்தன. இவரால் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிச் சேவைகளும் பெருமை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

முனைவர், கல்விமான் வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா அகவை மலரில் ஐயாவைப்பற்றி அடியேனுக்கு எழுதக் கிடைத்தமையை என் வாழ்வின் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். இவரது பணி மேலும் பல்லாண்டு பல்லாண்டு பல்கிப் பெருகித் தமிழ் போல் வளர வாழ்த்துகிறேன்.

அன்பு மாணவி,

கஜமதி சண்முகராஜன், (B. A . Hons)





தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் இந்துசமய நிகழ்ச்சிகள் தயாரிப்பாளரும் நேர்முக வருணனையாளரும் பகுதிநேர அறிவிப்பாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளருமாகிய

திரு. கனகசபாபதி - நாகேஸ்வரன், B. A. (Hons)

அவர்கள் 1987 ஆம் ஆண்டு முதுகலைமாணிப்பட்டம் (M.A) பெற்றமையைப் பாராட்டு முகமாகத்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் நிகழ்த்தும்

பாராட்டு விழா

காலம்:
29.01.1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:
பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

தலைமை:
திரு. க. நாகராசா B. Com., M. A. **அவர்கள்**
(அதிபர் – மகாஜனக் கல்லூரி)

முதன்மை விருந்தினர்:
பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

(அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (18.10.1989)

இப்படிக்கு
பழைய மாணவர் சங்கத்தினர்

காலை நிகழ்ச்சிகள்

கல்லூரி நடேசர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு.

மங்கள விளக்கேற்றல் : திருமதி. சா. துரைச்சாமி அவர்கள்.
திருமதி. ச. கனகேஸ்வரன், B. A. அவர்கள்
திருமதி. அ. சண்முகரத்தினம், B. A. அவர்கள்

தேவாரம் : மகாஜனக்கல்லூரி மாணவிகள்

வரவேற்புரை : திருமதி. பா. வாமதேவன் அவர்கள்
(இணைச்செயலர், பழையமாணவர் சங்கம்)

தலைமையுரை : திரு. க. நாகராசா, B. Com. M. A அவர்கள்
(அதிபர் – மகாஜனக்கல்லூரி)

கௌரவம் பெறுநர் : திருமதி பாக்கியம் இராசா (அம்மா ரீச்சர்) அவர்கள்
(முதற்பெண் ஆசிரியை – மகாஜனக்கல்லூரி)

கௌரவிப்பவர் : சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர் – நிர்வாகசபை, துர்க்கையம்மன் தேவஸ்தானம்)

ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய ஸ்வாமிகள் அவர்கள்
சிவஸ்ரீ ஐ. வைத்தியநாதக் குருக்கள் அவர்கள்.
ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்.

முதன்மை விருந்தினர் : உரை: பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்

வாழ்த்துரை : திரு. ச. விநாயகரத்தினம் அவர்கள்
கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை B.Sc. அவர்கள்
(அதிபர், மகாவித்தியாலயம் நயினாதீவு)
திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்.
தலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள்.
வைத்திய கலாநிதி எஸ். பவானி அவர்கள்.
(தலைவர் – சித்தமருத்துவத்துறை)
வித்துவான் சி. குமாரசாமி B.A. (Hons) அவர்கள்.
புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்.
புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்.

மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள்.
வித்துவான் க. சொக்கலிங்கம், M.A. அவர்கள்.
திரு. சி. சிவலிங்கராசா, M.A. அவர்கள்.
திரு. மா. வேதநாதன், B.A (Hons) அவர்கள்.
கவிஞர் இ. முருகையன், B. Sc. B. A. (Lond) M. A. அவர்கள்,
கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள்.
கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள்.
புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள்.
(ஆசிரியர் "ஆலயமணி")

வாழ்த்துப்பா இசைத்தல் : சங்கீதபூஷணம் நா. வி. மு. நவரத்தினம் அவர்கள்.
(போதனாசிரியர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)

பதிலுரை : திரு. க. நாகேஸ்வரன், M. A. அவர்கள்

நன்றியுரை : திரு. நா. தவநாதன் அவர்கள்
(இணைச்செயலாளர் – பழைய மாணவர் சங்கம்)

தேவாரம் : மகாஜனக்கல்லூரி மாணவிகள்

மாலை நிகழ்ச்சி

பி.ப 2 மணி – 4 மணி வரை

"திருநெறிய தமிழிசை அரங்கு"

திருநெறிய தமிழிசையரசு, தேவார இசைநம்பி, பண்ணிசைப்புலவர்,
சங்கீத பூஷணம் : நயினை நா. வி. மு. நவரத்தினம் அவர்கள் – பாட்டு.
சங்கீத பூஷணம் : வீ. கே. குமாரசுவாமி அவர்கள் – வயலின்
சங்கீதரத்தினம் : எஸ். மகேந்திரன் அவர்கள் – மிருதங்கம்
சங்கீதரத்தினம் : எம். சிதம்பரநாதன் அவர்கள் – கெஞ்சிரா.
வித்துவான் : எஸ். ராஜ் அவர்கள் – மொந்தை (முகர்சங்கு)
திரு. லவ. கணேசலிங்கம் அவர்கள் – தம்புரா



உ

சிவமயம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Sri Durgadevi Devasthanam

Tellippalai. Sri Lanka.



தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P

President :
Durgaduranthari, Sivathamilselvi,
Dr. Miss.Thangamma Appacuddy, J.P

ஆசியுரை

M.A. ஆய்வு நூல் வெளியீட்டின் போது

அன்னை நாகபூஷணி அம்பாளின் திருவருளை முன்வைத்துத் தமது வாழ்க்கையைப் புனிதமாக நடத்துபவர் உயர்திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகக் கடந்த பல ஆண்டுகளாகக் கல்விப்பணி ஆற்றி வருகின்ற இப்பெரியார் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள் என்ற நூலை எழுதி வெளியிடுவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் குறிப்பிடத்தக்க பல பிரபந்தங்கள் ஈழ நாட்டுப் புலவர்களால் பாடப்பெற்றவை. இவற்றுள் அந்தக் காலத்துப் பண்டிதர் பரீட்சைக்கு என்போன்றோர் படித்துப் பயன்பெற்றவை ஒரு சிலவாகும். கல்வளை அந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு, கதிரைமலைப் பள்ளு, கரவைவேலன் கோவை என்பவற்றை நான் இன்று மீட்டுப் பார்க்கிறேன். இந்த வகையில் முதுநிலை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் நன் முயற்சி இந்த மண்ணுக்குப் பெருமை பெற்றுத்தருவதாகும். எனவே நூலாசிரியர் அவர்களை வாழ்த்தி எமது மண்ணின் இலக்கியப் பண்பாட்டுப் பெருமையைப் போற்றி அமைகிறேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
சாமாதான நீதிபதி
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.





கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
කලා පීඨය, යාපනය විශ්ව විද්‍යාලය
FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA

வாழ்த்துரை

வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தமது முதுகலைமாணிப்(எம்.ஏ.) பட்டத்தகைமைக்காக எழுதிய ஆய்வேட்டினை நூலாக வெளியிடுகிறார். நூலகமும் ஆய்வேட்டின் ஆசிரியர் வீடுமாக இருந்த ஆய்வேடு இவ்வெளியீட்டினூடாக மக்கள் கைக்குச் சென்றடையவுள்ளது. யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள் என்னும் இந்நூலுக்கு இந்த அணிந்துரையை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974இல் வளாகமாகத் தொடங்கிய பின்னர், தமிழ்த்துறையிலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயில வந்த முதல் தொகுதி மாணவருள் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பவர் நாகேஸ்வரன். நான்கு ஆண்டுகள் என்னிடமும் பயின்றார். பல்கலைக்கழகத் தமிழ்க் கல்வியோடு உலகியற் கல்விக் கூறுகளையும் பெற்றுக் கொண்டார். 1979ஆம் ஆண்டில் இந்திய அலகபாத் நகரிலே திரிவேணி சங்கமத்தில் நடைபெற்ற கும்பமேளாவில் (மாமாங்கம்) பங்குபற்ற என்னுடன் நாகேஸ்வரனும் புவியியல் துறைசார்ந்த பாக்கியநாதன் என்னும் மாணவனும் வந்தனர். அப்பொழுது அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்ற ஆளுநர் சபை உறுப்பினர்களாயிருந்தனர். கலைமாணிப் பட்டம் பெற்ற நாகேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையிலே விரிவுரையாளராகப் பணிசெய்தார். 1988இல் தன்னுடைய முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

ஈழத்திலே யாழ்ப்பாணம், நல்லூர், மாவிட்டபுரம் ஆகிய இடங்களிலே முருகப் பெருமான் கோவில் கொண்டருளியிருக்கிறார். இத்தலங்கள் மீது பாடப்பட்ட பிரபந்த இலக்கியங்கள்

இவருடைய ஆய்வுக்குட்பட்டன. தமிழ்த் துறையின் தொடக்ககாலக் கொள்கையின்படி ஈழத்து இலக்கியங்கள், அறிஞர்கள் பற்றியே ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்பதற்கிணங்க நாகேஸ்வரன் இவ்விடயத்தைத் தேர்ந்தெடுத்து மிகச் சிறப்பானதொரு ஆய்வேட்டினை எழுதியுள்ளார். இவருடைய விடாமுயற்சியினை எடுத்துக்காட்டும் இந்நூல் பலருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. என் அன்புக்குரிய மாணவனாகிய நாகேஸ்வரனுக்கு என் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ்,

தலைவர்,

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறையின் ஓய்வு பெற்ற பேராசிரியரும், யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர்பட்டப் படிப்புகள் வரலாற்றுத்துறையின் முன்னாள் விரிவுரையாளரும், இந்நூலாசிரியருக்கு வரலாறு கற்பித்த பேராசானுமாகிய பேராசிரியர், இலக்கிய கலாநிதி வி. சிவசாமி அவர்கள் யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள் என்னும் ஆய்வு நூலுக்கு மனமுவந்து வழங்கிய

அணிந்துரை



தமிழ்த்திரு நாட்டிலே தமிழும், தமிழிலக்கியமும் நீண்ட கால வரலாறுகள் கொண்டவை. தமிழகத்திற் போன்று இங்கு மிகப் பெருந்தொகையான இலக்கிய நூல்கள் எழவில்லையெனினும் கணிசமான தொகை நூல்கள் காலம் தோறும் எழுந்துள்ளன. எனினும், குறிப்பாக சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியிலேதான் இலங்கைத் தமிழிலக்கியம் பற்றிய விழிப்புணர்வு நன்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலே ஈழத்தமிழிலக்கியத்தினைத் தனி அலகாக விரிவாகக் கற்பதும், அதுபற்றிய ஆய்வுகள் மேற்கொண்டு வருவதும் நன்கு குறிப்பிடத்தக்க செயற்பாடுகளே. மேலும் இலங்கைத் தமிழ்க் கவிதைத் தொகுப்புகளும் சில வெளிவந்துள்ளன. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளிலே தனிப்பட்ட வகையிலும் சில அறிஞர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு இலங்கையின் பலபாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற பல புலவர்கள் பெருமக்களின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த புலவர்கள் நன்கு குறிப்பிடற்பாலர். வடபிராந்தியத்திலே யாழ்ப்பாணத்துப் புலவர்களின் பங்களிப்புகள் பலதிறப்பட்டவை.

யாழ்ப்பாணத் தமிழர்கள் தமிழிற்கும், சைவத்திற்கும் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் பற்றி ஆணித்தரமாகவும், இரத்தினச் சுருக்கமாகவும், காரசாரமாகவும் முதன் முதலாகத் தமிழகத்தவருக்கு எடுத்துரைத்த பெருமை ஆறுமுக நாவலருக்கே உரியதாகும். சிறந்த தமிழறிஞரான சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு எதிராகத் தமிழகத்தைச் சேர்ந்த நரசிங்கபுர வீரசாமி முதலியார் வெளியிட்ட கருத்துக்களை முற்றிலும் மறுத்து நல்லறிவுச் சுடர் கொளுத்தல் எனும் தலைப்பிலே நாவலர் பெருமான் எழுதியிருப்பது ஈண்டு குறிப்பிடற்பாலாது. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத் தமிழ் இலக்கிய நூல்கள் பற்றிப் பலர் எழுதி வந்துள்ளனர்; வருகின்றனர். இத்தகையோர் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தோராகவும், சேராத வருமாகப் பலர் உள்ளனர். பல்கலைக்கழகத் தமிழறிஞர்களில்

ஒருவராகிய திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் குறிப்பிடற் பாலர். சபரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை இணைப்பாளராகவும், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும் பணிபுரியும் இவர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள் எனும் தலைப்பிலான நூலினை எழுதியுள்ளார்.

இவர் சென்ற நூற்றாண்டு எழுபதுகளின் முற்பகுதியிலே மகாஜனக் கல்லூரி மாணவனாக இருந்த காலந்தொட்டுத் தமிழ், இந்து சமயம், வரலாறு முதலிய பாடங்களிலே மிக்க ஈடுபாடுள்ளவராகவும், சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்கி வந்துள்ளார். 1974இலே தொடங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே (தொடக்கத்திலே இது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகமென அழைக்கப்பட்டது.) முதன்முதலாகத் தமிழைச் சிறப்புப் பாடமாக நன்கு கற்றுத் தேறிய இரு பட்டதாரிகளில் இவர் நன்கு குறிப்பிடத்தக்கவர். சிறப்புக் கலைக் கற்கை நெறியினைக் குறிப்பாக அமரர் பேராசிரியர் க. கைலாசபதியின் வழிகாட்டலிலும், முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வினைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் வழிகாட்டலிலும் திறம்படச் செய்து முடித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள பிரபல கந்தசுவாமி கோவில்கள் பற்றிய பிரபந்தங்கள் பற்றியதாகவே அவரின் முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வு அமைந்துள்ளது. இவர் இது குறித்துத் தொடர்ந்து ஆய்வினை மேற்கொண்டு, இதனை விரிவாக்கியும் புதுக்கியும், திருத்தியும், மேலும் பலவற்றையும் சேர்த்து யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்தங்கள் எனும் தலைப்பிலான நூலாக வெளியிட்டுள்ளார். ஈழத்தமிழிலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்திலே இத்தகைய சிறந்த நூல் ஒன்று வெளிவருவது நன்கு வரவேற்கத்தக்கதே. எம் முன்னாள் மாணவரும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதலாம் ஆண்டில் எம்மிடமும் வரலாறு கற்றவர்) இளம் நண்பருமாகிய ஆசிரியரின் தமிழ்ப் பணிக்கு மனமுவந்த நல்வாழ்த்துக்கள்.

இவர் தமிழிலும், அதனுடன் தொடர்புள்ள அறிவியல்களிலே பண்பாடு, வரலாறு, கல்வி, ஊடகவியல் முதலியனவற்றிலே நல்ல தேர்ச்சியும், ஈடுபாடும், அனுபவமும் வாய்ந்தவர். இவ்விடயங்கள் தொடர்பாகப் பல கட்டுரைகளை சஞ்சிகைகளிலும், நாளிதழ்களிலும் ஏறக்குறைய மூன்று சதாப்தங்களாக எழுதி வருகின்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் சில ஆண்டுகளாக நற்றமிழ்ப்பணி புரிந்துள்ளார்.

இலங்கையிலும், இந்தியா, மலேசியா முதலிய நாடுகளிலும் நடை பெற்ற சமய, இலக்கிய மகாநாடுகளிலே சிறப்பாகப் பங்குபற்றியுள்ளார். இவர் ஒரு சிறந்த தமிழ்ப் பேச்சாளரும், எழுத்தாளருமாவார். இலங்கையிலுள்ள பிரபல சைவ, தமிழ் நிறுவனங்கள் பலவற்றிலே இடம் பெற்றுள்ள பல நிகழ்ச்சிகளிலே ஆக்கப்பூர்வமாகப் பங்களிப்புகள் செய்துள்ளார். குறிப்பாகச் சிறப்புச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றவை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன. இவர் ஒரு சிறந்த மேடைப்பேச்சாளர்.

இவர் சிறந்த ஆய்வாளரும், சமயத் தொண்டருமாவார். இவருடைய கட்டுரைகள் பலவும் முதுகலைமாணிக்கான ஆய்வுக்கட்டுரையும் இவரின் நுண்மாண் நுழைபுலமிக்க, கூர்ந்த ஆய்விற்கான சான்றுகளாகும். தற்பொழுது இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகிறார்.

சமயத் தொண்டராக ஏற்கனவே குறிப்பிட்டவாறு சமயச் சொற்பொழிவுகள் முதலியனவற்றை நடத்தி வருவதுடன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பரம்பரைத் தர்மகர்த்தாக்களில் ஒருவராகவும் இவர் திருத் தொண்டு புரிகின்றார். அம்பாள்மீது மிகுந்த பற்றுள்ளவர். ஊடகங்கள் மூலமாகக் குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி சமய சிந்தனைகள், திருவிழாக்களின் நேரடி வர்ணனைகள், சமயப் பேச்சுக்கள் இலக்கியப் பேச்சுக்கள் மூலமாகவும் உலகளாவிய ரீதியிலே தேமதுரத் தமிழோசை பரவுதற்கும் வியத்தகு பங்களிப்புகள் செய்து வருகின்றார்.

இவருடைய தமிழ், சைவப்பணிகளுக்காகப் பல நிறுவனங்கள் இவருக்கு அருள்மொழிச் செல்வர், வாகீசகலாநிதி, செஞ்சொல்வாரிதி, முதலிய பட்டங்களை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளன. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலும், சபரகமுவ பல்கலைக்கழகத்திலும் பட்டதாரிகள் பலர் உருவாகப் பணிபுரிந்துள்ளார்.

இவ்வாறு பலதிறப்பட்ட அறிவும், அநுபவமும் உள்ள இவரின் இந்நூல் நன்கு அமைந்து சிறப்படையவும், இவர் மேன்மேலும் தரமிக்க பல நூல்களை எழுதிப் பதவி உயர்வு பெறவும், தொடர்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பல்லாண்டுகள் நற்பணிகள் புரியவும் மனமார வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவருள் பாலிப்பாராக!

அன்புடன்

இலக்கிய கலாநிதி, பேராசிரியர் வி. சிவசாமி

ஓய்வு பெற்ற சமஸ்கிருதப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.



அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி,

கனகசபாபதி – நாகேஸ்வரன், M.A

நிழத்தில் சக்தி பீடங்களுள் ஸ்ரீபுவனேஸ்வரிபீடம் என மிளிரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் வம்சத்தில் தவசிரேஷ்டர் ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி எனும் 'அருள்மாமணி' க்கும் ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் கனகசபாபதி எனும் 'வித்துவாட்டி'க் 'கவிஞருக்கு'ம் மூத்த புதல்வன் வாகீசகலாநிதி நாகேஸ்வரன், எம். ஏ. இலக்கிய ஆய்வாளர், கவிஞர், கல்விமான், இன்னிசைச் சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், நேர்முக வர்ணனையாளர், பண்ணிசைக் கலைச் செல்வர், கதாப்பிரசங்கி எனும் பன்முகப்பட்ட உன்னத ஆளுமைகளின் திருவுரு.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை, நயினாதீவு மகா வித்தியாலயம், நாவலப்பிட்டிச் சின்னக் கதிரேசன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதியின் மேற்பார்வையின் கீழ்த் தமிழ் இலக்கியத்தில் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின் மேற்பார்வையின் கீழ் முதுகலைமாணிப் பட்டத்தினையும் முறையே 1979, 1988ஆம் ஆண்டுகளிற் பெற்றார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை நிகழ்த்துகிறார்.

சபரகமுவ பல்கலைக்கழகத்து மொழித் துறையிலே முது நிலைத் தமிழ் விரிவுரையாளராகவும், (தரம்–1) இணைப்பாளராகவும் பணியேற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்திலும், சபரகமுவ பல்கலைக்கழகத்திலும், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலும் பட்டதாரிகள் பலரை உருவாக்கியுள்ளார்; உருவாக்கிவருகிறார். தமிழின் பல்வேறு துறைகளிலேயும் ஈடுபாடு கொண்டுள்ள இவர் இலக்கியம், சமூகம், கலை, சமயம், வரலாறு, தொல்பொருளியல், அரசறிவியல், இதழியல், கல்வி, பண்பாடு, மொழி, வாழ்க்கைவரலாறு, பத்திரிகையியல், வெகுஜன ஊடகவியல் எனும் துறைகளிலே பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1972ஆம் ஆண்டு முதல் இவரது ஆய்வுக் கட்டுரைகள் கோமுகி, சங்கமம், கலாசுரபி, மல்லிகை, செவ்வந்தி, இந்துநெறி, இனமுழக்கம் தமிழ்ஒலி, பராசக்தி, தேன்பொழுது, ஊற்று, ஆலயமணி, ஜீவசக்தி, தமிழோசை, உள்ளம் ஆகிய இலக்கியச் சஞ்சிகைகளிலேயும், ஈழநாடு, உதயன், தினகரன், வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளிலேயும் வெளிவந்துள்ளன.

1980களில் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், 1985 வரை ஐந்தாண்டுகள் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராயும், பகுதிநேர அறிவிப்பாளராயும் பணியாற்றினார். இந்திய அலஹபாத்திலும், மலேசியாவிலும் திருச்சியிலும், நடந்த சமய இலக்கிய மாநாடுகளிலே 1979இலும், 1983இலும் 2001இலும் பங்கேற்றார். மலேஷியா இலண்டன், கனடா ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள சமய இலக்கிய மலர்களிலே இவரது ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

நல்லையாதீனம், பருத்தித்துறை சாரதா ஆச்சிரமம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாசார அமைச்சின் கலைக் கழகத்தின் இலக்கியக் கருத்தரங்குகள், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாமன்றம், Colombo Sri Lanka Foundation Institute (S.L.F.I) யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம், இந்து சமய கலாசார அமைச்சு, தினைக்களம் ஆகிய நிறுவனங்களிலே இலக்கிய, சமய விரிவுரைகளை நிகழ்த்தியுள்ளார்.

வாகீசகலாநிதி நாகேஸ்வரன் தேமதுரத்தமிழோசையினை உலகமெல்லாம் பரப்பும் கடப்பாட்டில் கால்நூற்றாண்டுக் காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் சைவநற்சிந்தனை, அருளமுதம் (இந்துசமய சஞ்சிகை நிகழ்ச்சி), இலக்கியப் பேச்சுகள், இந்து சமயப்பேச்சு, கலந்துரையாடல்கள், சொல்வளம் பெருக்குவோம். ஆலயத்திருவிழா நேர்முகவருணனைகள், கதாப்பிரசங்கம் என்பவற்றிலே பங்கேற்றுச் சேவையாற்றி வருவதும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறிந்ததே.

அருள்மொழிச் செல்வர், செஞ்சொல்வாரிதி, இன்னிசைச் சொல்வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக்கலைஞானி, சொற்பேராழி, சித்தாந்தபண்டிதர், அருட்கலைமாமணி, வாகீசகலாநிதி என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் அகில இலங்கைச் சாமாதான நீதிபதியும் ஆவார்.

கலாசுரபி (1979), தடுத்தாட்கொண்ட புராணம் (பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரிப் பட்டதாரி மாணவருக்கான பாடநூல்) (1989), சிவதத்துவமலர் (1996), சத்திதத்துவமலர் (1996) நவதாதம் (1998), பக்திமலர் (2004), அறுபத்துநான்கு கலைகளும் கலையாக்கத்திறன்களும் (ஆய்வு) (2004), வடஇலங்கையின் சக்தி பீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் (வரலாறும் தலப்பெருமையும்) (2004) என்னும் நூல்களின் பதிப்பாசிரியரும், ஆசிரியருமாவார். நாடறிந்த ஆன்மிக இலக்கியப்பேச்சாளர். இவருக்குத் தம்பிமார் இருவர்; தங்கையர் அறுவர்; கனடாவிலும் நாவலப்பிட்டியிலும் வாழ்கின்றார்கள். இவர் நாரந்தனை, வண்ணார்பண்ணை ஸ்ரீமான் பாலசிங்கம் பூமணி தம்பதியின் மருமகனும் ஆவார். மனைவி இரதிமலர்தேவி; மகன்மார் பிரகாஷ், குருபரன்; மகள் தாரணி என்போர் பிள்ளைகள்.

பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம், M.A; Ph.d
தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Aradkalaimaamani, Siddhandha Pandit, Vaakeesakalanithi.
Kanagasabapathy Nageswaran, M.A.

'Vaakeesa Kalanithi' Kanagasabapathy Nageswaran, M. A. (Born on August 05, 1952) hails from the hereditary chain of Chieftains and from noble and illustrious family of Nainativu where the mother godders Shree Nagapooshani Amman Temple is situated. This temple is reckoned as "PUVANESWARY PEEDAM." It is most revered among sixtyfour Hindu divine-powered chapters of Sri Lanka.

Mr. K. Nageswaran is the eldest son of 'Thavasireshdar' Sriman Paramalingam Kanthasamy Kanagasabapathy also known 'Arulmamani' and 'Viththuvaaddi', "Kavignar" shrimathi Suntharampillai Kohilambal Kanagasabapathy.

He is a researcher in the field of literature, a Kalaignar, an academic and a lecturer divotioinal songs (Thevaram Pannisai), a translator, a commentator, an honorary doctor (Vaakeesa Kalanithi) in the field of singing and reciting devotional songs. He is deservedly called a living idol of multifaceted and multiskilled potentialities.

He is old boy of Sri Nagapooshani Vidyasalai, Nainativu Maha Vidyalayam, Nawalapitiya junior Kathiresan College and Tellippalai Mahajana College. He received his special degree in Thamil Literature under the guidance of Professor, and Dr. Kanagasabapathy Kailasapathy. He received his Post - graduate degree under the guidance and supervision of Professor, and Dr. A. Veluppillai of Deprt. of Tamil, University of Jaffna in 1979 and 1988 respectively.

He is presently senior lecturer in Tamil and co-ordinator at the department of Languages Faculty of social sciences and Languages in Sabaragamuwa University, Sri Lanka. He has produced several graduates from the universities of Jaffna, Sabragamuwa University and Tamil virtual University. He is involved in research and analysis of many areas and sectors of the Tamil Languages. He has presented several research papers in areas like literature, society, art religion, history, archaeology, politics, magazine relate journalism, education, culture, indigenous medicine, biography and mass media journalism.

His articles and research papers were published in literature magazines like Komuki, Sevwanthi, Inthuneri, Inamulakkam, Thamil- Oli, Parashakthi, Thean - Pozhuthu, Ootru, Alaiyamani, Jeevashakthi, Tamizhosai, and Ullam. His articles were published in Eelanadu, Uthayan, Thinakaran, Veerakesari and Thinakkural.

He served for five years as assistant editor of 'Eelanadu' during 1980-1985. He has served as relief announcer and producer for the Tamil Service of Sri Lanka Broadcasting Corporation (SLBC). He participated in conferences held in Allahabad, Malaysia and Trichi in India in 1979, 1983 and 2001.

His research papers have been published in religious and literary magazines published in London, Singapoore, Canada. He has delivered lectures on religion and literature at the Colombo Vivekanantha sabai, All Ceylon hindu congress, Colombo Tamil Sangam, All Ceylon Kampan Kazhaham, Jaffna Thiruneriya Tamilisai sangam, Ariya-dravidian language development society, He has spoken at literary seminars, he has serves in the literary committees of state Art's council of the ministry of cultural, Tamil virtual university, Hindu mantram Peradeniya University, Ministry of hindu religious affairs ans department of hindu religious affairs.

For 25 years he had been broadcasting over the Tamil service of the SLBC on the virtues of tamil language and thus spreading the Tamil language all over the world. His broadcast include the Tamil language all over the world. His broadcasts also include talks on hindu philosoprhy, Saivaism, meditation, hindu religious subjects, Arulamutham, word - power improvement etc. He is also a commentator of hindu temple festival programmes.

He has been given honorary and appellations such as Arlmozhichchelvar, Sencholvaarithi, Manimozhivaari, Navarasakkalaignani, Sotperazhi, Saiva Siddhandha Pundit, Arudkalaimaamani and Vaakeesakalaanithi. He is a JP for whole island.

He is also well known orator and publisher of Kalaasurabhi (1979), He also published Thaduththaadkonda-puranam (curriculam book for under graduates of Universities Internal and external examinations) (1989), Sivathaththuvamalar (1996), Sakthithathuvamalar (1996), Navanatham (1998), Bakthi malar (2004), Arupaththunankukalaikalum Kalaiyaakkath thirankalum (2004), Vada Ilankaiyin shakthi Peedam Nainai shree Nagapooshani Amman varalarum thalap perumaiuum (2004).

He is son-in-law of Balasingham and Poomani of Vannarponnai. His wife Rathymalarthevi. His children are Pragash, Guruparan and Tharani.

Professor, Dr. K. Arunasalam, M.A., Ph.D
Professor of Tamil,
Department of Tamil,
University of Peradeniya,
Sri Lanka.

வாகீசகலாநிதி மணிவிழா

FOUNDED IN 1902
VIVEKANANDA SOCIATY
AN APPROVED CHARITY
"அங்கீரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம்"
34, Vivekanada Hill, Colombo-13, Telephone 2422646

கொழும்பு விவேகானந்த சபையின் கௌரவ பொதுச் செயலாளரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமய விவகார குழுவின் உபதலைவருமான சிவஞானச்செல்வர், சிவஞானக் கலாநிதி, உயர்திரு க. இராஜபுவனீஸ்வரன், J.P **அவர்கள் மனமுவந்து வழங்கிய**

வெளியீட்டுரை



யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பிரபந்த இலக்கியங்கள் என்ற ஆராய்ச்சி நூலை எமது நண்பர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A அவர்கள் எழுதி வெளியிடவுள்ளார் என்பதனைக் கேட்டு மிகமகிழ்ச்சியடைந்தேன். இதுவரை காலமும் இப்படியான ஓர் ஆராய்ச்சி நூலை எவரும் எழுத முன்வராதமை கவலைதான். திருவாளர் நாகேஸ்வரன் அவர்கள் எழுதியமுதுகலைமாணி (M.A)ப் பட்டத்திற்கான ஆய்வேடாக இந்நூல் ஆய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வை அன்னார் மேற்கொள்வதற்கு உந்து சக்தியாக விளங்கியவர் பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய ஆராய்ச்சியைக் கைக்கொண்டு சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். கொழும்பு விவேகானந்த சபையில் ஒருமுறை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்திலே "ஆறுமுகநாவலர் பெருமான் நடத்திய வழக்கு" என்ற தலைப்பிலே அவர்கள் பேசிய பொழுது அன்னாரது ஆழமான நுண்ணாய்வுத் திறனை நாம் காணக் கூடியதாக இருந்தது.

திருவாளர் நாகேஸ்வரன் அவர்கள் சபரகமுவ பல்கலைக் கழகத்திலே முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராக இருப்பினும், இவரது சமய அறிவை, சங்கீத இசைஞானத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழில் வித்துவத் தன்மையைப் பெற்ற நண்பர் முருக வழிபாட்டிலும் அதீத ஈடுபாடு உடையவர் என்பதை இந்நூல் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாய்வு நூலிலே ஈழத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் என்பவற்றைப் பற்றி நன்றாகவும், மிகவிரிவாகவும் ஆராய்ச்சி செய்து சரித்திர உண்மைகளை எமக்குத் தந்துள்ளார். யாழ்ப்பாண வரலாற்றை நாம் உற்றுநோக்கும் போது இவரெழுதியுள்ள இந்நூல் கட்டாயமாகப் பலருக்கும் பயன்படும். குறிப்பாக சர்வகலாசாலை மாணவர்களுக்கு இந்நூல் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைக் கொழும்பு விவேகானந்தசபை வெளியடுவதற்கு முன் வந்தமை மிகப் பொருத்தமானது. 2004-11-14 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை விவேகானந்த சபையில் குழுக்களின் தலைவர் சட்டத்தரணி A.R. சுரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் இந்நூலை வெளியிடுவதற்கான அனுமதி பெறப்பட்டது. நாகேஸ்வரன் அவர்களின் தமிழ்த் தொண்டிற்கும், சமயத் தொண்டிற்கும் நாம் செய்யும் ஒத்தாசையாக இந்நல்ல கைங்கர்யம் அமையட்டும்.

சுபம்

க. இராஜபுவனீஸ்வரன்

(கௌரவ பொதுச் செயலாளர்,

விவேகானந்தசபை, கொழும்பு)

மனவிரிவு கொண்ட பண்பாளர்



அன்பரும், நண்பரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை நீண்ட காலமாக யான் அறிவேன். உள விரிவும், சமூகப்பற்றும், மொழிப்பற்றும், சமயப்பற்றும் நிரம்ப உடையவர். பொது நிகழ்வுகளிலே பங்கேற்றுத் தமது திறமையாலும், இசையாற்றலாலும், இயல்பான நன்னடத்தையாலும் பொதுமக்களதும், கல்வியாளர்களதும் பாராட்டுக்கு உரியவர். பல்வேறு நிறுவனங்களாலும், சான்றோர்களாலும் பாராட்டப் பட்டவர். பட்டங்கள் பலவற்றையும் கொண்டுள்ளவர்.

இலங்கை பூராவும் சைவாலயங்களிலே சிறப்பான சமயப் பேருரைகளை ஆற்றி அவ்வப் பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரது ஆற்றலும், ஆளுமையும் பேச்சிலும், எழுத்திலும், ஆய்விலும் பளிச்சிடுகின்றன. கல்வியாளர்கள், பேராசான்கள், அறிஞர்கள், சான்றோர்களை நேசித்தும், போஷித்தும், மதித்தும் வாழத் தெரிந்த மாமனிதர். கலந்துறவாடிப் பழகுவதில் பிரியமுள்ளவர்.

எனக்கும் வாகீச கலாநிதி, சித்தாந்த பண்டிதர், அருட்கலைமாமணி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரனுக்குமிடையில் ஆத்மந்தத் தொடர்பு 2008ஆம் ஆண்டு பேராதனை கண்டியில் எனது மணிவிழாவின் போது ஏற்பட்டது. அதன்பின் 2010 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்துக் குறிஞ்சிக்குமரன் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போது உண்டானது. இவற்றுக்கு இணைப்பாளராகவிருந்து தொழிற்பட்டவர் எனது அன்புக்குரிய சிரேஷ்டவிரிவுரையாள நண்பன் இம் மலரின் பதிப்பாசிரியர் எஸ். வை. ஸ்ரீதர் அவர்கள். எனது மணிவிழா மலர்க்குழுவில் அங்கத்தவராகவிருந்து மலர் சிறப்புற வெளிவர உதவியவர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். நிரம்பிய தமிழ்ப்புலமையும், கவியெழுதும் ஆற்றலும், கலையாற்றலும் உடையவர் நண்பர் நாகேஸ்வரன்.

அண்மையில், 2012 ஆம் ஆண்டிலே வவுனியா கோயிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலிலே அருளகம் இல்லத்திலே போராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். வை. ஸ்ரீதர், கலாநிதி க.

நகேஸ்வரன் ஆகியோருடன் யானும் ஒன்றாகத் தங்கி, பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டோம். அருளகம் இல்லத்துடனான தொடர்புக்குக் கலாநிதி நாகேஸ்வரன் அனுசரணையாக விருந்தார். 11.01.2013, 12.01.2013 ஆகிய திகதிகளில் சர்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 4ஆவது சர்வதேச ஆய்வரங்கில் (4th International Symposium) மீண்டும் கலாநிதி நாகேஸ்வரனை நேரிலே சந்திக்கும் பெருவாய்ப்புக் கிடைத்து மகிழ்ச்சி தந்தது.

மணிவிழா நாயகர் தமது குடும்பத்தினருடன் நீடிய சுகாரனந்தப் பெருவாழ்வு வாழக் குறிஞ்சிக் குமரன் பேரருள் புரிவாராக.

அன்புடன்,

பேராசிரியர் வை. நந்தகுமார்.

தலைவர்,

புவியியற்றுறை

பேராதனைப் பல்கலைக்கழகம்.





முனைவர் வாக்சகலாநிதி அருட்கலைமாமணி கனகசபாபதி நகேஸ்வரன் அவர்களது மணிவிழா நன்நாளில்

'ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை' வழங்கிய வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலரும்,
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின்
மொழித்துறை முன்நாள் தலைவரும்
முதுநிலை விரிவுரையாளரும், நாடறிந்த
இலக்கிய சமயச்
சொற்பொழிவாளரும், பட்டிமன்றப்
பேச்சாளரும்
வானொலி தொலைக்காட்சிக் கதாப்பிரங்கக்
கலைஞரும்
சித்தாந்த பண்டிதரும், அருள்மொழிச்செல்வர், சொற்பேராழி,
நவரஸக்கலைஞானி, செஞ்சொல்வாரி, மணிமொழிவாரி, செஞ்சொல்வாணர்,
அருட்கலைமாமணி, திருமறைக்கலாநிதி,
செம்மொழிப்புலமையாளர் என்னும் கௌரவப் பட்டங்களுக்கு
உரியவருமாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்
மணிவிழாக் காணும் இந்த நன்நாளில்
அவர்மென்மேலும் பல சிறப்புக்களைப்பெற்று பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க!
என வாழ்த்தி மகிழ்கிறோம்.



டாக்டர். தி. ஞானசேகரன், திருமதி ஞானம் ஞானசேகரன்
ஆசிரியர், 'ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை, 3 – பி, 46 ஆவது ஒழுங்கை, கொழும்பு – 06.



நல்லதெல்லாம் வளரவெனவாழும் பெருந்தகை

தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்கிறது திருக்குறள். குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. இவ்வாறான ஊர்களில் ஒன்றே நயினாதீவு.

கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பார்கள். அழகிய திருக்கோபுரங்களோடு எழில் மிகு தோற்றத்துடன் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் எழுந்தருளியிருக்கும் திருப்பதி நயினாதீவு. அத்துடன் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்கள் பலர் தோன்றிய பதி நயினாதீவு. இத்தகையோர் வரிசையில் வைத்துப் போற்றப்படவேண்டியவர் கலாநிதி திருவாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

அறம் வளர வேண்டும். சைவம் தழைத்தோங்க வேண்டும், தமிழ் வளரவேண்டும் என்பதோடு நல்லதெல்லாம் வளர வேண்டும் என வாழ்ந்து வரும் பெருந்தகை இவர்.

சற்று ஏறத்தாழ கால் நூற்றாண்டுகட்கு முன் திரும்பிப் பார்க்கின்றேன். போராட்டக்காலம். உலுங்குவானூர்திகள், கபீர் விமானங்கள் என்பன பகலிரவு என பாராது ஆகாயத்திலே வலம் வந்து குண்டுமழை பொழிகின்றநேரம். பல இடங்களிலுமிருந்து இவற்றுக்குப் பயந்து இடம்பெயர்ந்து கைதடியில் பலர் வாழ்ந்த காலம். முருகப்பெருமானின் அதிசிறந்த விரதமாம் கந்த சஷ்டி காலம். கைதடி இணுங்கித் தோட்ட கந்த சாமிகோவிலில் 6 நாட்களும் முருகப் பெருமானின் திருப்பெருமைகள் திருவிளையாடல்களை கதாபிரசங்கம் செய்து தனது கணீரென்ற குரல், இனிய தமிழ், சிறந்த சொல்லாற்றல், இசையாற்றல் என்பனவாய் மக்களை எல்லாம் ஆன்மீகத்தின்பால் இழுத்து, மக்களைப் பயப்பிராந்தியிலிருந்து நீக்கி இறைவழிபாட்டையும், இறை நம்பிக்கையையும் ஏற்படுத்திய பெருந்தகை. இவரது இச்சேவையைப் பாராட்டி சூரன் போர் தினத்தன்று ஆலய நிர்வாகமும், ஊர்ப் பெரியோர்களும் இணைந்து 'அருள் மொழிச்செல்வர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததை நினைத்துப் பார்கின்றேன். இதுவே இவருக்கு முதன்முதலாக வழங்கப்பட்ட பட்டமும்.

"பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்" என உலகம் போற்றும் உத்தமர்களையும் சான்றோர்களையும்

இனந்தெரிந்து வாழ்த்த மேற்காட்டியபொதுமறை வழிகாட்டி நிற்கிறது. புத்திசாதுரியம், நகைச்சுவைப்பேச்சு, குதூகல உணர்வு, ஆழ்ந்த புலமை, சிறந்த இசையாற்றல், கணீரென்ற குரல்வலம் நிறைந்த தெய்வ நம்பிக்கையாளர். இன்று சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை பேராசானாக இருந்து அரும்பணியாற்றி வருவதைக் கண்டு அகமகிழ்கிறேன்.

"கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது. அந்தச் செல்வம் காட்டில் காலத்தில் அழியாதது. அந்தச் செல்வம் காட்டில் பாறைக் கட்டிகளாக இருக்க கூடாது. அதை எடுத்துப்பயன்படுத்திப் பளபளப்புள்ள நலல் ஒளியுள்ள தங்கமாக ஆக்க வேண்டும்" என்றார்

அறிஞர் அண்ணா. அந்த அரும்பணியைச் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே செய்து வருகிறார். மானிட வாழ்வு பக்தியிலும், பண்பாட்டிலும் வளர வேண்டியது. காலத்தை நன்கு பயன்படுத்தி இதனை நன்கு வளர்த்துக் கொள்பவரே உண்மை மனிதர். இதற்கு இலக்கணமாகத் திகழ்பவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.

இவரிடம் நான் கண்ட சில விஷேட பண்புகள்.

1. இலக்கியத்திலே ஆற்றல்படைத்தவர்களுக்கு இலக்கணத்திலே அதே அளவு ஆற்றல் வருவது அருமை. அதேபோல் இலக்கண விற்பன்னர்கள் அதேசமயம் இலக்கிய விற்பன்னர்களாவதும் அருமை. ஆனால் இவர் இரண்டிலும் நிகரற்ற புலமை பொருந்தியவர்.
2. சிலர் பேசுவதில் மட்டும்வல்லவர். சிலர் எழுதுவதில் மட்டும் வல்லவர். இவர் பேச்சு, எழுத்து இரண்டிலும் சாதுரியம் படைத்தவர்.
3. சமயம் இலக்கியம் இரண்டிலும் அளவு கடந்த ஈடுபாடு உடையவர்.
4. தலை சிறந்த அறிவாளிகள் பலர் தாம் மட்டுமே வளர்ந்து தப்பு களை மட்டும் பரப்புவதில் கண்ணாயிருப்பர். புதிய கல்வி அறிவுடையவர்களை உருவாக்க அவர்களுக்கு வாய்ப்பு இல்லாதிருக்கலாம். தானும் ஒரு அறிவாற்றல் உள்ள முழு மனிதனாக திகழ்வது மட்டுமன்றி தலைசிறந்த பல்லாயிரக்கணக்கான கல்வி அறிவுள்ளவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.
5. உயரிய பண்பாடு இனிய சுபாவம் பரந்த தமிழ் அறிவு நிறைந்த இசையாற்றல், சிம்மக் குரலோன் எனப்போற்றுமளவுக்கு குரல் வளம், சைவத்தின் பால் அளவுகடந்த ஈடுபாடு, எந்த தலைப்பைக் கொடுத்தாலும் உடனடியாக தனது ஆற்றலால் பேசச்கூடியவல்லமை சிறந்த எழுத்தாற்றல் ஆகிய அனைத்தையும் கொண்டபெருந்தகை.
6. தமிழுக்காகவும் சைவத்துக்காகவும் அர்பணித்ததே இவரது வாழ்வு.

இத்தகைய போற்றுதலுக்குரிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் எல்லா நலன்களோடும் இனிது வாழ்ந்து தமிழ்ப் பண்பாடு மேம்படவும் தமிழ் வளரவும் சைவம் தழைக்கவும் தம்மாலான சேவைகளைச் செய்வதற்கு இறையருள் பாலிக்க வேண்டும் என மனமார விழைகிறேன்.

கலாநிதி தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசுவாமி
ஓய்வு நிலை அதிபர்,
இந்துக் கல்லூரி, கொழும்பு.



அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு



என்பது வள்ளுவன் வாக்கு. இந்தப் பொய்யா மொழிக்கு இலக்கணமாக இப்பூவுலகின் கண்வாழும் மனிதர்கள் எத்தனைபேர் என்பது தான் வினா? இந்த வகையில்தான் அறுபதாவது பிறந்ததினத்தைக் கொண்டாடும் – நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் மரபுவழி அறங்காவலரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலைத்தமிழ் விரிவுரையாளருமான முனைவர், கல்விமான், வாகீச கலாநிதி, அருட்கலைமாணி, கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் MA. Ph.d அவர்களின் உள்ளத்தின் உண்மையான அன்பு நிலை தெரிய வருகிறது. ஊருக்கு ஓர் உத்தமன், உண்மையில் காவலன், ஏழை மக்களின் பங்காளன், சிறியவர்களில் இருந்து பெரியவர்கள் வரை நெருங்கி அன்பாக பழகும் தன்மை எந்த வகையான உதவிகளையும் தன்னால் முடியுமானவரை மறுக்காது செய்யும் பண்பு என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகக் கூடிய அவரது உத்தம குணங்களை அறியாதவர்கள் இல்லை.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் பட்டம் பெற்று உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இருந்து இன்று வரை அவரது பதவி நிலை உயர்ந்து கொண்டே வருகிறது. இது நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் அருட்கொடை எனலாம். அவரது நல்ல உள்ளம் இதிலிருந்து புலனாகிறது. பதவி உயர உயர அவரது பண்பும் உயர்ந்து செல்வதை எல்லோரும் அறிவர். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித் துறைக்குத் தலைவராகிப் பெருமை பெற்றுப் பல்கலைக்கழகச் சமூகத்தையே தலை நிமிர வைத்த பெருமை மணிவிழாக் காணும் நாயகன் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களையே சாரும்.

சமூகத்தில் பல துறை சார்ந்த அமைப்புக்களிலே அவர் ஆற்றிவரும் பணிகளும் அளப்பெரியன. பாடசாலை அபிவிருத்தி அமைப்புக்கள், ஆலயச் சொற்பொழிவுகள், சமயப் பணிகள், நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் ஆலயப்பணிகளை மரபுவழி நின்று நடாத்துவது, தனது பல்கலைக்கழக மணிநேரம் தவிர ஏனைய நேரங்களில் அவர் ஆற்றும்

பொதுத் தொண்டுகள் யாவும், ''தயையும் கொடையும்'' பிறவிக் குணம் என்னும் சான்றோர் வாக்கு என்பதற்கிணங்க இவையாவும் முற்றிலும் மணிவிழா நாயகனாகிய கனகசபாபதி நாகேஸ்ரவன் அவர்களுக்கே பொருத்தமானது.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்'' என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய அவரது மனைவி பிள்ளைகள் இன்முகத்தோடு பழகுவதும் உதவி மனப்பாங்கான உள்ளத்தைக் கொண்டிருப்பதும் மணி விழா நாயகனது நல்லதொரு குடும்பம் என்பதற்குச் சான்று பகிர்கிறது. பெற்றோரைப் பேணி, உறவுகளைப் பேணி, சுற்றத்தாரைப் பேணித் தன்னை நாடி வருபவர்களைப் பேணி வாழும் மனிதருள் மாணிக்கம் என்றால் மிகையாகாது.

மலர் தலை ஞாலத்து மன்னுயிர்க்கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது

என்ற பூதங் குன்றனார் கூற்றுக்கமைய தன்னலம் கருதா மண்ணலம் கருதி நன்னலம் செய்து வருகின்ற மணிவிழா நாயகன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நல்ல பணிகள் மேலும் வளரவும் மணிவிழா நாயகனது பணிகள் மேலும் உயரவும் எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

''மொழியருவி'', ''சிவநேயச்செல்வர்'', ''தேவி உபாசகர்''
லயன். ஐ. கோ. சந்திரசேகரம், J.P
பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரி,
யாழ்.பல்கலைக்கழகம்.



வாழ்க நீ எம்மான்

நயினைத் திருநாட்டின் தவப்புதல்வன் வாகீச கலாநிதி டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை; அகவை அறுபதில் வாத்துகின்ற பெரும் பேறு கிடைத்தமைக்கு மிக மகிழ்ந்து இறும்பூது எய்துகிறேன். நயினை மண்ணிலே வளர்ந்து, வானுற ஓங்கி, நிமிர்ந்து, வைரம் பாய்ந்து நிற்கின்ற கற்பக தருக்களைப் (பனை) பார்க்கிறேன். அவை நூறாண்டு காலமாக வாழ்ந்து கொடிருக்கின்றன. சாமானியமாக வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. தாம் பிறந்த மண்ணிற்கும் அங்கு வாழும் மக்களுக்கும் பயன் பல தந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய ஒரு கற்பக தரு போன்றவர் அன்பு மகன் கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள். அறுபது ஆண்டு மணிவிழாக் காணும் அவர் நூறாண்டு காலம் வாழ வேண்டும். தமிழ் மொழிக்கும், தாய் நாட்டிற்கும், அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணிக்கும் பயன்தரு தொண்டுகள் பல செய்து பேறும் பெருவாழ்வும் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். அவர்புகழ் வானுற ஓங்கி, வைரம் பாய்ந்து நீடூழி வாழ வேண்டி அன்னையை இறைஞ்சுகிறேன்.

இரு மரபும் தூய தமிழ் மரபில் வந்தவர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். தந்தை வழிப் புலமையும், புராண இதிகாச அறிவும் நிறைந்த அறிவுப் பரம்பரை. தாய்வழி வீரமும், வேளாண்மையும், வாணிபமும் நிறைந்த ஆற்றல் மிகுந்த வீரப்பரம்பரை, எனவே ஈன்று புறம்தந்த தாய் கோகிலாம்பாள் அம்மையாரும்; சான்றோன் ஆக்கிய தந்தை கனகசபாபதி அவர்களும்: சங்கத் தமிழர் இல்லற மரபு தவறாமல் கலாநிதி அவர்களை வளர்த்து விட்டிருக்கிறார்கள். எனவே நாகேஸ்வரன் அவர்கள் சான்றான்மை மிக்க பேராசான்; இனிய தமிழ் எழுத்தாளன்; சிறந்த பேச்சாளன்; பண்ணோடு இசை பாடும் நாவுக்கரசன்; மரபுவழி வந்த நாகபூஷணித் தொண்டன், இனம் தழுவிய பண்பாளன், இன்னும் எத்தனையோ கூறமுடியும். இத்தனை சீலங்களும் சிறப்புற அமைந்த என் அன்பு மகன் கலாநிதி நாகேஸ்வரன் அவர்களை நிறைந்த தாய்மை அன்புடன் உளம்மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

"வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுறா வகையில் தமிழர் நாம் வாழ வேண்டில்
ஆழிசூழ் நயினை மாதா அருந்தவப்புதல்வ நீயும்
ஊழி ஏழ் ஊழி காலம் உண்டென வாழ்தி மன்ன!"

திருமதி. தவமணி சபாநாதன்
ஓய்வுநிலை அதிபர்.



அம்மனின் அருட்சக்திபற்றி எங்கும் ஒலிக்கும் குரல்

மணிவிழா நாயகன் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது மணிவிழா சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் பொழுது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருட்காட்சி நினைவு வருகிறது. எமக்கெல்லாம் துன்பம், கஷ்டம் வரும் பொழுது அம்மாவிடம் கஷ்டப்பட்டு சென்று அடிபணிந்த பொழுது போக்கியுள்ளார்.

இவர் முனைவர், கல்விமான், வாகீச கலாநிதி, அருட்கலைமாணி, இவையாவும் அவர் அம்பிகைக்கு மரபு வழி அறங்காவலர் பணி செய்து பெற்ற அருட்பேறு. அவவின் உற்வசவக் காலங்களில் கனகசபாபதி நாகேஸ்வரன் குரல் அம்மனின் அருட்சக்தி பற்றி எங்கும் ஒலிக்கும்.

இவர் தமிழ் விரிவுரையாளர்கள் தமிழ் பகுதியை வேண்டி நியமனத்திற்கு அடிப்பட்ட காலங்களில் தனது தனித் தன்மையை வெளிப்படுத்த சிங்களப் பகுதியில் உள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேவைக்கு, தேர்ந்தெடுத்துக் கொண்டார். அங்கு மொழித்துறையின் தலைவருமானார். மொழியியலில் தமிழ் மொழியை சிங்கள மொழியுடன் இணைத்து ஆய சந்தர்ப்பமும் கிடைத்தது. பல நூல்களையும் கட்டுரைகளையும் ஆக்கித் தமிழ் உலகிற்கு உதவியுள்ளார்.

அவரிடம் பயின்று பட்டதாரிளான பலர் பட்டதாரி ஆசிரியர்களாக எங்கள் பாடசாலைகளில் கற்பித்து வருகின்றமை அவரது சேவையின் வெளிப்பாடு. மணிவிழா காணும் மணிநாயகனுக்கு பாராட்டும், வாழ்த்துக்களும்.

DR. S. N. **தணிகாசலம் பிள்ளை** Phd in Ed
SLEAS Class I, Dip.in.Ed, Dip.in.Ed.Mangt.
Senior Consultant, Ministry of Education
Isurupaya, Battaramulla.



பல்துறை விற்பன்னர்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் உயர்ந்த கல்விப் பாரம்பரியத்தின் வழிவந்த ஒரு தமிழ் அறிஞராவார். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீனகர்த்தா அமரர் பரமலிங்கம் கந்தசாமி அமரர் வரகவி நாகமணிப்புலவர் நாகரெத்தினம் தம்பதியினரின் அன்புப் பூட்டனாருமாவார். இறையுணர்வும் தமிழ் அறிவும் இவரிடம் ஒன்றிணைந்து வளர்ந்து வரலாயிற்று. பள்ளிப்பருவத்திலேயே தமிழ் நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் பங்குகொண்டு பரிசில்கள் பல பெற்று வந்தார். நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம் நடத்திய தனது பத்தாவது கட்டுரைப் போட்டியில் இவர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்து கலாநிதிப்பட்டம் பெறுவதற்கு எமது மன்றமும் ஒரு காரணமாக இருந்தது என்பதை எண்ணும்போது எமக்குப் பெருமையாகவுள்ளது. 2012ஆம் ஆண்டு எமது மன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட 'பொற்றாமரை' என்னும் மலரில் 'மணிபல்லவம்' என்பது நயினாதீவையே குறிக்கும் என்பதை பல இலக்கியச் சான்றுகளைக் கொண்டு நிறுவியுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நயினாதீவிலிருந்து முதன் முதலில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பதவி வகித்த பெருமை இவரையே சாரும். அத்துடன் இலங்கை வானொலியில் நேர்முக வர்ணனையாளராகவும், சமய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்ட பெருமைக்குரியவர். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக இருந்து வரும் வேளை இவரது மாணவர்கள் அவரது மணிவிழாவைக் கொண்டாடுவது பாராட்டுக்குரியது.

இவர் ஒரு சிறந்த கட்டுரையாளராக, கவிஞராக, விமர்சகராக, வில்லுப்பாட்டுக் கலைஞராக, கதாகாலட்சேப வித்தகராக, சமயப் பிரசாரகராக, திருமந்திர விளக்கம் கூறுபவராகத் திகழ்ந்து தான் ஒரு பல்துறை விற்பன்னர் என்பதை நிறுவியுள்ளார். மணிவிழாக் கொண்டாடும் இவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றுவதற்கு இறையருள் துணை நிற்க வேண்டுமென வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க வையகம். வாழ்க வளமுடன்!

ப. க. மகாதேவா, B. A
(ஓய்வு பெற்ற தபாலதிபர்), நயினாதீவு.
21A, 3/3 வண்டர்வேர்ட் இடம், தெகிவளை.



பணிவோடு கூடிய மரியாதை மிக்கவர்

யினைவர், வாகீச கலாநிதி அருட்கலைமாமணி உயர்திரு கனகசபாபதி நகேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்கள் நயினை மண்ணின் பெருமைக்குரிய பெருமக்களில் ஒருவர். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையின் பரம்பரை உறுப்பினரும், நயினை நாகமணிப் புலவரின் வழித்தோன்றலும் ஆவார். இவரது தந்தையார் கந்தசாமி கனகசபாபதி அவர்களும் கல்விப்பணியாற்றிய ஓர் நல்லாசிரியர். எனவே கல்வியறிவும் ஒழுக்கமும் இவருக்கு பரம்பரை ஊற்றாகக் கிடைத்தது என்றால் மிகையாகாது.

இனிமையான குரல்வளம் இயல்பாகவே அமையப்பெற்றவர். எந்த விடயமானாலும் அது பற்றிப் பலமணிநேரம் ஆற்றொழுக்கமாகப் பேசக்கூடிய ஆற்றல் உடையவர். பல ஆலயங்களில் தொடர் சொற்பொழிவுகளை ஆற்றி வருகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் என்பவற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றிப் பல நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பட்டதாரிகளாக்கிய பெருமைக்குரியவர். இலங்கை வானொலியில் கடமையாற்றிய காலத்திலும் அதற்குப் பின்பும் ஆலயத் திருவிழாக்களில் அவரது நேரடி வர்ணனையின் சிறப்பால் பல்லாயிரக்கணக்கான அபிமானிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளார். இவர் பல நூற்றுக்கணக்கான பயன்தரு கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை கருத்தாழமும், ஆய்வுப் பாங்கும் ஆதாரபூர்வமானவையாகவும் அமைந்துள்ளதை, கட்டுரைகள் வாசிக்கும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தன்னைச் சிறு வயது முதல் கற்பித்த சகல ஆசிரியர்களையும் மனத்திருத்தி வாழ்வதையும் அவர்களை அணுகி பணிவோடு மரியாதை செய்வதையும் நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். ஆசிரியர்களிடத்தும், பெரியவர்களிடத்தும் அவர் காட்டும் பணிவோடு கூடிய மரியாதை அனைத்து மாணவர்களாலும், இளையோராலும் பின்பற்றப்பட வேண்டிய நற்பண்பாகும். அண்மையில் மகாஜனாக் கல்லூரியில் தமக்கு கற்பித்த நல்லாசிரியர் திரு. ச. விநாயகரத்தினம் அவர்களுக்குத் தனது தலைமையில் ஒரு பெருவிழா எடுத்திருந்ததையும் இங்கு குறிப்பிடலாம்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" என்பது வள்ளுவர் வாக்கு.

மணிவிழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது கல்விப்பணிகள், சமூகப்பணிகள் சிறப்புறவும், அவருக்கும் குடும்பத்தினருக்கும் சகல நலன்களும் பெருகவும் எமது நல் வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கிறோம்.

சோ. தில்லைநாதன், J. P
ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நயினாதீவு.



வரலாற்றுப் பெருமை மிக்க சாதனையாளர்



"கல்விப்பணியே கடவுட்பணி" என்ற நல்வார்த்தைக் கிணங்க, கல்விப்பணி ஆற்றுகின்ற நல்லறிஞர்களைத் தருகின்ற புண்ணிய பூமியாகத் திகழ்கிறது நயினாதீவு. மாண்புடைய மனிதனாக உயரிய நெறியில் நின்று வாழ விரும்புகின்ற பல அறிஞர்களின் வாழ்வு ஏனைய மக்களுக்கெல்லாம் ஒரு பாடமாகவும், வழிகாட்டுதலாகவும் அமைகிறது. இத்தகைய நன்னெறிகளிலும், அறநெறிகளிலும், சமயப்பணிகளிலும், சமூகப்பணிகளிலும், கல்விப்பணிகளிலும் தன்னை முழுமையாக நிலை நிறுத்தி, நயினை மக்களின் மனங்களில் மட்டுமல்லாது, ஆன்ம நேயச் செல்வர்கள் கல்வியாளர்கள் மனங்களிலும் நிலைபெற்று வாழ்கின்ற பெருமை உடையவராக வாழ்ந்து வருபவர் மணிவிழா நாயகன் – முனைவர், வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், எம். ஏ., பி.எச்.டி அவர்கள்.

தொன்மையான சைவத்தையும், தமிழையும் வளர்த்து வருகின்ற இடமாக இத்தீவு அன்றும், இன்றும் இருந்து வருகிறது. இப்பெருமை மிகு புண்ணிய பூமியில் எழுத்தருளியுள்ள அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் மரபுவழி பரம்பரை வழித் தோன்றலாக உதித்தவர் ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி அவர்கள். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அம்பாளின் தொண்டனாகவும், மரபுவழி பரம்பரை அறங்காவலராகவும் பணியாற்றி வந்துள்ளார். இவரது மூத்த புதல்வனாக உதித்தவர் கலைமாமணி கந்தசாமி – கனகசபாபதி அவர்கள். பல்லாண்டு காலம் மரபு வழி அறங்காவலராக அம்பாளுக்குத் தொண்டுகள் பல புரிந்துள்ளார். கலைமாமணி கந்தசாமி கனகசபாபதி அவர்களுக்கும், வித்துவாட்டி சுந்தரம்பிள்ளை – கோகிலாம்பாள் கனகசபாபதி அவர்களுக்கும் மூத்த புதல்வனாகத் தோன்றியவர் வாகீச கலாநிதி – கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். இன்றும் அம்பாளின் மரபு வழி பரம்பரை அறங்காவலராக அம்பாளுக்குத் தொண்டுகள் பல ஆற்றிவருகிறார்.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைவாக, புகழ்பெற்ற தமிழறிஞராகவும், எழுத்தாளராகவும், பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளராகவும், சொற்பொழிவாளராகவும் டாக்டர், வாகீச கலாநிதி கனகசபாபதி – நாகேஸ்வரன் அவர்கள் விளங்குகிறார். யாழ் பல்கலைக்கழகத்தில்

சிறப்புக் கலைமாணிப் பட்டம், முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்று, அறிஞர்களின் வழி காட்டலில் கல்வியில் உயர்நிலை அடைந்து, தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

இலக்கிய ஆய்வாளராக, சமயப் பணியாளராக, கவிஞராக, சிறந்த கல்விமானாக, பண்ணிசைச் செல்வராக, நேர்முக வர்ணனையாளராக, கலைஞராக, சொற்பொழிவாளராகப் பல்வேறுபட்ட ஆளுமைகள் கொண்டவராகச் சிறந்து விளங்கிவருகிறார். இவரது பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் இலக்கியச் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. அதுமட்டுமல்லாது – எழுத்துத் துறையிலும், பேச்சுத்துறையிலும் இவர் இன்று புகழுடன் விளங்குவதுடன், தமிழ், சமயத்துறைகளிலே மிகுந்த ஆர்வம் கொண்டு, ஆய்வுகள் நிகழ்த்தி ஆய்வுத் துறையிலே கணிசமான பங்களிப்பைச் செய்து வருகிறார். பேராதனைப் பல்கலையில் தமிழ்துறையில் ஆய்வுகளை நிகழ்த்தி கலாநிதி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் கூறும் நல்லுலகிற்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சத்தினால் தோற்றம் பெற்ற ஒப்பில்லாத பேரறிஞர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் என்றால் அது மிகையாகாது. பிறந்த மண்ணுக்கு மங்காப் புகழ் தேடித்தந்து கொண்டு, அவையத்துள் சிறப்புடன் செழிப்புடன் வாழ்கிறார். அம்பிகையின் மரபுவழி பரம்பரை அறங்காவலராக அம்பிகைக்குத் தொண்டுகள் புரிந்து வருகின்ற வாகீசகலாநிதி டாக்டர் கனகசபாபதி – நாகேஸ்வரன் அவர்களுக்கு அம்பாளின் அருட்கடாட்சம் என்றென்றும் கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மணிவிழா நாயகன் வாகீச கலாநிதி, முனைவர் கனகசபாபதி – நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாச் சிறக்க வேண்டும். இன்றும் வளங்கள் பல பெற்று, சீரும் சிறப்புமாக, வாழ வேண்டும். நயினை அம்பாள் அருள் சுரக்க வேண்டும் என நெஞ்சார வாழ்த்தி, நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பணிகள் தொடரவும் வளரவும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

"சிவநெறிச் செல்வர்,

நாகநாதர் - கணபதிப்பிள்ளை குமாரசூரியர், ஜே. பி.

ஓய்வுநிலை அஞ்சலதிபர்,

முன்னாள் செயலாளர்,

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு.



"நயினையின் மைந்தன்" கலாநிதி கனக – நாகேஸ்வரன்

ஒரு பன்முகப் பார்வை

மணி விழாக் காணும் நயினையின் மைந்தன் கலாநிதி. கனக. நாகேஸ்வரன் அவர்கள் பல்கலைக் கழகத்திலே முதுநிலை விரிவுரையாளர். சப்ரகமுவ – பல்கலைக்கழகத்திலே மொழித்துறை முன்னாட் தலைவர். வருடா வருடம் பலநூறு மாணவர்கள் மொழிவளம் மிக்கவர்களாக, பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிச் சமூகத்தில் நுழைகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இவர் முதுநிலை விரிவுரையாளராய் விரிவுரையாற்றி முழுநிலைப் படுத்திய ஆசான். தமிழ்மொழியிலே மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். பல்கலைக்கழக மாணவர்களை வளப்படுத்துவதற்கான விரிவுரை நுணுக்கங்கள் பலவற்றைத் தனதாக்கிக் கொண்டவர். பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு இருக்க வேண்டிய தொழிற்றகைமையும், கல்வித்தகைமையும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பவர். இது அவருடைய தொழில் சார்ந்த ஆளுமையின் வெளிப்பாடு, பல்கலைக்கழகம் சார்ந்த சமூகம் கலாநிதி கனக. நாகேஸ்வரன் அவர்களை இவ்வாறுதான் சிந்திக்கிறது. இதுவும் அவரைப் பற்றிய ஒரு சரியான கணிப்பீடுதான்.

கலாநிதி கனக. நாகேஸ்வரன் இன்று தமிழ் பேசும் சமுகத்தின் மூலை முடுக்கெல்லாம் பெருமையாகப் பேசப்படக்கூடிய ஒரு தமிழறிஞன். நான் அவருடைய ஆளுமைப் பண்புகளுக்கு மிகுந்த மதிப்பளிப்பவள். விரிவுரையாளர் என்ற தொழிற்றகைமையை விருத்தி செய்வதுடன் மட்டும் நின்று தனது ஆற்றலை அவர் மட்டுப்படுத்திவிடவில்லை. மொழி, பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம் சார்ந்த பல துறைகளிலும் அவர் சிறப்புத்தேர்ச்சி பெற்றிருக்கிறார். சமுகத்தில் பல்வேறுபட்ட களங்களிலே அவரின் தடம் பதிந்திருக்கிறது.

ஒரு சிறந்த ஊடகவியலாளனாக நான் அவரின் ஆற்றலைப் புரிந்து கொண்டிருக்கிறேன். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இலத்திரனியல் ஊடகத்திலே அவருடன் நான் இணைந்து தொழிற்பட்டிருக்கிறேன். இலங்கை வானொளி தமிழ்ச் சேவையிலே இந்து சமய நிகழ்ச்சிகள் பலவற்றிலே இணைந்து செயற்பட்டு நல்ல விடயங்களை வழங்கியிருக்கிறோம். வாராந்த நிகழ்ச்சிகளிலே சமயம் சார்ந்த, இறைசிந்தனையோடு கூடிய பல நிகழ்ச்சிகளை அவர் செய்திருக்கிறார். வில்லிசையாக, காதகாலட்சேபமாக, சமயப்பேச்சாக, பண்ணோடு இசைபாடும் பண்ணிசையாளனாக, பக்திப்பாடல் வல்லவனாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வளாகத்துக்குள்ளேஅவரது ஆளுமைகள் பல்வேறு வடிவிலே வெளிப்பட்டு வானலைகளின்

ஊடாக எல்லோருடைய செவிக்குள்ளும் நுழைந்திருக்கிறார். இது ஒரு பார்வை. ஆலய கும்பாபிஷேகங்கள், ரத உற்வசவங்கள் போன்ற நிகழ்வுகளை அடியவர்களுடைய செவிக்குள் நேரடியாக கொண்டு செல்லும் நேரலை நிகழ்ச்சிகளிலே அவர் இறையம்சங்களை பக்தியுணர்வுடன் வெளிப்படுத்தும் நேரடி வர்ணனையாளராக இன்றும் சேவை புரிகிறார். கண்களால் நேரடியாகக் கண்டு உணரமுடியாதத் தெய்வீகக் சாட்சிகளை மக்கள் மனதிலே கொண்டு சென்று அகக்காட்சியாகப் புலப்படுத்தக் கூடிய சமய அறிவும் மொழிவளமும் அவருக்கு இருக்கிறன. அவர் பற்றிய மற்றொரு பார்வை இது. வானொலியிலே சமயம் சார்ந்த கருத்துக்களிலே கருத்தாடல் செய்யும் பொழுது புதிய புதிய கருத்துகள் அவரிடமிருந்து வெளிவருவது வழக்கம். அப்பொழுது அவருடைய சமய இலக்கியங்களிலுள்ள புலமை வெளிப்படும் சமய இலக்கியப் பாடல்களை, திருமுறைகளை இசைக்கும் பொழுது முறைசார்ந்த பண்முறைசார் அறிவு அவரிடமிருந்து புலப்படும். இவையெல்லாம் நான் நேரடியாக அவரிடமிருந்து உணர்ந்து கொண்ட உண்மைகள்.

செவிப்புல ஊடகங்களுக்கு மட்டுமல்ல கட்புல செவிப்புல ஊடகமான தொலைக்காட்சி சேவைகளுக்கும் அவரது பார்வை திரும்பியிருக்கிறது. காலைப்பொழுதிலே தொலைக்காட்சி (சக்தி, வர்ணம் தொலைக்காட்சிகள்) பெட்டியை இயங்கவைத்தால் சமயசிந்தனைகளின் போதனைகளை வெளிப்படுத்தி முன்தோன்றுபவர் கனக. நாகேஸ்வரன் அவர்கள் தான். இவையெல்லாம் சமயம் சார் சமுகத்திற்குச் செய்யும் பெரும் தொண்டல்லவா? ஊடகங்களில் அவர் இணைந்து கொள்கின்ற பொழுது அவரது சேவை அளப்பரியது. பல்வேறு மட்டத்தினருக்கும் அவர்களுடைய மனதை இதப்படுத்துகின்ற இறை செய்திகளை நேரடியாகக் கொண்டு செல்வதென்பது இறை புண்ணியச் செயலல்லவா? அதை அவர் செய்து வருகிறார்.

இவற்றை விட, கனக. நாகேஸ்வரன் செய்த மிகப் பெரிய சேவையொன்றை இங்கு மனங்கொள்ளவேண்டும். சற்றேறக்குறைய இருவருடங்களுக்கு முன்னர் புத்தசாசன அமைச்சினுடைய வேண்டுகோளுக்கமைய தடை முகாம்களிலே வவுனியா நகரிலே புனர்வாழ்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்ப் பிள்ளைகளுடைய ஆன்மீக வளர்ச்சிக்கான செயற்திட்டம் ஒன்றினை நானும் நாகேஸ்வரனுமாகச் சேர்ந்திருந்து நிறைவு செய்தோம். நான்கு, ஐந்து முகாம்களிலே தமது காலங்களைக் கழித்துக் கொண்டிருந்த மாணவர்களை அவரவர் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டோம். அப்பொழுது அவர்களுடன் சேர்ந்து மகிழ்ந்து பல சமயம் சார் அறிவுரைகளை வழங்கி, சமுதாயப் பொருத்தப்பாட்டிற்கான விடயங்களை சமய இலக்கியங்களினூடாக உதாரணங்களுடன் இதமாக வழங்கி மகிழ்வித்தோம். இக்கடமைகளைத் தொடர்ந்து மூன்று நாட்கள் அங்கேயே தங்கி இருந்து நிறைவேற்றினோம். உண்மையில் வேதனைப்பட்டிருக்கும் உள்ளங்களுக்கு நாங்கள் கொடுத்த ஆறுதல் மருந்தாக அமைந்தது. இது ஒரு மாபெரும் சமுதாய சேவை. இதற்காகத் தன்னை அற்பணித்து சேவை செய்தவர் இன்று அகவை அறுபதில் கால் பதித்திருக்கும் தமிழ் அறிஞன் கனக. நாகேஸ்வரன் அவர்கள் தமிழ்ச் சமுகத்திற்கான அளப்பரிய சேவை இது.

கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பாடசாலை மட்ட விழாக்களிலே பிரதம விருந்தினராக அழைத்து கௌரவிக்கப்படுகின்ற பொழுது அவர் மாணவ மட்டத்திற்கு இறங்கி வந்து

அவர்களின் மனதை ஈர்க்கின்ற வகையிலே கூறும் கருத்துகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. மாணவர்கள் தம்மைத்தாமே உணர்ந்து கொண்டு சுயமதிப்பீடு செய்து திருத்திக்கொள்வதற்கு அவருடைய கருத்துகள் உதவிசெய்கின்றன. அதுமட்டுமல்ல ஆலய விழாக்களிலே சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலே அவர் முன்வைக்கின்ற ஆன்மீகச் செய்திகள் பல உள்ளங்களுக்கு இதமளித்திருக்கின்றன. சாதாரணமாக யாழ் மண்ணின் பாரம் பரிய பழக்கவழக்கங்களை உதாரணம் காட்டி இலகு தமிழிலே பேசுகின்ற பொழுது கேட்பவர்கள் அனைவரும் மெய்மறந்து இருக்கும் நிலையை நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். சபையறிந்து மொழியைப் பாவிக்கும் திறன் அவருடைய ஆழ்ந்த அனுபவ முதிர்வினால்தான் வெளிப்படுகின்றது என்பதை தெளிந்து கொண்டிருக்கிறேன்.

நயினை அம்பாளின் பாதம் பணிந்து பாலனாகத் தமிழ்படித்தவர் நயினையிலே பக்திப் பாடல்கள் பல பாடி தமிழை நாவிற்கு பழக்கியவர் சிறுவயதினிலே அது அன்று; நயினையம்பதிக்கே பெருமை சேர்க்கும் தமிழ் ஆசான்களிலே பெரிதாகப் பேசப்படுபவர் நாகேஸ்வரன் அவர்கள். இது இன்று.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே உயர்கல்வி கற்கின்றபொழுது நயினையிலே பழகிய தமிழ் பல்வேறு வடிவங்களிலே கல்லூரியிலே வெளிப்பட்டு நாகேஸ்வரனைச் சிறந்த தமிழ் மாணவனாக இனங்காட்டியது. கவிதைக் களத்திலே அவன் ஒரு கவிஞன், சொல்லாடல் மேடையிலே சொற்போர் வல்லான், மேடைச்பேச்சாளன், இசைக் களத்திலே தாள, சுருதி சுத்தமாகப் பாடக்கூடிய இசைக்கலைஞன். இப்படிப் பல்வேறு தகைமையையும் பெற்று மகாஜனாவின் சிறந்த உயர்தர மாணவனாகப் பேசப்பட்ட காலம் ஒன்று இருந்தது அன்று. அது மகாஜனாவின் பொற்காலம்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்திலே கால் பதித்தபோது அவரது திறமைகள் மேலும் பல பரிமாணங்களைப் பெற்றன. பேராசிரியர், கலாநிதி சி. மௌனகுரு அவர்களினால் நெறியாழ்கை செய்யப்பட்ட மகாகவியின் புதியதொரு வீடு நாடகத்திலே முக்கிய பாத்திரமேற்று நடித்து நடிப்புத்துறையிலே நாடக உலகில் நுழைந்தார். காத்தான் கூத்திலே இணைந்ததனால் கிராமியக்கலைகளுடன் சங்கமித்தார். எந்தத் துறைகளுடனும் இணைந்து கொள்கின்ற பொழுதும் அவற்றுடன் ஒன்றித்து நின்று விடுகின்ற தன்மை அவருடைய தகுதிக்கான அடையாளமாகப் பேசப்பட்டது. இன்றும் கூட தமிழ் உலகம் அப்படித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

எனது சகோதரன் பேராசிரியர், கலாநிதி – நா. சுப்பிரமணிய ஐயர் (முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் – யாழ். பல்கலைக்கழகம்) அவர்களுடைய சிறந்த மாணவன். எனது வீட்டுடன் நெருங்கிப் பழகியிருக்கிறார். இன்றும் கூட அந்தப் பழக்கம் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. இன்று அவர் பல தமிழ் அறிஞர்களை உருவாக்கி சமுதாயத்துக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறாக, கலாநிதி கனக – நாகேஸ்வரன் அவர்களை ஒரு சமுதாய மனிதனாக ஒவ்வொருவரும் சிந்திக்கின்ற ஒரு நிலைக்கு அவர் உயர்ந்திருக்கிறார் எனின் அவருக்கு

அம்பாளின் திருவருள் நிறையக் கிடைக்கிறது. மண்ணுக்குப் பெருமை சேர்த்த ஒரு மாமனிதன் நாகேஸ்வரன். இப்படியெல்லாம் சிறுவயதிலிருந்து தமிழ்ப்புலமையின் பல பரிமாணங்களை நாகேஸ்வரனிடம் சமுகம் காண்கிறது என்றால் அதற்கான காரணங்களில் முக்கியயமானது அவருடைய சமுகத் தொடர்பாடல் சிறப்பு. சிரித்தமுகம், அகன்ற பார்வை கறுத்துச் செழித்து நெளியாகப் பதிந்து வாரி அடக்கிய கேசம். உறுப்பமைவு கொண்ட முகவடிவம், நெற்றியியே விபூதி, சந்தனம், தெய்வீகக்களையுடனான அவரது தோற்றம், மென்மையாக, சிரிக்கச் சிரிக்கப் பேசுகின்ற மொழிப்பரிமாற்றம், எவரையும் சோர்ந்திருக்கவிடாது உற்சாகமூட்டும் அவரது சொற்களின் கோர்வை. இவை எல்லாமே அவரின் சமுதாய மயமாக்கற் பண்பு வளர்ச்சிக்கான முதற்காரணிகளாகவும், உபகாரணிகளாகவும் அமைந்திருக்கின்றன எனில் அதுதான் உண்மை.

இன்று அவருக்கு வயது அறுபது என்று சிந்திப்பதற்கு எனக்கு மனம் துணியவில்லை. ஏனெனில் வேகமும் விவேகமும் கொண்ட அவரது செயற்பாடுகள் நடத்தைப் பண்புகள் யாவும் அவரை மணிவிழா நாயகனாக சிந்திக்கும் துணிவைத் தரவில்லை.

ஆக, மணிவிழா நாயகனின் தொடர்ந்து வருகின்ற காலங்கள், இதுவரை அவரிடமிருந்து வெளிவராதிருந்த பல ஆளுமைப் பண்புகளை வெளிக்கொண்டுவரக் கூடிய சந்தர்ப்பங்களை அவருக்கு வழங்கக் கூடியதாக அமைய வேண்டும். அதற்கு அம்பாள் ஸ்ரீ நாக பூஷணியின் அருட்காட்சம் அவருக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கிறேன்.

திருமதி ஹேமா - சண்முகசர்மா
ஆசிரிய ஆலோசகர்,
கல்வி வலயம், கொழும்பு.



என் மனதில் மலர்ந்தவை.....

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின்

சாதாரணமாக ஒரு மனிதன் அறபதாவது அகவையை அடைவதென்பதொன்றும் பெரிய விடயமல்ல. ஆனால் கல்வி, கேள்விகளில் உயர்ந்து, சமூகப்பணிகளிற் சிறந்து, குடும்ப வாழ்க்கையில் வெற்றியடைந்த நிலையில் அறுபதாவது அகவையை அடைவதென்பது பெருமைப்படத்தக்க, பாராட்டுக்குரிய விடயமாகவும், வாழ்த்தி வணங்கத்தக்க விடயமாகவும் எம்மால் கருதப்படுகிறது. அந்தவகையில் தனது அறுபதாவது அகவையை எட்டியிருக்கும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு முதற்கண் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியில் உயர்ந்து, கலாநிதிப்பட்டம் பெற்றுப், பல்வேறு பதவிகளை வகித்து, இன்று சபரகமுவ பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், இணைப்பாளராகவும் கடமையாற்றும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் பல நூல்களுக்கு ஆசிரியராக இருப்பதுடன், பல கட்டுரைகளையும், ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சமய நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலும், கதாகாலட்சேபம் செய்வதிலும் வல்லவர். இலக்கிய மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் கலந்து கொள்ளுவதிலும் மிக்க ஆர்வமுடையவர்.

சரஸ்வதிகடாட்சம் நிறைந்தவர். நினைவாற்றல், பேச்சாற்றல், இசைஞானம், விடாமுயற்சி, பிறருக்கு உதவும் தயாளகுணம் போன்ற இன்னோரன்ன பண்புகளைக் கொண்டவர்.

நினைவாற்றல் கைகொடுக்க, பேச்சாற்றல் எந்தச் சபையையும் வென்றுவரக்கூடிய திறமையும், எந்தச் சபையிலும் எதனையும் துணிந்து கூறக்கூடிய ஆற்றலுங் கொண்டவர். இதனால் தமது முன்னேற்றங்கள் சிலவற்றை இழந்துள்ளதுடன், மறைமுக எதிர்ப்புகளுக்கு ஆளான சம்பவங்களும் உண்டு.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்

என்னும் வள்ளுவப் பெருந்தகையினுடைய வாக்கை மெய்ப்பிக்கின்ற இயல்பு எல்லோரிடமும் அமைந்துவிடுவதில்லை. அவ்வாறு அமையப்பெற்றவர்களுள் கலாநிதி

கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும் ஒருவர். உடல் ரீதியாகப் பல்வேறு உபாதைகளை அவர் அனுபவித்தாலும் தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளிலிருந்து ஒருபோதும் பின்னின்றதில்லை.

தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்களாக இருக்கட்டும், தான் பணிபுரியும் இடத்தில் சிற்றூழியர்களாக இருக்கட்டும், உயர் அதிகாரிகளாக இருக்கட்டும் உதவி என்று வரும்பொழுது பயன்கருதாது, எந்தவித இழுத்தடிப்புகளுமின்றித் தன்னாலான உதவிகளை விரைந்து செய்யக்கூடியவர்.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தமது அறுபதாவது அகவையை அடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அவரிடம் காணப்படும் இச்சிறந்த பண்புகளை நினைவுகூருவதுடன், அவரும் அவரது குடும்பத்தினரும் வளமுடனும், ஆரோக்கியமாகவும் வாழ இறைவனைப் பிரார்த்திப்பதோடு மீண்டும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. தேவகுமாரி சுந்தரராஜன்
B.A (Hons), M. Phil (Pera)
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
சபரகமுவ பல்கலைக்கழகம்.



சிறந்த வளவாளர்



1999இல் அரசசேவையிலிருந்து நான் ஓய்வு பெற்றபின் இன்றுவரை கொழும்பில் இருக்கும் காலங்களில் வெள்ளவத்தையில் நடக்கும் எனக்குப் பிடித்தமான இலக்கியக் கூட்டங்களில் ஓர் இலக்கிய ஆர்வலராகப் பங்குபற்றுவதுண்டு. இந்தக் காலப்பகுதியில் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் சொற்பொழிவுகளைக் கேட்டுள்ளேன். அவற்றில் விடய ஞானம், தர்க்கரீதியாக விளக்கும் பேச்சுத்திறன் அத்துடன் பண்ணிசையோடு தேவாரம் பாடும் இன்னிசையையும் கேட்டு மகிழ்ந்து அவரைப் பாராட்டி நட்புறவுடன் பழகிக் கொண்டேன்.

2012, ஒக்டோபர் மாதம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நான்குநாள் ஆய்வரங்கில் இறுதிநாள் மாலை நண்பன் நாகேஸ்வரன் என்னை அணுகி டிசம்பரில் தனக்கு நடத்தப் பெற இருக்கும் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி தர வேண்டும் என பணிவுடன் கேட்டார். இவரது மேடைப் பேச்சுகள் மூலம் இவருள் நிறையத் திறமைகள் பொதிந்துள்ளன என ஏற்கனவே ஊகித்துக் கொண்ட நான் இவ்வேண்டுகோளை மறுக்கவில்லை. ஆனால், மணிவிழாக் காணும் இவருக்கு வாழ்த்துச் செய்தி எழுத உதவியாக அவரது பிரதான ஆக்கங்கள் ஏனைய திறமைகள் பற்றி எனக்கு அறியத் தரும்படி கேட்டேன். இரு வாரங்களுள் எனக்குக் கிடைத்த அத்தகவல்கள் முழுவதையும் வாசித்துப் பெருமிதமடைந்தேன். எனது ஊகமும் பிழைக்கவில்லை. எனவே ஈழத்து மண்ணில் (நயினாதீவு) பிறந்து வாழ்ந்து தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் எழுபதுகளிலிருந்து பெரும்பணி புரிந்துள்ள இந்தக் கல்விமானின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு மனமுவந்து ஒரு வாழ்த்துச் செய்தியை எழுத மனங்கொண்டேன்.

நண்பன் நாகேஸ்வரன் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் தலைசிறந்த பேராசிரியர்களிடம் தமிழிலக்கியம், சரித்திரம் ஆகிய முக்கியமான பாடங்களை விரிவாகக் கற்றதே இவருக்கு உந்து சக்தியாக இருந்துள்ளது. அதனை அவரே தனது நன்றிக் கடனாகச் சுட்டிக் காட்டியுள்ளார். மிக்க ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்ட இவர், தன் பெற்ற கல்வியறிவினைத் தொடர்ச்சியாக வளர்த்து வந்துள்ளார். முதுகலைமாணிப் பட்டத்துக்கு இவர் செய்த ஆய்வு 'யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்

பிரபந்த இலக்கியங்கள்' என்ற நூலாக வெளிவந்து பல அறிஞரின் பாராட்டுக்களைப் பெற்றது. 1996 இல் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்த இவர் தொடர்ந்து பணியாற்றி மொழித்துறை இணைப்பாளராகவும் முதுநிலைத் தமிழ் விரிவுரையளராக (தரம் I) வும் திகழ்ந்து பல சிறந்த பட்டதாரிகளை உருவாக்கியுள்ளார். அவர்களின் நன்றிக் கடனாகவே இவரது மணிவிழாக் கொண்டாட்டமும் 'சிறப்பு மலர்' வெளியீடும் நடைபெறுவது பெருமகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும்.

இந்தக் கல்விமான் ஆரம்ப காலத்திலிருந்து பெரும்பாலாக பழந்தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பல பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குத் தரமான பல கட்டுரைகளை எழுதியுள்ளார். மேலும் கல்வி, பண்பாடு, அரசியல், விமர்சனம், ஊடகத்துறை, நவீன இலக்கியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கிய இவரது படைப்புகள் இவரை ஒரு பல்துறை விற்பன்னராகவும் அடையாளங் காட்டுகின்றன. இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் பத்து ஆண்டுகள் வரை சேவையாற்றித் தரமான பல சமய இலக்கிய நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்ததோடு பிரபல்யம் பெற்ற கோயில் உற்சவங்களில் நேர்முக வர்ணனையாளராகவும் கடமையாற்றி பல்லாயிரக் கணக்கான நேயர்களிடையே பிரபல்யம் பெற்றவர். மேலும் இவர் இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற இலக்கிய, சமய மாநாடுகளில் பங்குபற்றிக் கட்டுரைகள் வாசித்தமை எமது நாட்டுக்குப் புகழ் சேர்த்துள்ளது.

கலாநிதி நாகேஸ்வரன் தரமான எழுத்தாளர் மட்டுமல்லாது ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராகவும் நாடெங்கும் பிரபல்யம் பெற்றுள்ளார். விடய ஞானத்துடன் தர்க்க ரீதியாக நகைச்சுவையும் கலந்து ஆணித்தரமாகத் தன் கருத்துக்களை வலியுறுத்துவதில் வல்லவர். இத்தகைய பேச்சுத்திறன் இவருக்கு 'சொற்பேராழி', 'வாகீச கலாநிதி', 'செஞ்சொல்வாரிதி' போன்ற பல பட்டங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது. மேலும், இவர் நடத்திய ஆழமும் விரிவும் கொண்ட சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்களினால் இவருக்கு 'அருள்மொழிச் செல்வர்', 'சித்தாந்த பண்டிதர்', 'இன்னிசைச் சொல்வேந்தன், 'நவரசக் கலைஞானி போன்ற பல கௌரவப் பட்டங்களும் சூட்டப்பட்டுள்ளன. நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் மரவுவழி அறங்காவல் வம்சத்தில் பிறந்த இவர், பல சமயத் தொண்டுகளுடன் நாடளாவிய பல சமய நிறுவனங்களில் நெருக்கமாக ஈடுபட்டு சமூகத் தொண்டுகளும் ஆற்றி வருபவர். இதனால் இவருக்கு 'அகில இலங்கை சமாதான நீதிவான்' பட்டமும் அளிக்கப்பட்டது சாலப் பொருத்தமானதே.

இவரது கலாநிதிப் பட்டத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட, 'சுதேச மருத்துவ இலக்கியங்கள் பற்றிய மொழி இலக்கிய ஆய்வு' நூலுருவில் இம்மணிவிழாவில் வெளியிடப்பட உள்ளது. இவ்வினிய வேளையில் இவர் மேன்மேலும் விசேடமாக சமய இலக்கியத் துறைகளில் ஆழமாக ஆய்வு செய்து நூல்கள் ஆக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக உள்ளது. இந்த ஆய்வாளரின் பணிகள் அவரது அறிவும் அனுபவமும் முதிர முதிரத்தான் மேலும் சிறப்படையப்

போகிறது. கௌரவப் பட்டங்கள் பலவற்றைச் சேர்த்துள்ள இச்சாதனை வீரனை இன்னும் எத்தனையோ பட்டங்கள் தேடி வரலாம். ஆனால் இத்தகைய ஒரு சிறந்த வளவாளன் தனக்குப் பிறகு நமது சந்ததியினருக்கு காத்திரமான வைப்புகளை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே எமது அவா. மேலும் தமிழ் புழங்கும் நாடுகளில் நடைபெறும் ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றி நம் நாட்டுக்குப் புகழ் சேர்க்க வேண்டும்.

இதுவரை ஆற்றிய இலக்கியப் பணிகள் இனி ஆக்கப் போகும் படைப்புகள், இக் கணனி உலகில் தமிழர் வாழும் இடமெங்கனும் பரவி எமக்குப் புகழ் சேர்க்கப் போகும் மண்ணின் மைந்தனே நற்சுகத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். விசேடமாக ஆய்வுத் துறையில் உங்கள் படைப்புகள் மேலும் வெளிவந்து பயன்தர தெய்வ கடாட்சம் என்றும் கிட்டும். உங்களது மணிவிழாக் கொண்டாட்டம், ஏற்பாடு செய்த சகல சிறப்புக்களுடன் இனிதே நிறைவேற மீண்டும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சுபம்!

திருமதி இ. கயிலாசநாதன்
முன்னாள் மேலதிகச் செயலாளர்
சமய கலாசார அலுவல்கள் அமைச்சு



சிவதத்துவமலரின் பிதாமகர் வாகீச கலாநிதி



வவுனியா கோவில் குளத்தில் சாந்நித்தியமாக உறைந்து திருவருள் பாலிக்கும் தெய்வம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேசுரர் சிவன். சிவனுறையுந்தலம் மட்டுமல்ல, மனித மகத்துவமிக்க புண்ணிய சேவைகள் நிகழும் பிரதேசமும் இது. மிகக் குறுகிய கால இடைவெளியிலே யுத்தபூமியாகிய வன்னிமண்ணிலே அருளகம் இல்லம், முதியோர் இல்லம், பெண்கள் விடுதி, காஞ்சி மடம், கலைக்கல்விக் கூடம், கோபுரங்கள், தீர்த்தத்தடாகம் விருந்தினர் விடுதி, கோசாலை, வாழைத்தோட்டம், திருவாசம் முற்றோதுதல், பண்ணிசைப்பாராயணம், அன்னதானம், முதியோர் நல்லடக்கம், விடுதிமாணவர்களுக்குச் சிறப்பு விரிவுரைகள் ஏற்பாடு என்று பல்வேறு திருத்தொண்டுகளும், திருப்பணிகளும், நலப்பணிகளும் நிகழ்வது சிவனின் அருள்மகிமையேயெனலாம். தினமும் கண்டாமணி நாதஒலி, அருளகக் கொடியேற்றம், கொடிக்கவி, திருக்கோயில் பூசைவழிபாடுகள், சிவசின்னங்களுடன் வீதிவலம் வரும் அருளகச் சிறார்கள் திருத்தொண்டுகள் எனப்பல்பணிகள் நிகழும் திருவீதிகளையுடையது கோயிற்குளம் திருத்தலம். அடியவர் உள்ளங்களை ஈர்த்துபக்திலயப்படுத்தி இறையின் பத்திலே திளைக்கவைக்கும் சாந்நித்தியம் உடைய தெய்வீக அருள் நிரம்பி வெளிப்படும் அருட்டிறம் மெய்சிலிர்க்க வைப்பதாகும். அகிலாண்டேசுரர் திருவருள் இத்திருத்தலத்துக் கும்பாபிஷேகத்திலேயும், மண்டலாபிஷேகத்திலேயும் பல்வேறு நண்பர்களையும், அநுபூதியாளர்களையும், கல்வியாளர்களையும், நிர்வாகிகளையும், குருமார்களையும் புண்ணிய சீலர்களையும் இணைத்தது. எனதும், எமது அறங்காவலர்களதும் எண்ணங் களையும், விருப்பங்களையும், அபிலாஷைகளையும், திட்டங்களையும் செயற்படுத்தும் பேராற்றலுடையவர்கள் முன்வந்தனர். பல்வேறு திருப்பணிகளையும் செயற்பாடுகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

மகாகும்பாபிஷேக மலர்க்குழு பற்றிய விடயம் எழுந்தது. எமது விருப்பத்தையும், திட்டத்தையும் மணிவிழா நாயகர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களிடம் தெரிவிக்கும் சந்தர்ப்பம் வந்தது. 1996 ஆம் ஆண்டு அவர் குடும்பத்துடன் இடம் பெயர்ந்து வவுனியா மண்ணுக்கு வந்துசேர்ந்த யுத்தச் சூழல். சிவனருளாலே வவுனியா இந்துமாமன்றம் வவுனியா கந்தசுவாமிகோயில் அறங்காவலர்கள், சிவாசாரியப் பெருமக்கள், பெரியார் ஈசன்

ஐயா, செ.வை. தேவராசா ஐயா, தலைவர் மு. சபாநாதன் ஐயா, அமரர் இராசு ஐயா, திரு. ஆ. மகாதேவன் அவர்கள், முன்னாள் அரச அதிபர் க. கணேசு, உதவி அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், ''தமிழ்மணி'' அகளங்கன், பெரியார் சேனாதிராஜா, சைவப்புலவர் வ. செல்லத்துரை ஐயா இன்னும் பல பிரமுகர்கள், பெரியார்கள் பக்கபலமாகத் தொழிற்பட்டு மிகவும் காத்திரமான பணியொன்றினை வாசீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அரியதோர் வரலாற்று ஆவணக் களஞ்சியமலர் ''சிவதத்துவ மலர்'' வெளியிடப்பட்டது. மிகவும் அரியதாயும், இந்து சமயப்பண்பாட்டு வரலாற்று நூலாயும் முதலாவது 'சிவதத்துவமலர்' வெளியிடப்பட்டது. தமது அறிவைப் பிழிந்தெடுத்தும், கடும் உழைப்பினை அர்ப்பணிப்புணர்வோடு நல்கியும், சிவர்ப்பண சிந்தையுடனும் இம்மலரை நமது திருக்கோயில் வெளியீடு செய்வதற்குப் பேருதவி புரிந்தவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களாவர். சமய உணர்வு, மொழித் திறன், சிவத்துவ மகிமைகளைக் கூறும் புராண இதிகாசங்கள், திருமுறை வேதாகம இலக்கியப்பரிச்சயம், கட்டுரை எழுதும் பேராற்றல், மரபுத்தமிழ் இலக்கியத் தாடனம், வழிபாட்டு மரபுகள், ஒப்பீட்டாய்வின் திறன் ஆகிய தனித்தன்மைகளும் சிறப்புகளும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு உள்ளன என்றே சிவதத்துவமலரை என்னிடம் பெற்றுப் படித்த பலரும் விதந்து குறிப்பிட்டுள்ளனர். நூலாசிரியராலே – பதிப்பாசிரியராலே சிறப்பும், மதிப்பும், மகிமையும் பெற்ற நூல் முதலாவது ''சிவதத்துவமலர்'' ஆகும். இன்றும் அதன் அருமைபெருமை சொல்லியடங்கா. தற்பொழுதும் அருளகம் இல்லத்தில் சிவதத்துவமலர் விற்பனைக்கு உண்டு. விரும்பியவர்கள் பெற்றுப் பயனடையலாம் ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் இருக்கவேண்டிய ஞானக்களஞ்சியம் அது.

நமது கலாநிதியின் கல்விப்பணி அருளகச்சிறப்புகளுக்கு பெருவிருந்து. அவர் மட்டுமன்றிப் பேராசிரியர்கள் சி. தில்லைநாதன், வி. நத்தகுமார், எஸ். வை. ஸ்ரீதர் (சிவேஷ்ட விரிவுரையாளர்) ஆகியோரையும் திருக்கோவிலின் அறப்பணிகளிலே ஈடுபடவும் வைத்துள்ளார். நாடு தழுவிய ரீதியிலே மணிவிழா நாயகர் ஆற்றும் தன்னலமற்ற சேவைகள் மேன்மேலும் ஓங்கி வழரவும், பெருகவும் வாழ்த்திச் சிவனடிகளைச் சிந்தித்துப் பல்லாண்டு கூறி நிறைவு செய்கிறேன்.

சிவமணி ஆ. நவரெத்தினராசா

அறங்காவலர்/ கௌரவ செயலாளர்,

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில்,

அருளகம்; கோயிற்குளம்

வவுனியா.



முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்து



அன்புக்கினிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் மணிவிழா கௌரவம் பெறுகின்ற இந்தவேளை பெறுமதியானது. நிறைந்த பண்பாட்டு உணர்வும் தேடலும் மிக்க நாகேஸ்வரனுக்கு எடுக்கப்படுகின்ற இந்த விழாவானது எங்கள் பண்பாட்டின் விழாவாகவும் மேன்மை பெறுகிறது.

ஒருசாலை மாணவனாக தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி காலத்து அறிமுகமான நாகேஸ்வரனின் உயர்வுகள் யாவும் பெருமகிழ்ச்சி தருவன. சுதேசமருத்துவ இலக்கியங்கள் பற்றிய அவரது கலாநிதிப்பட்ட ஆய்வேடு இந்நாளில் நூல்வடிவம் பெறுகின்றமை மிகவும் பொருத்தமானது. தமிழின் அறிவியல் வல்லமையை வெளிப்படுத்தும் இவ்வாய்வானது தமிழியலுக்கான அவரது உயர்ந்த பணியின் பதிவாக நிலைபெறும்.

இசை, நாடகம், பிரசங்க மரபு, இலத்திரனிய ஊடகமாக வானொலிக் கலை என விரிந்த பல தளங்களில் தன் ஆளுமைத்திறத்தாலே புகழ்பெற்ற நாகேஸ்வரன் அவர்கள் சமூகம் இன்று பெரிதும் ஆராதிக்கும் மக்கள் நிலைப்பட்ட புலமையாளராக (Public intellectual) தனித்துவம் பெறுகின்றார்.

கலாநிதி நாகேஸ்வரன் வாழ்வில் மென்மேலும் மேன்மைகள் பல பெறவும் அவர் குடும்பத்து நல்லன எல்லாம் நிறைந்திடவும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்

முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் பேராசிரியர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

மகாஜனக்கல்லூரியின் மாணியான கல்விமான்



வையத்துயர்ந்த யாழ்பாணத்திலே அம்பனையெனும் அழகியவயற்கிராமத்திலேகெம்பீரமாகஎழுந்துநின்றுபன்முகப்பட்ட ஆளுமைகள் மிக்க பிரமுகர்களையும், கல்விமான்களையும் கவிஞர்களையும், கலாநிதிகளையும், பேராசிரியர்களையும் உருவாக்கும் கல்லூரி புகழ்பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியாகும். 1966 ஆம் ஆண்டுமுதல் 1974 ஆம் ஆண்டுவரை மகாஜனக் கல்லூரியிலே கல்வி பயின்று பல்கலைக்கழகம் சென்றவர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். இவர் என்னுடன் கல்வி கற்ற வைத்தியகலாநிதி க. சுந்தரேஸ்வரனின் மூத்த அண்ணனாவார். நாகேஸ்வரனும் சுந்தரேஸ்வரனும் தங்கை மதிவதனாவும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே உயர்கல்வி கற்றவர்கள். அடக்கமும், பொறுமையும், பண்பும், பணிவும், பிறரிடத்திலே மதிப்பும், குருபக்தியும், சமய ஞானமுங் கொண்ட குணமேன்மையுடையவர்கள். இவர்களின் தந்தை, தாய் குடும்ப உறுப்பினர்கள் சகோதரபாசத்துடன் உறவாடியமை என்றும் மறக்க முடியாத அநுபவமாகும்.

மாணவனான நாகேஸ்வரன் சாரணீயத்திலும், ஆலயத் திருத் தொண்டுகளிலும், வில்லுப்பாட்டுப் பாடுவதிலும், சொற்பொழிவு ஆற்றுவதிலும், பேச்சு, கட்டுரைப் போட்டிகளிற் பங்குபற்றுவதிலும், தேவாரம் இசைப்பதிலும் அதிக ஆர்வங் கொண்டு தொழிற்பட்டார். இயல்பாகவே தமிழில் விருப்பமும் ஈடுபாடும் கொண்ட இவரது வழிகாட்டிகள் நல்லாசான்களாகவே அமைந்தனர். என்பதும் அவர்செய்ததவப்பேறெனலாம். பேரறிஞர்கள், ஆசான்கள், சிந்தனையாளர்கள், கவிஞர்கள், அரசியற்தலைவர்கள், நல்லதிபர்கள், நல்ல நண்பர்கள் என இவரது தொடர்புகள் அதி மகிமையாயமைந்தமையும் வரப் பிரசாதமாகும். படித்த காலத்தில் வில்லிசை நிகழ்ச்சிகள் பலவற்றைக் கல்லூரியிலும் வெளியிலும் நிகழ்த்தினார். பேராசான் திரு. ச விநாயகரத்தினம் ஆசிரியரது வழிகாட்டுதலிலே கல்லூரிக்கு வெளியில் பல்வேறு போட்டிகளிலேயும் கலந்து கொண்டு மகாஜனாவுக்குப் பெருமை சேர்த்தார். படித்த பொழுதே மஹாகவி உருத்திர மூர்த்தி, சா. ஜே.வே. செல்வநாயகம், வி. பொன்னம்பலம், பேராசிரியர்கள் சு. வித்தியினந்தன் தேவநேசன் நேசையா க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கா. இந்திரபாலா, அ.அமிர்தலிங்கம், பீட்டர் விகமைன், கொல்லின் ஆர்.டி சில்வா, S.A விக்கிரசிங்ஹ; கனக. செந்தி நாதன், கவிஞர் கந்தவனம், சொக்கன்,

ஒரேற்றர் சுப்பிரமணியம், தெ.து ஐயரத்தினம், த. சண்முகசுந்தரம், P.S குமாரசாமி. அதிபர் மகாதேவன், வித்துவான் சிவபாதசுந்தரம், ச. ஆறுமுகராசா, திரு திருமதி க. சின்னத்தம்பி, திருமதி கனகேஸ்வரி, திருமதி சண்முகரெத்தினம் ஆகியோரிடம் பயின்றார். கிடைத்தற்கரிய ஆசிரியமணிகளாக இவர்கள் தவப்பேற்றால் வாய்த்தமை குறிப்பிடற்பாலது. தன்னலமற்ற ஆசிரியர்களினால் புடம்போடப்பட்ட பேரறிஞர் நாகேஸ்வரன் என்பது எனது திடமான கருத்து; அவர் தளம்பாத நிறைகுடம். சிறந்த சொற்பொழிவாளர்; நல்ல இசைஞானமுடையவர்; தெய்வநம்பிக்கை உடையவர்.

யாழ். மண்ணின் கல்வியாளர் வரிசையிலே கலாநிதி நாகேஸ்வரனுக்கு ஒரு தனித்துவ இடம் உண்டு. மகாஜனக் கல்லூரி வரலாற்றிலும் ஒரு உன்னத – அழியாத இடம் உண்டு. அண்மையிலே நடை பெற்ற 'ஆசிரியமணி' ச. விநாயகரத்தினம் அவர்களின் பவளவிழாவுக்கான தலைமையை ஏற்று வெகு கோலாகலமாக விழாவைக் கனகச்சிதமாகக் செய்துமுடித்த சாதனை வீரர் நாகேஸ்வரனே என்பது பாராட்டியுரைக்கத்தக்கது. தற்போதைய மகாஜனாவின் அதிபர் திரு. க. வேல் சிவானந்தன் அவர்களும் நாகேஸ்வரனும் பேராசிரியர், கலாநிதி பொ. இரகுபதியும் ஒன்றாகவே கல்வி கற்ற ஒரு சாலை மாணவர்கள். சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே பட்டதாரிகளாகி இன்று பல்வேறு தகைமைகளினாலும் பதவிகளில் உள்ள மாணவர்கள் இணைந்து குழு அமைத்துக் கலாநிதி நாகேஸ்வரன் அவர்களது நூல்களை வெளியீடு செய்தும், தமிழ்த் தொண்டு புரிந்தபெரியார்கள் சிலரைக் கௌரவித்தும் எடுக்கும் மணிவிழாவில் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துக் கூறி, மணிவிழா நாயகர் சகல சௌபாக்கியங்களும் பெற்று இளமை குன்றாத் தமிழ்மொழியைப்போல் நீடு சுகமாக வாழ இறையருளைப் பிரார்த்தித்து, மகாஜனாவில் அருள்பொழியும் சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராசப் பெருமானின் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன்.

வைத்திய கலாநிதி S. சிறீபவானந்தராஜா

உதவிபணிப்பாளர்,

அரசினர் போதனா வைத்தியசாலை,

யாழ்ப்பாணம்.



மருத்துவ இலக்கிய நிபுணர்



நான் கல்வி கற்ற தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியிலே எனக்கு முன் கற்றவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன். கலைப்பிரிவு மாணவனாகக் கற்றுப்பல்கலைக்கழகத்திற்குச் சென்றவர் அவர். நான் மருத்துவபீடத்தில் படித்தேன். இருவரும் மகாஜனாவின் குழந்தைகள். அத்துடன் ஆசிரியமணி ச. விநாயகரத்தினத்திடம் படித்தவர்கள். அவரால் உருவாக்கப்பட்டவர்கள். நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரிய மணிகளாலும், அதிபர், மகாஜனச் சிற்பி தெ. து. ஜெயரத்தினம் அவர்களாலும் போஷிக்கப்பட்டவர்கள். அக்கதை மிகவும் நீளமானது.

இன்று தமது கலாநிதிப்பட்ட ஆராய்ச்சியை "ஈழத்து மருத்துவ இலக்கியங்கள்" என்னும் விடயம் பற்றி ஆய்வு செய்து பேராதனைப் பல்கலைக் கழகத்திலே அதற்காகக் கலாநிதிப்பட்டம் பெற்ற கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு மணிவிழாக் கொண்டாடப்படுகிறது. எம்போன்றோருக்குப் பேருவகை தரும் விழா இது. கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் எனது ஆசான் பவளவிழா நாயகர் ச. விநாயகரத்தினம் அவர்களது அளப்பரிய பணிகளை நூலாக எழுதியவர். அவரது அன்புக்குரிய நன்மாணாக்கர்; குருபக்தியும் நன்றியுணர்வும் மிக்க பேரறிஞர்; நல்லாசான். முத்தமிழிலும் தனித்துவமிக்க தகைமைகள் கொண்டவர்; நல்ல இசைவளம் உடையவர்; நல்ல பல இனிய குணநலங்களையுடையவர்; நல்ல சமயத் தொண்டன். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளிடத்துப் பெரு நம்பிக்கையும் பக்தி விசுவாசமுங் கொண்டவர்.

மணிவிழாவை முன்னின்று நிகழ்த்தும் கலாநிதியின் அன்பு மாணவர்கள் பாராட்டத்தக்கவர்கள். இவ்விழாவிலே அவரெழுதிய ஆய்வு நூல் வெளியிடப்படுவது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. மருத்துவக் கல்விக்கும். தமிழ் மருத்துவ உலகிற்கும் கலாநிதி அவர்களின் பங்களிப்பு மிகவும் பெரிது. திறமையும், புலமையும், மகிமைமிக்க பேராசான். கலாநிதி நாகேஸ்வரன் இன்னும்பல அரிய சிந்தனைநூல்களைத் தமிழ், கல்வியுலகிற்கு எழுதித்தரவேண்டும் என்று விரும்புகிறேன். அவர் நல்ல தேகாரோக்கியத்துடனும், மகிழ்வுடனும் மனைவி மக்களுடன் வாழப்பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

வைத்தய கலாநிதி த. பேரானந்தராஜா
வைத்திய நிபுணர்,
அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்



தமிழ்ச் செம்மல் கலாநிதி கனக நாகேஸ்வரன்

நற்றமிழும் சைவமும் ஓங்கும் நயினைப் பதியில் வந்துதித்த நாயகன், தமிழ்ச் செம்மல் மதிப்புமிகு கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M. A. Ph. d அவர்களை ஏறக்குறைய 1990, 1998 காலப்பகுதியில் வடமராட்சியில் உள்ள தலங்களில் பட்டிமண்டபங்களின் மூலமும், தெய்வீகச் சமயச் சொற்பொழிவுகளின் மூலமும் அடியேன் பார்த்ததுண்டு; பேச்சை இரசித்ததுண்டு. க.பொ.த உயர்தரத்தமிழ் வகுப்புகளிற்காக நடைபெறும் கருத்தரங்குகளில் எனக்கும் அவருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டுகின்றவர் என் பேரன்பிற்குரிய கலாநிதி நாகேஸ்வரன் சேர் அவர்கள் பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றம், மிருதுவான, பேச்சு கம்பீரமான நடை, அழகைக்கொடுக்கும் மீசை, இடையிடையே வெளுத்துச் சுருண்டு இருக்கும் தலைமுடி இவை அவரை அணி செய்கின்றன. அவரை அன்புள்ள ஆசானாக அறிவுரை கூறும் பண்பாளனாக நான் காண்கிறேன்.

கலாநிதி, சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி, அருட்கலை மாமணியின் தமிழ்ப்பணியோ, சமயப்பணியோ அளப்பரியன. இலங்கைச் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும், இலங்கை வானொலியிலும் நாடுதழுவிய சைவாலயங்களெங்கனும் அவரால் ஆற்றப்படும் தமிழ், ஆன்மீக விரிவுரைகள் அவராற்றும் உயர் தமிழ்ப்பணியைப் பறை சாற்றுவன. விரிவுரையில் பல்கலைக்கழகத்திலே, அவரது நாவில் தமிழும் ஆங்கிலமும், சிங்கள மொழியும் தவண்டு விளையாடும். தெவிட்டாத இன்பத்தை அள்ளிக் கொடுக்கவல்லன அவர் விரிவுரைகள்.

இவர் சமயச்சொற்பொழிவுகளை இலங்கையிலே மட்டுமன்றி உலகநாடுகளிலும் செய்த பெருமைக்குரியவர். ஆற்றொழுக்குப் போன்ற பேச்சுநடை, சைவசித்தாந்தக் கருத்துகள், சிந்திக்க வைக்கும் சிறுகதைகள், இறைவன்பால் இழுத்துச் செல்லும் தேவாரப்பண் போன்றன இவருக்கேயுரிய தனித்துவப்பாணி. நற்றமிழ்வானில் இவரது நற்பணி மென் மேலுஞ் சிறக்க அறுபதாவது அகவையில் அகமகிழ்ந்து விழாவினைக் காணும்போது வெளிவரும் இனிய மணிவிழாச் சிறப்புமலருக்கு வாழ்த்த வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு அகமிக மகிழ்கிறேன்.

"வாழ்க அவர் நாமம் வளர்க அவர் பணி"

M. பகீரதன்,

பட்டதாரி ஆசிரியர், பலாங்கொடை



வாழ்த்துரை



ஓதிப்பார்ந்த உயர்திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தமிழ் மொழியறிவும், சமய அறிவும் மிக்க கல்விமான்; ஒரு பண்பாளர். இவரது பேச்சாற்றலும், பண்ணோடு திருமுறை பாடும் வல்லமையும் என்னை மிகவும் கவர்ந்தவை. பல்கலைக்கழகப் பேராசானாகவிருந்த போதும் சிறுவர்களுக்குத் தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு கற்பித்தமை மிகவும் போற்றுதற்குரியது.

பல்கலைக்கழக பேராசிரியராகவும், சமயச்சொற்பொழிவாளராகவும், வானொலி வர்ணனையாளராகவும், பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியராகவும் தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றி வரும் சமூகப்பணியாளர் உயர் திரு. கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளையில் சிறியேனாகிய நானும் நீண்ட நாள் நட்பின் அடையாளமாக இவரை வாழ்த்திப் போற்றுவதில் மகிழ்வடைகிறேன்.

இங்ஙனம்
'திருமுறை நெறிச்செல்வர்'
'சித்தாந்த ரத்தினம்'
சிதம்பரம் சிவானந்தராஜா, J.P.



வார்த்தைக்குள் அடங்காத உயர்பண்பாளன்

தமிழன்னையின் முத்தே! எங்கள் சொத்தே! நயினை மண்ணின் நாயகனே! நீங்கள் என்றும் வாழ்ந்திட வேண்டும் அவனியிலே. ஆண்டுகள் அறுபது கண்டது இயற்கையின் நியதி. ஆனாலும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அழியாது உங்கள் புகழ் தரணியிலே. தமிழன்னைக்கு நற்றமிழால் மகுடம் சூட்டினீர்கள். அதில் நல்மாணாக்கர்களை மணியாய் பதித்தீர்கள்.

நாவெடுத்து நீங்கள் உரைத்தால் நாம் சிரித்தும் மகிழ்வோம். உங்கள் பால் முகத்தின் அன்பை என்றும் பார்த்து இரசிப்போம். கற்கப் பிறந்த எம் இனத்தின் சிற்பிகளுக்கு ஆணிவேராய் கற்பித்துக் கொடுத்த உயர்வான உத்தமர் நீங்கள். எங்கள் தமிழுக்கு முகவரி தந்த தவப்புதல்வரே! வள்ளுவரும், கம்பரும், இளங்கோவும், பாரதியும் தமிழின் வரலாற்றின் புதல்வர்களே என்று நீங்கள் உரைக்கக் கேட்டோம். இப்போது நாம் உரைக்கின்றோம் நீங்களும் தமிழின் வரலாற்று மைந்தனே!

உங்களை வாழ்த்த எனக்கு வயதில்லை எனினும் அன்பு மடலில் ஒரு அழைப்புத் தந்தீர்களே! அதற்கு அடியேன் சிரம் தாழ்த்தி வணங்கி வாழ்த்தும் கடலில் வார்த்தை ஒன்று எடுக்க மூழ்கினேன். தேடிப்பார்த்தேன் வார்த்தைகளை எங்கும் காணோம். ஏக்கத்தோட மேலெழுந்தேன் தமிழ் அன்னையின் மடியில் தலை குனிந்தேன் அப்பொழுது ஒரு செய்தி "நற்றமிழ் நாகேஸ்வரனின் புகழைச் செப்புவதற்கு என்னிடம் சொல்லவில்லை என்றது தமிழ்த்தாய். அப்பொழுதே நினைத்தேன் வார்த்தைகளுக்கும் அடங்காத உயர் பண்பாளன் நீங்கள். ஆனாலும் வாழ்த்திட வேண்டும் என்று என் உள்ளம் குமுறுகிறது. ஏற்றுக் கொள்ளுங்கள் என் குருநாதரே என் புகழ் மாலையை!

"உங்கள் தமிழால் தமிழைக் கற்ற
எங்களுக்குப் பெருமை
உங்களால் தமிழுக்குப் பெருமை."

"நீடூழி வாழ்க குருவே! நீடூழி வளர்க உங்கள் சேவை."

என்றும் அன்புடன், உங்கள் மாணவன்,

திரு. எஸ். றமேஸ்

B.A(Cey), Dip.in.Teach Hin(SP)I,Dip.in.Edu(mgt),
M. A. in Tamil (Study), P.G.Dip.in.Edu.,

ஆசிரியர்,

மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, (தேசிய பாடசாலை), மன்னார்.



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் "சங்கமம்" குழுவினரின் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்



சங்கமம் குழுவினர் : மயிலங்கூடலூர் பி. நடராசன் (ஆடலிறை), கலாநிதி உ. சேரன், கலாநிதி க. நாகேஸ்வரன், அமரர் சரவணபவன், பேராசிரியர் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி, கலாநிதி வி. கதிர்காமநாதன், திரு. சி. செ. சண்முகநாதன் (முல்லைதீவு உதவிப்பணிப்பாளர் திட்டமிடல் நகர அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோர். (1974 - 1975)

மணிபல்லவம் தந்த அறிஞர் மணிவிழாக் காணும் சங்கமம் நண்பர் கலாநிதி கனக. நாகேஸ்வரன் (சிரேஷ்டவிரிவுரையாளர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா) அவர்களைச் சங்கமம் குடும்பம் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சமுகம் மேலும் உச்சப் பயனைப் பெறுவதற்காக உழைக்கும் அவரை மகாஜனக் கல்லூரி தந்தமைக்குக் கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகள், நண்பர்கள் உட்பட மகாஜன சமுகம் அளித்த பங்களிப்பை நினைவுகூர்வது சங்கமம் சார் கடமையாகும்.

அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றில்
கொம்புலுப்பிப் பூச் சொரியும் குடைவாகை
நும்பெரிய வெற்றிக்கு நாலுமலர் சூட்டிடவும்

என்று பாடினார் மகாகவி து. உருத்திரமூர்த்தி. அம்பனையிலே மகாஜனக் கல்லூரி வளாகத்திலே சிந்தனை வேகமும், செயல் வேகமும் கொண்ட இளைஞர் குழாம் சங்கமம்

சஞ்சிகையை ஆரம்பித்தது கல்லூரியிலே. இச்சந்தர்ப்பத்தில் சங்கமம் நிர்வாகக் குழுவின் பங்களிப்பாளரான போஷகர் 'அறிவொளி அமரர் த. சண்முகசுந்தரம் (தசம்) (B. A, Dip. in. Ed) உபஅதிபர், கலாசூரி (ஆசிச் செல்வன்) ஆ. சிவநேசச்செல்வன், முகாமைத்துவ அதிபர் பொ. இரகுபதி, நிர்வாக அதிபர் வி. கதிர்காமநாதன், இணை ஆசிரியர்கள் க. நாகேஸ்வரன், சு. சரவணபவன், செயலாளர் சி. செ. சண்முகநாதன் ஆகிய சங்கமம் சஞ்சிகைக் குடும்பத்தினர் சார்பான வாழ்த்துக்கள். மாஸ்டருக்கு; (எங்கள் குழுவினர் மணிவிழா நாயகனைப் படிக்கும் காலத்தில் 'மாஸ்டர்' என்ற பட்டப்பெயரினாலே அழைப்பர்).

மேலும் சங்கமம் சஞ்சிகையில் எழுத்தாளர் குழாம் கொடுத்த ஆதரவினை நினைவு கூர்தல் இத்தருணத்தில் சாலச் சிறந்தது. கவிஞர் துறை நீலாவணன், புலவர் பார்வதி நாதசிவம், திருமதி கோகிலா மகேந்திரன், ஆதவன், கௌரி சங்கரி, கவிஞர் சேரன் ஆகியோரதும்; அவலங்களினால் என்னால் ஆவணப்படுத்திப் பாதுகாக்க முடியாது போனபோதும் ஏனைய சங்கமம் கலைஞர்களையும் மகிழ்ச்சியாக நினைவு படுத்துவதில் நாம் பெருமிதமடைகிறோம்.

மகாஜனாவின் இலக்கியச் சுவட்டிலே மூத்தவள் "இளம்முல்லை" யின் தோற்றத்தினை அடுத்துப் பிறந்தவன்தான் "சங்கமம்". ஏடெழுதவுதவிய அன்பு நெஞ்சங்களினதும் இனிய நல்வாழ்த்துக்களுடன் கலாநிதி கனக. நாகேஸ்வரன் குடும்பத்தினரை நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறேன்.

சி. செ. சண்முகநாதன்,

ஒய்வுநிலை உதவிப்பணிப்பாளர்.

திட்டமிடல் நகர அபிவிருத்தி அதிகாரசபை.



மணிவிழாக்காணும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள்

இறைநிலை இன்பம்



இறைவனைக் கண்டு கொண்டேன் – அறிவால்
இறைவனைக் காண்கிறேன்
குறைவின்றி குற்றமின்றி குணத்தில் உயர் அறிவால்
மறை பொருளாக உள்ள மாபெரும் மெய்பொருள்
இறைவா

– வேதாத்திரி மகரிஷி –

கலாநிதி நாகேஸ்வரன் சர்வகலா வல்லவர். அவர் சிறந்த கல்வியாளர், சமயத் தொண்டர், நாநலம் மிக்க பேச்சாளர், இசைவல்லுநர், சமூக சேவையாளர், என்றெல்லாம் அவர் புலமையை, பெருமையை அடுக்கிக்கொண்டே போகலாம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு மனிதாபிமானி. எல்லோரையும் கண்டவிடத்து அன்பு ததும்ப அழைத்து சுகம் விசாரிக்கும் பண்பு கொண்டவர். இத்தகைய மனித நேயப் பண்பே அவரது உயர்ச்சிக்கொல்லாம் காரணம் என்பது எனது கருத்தாகும்.

தமிழோடு இசைபாடல் மறந்தறியாத அப்பண்பாளருக்கு விழா எடுப்பது சாலப்பொருத்தமேயாகும். வாழும் போதே ஒருவரை வாழ்த்திட வேண்டும் என்பார்கள் அதற்கமைய அவரை வாழ்த்தி எடுக்கப்படும் இம் மணிவிழா எம்மனைவரதும் உளமார்ந்த வாழ்த்துக்களின் உருவாகவே அமைகிறது. கலாநிதி நாகேஸ்வரனிடம் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றவர்கள் பாக்கிய சாலிகள். தமிழை இன்னிசையில் குழைத்துக் குழைத்து ஊட்டியவர். அவரது இப்பணி என்றும் மறத்தற்கரியது. மணிவிழாக் காணும் நாகேஸ்வரன் பல்லாண்டு காலம் வாழவும் அவரது பணிகள் சிறக்கவும் நயினை நாகேஸ்வரி அன்னையின் திருவருள்கிட்டப் பிரார்த்திக்கிறேன்.

சந்ததமும் எனை மறாவாத சாந்த வாழ்வளித்தோய்
என் – சந்தோஷச் செய்தி இதுவே!
(எனை – நாகபூஷணி)

அருட்பேராற்றல் கருணையினால் உடல் நலம் நீளாயுள் நிறை செல்வம் உயர் புகழ் மெய்ஞானம் ஓங்கி நீடுழி வாழ்க!

வாழ்க வளமுடன்,
மணிவிழா சிறக்க வாழ்த்தும்,
அருள்நிதி சி. முருகானந்தவேல்



A notable academic- Dr. K. Nageswaran

A notable academic with varied talents Dr Kanagasabapathy Nageswaran who celebrated his 60th birthday on August 5, 2012 deserves to be noticed. He is presently the senior lecturer in Thamil at the University of Sabragamuwa, having been the Head of the Department of Languages, in the same University. He hails from one of the islands in the Yaalpaanam peninsula-Naina Theevu. In this place there is a famous ancient Hindu temple called Sri Naaga Pooshani Amman Kovil. Nageswaran comes from the family of traditional trustees of the temple.

He is one of the brightest and relatively young orator and impromptu speaker on Hinduism and Thamil Literature, particularly the medieval Lankan Thamil Literature. His ability to sing the hymns in appropriate ragas and his knowledge of Carnatic music adds colour whenever he is on the stage as a speaker with mastery eloquence.

An alumni of the Yaalpaanam University he obtained his first degree with Thamil Honours, then the Masters and later earned his Doctorate.

I first met him as a producer of Talks programs in the then Thamil Service of the Sri Lanka Broadcasting Corporation in the 1980s, when I was working in the News Room of the same station. He impressed me as a very knowledgeable person on Hindu Religious Literature, and a pious worshipper of the deity Sri Naga Pooshani Amman. He was affable and respectable but seemed very proud of his traditional values. He could communicate well and possessed an inherent sense of humour. He had an attractive voice and an ability to perform a musical narrative called "Villup Paadu". Villu means a bow and it is a sort of musical instrument. Nageswaran narrates and sings Puranic stories with accompanists on musical instruments backed by a chorus.

Dr. Nageswaran has authored a few books in Thamil and very often one could see him in Colombo stages where seminars are conducted by the Kamban Kalagam and the Hindu Religious and Cultural Department, delivering speeches on subjects he is very familiar and have a deep knowledge and understanding of the subject.

This note was prompted by the wishes expressed on his birthday by his past graduate students.

K. S. Sivakumaran
sivakumaran.ks@gmail.com



Friendly, Kind Academic



I feel very much pleased and privileged in contributing this message on the celebration of the Silver-jubilee of a personality of Dr. Nageswaran's caliber. Dr. Nageswaran, a Senior Lecturer in Tamil, Faculty of Social Sciences and Languages of the Sabaragamuwa University of Sri Lanka, is very friendly, kind, respectful and worthy of appreciation.

As an academic, he is a fighter in some sense, and he knows that "out of any problem is only through the problem." As a lecturer, he is an enthusiastic performer and a hard worker. As a colleague of his, I know how much he possesses and deserves, and how much he has been given. He is a writer, and has published widely for his credit. I definitely possess neither the qualifications nor the experiences nor the depth in Tamil literature to appreciate his work. That he is a Ph. d. holder, at least partially, bears evidence for his capabilities.

He is both a Jack of all trades and a master of a few: oratory in Tamil, religious sermons, conducting radio programmes etc. Although there have been many occasions, where his potentials were in full manifestation, it is questionable whether his potentials and experiences in some domains have been fully actualized and directed into fruitful channels or utilized by the Tamil community in Sri Lanka.

In this fast moving globalized village, things change; one does not need to keep oneself to all the changes in the world. Dr. Nageswaran respects the changes, but does not want to be carried away with all that is around him – he keeps to his convictions. The service of such a personality is required for many generations of students.

I have great pleasure in wishing him long and healthy life and successful career life! May he have energy and courage to face all the challenges and fulfill all his expectations!

K.S. Sivayesunesan
Dept. of English Language Teaching,
Sabaragamuwa University of Sri Lanka



Dr. Educationist, Scholar, Kanagasabapathy Nageswaran on this pearl Jubilee Long live

I know Mr. Kanagasabapathy Nageswaran from his infancy in Nainativu. He is the son of an educated noble and Cultured parents. In the lower classes in the schools of Nainativu I was senior to him. He was very active, painstaking and clever student. He was a ranker in all the classes. He was a good singer, who could sing religious and divine songs, and other Naddar songs.

On observing the cleverness of their son his parents sent him to Jaffna to further study. Now I hear that he has passed the Ph.D degree examination and will holding the Asso Professor post in Sabragamuwa University.

He is a life–long hereditary trustee member of the Trustee of the Internationally reputed Nainativu Sri Nagapooshani Amman Kovil. In the annual high festival days of this Temple at evenings he used to deliver divine speeches, on all Fourteen days on the topics of Amma's festivals. It he begins to deliver speech there will be pin drop silence, and the audience are very much attracted by his speech interwoven with suitable songs. So in this year that is in his Pearl Jubilee I feel extreme happy to greet, to bless and to which him for a long, happy and Prosperous life and future on behalf of Nainativu Sri Nagapooshani Amman.

My heart filled blessings may be sprayed over Dr. Kanagasabapathy Nageswaran in this Pearl Jubilee period.

V. Ponnampalam
(a teacher)

Nainativu
Ward No. 1



வாழ்த்துச் செய்தி



மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல் அஃதும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடு பெருந்தகை இருந்ததே.
(சம்பந்தர் தேவாரம்)

மனிதன் பிறந்து வளர்ச்சியடைய அவன் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கிறான். அந்த வகையில் ஒருவன் அறம்செய்து அன்பை வளர்த்து இறை தொண்டாற்றி, இறைவனுடைய பொற்பாதங்களைக் கண்டு தொழ ஆர்வம் கொள்கிறான். இன்னொருவன் தீயவர்களோடு சேர்ந்து தீயசெயல்களில் ஈடுபட்டு பாழ் நரகக்குழிக்குச் செல்லும் பாதையைக் கண்டுகொள்கிறான். மனிதனாகப் பிறந்தவன் நல்லன செய்து நல்லவை பேணி நற்பண்புடன் வாழ்தலே சிறந்தவாழ்வு என்பது சம்பந்தரது கருத்து. அப்பேற்பட்டவரை ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி என்று வாழ்த்துதலே சிறப்பு. அப்படி வாழாமல் தனக்கும், பிறருக்கும் நாட்டிற்கும் உதவாதவனைப் பட்டமரம் என்று சொல்வதில் தவறில்லை.

இப்படிப் பல்வேறு வழிகளால் மனிதன் பயணிக்கும் போது இன்று மணி விழாக் காணும் அன்பர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தன்னுடைய தாய்மொழியை மாணிக்கவாசகப் பெருந்தகை இறைவனைப் போற்றி ''பால் நினைந்தூட்டும் தாயினும் சால'' என்று வேண்டுவதைப் போல 'அமுதே தமிழே அழகிய மொழியே என துயிரே' என்று சிறுபராயத்திலிருந்தே பேணிக் காத்து வளர்த்து முதுநிலையடைந்தது மட்டுமல்லாமல் ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற திருமொழிக்கமைய எத்தனையோபேரை நன்றாக உருவாக்கி அவர்களும் கல்வி, கலை, பண்பாடுமிக்க மனிதர்களாகக் கணிக்கக்கூடிய அளவுக்கு உயர்ந்து நிற்கப் பணியாற்றியுள்ளார். இப்படியாகத் தமிழை வளர்த்துப் பல்வேறு பட்டங்களைப் பட்டியல் போடும் அளவுக்குப் பெற்று அன்றிலிருந்து இன்றுவரை சேவை செய்துவரும் பேரருளாளன் இன்று மணிவிழாக் காணும் போது பரந்த விருட்சமாக நிற்பதை எண்ணி மகிழ்வுறும் நேரத்தில்,

வாழ்க வளமுடன் பதினாறும் பெற்று
வாழ்க வளமுடன் பெரு விருட்சமாக
வாழ்க நாகம்மையின் அருள் அருவிபட்டு
வாழ்க வானுலகு போற்றிட வாழ்க
என்று வாழ்த்துகிறேன்.

அன்பன், தெய்வத்தமிழிசைச் செல்வர்,

நயினை சுப்பிரமணியம் கனகரெத்தினம்



மலர்ந்த முகமும் நிறைந்த நகைச்சுவையுணர்வுமிக்க என் உயிர்தமிழ் ஆசான்



கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவது எமக்குக் கிடைத்த பேறு.

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் அருளால் நயினையம்பதி தந்த நன் மகன், அகவை அறுபதுகண்டு மணிவிழாக்கொண்டாடும் முதுநிலை விரிவுரையாளர் அவர்களை இன்னும் பல்லாண்டுகாலம், சுகவாழ்வு, நீண்டவாழ்வு பெற்று, குடும்பத்திற்கும் ஊருக்கும், நாட்டுக்கும், தமிழுக்கும் நிறைந்த சேவை செய்ய சுகம், பலம், தைரியம், செல்வம் போன்ற சகல பாக்கியங்களையும் பெற்றுத்தந்தருளுமாறு இறைவனை வேண்டுகிறேன்.

மண்ணில் பிறந்தவர்கள் எல்லோரும் மாநிலம் போற்ற வாழ்வது என்பது யாவருக்கும் கிடைத்துவிடுவதில்லை. அதிலும், மாதா, பிதா, குரு, தெய்வம் என்றவரிசையில் மாதா, பிதாவிற்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர் குரு. அந்த குருஸ்தானத்தில் இருந்து எத்தனையோ அறிஞர்கள் ஆய்வாளர்கள் கல்விமான்களை உருவாக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றியதற்குச் சான்றாக, இம்மணி விழாவையும், அவரின் மாணவர்களே ஒழுங்கு படுத்தியுள்ளமை அமைகிறது.

இற்றைக்கு இருபத்தைந்து இருபத்தாறு வருடங்களுக்கு முன் யாழ். பல்கலைக்கழகச் சித்தமருத்துவத் துறையில் ஆகதடியில் எமக்கு உயர் தமிழைக் கற்றுத்தந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். உயர்தரத்தில் விஞ்ஞானக்கல்வியைக் கற்று, சித்தமருத்துவக்கல்வியை கற்கவந்தவர்கள், ஏன் நாம் உயர்தமிழைக் கற்க வேணும் என்ற கேள்வியுடன் இருந்த நிலையில் உயர்தமிழைப் புகட்ட வந்த விரிவுரையாளர், எம்மவர்களைச் சித்த மருத்துவத்தையும், சித்த மருத்துவம் சார்ந்த அறிவியலிலும் முற்றாக ஈடுபடவைத்தது மட்டுமன்றித் தனது Ph.d ஆய்வுத்தலைப்பாகவும் சுதேச மருத்துவ இலக்கியங்கள் பற்றிய மொழி இலக்கிய ஆய்வை மேற்கொண்டு அவ்வாய்வுத் தொகுப்புக்கு நூல்வடிவம் கொடுத்து வெளியிடுவது தமிழ் மருத்துவ இலக்கியங்களை ஆய்வாளர்களுக்கு ஞாபகப்படுத்தும் செயலாகவுள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம் ஏலாதி, திருக்குறள் போன்றவையும், பரராசசேகரம் என்ற மருத்துவ நூலையும் எமக்கு அறிமுகப்படுத்திக் கற்பித்த கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் தான் கற்பிற்கும் பாங்கினால்,

தமிழைப் படிக்க விரும்பாத மாணவர்களையும், தனது மலர்ந்த முகத்துடனும், நிறைந்த நகைச்சுவையுடனும் தன்பக்கம் கவர்ந்து மாணவர்களின் மனத்தினை வென்றிருந்தார். அத்துடன் ஓர் சிறந்த ஆசிரியர் நடிகனாகவும் இருக்கவேண்டுமென்பதற்கமைய நடித்தும், தேவைப்பட்டபோது தனது பண்பட்ட குரல்வளத்தின் உதவியுடன் பாடியும் விடயங்களைப் புகட்டிவிடுவார். அந்நாளில் ஏற்பட்ட ஈடுபாடுதான் இன்று அவரின் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கும் மருத்துவ இலக்கியங்களைத் தெரிவுசெய்ய வழிசமைத்திருக்கும்.

உலக சுகாதார ஸ்தாபனம் ஆரோக்கியத்தின் பரிமாணங்களைப் பற்றிக் கூறும் போது உடல், உள சமூக ஆரோக்கியம் பற்றியும் குறிப்பிடுகிறார்கள். அந்த ரீதியில் முன்னைய தமிழ் இலக்கியங்களில் தலைப்புக்களை, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்னும் தலைப்புக்களில் அமைத்து சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற மூன்று மருந்துப் பொருட்கள் சேர்ந்த திரிகடுகு உடல் நலத்துக்கு நன்மை தருவது போல் மூன்று மூன்று விடயங்களை வலியுறுத்தி உளநலத்திற்கு வழிகாட்டியுள்ளனர், மேலும், ஆசாரக்கோவை என்ற நூலில் சமூக ஆரோக்கியத்திற்கு மக்கள் எப்படிச் சூழலுடனும், சமூகத்துடனும் தொடர்புகொள்ளுதல். இசைபடவாழ்தல் என்பவை கூறப்பட்டுள்ளது. இவ்வாறான அறநெறிகளால்தான் சமூக ஆரோக்கியம் வளர்க்கப்படலாம். இவையே மேற்கூறிய நூல்களின் மூலம் போதிக்கப்பட்டு அவை இன்றும் எம்வாழ்க்கைப்பாதையைக் காகாட்டி மரங்கள் போல நின்று நிறைவு படுத்திச் செப்பனிடும் போதெல்லாம் எமது ஆசானாகிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை மனதார வாழ்த்தி நினைவுகூர்ந்துள்ளோம்.

நாட்டு நிலைமைகள் மோசமடைந்த காரணமாக போன இடம், இருக்கும் இடம் தெரியாத காலகட்டத்திலுங் கூட தன் மாணவர்களில் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துள்ளார். அவர் தன் மாணவர்களிலே காட்டிய நட்புரிமையுடன் கூடிய அன்பு, எளிமை பாராட்டத்தக்கது. என்றைக்கும் தன்னை எளிமையாகவே வெளிப்படுத்துவார்; ஆனால் கண்டிக்க வேண்டிய இடத்தில் சிரித்துக் கொண்டே தண்டிக்கவும் தெரிந்தவர்.

அசாத்திய காலகட்டங்களிலும் வானொலியில் கதாபிரசங்கம், பேச்சு, நேர்முகவர்ணனை என்று அவ்வப்போது இவரின் குரல் ஒலித்துக்கொண்டிருக்கும். சமயம், கோவில் இவற்றில் காட்டும் பற்று அவர் பிறந்த இடத்திற்குப் புகழ் சேர்க்கும் விடயமாகும். தனது கல்விக்கும், தாய் மொழிக்கும் அவரது பங்களிப்புக்குத் தமிழ்ச்சங்க (கொழும்பு) உதவிப் போசகர் பதவி சான்றுபகர்கிறது.

இவ்வாறாக, யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் மொழித்துறைத் தலைவராகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்று ஆண்டுகள் அறுபதைத் தாண்டிய கலாநிதி அவர்களின் மணி விழாச் சிறக்கவும், வாழ்வு மேன்மையுறவும், மென்மேலும் அவர்தம் சமய சேவை, தமிழ்ச்சேவை, இலக்கிய ஆய்வுச் சேவை வளரவும் இறைவனை மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்.

வைத்திய நிபுணர் விக்னவேணி செல்வநாதன்
4B, 1ஆவது சப்பல் லேன், கொழும்பு–06



எளிமை, சிநேகபாவம், அன்னியோன்னியம் மிக்கவர்



உடல் பசிபோக்கும் 'அமுத சுரபி'யை எண்ணும் தோறும் எனது நினைவில் வருவது அண்டி வந்தோரின் உடல் பசியையும் ஆன்மீகப் பசியையும் போக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமும் அதன் மரபு வழி அறங்காவலரான டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும் ஆவர்.

கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் எனது நீண்டகால நண்பர் ஆவர். எனக்கு அவரை அறிமுகப்படுத்தியது கொழும்பு நகரில் அன்னார் ஆற்றிய சைப்பிரசங்கங்களே ஆகும். அனைவரும் புரிந்து கொள்ளும்படியாக இலகு தமிழில் சைவசித்தாந்தக் கருத்துகளையும், புராணக்கதைகளையும் அவர் எடுத்துக் கூறும் போது அவையினர் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பர். நிகழ்ச்சிமுடிவுற்றதும் இவ்வளவு சீக்கிரம் முடிவுற்றதே என்று ஆதங்கப்படுவர். நிகழ்ச்சியின் பின்னர் நான் அவருடன் கலந்து உரையாடியதுண்டு. அவ்வேளைகளில் அவருடைய எளிமை. சிநேகபான்மை, அந்நியோன்யம் என்னை ஆச்சரியப்பட வைத்ததுண்டு. அதனால் ஈர்க்கப்பட்ட நட்பு இன்றும் தொடர்கிறது.

கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் கல்விமான், சொற்பொழிவாளர், கலைஞர், நூலாசிரியர், பழகுவதற்கு இனிமையானவர், எளிமையானவர். அவருடைய மணி விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் அவர் நீண்ட காலம் சிறப்புடன் வாழ்ந்திருந்து தமிழ் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அ. முருகையா, மு. பத்மாவதி
இல. 25, 6/3 முதலாம் சப்பல் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு – 6
தொ. பேசி. : 2504675



பழகுவதற்கினிய பண்பாளன்

எண்பதுகளின் ஆரம்பமாக இருக்கலாம். அப்போது நான் யாழ். இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். வானொலி கேட்பது என்னைப் போன்ற மாணவ, மாணவிகளின் பிரதான பொழுது போக்காக இருந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை விரும்பிக் கேட்போம். அப்படியொரு நாள் மாலை ஆறுமணிச் செய்தியைத் தொடர்ந்து தேசிய சேவையை (அப்போது தமிழ்ச்சேவை ஒன்று என அழைக்கப்பட்டது) செவிமடுத்தபோது கணீரென்ற அழகு தமிழைக் கேட்க முடிந்தது. அந்தக் குரலுக்குரியவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தயாரிப்பாளராக இருந்த அவர் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பணியாற்றினார். என்னோடு கல்விகற்ற நண்பர்களுக்கும் கலாநிதி நாகேஸ்வரனின் குரல் பிடித்திருந்தது.

ஆனால் அந்த அறிவிப்பைத் தொடர்ச்சியாக கேட்கக் கிடைக்கவில்லை. அவர் இலங்கை வானொலியில் இருந்து விலகியிருக்கலாம் என எண்ணினேன்.

நான், பாடசாலைக் கல்வியை முடித்தபோதும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனது அப்பா முருகேசு அப்போது வண்ணார்பண்ணைத் தபாலகத்தில் தபாலதிபராகப் பணியாற்றினார். கலாநிதி நாகேஸ்வரன் பி. ஏ தம்பி ஒழுங்கையில் இருந்த வீட்டில் வசித்து வந்தார். அப்போது தந்தையோடு அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. அது இன்று வரை தொடர்கிறது.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் பழகுவதற்கு இனியவர். அதுவே அவரை சமூகத்தில் பலருடனும் உறவைப் பேண உதவுகிறது. நட்புடன் எப்படி நடக்கவேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரியும். இதனால் கலாநிதி நாகேஸ்வரனுக்கு நண்பர்களும் அதிகம்.

பல்கலைக்கழகத்துக்கு செல்லமுடியாத நிலையில் எனது கல்வியில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டுவிடலாம் என நினைத்தேன். வெளிவாரிப்பட்டப் படிப்புக்காகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துவிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் வகுப்புகளுக்கு சென்று வந்தேன். இந்த தனியார் கல்வி நிறுவனம் திருமதி ச. அருள்நங்கையால் நடத்தப்பட்டது.

தனியார் கல்வி நிறுவனத்தில் படித்த மாணவ, மாணவிகளால் ஆதவன் கலை, இலக்கிய சஞ்சிகை வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில் கையெழுத்துப் பத்திரிகையாகவும் பின்பு றோனியோவிலும் வெளியான சஞ்சிகை, கல்வி நிறுவனத்தில் தமிழாசிரியராய் பணிபுரிந்த நா. குழந்தைவேலு அவர்களின் முயற்சியினால் அச்சுருவில் வெளியானது. வெளியீட்டுவிழா ஆனைப்பந்தியிலுள்ள கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. அந்த விழாவுக்கு கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் வந்திருந்தார். அவர் பேச்சாளராகவோ பிரதமவிருந்தினராகவோ வரவில்லை. பார்வையாளராக வந்திருந்தார்.

இன்று சில கல்வியாளர்கள், இலக்கியவாதிகள் தங்களை பேச்சாளர் பட்டியலில் சேர்த்தால்தான் விழாக்களுக்குப் போகிறார்கள். அப்படிப் பேச அழைக்காத நிகழ்வுகளை புறக்கணித்து விடுகின்றார்கள். ஆனால் கலாநிதி நாகேஸ்வரன் இவர்களில் இருந்து வேறுபட்டவராக இருந்தார். அவர் அப்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இருந்தபோதும் மிகவும் தன்னடக்கம் மிக்கவராகக் காணப்பட்டார்.

இந்தப் பண்பு கல்விநிறுவனத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கும் மாணவ, மாணவிகளுக்கும் அவர்மீது விருப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து வெளியான ஆதவன் இதழ்களிலும் ஆதவன் எழுகிறான் இதழ்களிலும் கலாநிதி நாகேஸ்வரன் ஆக்கங்களை எழுதினார்.

ஆதவன் சஞ்சிகை ஆசிரியராக என்னோடு கல்வி கற்ற அமிர்தலிங்கம் பணியாற்றினார். ஆசிரியர்குழுவில் நானும் செயற்பட்டேன். சஞ்சிகைக்கான ஆக்கங்களை பெற்றுக் கொள்வதற்காக கலாநிதி நாகேஸ்வரனின் பி. ஏ தம்பி ஒழுங்கையில் இருந்த வீட்டுக்கு அடிக்கடி சென்றிருக்கிறேன். அப்படிப் போகும் போதெல்லாம் அவர் இன்முகத்துடன் வரவேற்பார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த அவருக்கு வேலைப்பளு இருந்தது. ஆனாலும் எனக்காகவும் என்னைப்போன்ற மாணவர்களுக்காகவும் நேரத்தை ஒதுக்கினார். சமயம், இலக்கியம் எனப் பலவிடயங்கள் பற்றியும் எம்மோடு உரையாடுவார்.

நான் வெளிவாரிப் பட்டப்படிப்பை இடையில் கைவிட்டு வீரகேசரியில் ஒப்புநோக்குநராக சேர்ந்தபோது கலாநிதி நாகேஸ்வரன் கவலைப்பட்டார். என்னை வீரகேசரி ஆசிரியபீடத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு அப்போதைய நிர்வாகத்திடம் கடிதமூலமும் நேரிலும் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் நான் ஒப்புநோக்குநராக வீரகேசரியில் பத்து வருடங்கள் பணியாற்றினேன்.

பின்னர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராக சேர்ந்த போது கலாநிதி நாகேஸ்வரனைச் சந்தித்தேன். அவர் சமய நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

அவரோடு சேர்ந்து ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி அம்மன், காரைநகர் ஈழத்து சிதம்பரம், நல்லூர் கந்தசாமி கோயில், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் திருகோணமலை

பத்திரகாளி அம்மன் ஆலயம் உட்பட பல ஆலய உற்சவங்களை வானொலியில் நேரடி அஞ்சல் செய்திருக்கிறேன்.

எப்போதும் தன்னோடு அஞ்சல் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் வர்ணனையாளர்களோடு கலாநிதி நாகேஸ்வரன் அன்போடு பழகுவார். அவர்களைப் பற்றி உயர்வாகப் பேசுவார். இது அவரிடம் நான் கண்ட சிறந்த பண்பாகும்.

அவரது மணிவிழா பற்றிய மலருக்கு எழுதுமாறு கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் கடிதமூலமும் தொலைபேசிவாயிலாகவும் கேட்டபோது தயங்கினேன்.

பல்கலைக்கழக படிகளையே மிதிக்காத நான் எப்படி அவரைப் பற்றி எழுதமுடியும் என எண்ணினேன். ஆனால் அவர் என்னை விடுவதாக இல்லை. இது அவரின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. கலாநிதி நாகேஸ்வரனின் வற்புறுத்தலே இறுதியில் வெற்றிபெற்றது.

ஏதோ நானும் எனக்குத் தெரிந்ததை எழுதி விட்டேன். பிழையிருப்பின் கல்வியாளர்கள் பொறுத்தருள வேண்டும்.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் சமய, கலை, இலக்கியம்ப் பணிகள் தொடர காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவசக்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கும் பரம்பொருளை வேண்டி விடைகொள்கிறேன்.

நன்றி

முருகேசு ரவீந்திரன்,
முதற்றர அறிவிப்பாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு – 7.



நாவன்மையாளன் கலாநிதி நாகேஸ்வரன்



கலாநிதி நாகேஸ்வரன் அவர்களின் அறுபதாண்டு நடத்தைக் கோலங்களையும், சாதனைகளையும் சுமந்து வரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்கிறேன்.

அக இருள் அகற்றி அறிவொளி ஊட்டும் உன்னதமான சேவையைப் போற்றுகிறேன்.

மனிதனின் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட வாழ்வியல் கால நடத்தைக் கோலங்கள் அவனை ஒரு மானிட நேயனாக மாற்றி விடுகிறது. இந்த மானிட நேயத்தின் வெளிப்பாடுகளைத் தங்கள் வாழ்வியல் தரிசனங்களில் வரலாற்றுச் சுவடுகளாகப் பதிவு செய்துள்ளீர்கள். ஒரு புலமையாளன், சொற்பொழிவாளன், சித்தாந்த பண்டிதன், வாகீச கலாநிதி, அறிவிப்பாளன், நேர்முக வர்ணனையாளன், சமய; இலக்கிய; சமூக ஆய்வாளன் பத்திரிகை ஆசிரியன் இசையாளன் என்ற பல நிலைகளில் உங்கள் நடத்தைக் கோலங்கள் உருமலர்ச்சி பெற்றுள்ளன. இவை தங்களை ஒரு சமூக மனிதனாக உயர்த்தியுள்ளது.

"ஏதாவது ஒன்றை அறிய வேண்டுமாயின் அதில் நம்பிக்கை வையுங்கள்" என்றும் மத்திய கால சிந்தனைப் போக்கையும் "அறிவைச் சந்தேகி", "அனுபவமே அறிவின் அடித்தளம்" என்ற நவீன கால சிந்தனைப் போக்குகளையும் உள் வாங்கி இவற்றைத் தனித் தனியாகவும் ஒன்றிணைத்தும் பிரயோகித்துத் தனது அவதானக் குறிப்புக்களையும் பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களையும் வெளிப்படுதியுள்ளார். இவற்றிற்குச் சான்றுகளாக அவருடைய சமய, மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு, வரலாற்று, நாடக, கல்வி, விழுமியவியல், பத்திரிகையியல் ஆக்கங்களும் படைப்புகளும் உள்ளன.

இவரிடம் காணப்படும் துறைசார் புலமைமையும், ஆழ்ந்து அகன்ற அறிவும், மொழிபற்றிய பன்முகப் பார்வையும் ஒரு விடயத்தை யாருக்கு, எப்படி, எவ்வாறு சொல்வது என்ற முறையியல் வாங்கும் உளவியல் அணுகுமுறையும் நாட்டுப் புறவியல் சொல்லாடலும் இசைத் தேர்ச்சியும் உயிர்ப்பான மொழியாடல் முறையும் அவரால் வெளியிடப்படும் சொல் வீச்சுக்கள் மனித உள்ளங்களில் இலகுவாக உட்புகுந்து உறைந்து விடுகின்றன.

நாகேஸ்வரன் அவர்களின் இளமைக் கால ஆளுமைப் பண்புகள் நயினை ஸ்ரீ நாக பூஷணி வித்தியாலயம், நயினை மத்தியமகா வித்தியாலயம், நாவலப்பிட்டி கனிஷ்ட குமார

மகா வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி என்பவற்றால் கட்டமைக்கப்பட்டன. யாழ். பல்கலைக்கழகத்தில் அவர் பெற்ற கல்வி அவருடைய அறிவுசார் ஆளுமையை விருத்தி செய்தது. அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் பெற்ற கல்வியும் நெறிப் படுத்தல்களும் அவரை ஒரு கலாநிதி ஆக்கியதுடன் ஆய்வறிவாளர் என்ற வகுப்பினுள் நுழைய வழிவகுத்தது.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளராகவும், சித்த மருத்துவத்துறை உயர் தமிழ் விரிவுரையாளராகவும், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகவும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகவும் முன்னாள் மொழித் துறைத் தலைவராகவும் பணியாற்றியதுடன் யாழ். பல்கலைக்கழக கலா சுரபி (1979), தடுத்தாற் கொண்ட புராணம் (1989), சிவ தத்துவமலர் (1996), நவநாதம் (1998), பக்தி மலர்(2004) என்ற நூல்களின் படைப்பாளராகவும் தொழிற்பட்டுள்ளார். இப் பணிகளுடன் இன்றும் அவர் சமய, சமூக, பண்பாட்டு பணிகள் பலவற்றில் தன்னை உட்படுத்தி தனி மனிதர்களினதும் சமூகத்தினதும் இயக்க சக்தியாகத் திகழ்கிறார். அவருடைய பணிகளை வாழ்த்துவதுடன் அவரும் அவருடைய குடும்பத்தாரும் சுகவாழ்வு பெற்று வாழ எனது வாழ்த்துக்கள்.

திருமதி இந்திரா இராஜரட்ணம்
அதிபர்,
இராமகிருஷ்ண வித்தியாலயம்,
கொழும்பு – 06.



அடியார்கள் விரும்பிக்கேட்கும் நேர்முக வர்ணனையாளர்



மணிவிழாக்காணும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A., Ph. d அவர்களது 60 ஆவது ஆண்டு பிறந்த தினத்தையொட்டி ஏற்பாடு செய்துள்ள மணிவிழாவிற்கு ஆசியுரை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியும் பேரன்பும் அடைகிறேன்.

அவரது குலதெய்வமாகிய நயினையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருளால் சகலகலா வல்லி சரஸ்வதியின் அருட்கடாட்சத்தை அவர் நாவில் உறைகொண்டு விட்டார். அவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் மட்டுமல்ல, சகல துறைகளிலும் மேன்மை கொண்டு பல நூல்களை எழுதுவதிலும், சமயக்கட்டுரைகள் எழுதுவதிலும், கோயில்களில் சொற்பொழிவு, கதாப்பிரசங்கங்கள் செய்வதிலும் தனித்துவம் பெற்று விளங்குவதோடு வானொலி தொலைக்காட்சிகளிலும் கதாப்பிரசங்கம், சொற்பொழிவு, சைவ நற்சிந்தனை மேலும் ஆலய உற்சவங்களில் வானொலி தொலைக்காட்சி நேர்முகவர்ணனை செய்வதிலும் சிறப்புத் திறமை உடையவர். அடியார்கள் விரும்பிக் கேட்பார்கள். அவரது இப்பணி மேலும் மேலும் உலகு வாழ் தமிழ்மக்களுக்கும் கொண்டு செல்வதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் அருள்புரிவாராக!

சுபம்.

இங்ஙனம்,

கதிரேசு கனகசபாபதி, J. P

இளைப்பாறிய பொறியியலாளர்,
ஆலய முன்னாள் அரச நம்பிக்கைப் பொறுப்பாளர்,
முன்னாள் தலைவர், அறங்காவலர் சபை,
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொம்பனித்தெரு,

இறைதரிசனம் தரும் அடியார்



தேவி ஸ்ரீ தேவி, தேடி அலைகின்றேன்; பொன்னம் பலத்திலும் பூங்காவனத்திலும் கண்டிலேன், எங்கு காண்பேன் எனத் தவிப்போருக்குச் சில மானுடரின் தரிசனமே இறை தரிசன–மாக அமைந்து விடுவதுண்டு. தோற்றத்திலும் வாக்கிலும் தெய்வீகம் கமழ்வதுண்டு.

நாவிற் சரஸ்வதி நற்றுணையாக, நயினை நாகபூஷணியின் அருட்செல்வனாகப் பிறந்தனன் கனகசபாபதி நாகேஸ்வரன், அத்தகுபெருமகனின் மணிவிழாவிற்கு அடியேன் வாழ்த்த விரும்பினும் எப்படி வாழ்த்துவேனோ! அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும் எப்படிப் பாடினரோ, அப்படியல்லவா பெருமகனின் நாவசையும். கடவுளை எப்படிக்காண்பது என்று அண்மையில் "வெற்றி" தொலைக்காட்சி அலைவரிசையில் (01. 12. 2012) தோன்றிக் கூறினார்.

கடவுளை மனித உருவில்தான் மனிதன் காணமுடியும் என்பதை உணர்த்தி மனிதன் உயர்நிலைப் பண்புகளைக் கடைப்பிடிப்பானேயானால் அவனே கடவுள். நாங்கள் தேடி அலையவேண்டியதில்லை, என்பதைத் தன் சொற்பெருக்கால் சுருங்கக் கூறிக் கடவுளைக் காட்டவல்லவர் எம் பெருமகன் நாகேஸ்வரன். பொங்கல் விழாவில் வெள்ளவத்தை மக்கள் வங்கியில் தமிழைப் பொங்கவைத்து சகோதர மொழியாளர்களுக்கும் மும்மொழியிலும் விளக்கம் கொடுத்து எமது உள்ளங்களையும் உணர்வுகளையும் பொங்கவைத்துக் தனது உவமான உவமேய எடுத்துக்காட்டுக்கள், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற நாட்டார் பாடல்கள், உணர்வைத்தூண்டும் தெய்வீகப் பாடல்கள், பொருள் நிறைந்த சினிமாப் பாடல்கள் எல்லாம் எங்கிருந்தோ அவரின் நாவில் வந்து தவழ்வதனைக் கேட்போர் அறிவர்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்களின் அழகு தமிழில் ஊறி, கல்வியாம் பாகினைச் சுவைத்த மாணவர்கள் உள்ளத்துவகையால், நன்றிப் பெருக்கால் 'மணிவிழா'எடுப்பதில் பெருமகிழ்வு அடைந்து அடியேனின் இதயத்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன், நாகேஸ்வரப் பெருமகன், நீடூழி சிறப்புடன் வாழ்ந்து தமிழ்ப் பணியும் ஆன்மீகப் பணியும் ஆற்றுவதற்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மையை பிரார்த்தித்துப் பணிகிறேன்.

ச. விநாயகமூர்த்தி
25 3/3 1ம் சப்பல் லேன், கொழும்பு – 06.
தொ.பே . 011 – 2502157

ஓடி ஓடித்தமிழ் சொன்னவர்



அன்பர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எளிமையாயும், அன்பாகவும் பண்பாகவும் பழகும் பேரன்பர், கம்பன்கழகம் மூலம் அறிமுகமானவர், யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் தொடர் விரிவுரைகள் நடைபெறும் காலங்களில் 3, 4 கோவில்களெனத் தொடர்ந்து பேசியவர். மிக எளிமையாக, துவிச்சக்கரவண்டியிலும் ஓடிப்போய் சமயம் பேசியவர். நயினைக்குப் புகழ் தேடுபவர்களில் ஒருவர். இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டையில் கைலாயநாதன் அதிபர் வீட்டில் இருந்தவர். எந்நேரமும் கையில் புத்தகத்தோடு காட்சி கொடுப்பார். பண்டிதர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின் பேரன்பர். தரமான வர்ணனையாளர், நூல் விமர்சகர். அவர்பல்லாண்டு காலம் வாழ, சங்கரத்தைப் பத்திரகாளி அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

"சுபம்."

அன்பன்,
சங்கரத்தையூர்,
சி. சபாநாதன்



எனது பார்வையில் மணிவிழா காணும் கலாநிதி

எனது பள்ளித்தோழன் பாமா ராஜகோபால் நான் மாணவனாக இருந்தபோதே யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்ற ஆரம்பித்து விட்டார். அவர் மூலமாக பத்திரிகை அலுவலகப் பணியாளர்கள் பலர் நண்பர்களானார்கள். பாமா, 'மாலி' மகாலிங்கசிவம் கந்தசாமி 'சசி' சபாரத்தினம் ஆகியோரை அடிக்கடி சந்திப்பதுண்டு. அவ்வப்போது 'ஈழநாட்டில்' புதிதாக இணைந்து கொள்வோர், 'ஈழநாட்டி'லிருந்து விலகிச் செல்வோர் பற்றியும் கதைப்பதுண்டு. 80களின் ஆரம்பத்தில் வவுனியா மன்னார் பகுதிகளில் கடமையாற்றிய போது கனகசபாபதி நாகேஸ்வரன் பற்றி பாமா ராஜகோபால் குறிப்பிட்டும் சந்திக்க சந்தர்ப்பம் வரவில்லை.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நாடக உரைச்சித்திரகுழுவில் இருந்தபோதும் வானொலி கலையகத்திலோ ஒன்று கூடிக்களிக்கும் களரிகளிலோ சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

வானொலி நிலையத்திலிருந்து காற்றலைகளில் கலக்கும் கனகசபாபதி நாகேஸ்வரனின் குரல் கேட்டிருக்கிறேன்... பத்திரிகைகளில் அவர் எழுத்துகளைப் படித்திருக்கிறேன்; அவரைப்பற்றி பலர் சொல்லக் கேட்டதுண்டு. ஏனோ நேரில் ஒன்று சேரும் வாய்ப்பு கிடைக்கவில்லை...

1998 இல் சமய கலாசார பணிப்பாளராகக் கடமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதும் சந்திக்க விருப்பம் கொண்டு உதவிப்பணிப்பாளர் சுமார் வடிவேலிடம் இவரது சொற்பொழிவுக்கு ஒழுங்கு செய்யச் சொன்னேன். முதல்முறையாக இராமகிருஷ்ண மண்டபத்தில் நேரில் சந்திப்பு இப்படித்தான் அமைந்தது.

மாலையில் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சுமார் இருபது நிமிடங்களுக்கு முன் சென்று விட்டேன். மண்டபத்தில் நான்கைந்து பேர் கதைத்துக் கொண்டிருந்தார்கள். திணைக்கள உத்தியோகத்தரும் முழுமையாக வந்து சேரவில்லை. நானும் ஒரு கதிரையில் அமர்ந்து பத்திரிகைகளுக்குள் முகம் புதைத்தேன். உதவிப் பணிப்பாளர் குமார் வடிவேல் என்னருகே வந்து – 'சேர் தொடங்குவமா?'எனக் கேட்டபோது மணிக்கூடைப் பார்த்து – 'நாகேஸ்வரன் வந்து விட்டாரா?' எனக் கேட்டேன். குமார் வடிவேல் கனகசபாபதி நாகேஸ்வரனைச்

சுட்டிக்காட்டி, அவர் எப்பவோ வந்துவிட்டார் என்ற போது தான் நான் போவதற்கு முன்பாகவே அதாவது இருபது இருபத்தைந்து நிமிடத்துக்கு முன்பாகவே கனகசபாபதி நாகேஸ்வரன் வந்திருந்ததை அறிய முடிந்தது. எதற்காக என்னைக் குழப்ப வேண்டும் என எண்ணித் தன்னை அறிமுகம் செய்யாமல் தவிர்த்துக்கொண்டதாகக் குமார் வடிவேல் தெரிவித்தார். அது போல இவ்வாண்டு தைப்பொங்கல் நிகழ்வுக்கு இந்துத் திணைக்கள அமைப்பு கனகசபாபதி நாகேஸ்வரனை அழைத்த போதும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே வந்து ஒழுங்கு செய்வோருடன் ஒத்துழைக்கும் வழக்கத்தை இன்னும் மாற்றவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்.

எனது நண்பர்களில் சிலர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர்கள். அவர்கள் மூலமாக நாகேஸ்வரன் மகாஜனாவில் மாணவனாக இருந்த காலத்திலேயே தமிழ் சமயம் வரலாற்றில் ஈடுபாடு அதிகம் கொண்டதோடு – சொற்பொழிவு – கலந்துரையாடல் – விவாதங்கள் போனறவற்றிலும் முன்னணிலையில் திகழ்ந்ததை அறிந்து கொண்டேன்.

சில வேளைகளில் எவ்வளவு தான் முன்னேற்பாடு செய்து வசதிகள் செய்து கொடுத்தாலும் சிலர் வராமல் விடுவதுண்டு. அந்த இடைவெளியை நிரப்ப ஈடு செய்ய நாகேஸ்வரனை உடனடியாகக் கூப்பிட்டால் கூட எந்த விடயமானாலும் எதுவித ஆயத்தமுமின்றி சமாளிக்கக்கூடிய திடீர் சொற்பொழிவாளன். சில வேளைகளில் விழாக்களையொட்டி அவசரம் அவசரமாக சிறப்பு மலர் வெளியிடும் வேளையில் ஆக்கங்கள் வேண்டுமென்றால் கைகொடுத்து கட்டுரை அனுப்பி வைப்பார். மேதைகள் பலர் அவதரித்த நயினையம்பதி தந்த அறிஞனல்லவா! எழுத்தோ சொற்பொழிவோ எதையும் நிறைவாகச் செய்யும் ஆற்றல் கைவரப்பெற்றவர்.

மக்கள் மத்தியில் சில சொற்பொழிவாளர்களுக்கு நல்ல செல்வாக்கு, மணிக்கணக்காக பேசுவார்கள். அவர்களை வானொலி நிலையத்தினர் அழைப்பதில்லை. வானொலியில் மூன்று நிமிடம் முதல் ஐந்து நிமிடத்துக்குள் உரையாற்றும் வல்லமை அவர்களுக்கிருப்பதில்லை. வானொலிப் பேச்சாளர்களை சில மேடைகள் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட பேச்சு சபையில் எடுபடாமல் போவதுண்டு. ஆனால் மணிவிழாக் காணும் கலாநிதி – இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பெற்று கொண்ட அனுபவம் – வானொலிக்கேற்ற வகையில் மூன்று முதல் ஐந்து நிமிடங்களுக்குள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும் – பொது மேடைகளிலும் ஆலயங்களிலும் சபையோர் நேரம் பார்க்காது தம்மை மறந்து கேட்குமளவுக்கு மணிக்கணக்காக தன்பால் கட்டி வைத்திருக்கும் ஆற்றலையும் அவருக்குக் கொடுத்தது.

ஒரு தடவை இலங்கை தமிழோசை இணைய வானொலி ஆண்டு விழாவை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கொண்டாடிய போது கனகசபாபதி நாகேஸ்வரனுடன் நானும் கலந்து கொண்டேன். திடீரென நான் கதிரேசன் மண்டபத்தில் இன்னொரு நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால் நாகேஸ்வரனை பேசச்சொல்லுங்கள் – அவர் பேசி முடிப்பதற்குள் திரும்பி வந்து விடுவேன் என்று சொல்லி விட்டு மெதுவாகக் கழன்று சென்றேன். சுமார்

ஒருமணிநேரம் கழித்து திரும்பிய போது நாகேஸ்வரன் மெதுவாகச் சிரித்தார் – ''நான் நீண்ட நேரம் சொற்பொழிவாற்ற வசதி செய்துவிட்டுப்போன நண்பர் தில்லை வந்து விட்டார். உங்களை அவரிடம் ஒப்படைக்கின்றேன்.'' – என ஒலி வாங்கியை என்னிடம் தந்தார். நான் ஒலிவாங்கியில் உரையாற்ற ஆரம்பித்ததும் கூட்டம் கலைய ஆரம்பித்தது. ஒரு மணி நேரத்துக்கு மேலாக சபையை ஆடாமல் அசையாமல் வைத்திருக்க நாகேஸ்வரனுக்கு முடிந்தது. சில நிமிடங்களுக்குள் என்னால் சபையை கலைக்கத்தான் முடிந்தது.

வானொலி நிகழ்ச்சிகள் நிலையக்கலையகத்தில் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பாவதுமுண்டு. சில நேரடியாக எது வித செம்மைப்படுத்தலு (நுனவைவமே) மின்றி ஒலிபரப்பாவதுண்டு. அப்போது விடயத்தில் கவனம் செலுத்துவது போல நேரத்திலும் கவனம் செலுத்த வேண்டும். ஒலிப்பதிவு அறையிலிருந்து ஒலிப்பதிவாளரோ அல்லது கட்டுப்பாட்டாளரோ பெரும்பாலும் கைகளாலும் கண்களாலும் தான் விடயத்தை நீட்டுக – நிறுத்துக – சுருக்குக – என்று சமிக்கை காட்டும் போது கவனம் அதிலும் இருக்க வேண்டும். அந்த சமிக்கைகளை சிலர் புரிந்து கொள்வதில்லை. சமிக்கைகளைக் கண்டு சங்கடப்பட்டு நிதானம் தவறுபவர்கள் கோபம் கொள்வோர் மத்தியில் இவர் எளிதாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வண்ணம் நொடிப்பொழுதில் தன்னைச் சுதாகரித்து சமாளித்துக்கொள்ளும் பக்குவம் கைவரப்பெற்றவர்.

நேரடி வர்ணனை என்பது போரடிக்கா வண்ணமும் நிகழ்வுகளை நேரடியாக் காண்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்துவதாகவும் அதே வேளை முக்கிய தகவல்கள் தரவுகளை நேயர்கள் அறிந்து கொள்ளத் தக்கதாகவும் அமைவது அவசியம். இதையெல்லாம் இவர் நன்கு தெரிந்து வைத்திருப்பதால் இவரது நேரடி வர்ணனை தனித்துவமானது என்பது மிகையான கூற்றல்ல.

அகவை அறுபதை அடைந்துள்ளார் என்பதை தோற்றத்தைப் பார்த்து மதிபபிடுவது சிரமம். இளமைத் தோற்றமும் சுறுசுறுப்பும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் இனிய குரலும் இறைவன் கொடுத்துள்ளான்.

உயர் வகுப்புகளுக்கு வருமுன்பே புகைவிடும் மாணவர்களைப் பார்த்திருக்கிறேன். பல்கலைக்கழக புகுமுக பரீட்சை சித்தியைப் போத்தலோடு கொண்டாடி அதை நிறுத்த முடியாமற்போனவர்கள் கதையும் உண்டு. அவர்கள் மத்தியில் ''அன்னை நாகபூஷணி அம்பாளின் திருவருளை முன்வைத்து தமது வாழ்க்கையைப் புனிதமாக நடத்துபவர் உயர் திரு.. கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்'' என கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாகுட்டி வழங்கிய நற்சான்று மிகமிகப் பொருத்தமானதாகும்.

இந்து சமய கலாசார திணைக்களம் அவ்வப்போது பல்வேறு நிகழ்வுகளை பல்வேறிடங்களில் ஒழுங்கு செய்யும்போது அநேகமான நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வளத்தருநராக கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் விளங்குகிறார்.

சொற்பொழிவு சுவையாக அமைய வேண்டுமென்றால் நல்ல குரல்வளம் பொருள்வளம் ஆகியவற்றுடன் இசைப்புலமையும் இருக்க வேண்டும். கிருபானந்தவாரியார் பாணியில் கதாப்பிரசங்கம்.... சின்னமணி கணபதிப்பிள்ளை போல வில்லிசைப்பாடல் நகைச்சுவை மட்டுமல்ல.... நடிகமணிவைரமுத்துவின் மயான காண்டத்தையும் சபை முன் கொண்டு வரும் திறமை வாகீசக் கலாநிதிக்குண்டு. திரைப்பட பாடல்வரிகளும் பொருத்தமான இடத்து வந்து சேரும். அவ்வப்போது பிறநாட்டு நல்லறிஞர்களின் மேற்கோள் ஆங்கிலத்தில் குறிப்பிட்டு அழகு சேர்க்கும் புலமையும் இவருக்குண்டு.

மேடை நிகழ்வில் கலந்து கொள்ளும்போது நேரத்தையும் இடத்தையும் பொறுத்து மேடையில் அமர்ந்திருப்போரை மாத்திரமன்றி மண்டபத்தில் பார்வையாளர் மத்தியில் அமர்ந்துள்ள பிரபலமானவர்களின் கருத்துக்களை சாதனைகளையும் தனது உரையில் இலாவகமாக இணைத்துக்கொள்வார். இந்த உத்தி தனித்தனியாக ஒவ்வொருவரைப் பற்றியும் அவர்களின் ஆற்றல் பற்றியும் அறிந்து கொண்ட ஒருவராலேயே செய்ய முடியும்.

கல்வி அமைச்சில் கடமையாற்றிய காலத்தில் அமைச்சின் சார்பில் மஹரகம தேசிய கல்வி நிறுவன ஒலிப்பதிவு – ஒளிப்பதிவுக் கலையகத்தில் கல்வி நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு – ஒலிப்பதிவு செய்து செம்மைப்படுத்தி வானொலி தொலைக்காட்சி நிலையங்களுக்கு அனுப்புவது வழக்கம். சிலர் வருகை தராத வேளைகளிலும் சிலரது நிகழ்ச்சிகளை தரமற்றவை என நிராகரிக்கும் வேளைகளிலும் திடீரென கல்வியோடு தொடர்பான கனதியான சிந்தனைகளை ஒலி – ஒலிப்பதிவு செய்வதில் கலாநிதி நாகேஸ்வரன் கணிசமான அளவு பங்களிப்பு நல்கியதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பல தரப்பட்டவர்களோடு பழகியிருக்கிறேன். சிலரிடம் ஏதாவது நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளும்போது – நாட்குறிப்பைப் பார்க்கவேண்டும் – கலண்டரைப் பார்க்க வேணும் என்று சொல்வார்கள். பின்பு சில வேளையில் தான் கலந்து கொள்ளச் சம்மதம் அல்லது அதே தினத்தில் வேறு நிகழ்ச்சி என்று தெரிவிப்பார்கள். நண்பர் நாகேஸ்வரன் ஒரு ANNUAL PLANER போல இந்த வருடத்தில் எங்கே என்ன நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் – எப்போது தனக்கு வசதி வரும் என்று சொல்லி விடுவார். அடுத்த ஆண்டில் அவர் கலந்து கொள்ளும் சில நிகழ்வுகளும் அவருக்கு மனப்பாடம்.

சிலர் உரையாற்றும் போது சுவையாகப் பேசவேண்டும் என்ற எண்ணத்துடன் இடையிடையே நகைச்சுவையாக எதையாவது சொல்வதுண்டு. கதையை ஆரம்பிக்கும் முன் அவர்களே வாய்விட்டுச் சிரிப்பதால் கதையை தெளிவாகக்கேட்க முடியாமற் போனதுண்டு. இன்னும் சிலர் பெரிதாக 'ஜோக்' சொன்னதாக நினைத்து அவர்களும் பெரிதாகச் சிரிப்பார்கள். சொற்பொழிவாளரின் சிரிப்பைப்பார்த்து சபை சிரிப்பதை தவறாகப் புரிந்து தொடர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் சொற்பொழிவாளர்கள் மத்தியில் எந்தப்பெரிய நகைச்சுவையாக இருப்பினும் அதை நாசுக்காகச்சொல்லி சபையை சிரிக்க வைத்து தன் முகத்தில் மெல்லிய புன்முறுவலைத் தவழவிடுவார் கனகசபாபதியின் மைந்தன்.

பேராசிரியர்களின் இடையறாத்தொடர்பும், அவர்களின் நல்லாசியும் இதயபூர்வமான வாழ்த்துக்களும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் உயர்வுக்கு காரணம். அவர்களுள் பேராசிரியர்கள் க. கைலாசபதி, ஆ. வேலுப்பிள்ளை, சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி கா. இந்திரபாலா, அ. சண்முகதாஸ், நா. சுப்பிரமணியன், வி. சிவசாமி, கா. கைலாசநாதக் குருக்கள், எம்.ஏ.நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, துரை. மனோகரன், சி.க. சிற்றம்பலம், சோ. சந்திரசேகரன் குறிப்பிடக்கூடியவர்கள். அண்மையில் கூட கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற நூல்வெளியீடு ஒன்றில் பல ஆண்டுகளுக்கு முன்பே இளைப்பாறிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் பொ. கனகசபாபதி, பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஆகியோரைப் பணிந்து வணங்கியமை நெஞ்சை நெகிழ வைத்தது.

நல்ல நண்பர்களையும் சம்பாதித்து வைத்திருக்கிறார். அத்தகைய நண்பர்களுள் பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம், செயலாளராக இருந்த க.குணரத்தினம், மேலதிகச் செயலாளர் க.பரஞ்சாதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தலங்கள் மீது பாடப்பெற்ற பிரபந்தங்களைப் பற்றிய அருமையான ஆராய்ச்சித் தகவல்களையெல்லாம், இவரது 'ஈழத்து நவீன தமிழ்க்காவியங்கள் நூலில் இவர் பரவலாகக் காணலாம். வேறும்பல நூல்கள் கனகசபாபதி நாகேஸ்வரன் சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதைக் காட்டுகின்றன.

இவர் – கலை சமயம் வரலாறு தொல்பொருளியல் அரசறிவியல் இதழியல் கல்வி பண்பாடு மொழி என பல துறைகளில் ஆய்வுக்கட்டுரைகள் ஆக்கியுள்ளார். கோமுகி – சங்கமம் – கலாசுரபி – மல்லிகை செவ்வந்தி – இந்து நெறி – இனமுழக்கம் – தமிழ்ஒலி – பராசக்தி – தேன்பொழுது – ஊற்று – ஆலயமணி ஜீவசக்தி – தமிழோசை – உள்ளம் ஆகிய சஞ்சிகைகளுக்கும் தரமான ஆக்கங்களை அளித்துள்ளார்.

ஈழநாடு – உதயன் – தினகரன் – வீரகேசரி – தினக்குரல் உட்பட லண்டன், சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளிலிருந்து வெளியாகும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். நூல்கள் பலவற்றைப் எழுதியுள்ளார், பதிப்பித்துமுள்ளார். இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற இலக்கிய மகாநாடுகளில் கலந்து கொண்டு காத்திரமான பங்களிப்பும் நல்கியுள்ளார்.

நாதஸ்வரச் சக்கரவர்த்தி எனப்போற்றிப் புகழப்பட்ட அளவை என். கே.பத்மநாதன் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா நடைபெறும் நாட்களில் வேறு இடங்களில் கச்சேரி செய்யாமல் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலே நாதஸ்வரம் வாசிப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கலாநிதி நாகேஸ்வரனும் அது போல நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய திருவிழா நாட்களில் வெளியூர் நிகழ்ச்சிகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் சென்று விடுவார். ஆலய பரம்பரைத் தர்மகர்தாக்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடக்கூடியது.

ஆராய்ச்சி செய்து ஆய்வுகளைப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்துக் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு முன்பே 'வாகீசகலாநிதி'ப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர் கனகசபாபதி நாகேஸ்வரன். இவருக்கு 'அருள்மொழிச்செல்வர்', 'செஞ்சொல்வாரிதி', 'இன்னிசைச்சொல் வேந்தன்', 'செஞ்சொல்வாணர்', 'மணிமொழிவாரி', 'நவரசக்கலைஞானி', 'சொற்பேராழி' போன்ற பல்வேறு கௌரவங்களையும் பல்வேறு அமைப்புகள் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவரது வழிகாட்டலிலும் மேற்பார்வையிலும் பல பட்டதாரிகளை உருவாக்கியுள்ளனர்.

சிலர் சிறிதாக ஏதாவது செய்தாலும் அதைப்பெரிதாக விளம்பரப்படுத்துவார்கள். பிறரிடம் பெற்றுக்கொண்டதை ஒருபோதும் வெளியே சொல்வதில்லை. அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் நூல்வெளியீடு என்பது சிரமமானது என்றும் தனது நூல் வெளியீட்டுத் திருப்பணிக்கு இருபத்தையாயிரம் ரூபா உதவிசெய்த திருப்பணித் 'தவமணி'யையும் நன்றியுடன் நினைவு கூர்ந்ததும் குறிப்பிடக்கூடியது.

உடுவை எஸ். தில்லைநடராசா



ஞானச் செல்வர்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் ஆறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகப் போற்றப்படும் மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். அம்பாள் ஆலய மரபுவழி அறங்காவலர்களில் ஒருவராக கனசபாபதி நாகேஸ்வரன் திகழ்கிறார். இவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலைத் தமிழ்விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரபல சைவப் பாடசாலைகளில் ஒன்றாகிய மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர். இவர் பிறந்த நயினாதீவு மண்ணின் சூழலும், கல்வி கற்ற மகாஜனாக் கல்லூரியின் சூழலும் இவரை வெறும் கல்விமானாக மட்டும் உருவாக்காது, தாய்மொழிப் பற்றாளராகவும் ஆத்மீக சிந்தனை உடையவராகவும் மாற்றம் பெற வைத்துள்ளது. "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கு ஏற்ப மாணவனாக இருந்த காலத்திலேயே இவருடைய ஆற்றல்கள் வெளிப்பட ஆரம்பித்தன. அந்தக் காலத்திலே பாடசாலைகளிலே பணியாற்றிய ஆசிரியர்களில் பலர் கர்மயோகிகளாகவே திகழ்ந்தார்கள். மாணவர்களிடம் புதையுண்டிருந்து ஆற்றல்களை வெளிக்கொணர்வதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள். நல்லாசிரியனை மாணவர்கள் என்றுமே தமது இதயத்தில் வைத்துப் பூசிப்பார்கள். மகாஜனாக் கல்லூரியில் தன்னை ஆத்மீக நெறியில் வழிப்படுத்திய ஆசான் திரு. ச. விநாயகரத்தினம் மீது இவர் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். நன்றி மறவாமைப் பண்போடு தனது ஆசிரியமணியின் பவளவிழாவினைத் தளபதியாக நின்று செயற்பட்டு மிகச் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

நல்ல குரல் வளம் அம்பாள் இவருக்கு கொடுத்த வரங்களில் ஒன்றாகும். அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளிலே இவருக்கு நிறைந்த ஈடுபாடு உண்டு. அம்பாள் உபாசகராகிய இவரின் நாவில் சக்தி தோத்திரங்கள் அனைத்தும் நர்த்தனமிடும். இவர் உள்ளம் உருகிப் பக்தி பாடல்களைப் பாடும்பொழுது கேட்பவர்களின் மெய் சிலிர்க்கும், பக்குவமடைந்தவர்களின் விழிகளில் இருந்து அருவி நீர் சொரியும்.

சிலர் பெரிய மேடைகளில் மட்டும்தான் பேசுவார்கள், பாடுவார்கள். பஜனைகளில் ஆலயக்கூட்டுப் பிரார்த்தனைகளில், சுவாமி வீதி வலம்வரும் வேளைகளில் பாடுவது தரக்குறைவு என்று நினைப்பார்கள். ஆனால் அன்பர் நாகேஸ்வரன் நிறைந்த மக்கட்கூட்டம் இருக்கும் மேடைகளிலும் பேசுவார் பாடுவார். பஜனைகளிலும் பிரார்த்தனைகளிலும் சாதாரண அடியவர்களில் ஒருவராகத் தானும் கலந்து கொண்டு பாடுவார். மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பக்குவமானவர்கள் சிலர் கூடி இருக்கும் சபைகளிலும் ஆன்மீகக் கருத்துக்களை எடுத்துக் கூறுவார்.

சமய நெறியில் நிற்பவர்களுக்கு கோலமும் சீலமும் மிகவும் முக்கியம். இவரிடம் இந்த இரண்டு சிறப்பாக இணைந்து காணப்படுகின்றன. வாக்கில் தெய்வீகம் பிரகாசிக்க வேண்டுமானால் வாக்கும் வாழ்வும் ஒன்றாக இணைந்திருத்தல் அவசியமாகும்.

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நடைபெற்ற காலத்திலே (1990 ஆம் ஆண்டு) அடியேன் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றினேன். நூற்றாண்டு விழாவின் முதல்நாள் நிகழ்வாக திருமுறை மாநாட்டினைச் சிறப்பாக நடாத்தினோம். வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து திருமுறைச் சுவடிகளை நடராஜர் படத்துடன் ஊர்வலமாக எடுத்து வந்தோம். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பலரும் ஒன்று கூடித் திருமுறைப் பாடல்களைப் பஜனையாக வீதியிலே பாடிக்கொண்டு வந்தார்கள். எங்களுடைய பஜனையிலே நெற்றியிலே திருநீறு, கழுத்திலே உருத்திராட்சம் (கண்டிகை) அணிந்து சிவக்கோலத்துடன் அன்பர் நாகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டார். "தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வது ஒன்று அறியேனே" என்ற மணிவாசகர் வாக்கிற்கு அமையத் தெரு வீதியிலே பஜனை பாடும் அடியவர்களில் ஒருவராகத் தானும் பங்குபற்றினார்.

இவர் தனது வாழ்வில் பல சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்தார். இவற்றையெல்லாம் போதனைகளாக்கிக் கொண்டு வாழ்வில் பல சாதனைகளைச் செய்தார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவர்; வாழ்வில் நடிக்கத் தெரியாதவர்; எந்தப் பெரியவராக இருந்தாலும் செய்யும் தவறுகளை நெற்றிக்கண் விமர்சனமாக நேரே எடுத்துச் சொல்லும் தன்மையுடையவர். இதனால் வாழ்வில் தனது தொழில் நிலையில் ஆரம்பகாலத்தில் பலரின் அருட்பார்வைக்கு உட்படாதவர். மேலதிகாரிகளின் பார்வைக்கு உட்படாவிட்டாலும் தையப் பிரகாசினியாகிய அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் அருள்கடாட்சம் இவருக்கு நிறையவே இருந்தமையால் இவர் குன்றின் மேல் இட்ட தீபமாக இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கிறார்.

மணிவிழா நாயகன் அன்பர் கலாநிதி நாகேஸ்வரனும் அவரது குடும்பத்தினரும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று நிறைவான வாழ்வு வாழ சர்வலோக நாயகியாகிய ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளைப் பிராத்திக்கிறேன்.

"சிவத்தமிழ் வித்தகர்", **சிவ. மகாலிங்கம்**
ஓய்வுபெற்ற விரிவுரையாளர்.

தீவகமைந்தன் கனகசபாபதி – நாகேஸ்வரன்



கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சிறந்த கல்விமான்; இலக்கியவாதி, கலைஞர், கதாப்பிரசங்கி, மொழிபெயர்ப்பாளர், வானொலி நேர்முகவர்ணனையாளர், சிறந்த சிந்தனையாளர் என்று சொல்லிக்கொண்டே செல்லலாம். அவர் பல்வேறு நூல்களை எழுதியவர். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறையிலே தலைவராக இருந்து பல பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விவழிகாட்டியவர். அதற்கு முன்பே யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் விரிவுரையாளராக இருந்து பணியாற்றியவர். இந்து சமயத்தின் நவீன காவலராக விளங்குபவர்.

இந்த அறிஞர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் நான் பிறந்த புங்குடுதீவுக்கு அயற்கிராமமான நயினாதீவில் பிறந்தவர். நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம், நயினை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைக் கற்றவர். நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி க. கைலாசபதியின் மேற்பார்வையில் 'ஈழத்து நவீன தமிழ்க் காவியங்கள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து கலைமாணிச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர். பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் மேற்பார்வையில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். இத்தனை சிறப்புகளுமிக்க கலாநிதி நாகேஸ்வரன் இலங்கை வானொலியில் தயாரிப்பாளராகவும் சிறப்புறக் கடமையாற்றியவர். அக்காலத்தில் நடைபெற்ற சம்பவமொன்று அவரது ஆளுமையையும் திறமையையும் எமக்கு எடுத்துக்காட்டியது.

1980ஆம் ஆண்டு காலப்பகுதி, அப்போது கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சமயநிகழ்ச்சிக்குப் பொறுப்பான தயாரிப்பாளராக இருந்தார். அது திருவெம்பாவைக் காலம். கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வர ஆலயத்தில் இருந்து சங்கீதபூஷணம் சிற்றம்பலம் சிவானந்தராஜா திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். அவரது பாடல் வானொலியில் அஞ்சல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. இலங்கை எங்கும் அவ்வஞ்சற் பாடல்களை நேயர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். என்ன நடைபெற்றதோ தெரியவில்லை. திருவெம்பாவைப் பாடலைப் பாடி கொண்டிருந்த சிவானந்தராஜா மயக்கமுற்றுக் கீழே விழுந்துவிட்டார்.

வானொலி அஞ்சல் தடைப்பட்டது. எல்லோரும் பயந்துவிட்டார். ஆனால் தயாரிப்பாளராக இருந்த கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் பயப்படவில்லை. மயக்கமடைந்தவரை பக்கத்திலிருந்த உதவியாளர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தானே பாடத்தொடங்கிவிட்டார். சிவானந்தராஜாவை விடவும் இன்னும் இனிமையாகப் பாடினார். அஞ்சல் தடையின்றி ஒலிபரப்பாவதற்கு ஆவன செய்தார். மறுநாள் தமிழ்ச் சேவையின் பணிப்பாளராகவிருந்த திருமதி பொன்மணி குலசிங்கம் அவர்களிடமிருந்து Commendation எனப்படும் பாராட்டுக் கடிதமும் கிடைத்தது. இவர் எதற்கும் தயாரான தயாரிப்பாளராக இருந்து சமயப்பணி செய்தவர் இந்த நாகேஸ்வரன்.

வானொலியை விட்டுப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றுவிட்ட பின்பும் வானொலியுடன் இன்றும் தொடர்புவைத்திருப்பவர். இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள ஆலயங்களில் விசேட உற்சவங்கள் நடைபெறும் பொழுது அவற்றை இலங்கை வானொலி அஞ்சல் செய்யும். அவ்வாறு அஞ்சல் செய்யப்படும் பொழுது கனகசபாபதி நாகேஸ்வரனின் குரல் நேர்முகவர்ணனையின் போது கேட்பதை நாம் அவதானிக்கலாம். அப்படி அவர் இன்றுவரை இலங்கை வானொலியுடன் தொடர்பு வைத்திருக்கிறார். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் குரல் இலங்கை வானொலியில் மட்டும் ஒலிக்கவில்லை. இங்கிலாந்தின் தமிழ் வானொலியிலும் (U.K தமிழ் வானொலி), கனடாவின் கீதவாணியிலும் இவரது சமயச் சொற்பொழிவுகள் ஒலிப்பரப்பாகியிருக்கின்றன.

பலநாடுகளிலும் நடைபெற்ற சமய, மொழி மகாநாடுகளிலும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியிருக்கிறார். பல இலக்கிய சமய ஆண்டு மலர்களிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சிறப்புமிக்க மகானாக விளங்கும் எனது அன்புக்குரிய நண்பர் கலாநிதி கனக. நாகேஸ்வரனுக்கு மணிவிழா எடுக்கும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

தம்பிஐயா தேவதாஸ்



மணியான நாயகன்

சிவபூமியான இலங்கைத் திருநாட்டில், கந்தபுராண கலாசாரத்தைப் போற்றும் யாழ்ப்பாணத்தில், நயினையில் பிறந்து, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தில் பட்டங்கள் பலபெற்று, விரிவுரையாளராகி, இன்று தனது மணிவிழாவைக் கொண்டாடுகிறார் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன். நயினை ஸ்ரீ நாக பூஷணியின் அருளினால், ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆலயங்கள் தோறும் ஆறுமுகநாவலர் வழியில் சைவசமயப் பிரசங்கங்களை நிகழ்த்தி மக்களுக்குச் சமய உண்மைகளைத் தெளிவுபடுத்தி வருகிறார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசு நாயனாரின் வாக்கிற்கிணங்க, இப்பணியைச் செய்து வருவதினால் "வாகீசகலாநிதி" என்ற சிறப்புப் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில், மொழித்துறையின் முன்னாட் தலைவராகவும், முதுநிலைத்தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றி, இலங்கை நாடெங்கிலும் இருந்து தெரிவான பட்டதாரி மாணவர்களுக்கு, அழியாத கல்விச் செல்வத்தை, அள்ளி வழங்கி, இன்று அவர்கள் புகழ்பூத்த ஆசிரியர்களாக நாட்டுக்குச் சேவையாற்ற வைத்துள்ளார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அவருடைய மாணவர்களின் பண்பும் திறமையும் ஆசானின் ஆற்றலை எடுத்தியம்புகின்றன.

இலங்கை வானொலியில் சைவநற்சிந்தனை வழங்கும்போது, ஆலயங்களில் தேர்த்திருவிழா, கும்பாபிடேகம் போன்ற நிகழ்வுகளின் போது நேரடி வர்ணனை வழங்கும்போது, இவருடைய ஆழ்ந்த அறிவு, நுண்மான் நுழைபுலம், ஆளுமை, ஆற்றல் எல்லாவற்றையும் அவதானிக்கும் திறன், எதையும் நுணுகி ஆராயும் தன்மை என்பவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கும். பண்ணுடன் திருமுறைகள் பாடுவது வாகீச கலாநிதிக்குக் கைவந்த கலை. பஞ்சபுராணம், பன்னிரு திருமுறைகள் என்பவற்றை உரிய பண்களுடன் பக்தியையும் கலந்து இன்னிசையாகப் பொழிவார்.

முனைவர், கல்விமான், வாகீசகலாநிதி, அருட்கலைமாமணி, கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள், பல்லாண்டு காலம் நற்சுகத்துடன் வாழ்ந்து சைவசமூகத்திற்கு இன்னும் நிறையவே சமய, சமூகப் பணிகள் செய்யவேண்டி, எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அன்னையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அமைகிறேன்.

'திருமுறைநெறிச் செல்வர்', சித்தாந்த ரத்தினம்,
திருமதி கேசினி கோணேஸ்வரன்
CPA (Aus), ACMA CGMA (UK), ACMA (SL), MCPM (SL)



கல்விமான்



அலைகடலின் மத்தியில் அழகுற அமைந்திருக்கும் நயினாதீவு ஒரு சிறிய கிராமம் எனினும் தக்கார் பலரும் தாழ்விலாச் செல்வர்கள் பலரும் வாழும் கிராமமாகத் திகழ்கிறது. இங்கு கல்விமான்கள் பலரும் பத்திமான்கள் பலரும் வாழ்ந்துள்ளனர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய சிறப்புமிக்க ஊரில் சிறப்பும், புனிதமும், அழகும் அளித்து சக்திபீடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது நயினாதீவு நாகபூஷணியம்மன் ஆலயம். இத்தகைய புகழ்பெற்ற ஆலயத்தில் பரம்பரை வழி அறங்காவலர் சபை உறுப்பினராகப் பணியாற்றும் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று
என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கத் தோன்றிய அறிஞர்களுள் ஒருவராவர்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர். இவரது பேச்சாற்றல் கனடா, சுவிஸ், லண்டன் போன்ற நாடுகளுக்கும் பரவியுள்ளது. இவர் சிறந்த வர்ணனையாளர். ஆலய மகோற்சவங்களில் வர்ணனையாளராகத் தொண்டாற்றுவதுடன் மட்டுமன்றிப் பண்ணோடு இசைபாடுவதிலும் வல்லவர். இவர் தனது சொற்பொழிவின் மூலம் பல சமயக் கருத்துக்களையும் சமூகத்துக்கு எடுத்துரைத்து வருபவர்.

கல்விமானான், பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் பல திறமை மிகு மாணவர்களை உருவாக்கியுள்ளார். எல்லோருடனும் அன்பு நிறைந்த காரியமாகப் பழகுவார். இவர் வயதால் அகவை அறுபதை அடைந்தாலும் உடலாலும் உள்ளத்தாலும் இன்றும் இளமையுடன் செயற்பட்டு வருபவர்.

பேரறிஞர், கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் ஸ்ரீ நாகபூஷணி அன்னை மீது மிகுந்த பக்தியுடையவர். இவர் ஸ்ரீ நாகபூஷணி அன்னையின் அருளால் ஒருமுறை நோயிலிருந்து

காப்பாற்றப்பட்டவர். ஆலயப் புனருத்தாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மழையால் வேலைகள் தடைப்பட்ட வேளையில் என்னிடம் "நாளையிலிருந்து நீங்கள் வேலை செய்யலாம். நான் அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். வேலை செய்யும் நாட்களில் மழை பெய்யாது." என அவர் கூறினார். அதேபோல் வேலை செய்யும் நாள்களில் மழையும் பெய்யாதிருந்தது. வேலையும் இனிது நிறைவுற்றது. இதுவே இவர் அம்மனிடம் கொண்ட பக்திக்குச் சான்றாகும்.

இவரது ஓய்வுக்காலம் சிறக்க ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளை இறைஞ்சுவதுடன் எனக்கும் வாழ்த்துச் செய்தி எழுத வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

"இறைபணி வித்தகர்"

செ. சிவலிங்கம்

ஒப்பந்தகாரர்,

"மலர் வசந்தம்", K.K.S. றோட், இணுவில்.



துறைசார்ந்த விற்பன்னர்



ஒரு மனிதனைப் பூரணமாக்குவதற்கு அவசியமான தேவைப்பாடுகளுள் ஒன்று மொழி. மொழிக்கல்விப் புலத்தில் துறைசார்ந்த விற்பன்னர்களுள் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், எம்.ஏ.பி.எச்.டி. அவர்களும் ஒருவர்.

மொழித்துறையின் முதுநிலை விரிவுரையாளரான இவர் கல்விச் சமூகத்தின் மத்தியிலும், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் மத்தியில் அவர்களின் ஆக்கத் திறன்களை ஊக்குவிக்கவும், அறிவுத் திறன்களை வளர்க்கவும் கலை, இலக்கிய நயத்தோடு கனதியான தொண்டாற்றுபவர்.

அன்றாட வாழ்க்கையில் பல்வகைத் தேவைகள், குறைகள், தடங்கல்கள், இன்னல்கள் என இன்னோரன்ன பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய காலகட்டத்தில் மாணவர்கள் அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளவும், புறவாழ்க்கையை விட்டுப் பிரிந்து அகத்தளவில் மனச்சாந்தியும், ஒருமையும், நிறைவும் பெறவும் இவரது பணி பெருந்துணை புரிகிறது.

மொழியின் நுட்பங்கள், கலையின் நுணுக்கங்கள், சமகால நிகழ்வுகள் எனப் பல்துறை சார்ந்த ஆக்கங்களை எழுதியும், கும்பாபிஷேக (நவநாதம்) மலர்கள் போன்றவற்றைப் பதிப்பித்தும், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் நிகழ்த்தியும், வானொலியில் சமயச் சொற்பொழிவுகள் நற்சிந்தனைகள் என்பவற்றை வழங்கியும் தொன்மை வாய்ந்த தமிழுக்குப் சமயத்துக்கும் இவர் ஆற்றிவரும் தொண்டு மகத்தானது.

சமய நிகழ்வுகளும், உற்சவங்களும், சமயப் பண்பாடும்தான் எமது தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் காத்து வருவன. அந்த வகையில் ஈழத்தின் எல்லா பாகங்களிலும் உள்ள ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், விழாக் காலங்களில் நேர்முக அஞ்சல் செய்து வருவதும் யாவரும் அறிந்ததே.

காலத்தோடு போட்டியிட்டு கருத்தோடும் செய்யும் சேவை மகத்தானது – மனித மேம்பாட்டிற்கான புதிய சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைவது. சைவ அபிமானிகள் இவ்வாறு மேற்கொண்டு வரும் பணிகள் சைவமும் தமிழும் செய்த அருந்தவப் பயனே எனலாம்.

பாண்டித்தியம் மிக்கவர்கள் பொதுப்பணியில் துணிந்து செயலாற்றுவது மிகமிகக் குறைவு. தாம் வாழும் இடம் எல்லாம் சைவமும் தமிழும் ஒலிக்க முன்னிற்பவர்களுள் இவரும் ஒருவர்.

காலத்துக்கேற்ற கருத்துக்கள் கொண்ட நெறிதவறாத வசீகரமான பேச்சும், நேரிய கொள்கையும் கொண்டவர். உயர்வு தாழ்வு பாராட்டாது எல்லோரிடமும் கலந்து பழகும் உயரிய மனப்பாங்கு இவரது இயல்பு.

இத்தரையில் மணிவிழாக் காணும் எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும், போற்றுதலுக்கும் உரிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழா சிறப்புற்று ஓங்குக!

சிறப்புடைய செல்வங்கள் பெற்று சிவமும் சக்தியும்மாய் என்றென்றும் வாழ்க!

தமிழும் சைவமும் இருகண்களெனப் போற்றும் வித்தகனே வாழ்க!

விடையவன் தாள் போற்றுகிறோம்
வளம் பெற்று, நலம் பெற்றுப் பல்லாண்டு வாழ்க

சுபம்.

செம்மொழிச் செல்வி. பண்டிதை,
செல்வி. யோகலட்சுமி சோமசுந்தரம், B.A.Dip.in.Ed.



எமது பணிகளை நேசித்து அங்கீகரிப்பவர்



எமது தலைமையில் எங்கு எப்பணிகள் நிகழ்ந்தாலும் அவற்றை நேசித்து – ஏற்று – அங்கீகரித்து ஆதரவு தருபவர் அன்பர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். மதிப்பார்ந்த சமயச் சொற்பொழிவாளரென நமது நாட்டிலே விளங்குபவர் இவர். நல்ல பண்ணிசையாளர். இசைஞானம் பெற்றவர். திருவாசகத்தில் ஈடுபாடு மிக்கவர். பக்திரசம் ததும்பும் சொற்பொழிவுகளை இலங்கையின் நாலாபாகங்களிலும் உள்ள சைவாலயங்களிலே நிகழ்த்துபவார். வானொலி நேர்முகவர்ணனையாளர். நல்ல எழுத்தாளர்; சிந்தனையாளர்.

தமிழிலே துறைபோகக் கற்ற கலாநிதி நாகேஸ்வரன் சித்தர்களிடத்தும், ஞானிகளிடத்தும், மகான்களிடத்தும், அடியார்களிடத்தும், அநுபூதியாளரிடத்தும் பெரும் பக்தியும், மதிப்பும், பற்றும் நம்பிக்கையும் கொண்டவர். மணிபல்லவமெனப்படும் நயினாதீவிலே பிறந்தவர். ஞானவளமும், கல்விவளமும், பண்பு நலனும் வாய்க்கப் பெற்ற பரம்பரையிலே தோன்றியவர். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனையும், நயினை ஸ்ரீ வீரபத்திர சுவாமியையும் பக்தியுடன் வணங்கும் பேறு பெற்றவர். சைவ சித்தாந்தத்திலே பேரீடுபாடு கொண்டவர்.

முத்தமிழிலும் பாண்டித்தியமிக்கவர். மும்மொழியிலும் வல்லவர். மொழிபெயர்ப்பதில் வல்லவர். பல்கலைக்கழகத்திலே மும்மொழிகளிலும் விரிவுரைகளாற்றுபவர். பல்வேறு கருத்தரங்குகள், மாநாடுகள், பட்டிமண்டபங்கள், கவியரங்குகள், பண்ணிசையரங்குகளில் பங்கேற்றுச் சிறப்பிப்பவர். எனது தலைமையிலே அடிக்கடி கொழும்பிலே நடைபெறும் பல்வேறு சமய வைபவங்களிலேயும் அழைக்கும் போதெல்லாம் சம்மதித்து வருகை தந்து வைபவங்களைக் சிறப்பிப்பவர்; மிகவும் எளிமையானவர்; புலமையால் உயர்வு பெறுபவர்; அறிஞர்கறிஞர்; அன்புடைத் தோன்றல்; மறந்தும் பொய்யுரைக்காதவர்; நேர்மையாளன். மணிவிழாவிலே எமது இனிய மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்து, குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளது பேரருளால் மேன் மேலும் பல்வளமும், நீடிய சுகமும் ஆயுளும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

"சைவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் ஓங்குக"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சுபம்.

"திருப்பணித் தவமணி"
எஸ். தியாகராசா (STR)
தலைவர், ஸ்ரீமத் சபாரத்தினசுவாமி தொண்டர் சபை,
அரசதொடர்மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு – 4.



அருட்கலைமாமணி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் தெய்வநம்பிக்கை அபாரமானது



ழன்று தசாப்தகாலம் அன்பர் நாகேஸ்வரனுடன் அடியேனுக்குத் தொடர்புண்டு. ஈச்சமோட்டையிலே நாம் வசித்த காலத்திலும் அதன்பின் கொழும்பிலும் அவரோடு இடையறாத தொடர்பு உண்டானது. தமிழறிஞராயும், சிறந்த பக்திமானாயும், பரோபகாரியாயும், வேண்டிய நேரங்களிலெல்லாம் சமயப் பேருரை, பண்ணிசை ஆற்றும் பெருமகனாயும் விளங்குபவர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளது குருவருள் எம்மைப் பிணைத்தது. யாழ்ப்பாணத்திலே ஈச்சமோட்டை ஞானவைரவர் சுவாமி கோவிலும், கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் 'திருப்பணித்தவமணி' தலைவர் எஸ். தியாகராசா(STR) அவர்களது தலைமையிலே பல்வேறு திருவடி வழிபாடு, குருபூசை நிகழ்ச்சிகளிலே அற்புதப் பேச்சாளராகவும், பேராளராகவும் கலாநிதி நாகேஸ்வரன் கலந்துகொள்வதுடன் திருவாசகமுற்றோதல் நிகழ்வுகளை வீடு தோறும் நிகழ்த்துகையிலேயும் அதிற் கலந்துகொண்டு திருவாசகப் பெருமை – சிறப்புகள் குறித்தும் அருளுரை நிகழ்த்தியுள்ளார். மணிவிழா நாயகர் அன்பர், அறிஞர், தொண்டர் நாகேஸ்வரனின் திறந்த உள்ளம் போன்றதே அவர் வீட்டின் அடையா நெடுங்கதவும். எந்த வேளை அவரைக் காணச் சென்றாலும் கதவு திறந்தே இருக்கும். யான் முனைப்போடும், வேகத்தோடும் செய்ய நினைக்கும் சில பணிகளுக்கு எப்போதும் பேராதரவும், அன்பும், ஒத்துழைப்பும் தந்து அவை சிறப்புற நிறைவேற உதவுபவர் மணிவிழா நாயகர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள். சைவத்தமிழ் மக்கள் மத்தியிலே நன்கு அறியப்பட்ட பண்பான கல்விமான் என்பது பிரசித்தம். என் மணிவிழா, முத்துவிழா நிகழ்வுகளுக்கெல்லாம் உதவியவர் இவர். தமது அயராத ஆராய்ச்சி முயற்சியாலும், உழைப்பாலும், வாசிப்பினாலும், சிந்தனையினாலும், உயர்ந்தோங்கி வாழும் இக்கல்விமானின் மணிவிழாவில் அவரையும் அவரது மனைவி மக்களையும் வாழ்த்துவதிலே மட்டற்ற மகிழ்வடைகிறோம். எல்லாம்வல்ல திருக்கேதீச்சரத் துறையும் கௌரியம்பாள் சமேத (திருக்கேதீச்சரநாதர்) மகாலிங்கப் பெருமானது பேரருள் நீடிய சுகானந்த வாழ்வை அருளுவதாகவெனப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

'கலாபூஷணம்' தம்பு. துரைராசா
செயலாளர், தொண்டர் சபை,
ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்
"திருவாசகம்", இல, 31 A ஞானகி ஒழுங்கை, கொழும்பு – 4.



ஆன்மீக விழிப்புணர்வைச் சமயச்சொற்பொழிவின் ஊடாகத் தந்து கொண்டிருப்பது பிரமாதம்



அன்பும் பண்புங் கொண்ட கலாநிதி க. நாகேஸ்வரன், MA,Ph.d. ஐயா அவர்களுடைய மணிவிழாச் செய்தி கேட்டு நாங்களும் மனம் மகிழ்கிறோம்.

சித்த ஆயுள்வேத கல்வியில் உயர்தமிழை புகட்டி, மறைந்த, மறைபொருள் கொண்ட, மங்கிக் கொண்டு போகும் பல அரிய தமிழ்ச் சொற்களை வெளிக் கொண்டு வந்த பெருமை இவரையே சாரும். குழூ உக்குறிமொழி கொண்ட பல செய்யுள்களிலிருந்து இலக்கிய, இலக்கணங்களைப் பிரித்தெடுத்து மருத்துவக் கருத்துகள் ஊடாகப் பின்னிப் பிணைந்து அழகிய சொற்றொடர் வடிவங்களாக உருக்கொடுத்துத் தனது படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்த அவரைத் தமிழ் பேசும் எவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

தமிழர்களின் இரு கண்களாக விளங்கும் சைவசமயத்தையும் தமிழ்ச் சித்த வைத்தியத்தையும் தனது திறமையான ஆய்வுக்குட்படுத்தி அரிய பொக்கிசங்களை இன்றைய விஞ்ஞான உலகிற்கு வெளிக்காட்டிய பேராசன் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

ஆன்மீக வழிமுறைகளையும், ஆன்மீக விழிப்புணர்வையும் எமது வாழ்வில் பின்பற்றி வாழ்வதற்கான அறிவுரைகளைத் தனது சமயச் சொற்பொழிவுகளின் ஊடாகத் தந்து கொண்டிருப்பது பிரமாதம்.

தனது சொந்த வாழ்க்கையில் பலசோதனைகளை எதிர்கொண்டு அவற்றையெல்லாம் சவாலாக்கிச் சாதனை படைத்த சாதனை வீரன், கல்விமான், உயர்திரு க. நாகேஸ்வரன் ஐயாவையும் அவர் குடும்பத்தினரையும் பாராட்டி மனநிறைவுடன் வாழ்த்துவதுடன், அவர்களது மணிவிழாக் காண்பதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

டாக்டர். S. யோகேந்திரன் குடும்பம்

B. S. M. S. (SL) ; M. P. M (SL)

(பி. எஸ். எம். எஸ் (SL) ; எம். பி. எம் (SL)

பொறுப்பாளர்,

அரச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, நிலாவெளி.

பல்துறை வல்லாளர்



நழுநாட்டின் சிரகமாக விளங்கும் எழில்மிகு யாழ்ப்பாணத்தின் கண்ணே அருள் ஒளி வீசி பிரகாசிப்பது நயினாதீவு. இத்தீவு சிறியதாக இருந்தாலும் இதன் பெருமை மிப்பெரியது. "கடுகு சிறிதாயினும் காரம் பெரிது" என்று கூறுவார்கள் அத்தகைய தன்மையுடையது நயினாதீவு. பல்லினமக்களாலும் வழிபடப்படுகின்ற பதியாக இத்தீவு விளங்குகின்றது. இங்கேதான் உலகிலே உள்ள அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் அமைந்துள்ளது. இங்கு அம்பிகை சகல சிறப்புகளோடும், ஸ்ரீ நாகபூஷணி என்ற மகத்தான நாமத்தோடு எழுந்தருளி அருளாட்சி புரிந்து கொண்டு இருக்கிறார்.

இத்தகைய சிறப்பு மிக்க பதியிலே பல அன்பர்கள் தோன்றிப் புகழுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுள் இன்று அகில உலகும் அறிந்த பல்துறை வல்லாளராக விளங்குபவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். இவர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு வழிவழிதொண்டு செய்யும் நயினாப் பட்டர் பரம்பரையில் வந்துதித்த பெருமகனார். இன்று அம்பிகையின் ஆலயத்தில் பரம்பரை அறங்காவலராக இருந்து "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கிற்கு அமைவாகப் பல பணிகளைச் செவ்வனே செய்து வருகிறார். அம்பிகையின் திருவிழாக் காலங்களில் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவார், சமய பிரசங்கங்களை ஆற்றுவார், சகல உலகங்களிலும் உள்ளவர்கள் கேட்டு மெய் உருகும் வகையிலே இறைபுகழை வானொலி வர்ணனைகள் மூலமாக எடுத்துக் கூறுவார். அகில இலங்கைக் கம்பன்கழகத்தின் மூலமாகப் பல பட்டிமன்றங்கள் வழக்காடு மன்றங்களிலே கலந்து தன் நாவன்மையை உலகறியச் செய்த பெருமகனார். இவரின் இனிய குரலைக் கேட்டு மயங்காதவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம். "கீதம் பாடும் குயிலின் குரலையும் கிளியின் நாவையும் இருப்பிடமாகக்" கொண்டவர் கலாநிதி கனகசபாபதி – நாகேஸ்வரன் அவர்கள். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தமிழை இன்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், நறுந்தமிழ், செந்தமிழ், விலையுடை அருந்தமிழ் என்று பலவாறு சிறப்பித்திருக்கின்றார். இத்தனை தமிழையும் இவருடைய உரைகளிலே நாம் கண்டு வியந்திருக்கிறோம்.

நான் சிறுவனாக இருந்தகாலத்தில் இருந்து இவருடன் நன்றாக பழகினேன். ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலே ஒன்றாக இருந்தோம். அக்காலத்தில்

பிள்ளையார்கதை படித்தும், திருவெம்பாவை ஓதுதல், வெள்ளிக்கிழமைகளில் கூட்டு வழிபாடுகளில் ஈடுபடுதல் போன்ற நிகழ்வுகளில் சிறப்பாக ஈடுபடுவார். 1993ஆம் ஆண்டு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இவரின் பண்ணிசைக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. கேட்போர் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது.

இவற்றுக்கு மேலாக சமயப்பணியோடு நின்று விடாது சமூகப்பணி, கல்விப்பணிகளிலும் சிறப்பாக ஈடுபட்டு வந்தார். கொழும்பில் நடைபெறுகின்ற பெரும்பாலான நிகழ்வுகளில் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அன்றில் இருந்து இன்று வரை பல பணிகளை புரிந்துவருகிறார். இவரின் நாவன்மையைக் கண்ட பெரியவர்கள் இவருக்கு "வாகீசகலாநிதி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்திருக்கிறார்கள். இன்று சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே சிரேஷ்ட மொழித்துறைப் பேராசானாக இருந்து தம்மாலான பணிகளை ஆற்றிவருகிறார். தமிழிற்கும் சைவத்திற்கும் இவர் ஆற்றிய பணிகள் இவரை மட்டுமல்ல இவரின் பரம்பரையினரையும் என்றும் சிறப்பாக வாழவைக்கும் என்று வாழ்த்தி, எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் இவருக்கு மேலும்பல சிறப்புகளை கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகிறேன்.

நன்றி.

நா. இராதாகிருஷ்ணன்
I. S. A (Hinduism)
தீவகக்கோட்டம்.



அபார அறிவாளி

அகிலத்தில் அவதரித்த ஆன்மீக அருளாள அறிஞர் அவர்களே! அவனியிலே அகவை அறுபதில் அடி எடுத்து வைக்கும் அபார அறிவாளியே! தங்களது ஞானத் தமிழ்த் தொண்டைப் பாராட்டுவதோடு, தங்களது தொண்டு மேலும் பரவட்டும் – மலரட்டும் – மிளிரட்டும். தங்களது நாமம் பார் எங்கும் பட்டிதொட்டி எல்லாம் முழங்க வேண்டும். தன் பேச்சே மக்களின் மூச்சாக முழங்க வேண்டும்.

மாலை போன்ற பாராட்டினை பதக்கமாகவுள்ள இலங்கை நாட்டின் மிகப்பெரிய மாகாணமாகிய சப்ரகமுவ மாகாணத்தின் கருவாகவுள்ள பலாங்கொடையில் அமைந்துள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராக நர்த்தனம் புரியும் கலாநிதி கனகசபாபதி நகேஸ்வரன் அவர்களின் ஆயுள் நீடிக்க, வாழ்வு மலர, அகவை அறுபதோடு அடி நீள – தங்களது ஆன்மீகத் தொண்டு – சொற்பொழிவுகளை கற்களால் அல்ல பொற்களால் பொறிக்க எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு
அன்பன்
K. M. R. **தயாநிதி**
இல, 37, பிரதான வீதி,
கேகாலை.



எனது நல்வழிகாட்டி

'கற்றதனால் ஆய பயன் என் கொல்' – 'தோன்றிற்புகழொடு தோன்றுக' என்றார் வள்ளுவர் பெருந்தகை. – 'பெருநெறி பிடித்தொழுக வேண்டும்' என்றருளினார் மறைந்த தண்டமிழ்த்தேன் பொழியும் செந்நாவமைந்த இராமலிங்க வள்ளலார். பெரிய வழி, உயர்ந்த கொள்கை, சிறந்த பாட்டை என்ற கருத்திற்கமைய சமயாபிமானமும், புலமையும், சைவ இலக்கியமும், சித்தாந்த சாத்திரங்களுடன் கூடிய கல்விமானும், சொற்பொழிவிலே நவரசம் ததும்பும் பேச்சாற்றலும் கலைஞரும் பேராசானும், பேராளரும், பேரறிஞரும், தமிழோடு இசையில் இணைந்து நமது சமூக சமுதயாச் செல்வமுமே சிறந்ததே அது சிறந்ததோ, இழிந்ததோ அதைவிட்டு அன்னிய பண்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாது.

பெறுமுயன்றால் நல்வாழ்க்கையே வீணாவது திண்ணம் என்ற கொள்கையிலே நயினை அம்மனின் அருளால் உதித்து எனக்குப் பல வழிகளிலும் உறுதுணையாகவும், நல்வழிகாட்டிய பேராசானகவும், என்னோடு இணைந்த டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் ஐயா அவர்களை நீடூழி காலம் வாழ என்றும் இறயன்புடன் வாழ்த்துகிறேன்.

ஆரம்பக்கல்வியை நாவல் நகரிலே கற்று, இன்று பார்புகழும் அளவிற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது நயினை அம்மனின் அருளும் விடா முயற்சியுமே. நாவல் நகரில் குறுகிய கால வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும் சமய நிகழ்வில் மலையகத்திற்கு ஆற்றிய சேவை அளப்பெரிது. சமயம் சொற்பொழிவு, ஆன்மிகத்துவம், ஆராய்ச்சி, வரலாறு எனப் பல்துறை சார்ந்த நிகழ்வுகளிலும் பெரும்பங்களிப்பினை மேற்கொண்டு அனைத்து உள்ளங்களிலும் இடம்பெற்ற பெருந்தகை என்றால் மிகையாகாது.

இங்கு வாழ்ந்த காலத்தில் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் அன்னாரது நவரசம் ததும்பும் சொற்பொழிவை செவிமடுக்காத மகளிர்களே இல்லை என்றும் கூறலாம். இதேவேளை குயின்ஸ்பரி ஸ்ரீ நவநாத சித்தரின் ஜீவசமாதியும் ஸ்ரீ தேவசேனாதிபதியின் ஆலயம் கும்பாபிஷேகத்தின் காலப்பகுதியில் அவர்களின் சேவை பெரிதும் அனைவரையும் கவர்ந்ததோடு 'நவநாதம்' என்ற கும்பாபிஷேக விசேட மலர் உருவாவதற்கு அவரே காரணக் கர்த்தா – சபரகமுவ பல்கலைக்கழகத்தில் சேவையாற்றினாலும் அவரது மனம் குயின்ஸ்பரியை விட்டு அகலவில்லை.

'நவநாதர் சித்தர் சமாதி' என்று ஆரம்ப காலந்தொட்டு குறிப்பிடப்பட்டு வந்த பெயரை நவநாதர் சித்தர் சிவாலயம் என்றும் இடத்திற்கு 'ஸ்ரீ நவநாதேஸ்வரம்' என 1996 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருவது டாக்டரும், வாகீச கலாநிதியுமான கனகசபாபதி நாகேஸ்வரன் ஐயாவையே சாரும். இன்றும் அவரது சகோதரிகள் சித்தர் சிவாலயத்திற்குச் செல்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதி வருகின்றனர்.

மணிவிழாச் சிறப்புறவும், மணிவிழாச் சிறப்பு மலரும் இனிதே நிறைவு பெறவும், கலாநிதி நாகேஸ்வரன் ஐயா அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் ஸ்ரீ நவநாத சித்தர் சிவனின் அருள் கிடைக்கவும் என்றும் இறையன்புடன் பிரார்த்திக்கிறேன்.

என்றும்,
இறை அன்புடன்,
இரா. இராஜகோபால்
(ஊடகவியலாளர்)

பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நவசித்தர் சிவாலயம்.
104 - 4th Lane, Soyskelle,
Nawalapitiya.

வியந்து போனேன்



நயினையுறை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள் அவ்வூரில் பிறந்தோர்க்கு நிறையவே உண்டு. மொழியாற்றலும், அறிவாற்றலும் இயல்பாகவே இவர்கட்குக் கைவரப் பெறும். அவ்வாறு அம்மன் கடாட்சம் பூரணமாகக் கிட்டியோரில் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும் ஒருவர்.

இவரை நான் நன்கறிந்திருந்த போதும் நேரில் சந்தித்து அளவளாவும் வாய்ப்பு, என் சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை பெறுவதற்காய் இவரை அணுகிய போது கிட்டியது. அணிந்துரைக்கு ஆக்கங்களைக் கொடுத்து விட்டு மாதக்கணக்கில் அலை பாய்வதும், தவமிருப்பதும் இயல்பாகிப் போன இந்நாட்களில், எண்ணி மூன்றாம் நாள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அழைப்பு வந்தது. வியந்து போனேன்.

பக்கம் பக்கமாகச் சிலாகித்து எழுதியது மட்டுமல்ல, கூடவே அவருக்கு நான் கையளித்திருந்த என் முன்னைய நூலில் இருந்த எழுத்துப் பிழைகள், தவறுகளையும் திருத்தியிருந்தார். தனக்கிருக்கும் வேளைப்பளு, பாரிய பொறுப்புகள் மத்தியில் எக்கருமத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் முழு ஈடுபாட்டுடன் ஒன்றிச் செய்யும் இவரது பணி போற்றற்குரியது. எந்தரப்பினருடனும் இயல்பாய், நட்பாய் தராதரம் பாராட்டாது அன்பாய் பழகும் இவர் பேச்சாளர், அறிவிப்பாளர், விமர்சகர், நேர்முகவர்ணனையாளர், விரிவுரையாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் எனப் பல பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்ட சகலகலாவல்லவர்.

இதுவரை பலரால் அறியப்படாத இவரது பிறிதொரு முகம், இவரது இறுவெட்டு வெளியீட்டின் பின் வெளிக்கொணரப்பட்டது. அதுதான் இவரது சங்கீத ஞானம். நகைச்சுவை மிளிரப் பேசுவது இவரது இன்னொரு பலம் எனலாம். வாகீச கலாநிதி, அருட்கலைமாமணி, விரிவுரையாளர் எனத் தன் பெயரின் முன் நீண்டதொரு தலைப்பைக் கொண்டிருக்கும் இவ் அறுபது வயது இளைஞர் நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியத்துடன், சகல செளபாக்கியங்களும், பல சிறப்புகளும் பெற்று இனிதே வாழ இந்நயினையுறை ஸ்ரீ நாகபூஷணியின் அநுக்கிரகம் மென்மேலும் கிட்ட வேண்டுமென, அன்னார் மணிவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நாளின் பிரார்த்திக்கிறேன்.

பவானி சிவகுமார்
எழுத்தாளர், பிரதி அதிபர், கொ/ சென்ட் கிளேயர் கல்லூரி.



அற்புத மனிதர்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில், மிக நீண்டகாலமாக சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை ஆற்றி வரும் கனகசபாபதி நகேஸ்வரன் இலங்கை எங்கும் பம்பரம்போல் சுற்றிச் சுழன்று சமய உரைகளை ஆற்றிவருபவர். மட்டகளப்புக்கு பலதடவை வந்து ஆலயங்களில் ஆன்மீக உரைகளை ஆற்றி உள்ளார்.

05.08.2012 மணிவிழா நாயகனாக உயர்ந்துள்ள நாகேஸ்வரன் என்றும் மாறாத இளமையுடன் தோற்றுவது ஆச்சரியம், இப்படியே வைரவிழா, நூற்றாண்டு விழா என அவர் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லவேண்டும் என்பது என் பிரார்த்தனை.

இந்த ''இளைஞர்'' இலக்கியத்திற் கலாநிதிப் பட்டம் பெற்றுச் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் முன்னாள் தலைவராகப் பணியாற்றியவர். அவர் அவ்வாறு பணியாற்றய கலாத்தில் எண்ணற்ற தமிழ்ப் பட்டதாரிகளை உருவாக்கியவர்.

சமயத்துறையைப் பொறுத்தவரை, இவர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில், மிக நீண்டகாலம் மரபுவழி அறங்காவலராகப் பணியாற்றி வருபவர். இலங்கை எங்கும் சமயப் பேருரைகளை ஆற்றிவருகிறார்.

இவர் தன் இலக்கியப்பணியில் ஏராளமான சமய, சமூகக் கட்டுரைகளை எழுதியவர். இவற்றுள் தெரிவு செய்யப்பட்ட பல கட்டுரைகள் நூலாக்கப்பட்டு இவரது மணி விழாவன்று வெளியிடப்படவுள்ளது, இலங்கையின் இலக்கியத்துறையில் மறக்கமுடியாத ஒரு மைல் கல்லாக இவரது வாழ்வு அமைந்துள்ளது.

அன்புமணி
மட்டக்களப்பு
13.10.2012



இதயச் சோலையில் இதழ் விரித்த இனிய வாழ்த்துக்கள்!

அறுபது அகவைகளை நிஜ வாழ்வின் அடைந்தாலும் அகமதில் "என்றும் பதினாறாக இளமைத்துடிப்புடன் இதமான மொழி வன்மையுடன் வலம் வரும் என் கௌரவத்துக்குரிய பேராசான், கலாநிதி கே. நாகேஸ்வரன் என்றும் இன்றுபோல் அழியா மிடுக்குடன் செந்தமிழ்த்தாயின் மணம் பரப்பும் நல் மாணிக்கமாகத் திகழ வேண்டும் என இப்பொன்னான நன்நாளில் உளப்பூரிப்புடன் "காவேரி" எனப் பொங்கிவரும் உவகையுடன் வாழ்த்துகிறேன்!

வாழ்க! வாழ்க! என்றும் ஒளிஜோதியாய் புகழ் பெற்று வாழ்க!

கல்வியைக் கருந்தனக் கருத்தாகக் கொண்ட எம் சமூகத்தின் கருக் கொழுந்தான பேராசான் தீந்தமிழின் நல் ஊற்றாக வாழ்வது மங்காப் புகழும் மணம்பரப்பும் தமிழ்த்தாயின் பெரும் பேறே:– மேலும் தமிழைத் தன்னுயிராய் நேசிக்கும் தமிழ் நெஞ்சங்கள் அனைத்திற்கும் வரப்பிரசாதமே எனலாம். தமிழ்த்தாய் என்று அழியாத மிடுக்குடன், அணையாத தீபமாகப் புதுப்பொலிவுடன் வாழ்வதற்கும் வளர்வதற்கும் காரணம் சிறந்த தமிழ் வாணர்களான தமிழ் விற்பன்னர்களே எனின் மிகையல்ல. திக்குகள் எல்லாம் தெவிட்டாத செந்தமிழின் சங்கநாதம் முழங்கச் செய்பவர்கள் இந்த உத்தம புத்திரர்கள்.

அத்தகு சிறப்பினையும் மேன்மையையும் உடைய தமிழ்த் தொண்டர்களுள் ஒருவராக எம் ஆசான் கலாநிதி கே. நாகேஸ்வரன் அவர்களும் விளங்குகிறார் என்று எண்ணும் போது என் உள்ளத்தில் எழும் ஆனந்தம் மடை திறந்த வெள்ளம் எனப் பிரவாகிக்கிறது. அருந்தமிழ்ச் செல்வர்களுள் ஒருவராக எம் பேராசான் அவர்கள் பணிபுரிவது 'அவருடைய மாணாக்கனாகத் தமிழ் கற்கும் பாக்கியத்தை நான் இழந்து விட்டேன்' என்ற ஏக்கமும் உளத்தவிப்பும் என் உள்ளத்தை ஊசல் ஆடச் செய்கிறது.

கல்விமான், சொற்பொழிவாளர், கலைஞர், நூலாசிரியர், செஞ்சொற் செல்வர், நற்றமிழ்வாணர், பைந்தமிழ் மைந்தர், நவயுகத் தமிழ் வாரிசு, இலக்கிய ஆய்வாளர், கேண்மை

பூணும் அன்பர், நற்சிந்தனையாளர், கட்டுரையாளர், படைப்பாளன் என்னும் எண்ணில் அடங்காச் சிறப்புகளை உடையவரும், முதுநிலை வளவாளருமான கலாநிதி கே. நாகேஸ்வரன் அவர்களது மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பக்கிடைத்தமை, யான் பெற்ற பெரும் பேறேயாகும்.

தமிழின் அருஞ்சுணையாகப் பேரமுதாக விளங்கும் எம் கௌரவத்திற்குரிய பேராசான் அவர்களை உளப்பூங்காவில் மலர்ந்த வாழ்த்துப் பூக்கள் தூவி மனமார வாழ்த்துகிறேன். என் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களே! நீங்கள் என்றென்றும் இதே செந்தமிழ் சாரலுடன், இன்மொழியுடன், இளமை மிடுக்குடன், மங்காப்புகழுடன் வாழ வேண்டும் என எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிராத்தித்து வேண்டுகிறேன்.

வாழ்க! வாழ்க! பல்லாண்டு நல்நாமம் பூண்டு வாழ்க!
உலகம் எங்கும் உம்புகழ் நீண்டு வளர்ந்தோங்குக!

திருமதி. மாஜிதாயாஸீன்,
இக்கிரிகொள்ளாவமு. ம. வி,
அ/புரம்.



நல்ல மனிதர்

மணி விழாக் கண்ட கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா சிறப்பு மலரூடாக வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன். பட்டங்கள் பல பெற்று நல்ல ஆசானாகத் திகழ்ந்து பலரை வழிகாட்டிய பெருமைகள் போற்றக் கூடியவை. அதைவிடச் சிறந்தது அவருடைய ஆசான்களை அவர் பணிந்து வணங்கி ஆசிபெற்று அவர்களின் ஆசியில் நின்று நிலைப்பது.

சொல்வளம் மிக்கவர் சொல்லைக் கையாளும் பேச்சாற்றல் மிக்கவர். சமய சமூகக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் ஆற்றல் மிக்கவர். இதைவிட எல்லோருடனுடம் அன்புடனும் பண்புடனும் பழகவும் பழக்கவும் கைதேர்ந்தவர்.

நூலாசிரியராக, ஆய்வாளராக, விரிவுரையாளராக, சமய சமூக சேவகனாக, பேச்சாற்றல் மிக்கவராக இளையோர் முதியோர் அனைவரையும் கவரக்கூடிய செயலாற்றல் மிக்கவராக விளங்கக் கூடிய கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பல பட்டங்கள் பெற்றதை விட நல்ல மனிதராக நடமாடுவது மிகச் சிறப்பானது. அவர் எனக்கும் நண்பராக இருப்பது எனக்கும் பெருமை ஆகிறது. மணிவிழாவும் மலர் வெளியீடும் ஏனைய சொற்பாடுகளும் சிறப்பாக நடைபெற இறை ஆசிகள் கிடைக்க வேண்டுமென்று கேட்டு வாழ்த்துகிறேன். பல்லாண்டு வாழ்ந்து தமிழ் சமயப்பணிகள் மென்மேலும் செய்துவாழ வாழ்த்துகிறேன்.

சைவப்புலவர் சு. தேவமனோகரன், M.A., M.E.d., SLEAS III

உதவிக்கல்விப் பணிப்பாளர்,

தெல்தெனிய கல்வி வலயம்,

திறந்த பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர்.





ST. MARY'S CHURCH,
POONAGARY.

A MAN OF REMARKABLE TALENTS

It gives me great pleasure to forward this massage of felicitation on the occasion of the 60th Birthday of Dr. Kanagasabapathy Nageswaran my beloved teacher at St. Patrick's College, Jaffna.

Many are the teachers who have contributed immensely to keep the name and fame of the College. But some of them we used to remember always in our day today life. Among these, one of them, Dr. K. Nageswaran is the best one that I have ever seen in my life.

He is very good at discovering inherent talents in students. He saw to it that the talents of the students never went waste. He gives every opportunity to encourage the students to develop their hidden talents. It is due to this that our college excels in the spheres studies, drama, speech and other cultural activities specially in Tamil competitions.

He has great concern for everyone of the students. He virtually knows the names, family backgrounds and performances of each and every student which clearly indicates the keen interest he has in the welfare of the students whom he loves very much.

I can sincerely say that he is a man of Good will. Whatever the work he does, small or great, he does it perfectly and with good will.

A very remarkable quality I see in him is perfection. He wants everyboby and everything to be perfect. He wants everybody and everything to be perfect. He carries out everything in a perfect manner. His concern is about the spiritual life of the students too.

The relationship he has with the students is emotionally a closed enriching one. He does not think of himself and the students as separate indentities. He inculcates in the minds of the students the need for social conseiousness that is imperative to have a heart for needy and the unfortunate ones is the society.

Whenever he sees the poor students he helps them very much immediately. I could say that he is a very kind man. To encourage the students to respect and honour the teachers, he developed the habit of wishing the teachers whenever he sees them not only during the school times but also at any time, even outside school hours.

I take this nice opportunity to convey to him my warmest greetings and best wishes and I pray to God to Bless him abundantly to continue his dedicated and caring services to the students anywhere.

AD MULTOS ANNOS FELICISSIMOS ANNOS VIVAT

"For he has remembered me, his lowly servent! and from now on all people will call me blessed.

Luke 1: 48

Your loving
Student,
Revd. Fr. Balathas Brian

Parish Priest
St, Mary's Church,
Poonagary.



சமயத்தோடு ஒன்றி நிற்பவர்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களுக்கு மணிவிழா மிகவும் கோலாகலமாக நடைபெறவிருப்பதை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி. நன்றி மறவாத மாணவர்கள் சமய, சமூக, இலக்கிய ஆய்வுப் பணிகளைப் பாராட்டியும், வாழ்த்தியும் மணிவிழாவை ஏற்பாடு செய்திருப்பது என்பது அவர்களது நன்றியறிதலையும், ஆசானின் பெருமையையும் எடுத்தியம்புகின்றன.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை முதன்முதலாக இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தில் தயாரிப்பாளராக இணைந்து கொண்டபோது சந்தித்தது பசுமையாக இருக்கிறது. சமய நிகழ்ச்சிகளை ஒழுங்காக அந்தந்த விஷேடதினங்களுக்கேற்ப முன்கூட்டியே ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பும் திறன், ஆலய திருவிழாக்காலங்களில் நேரடி ஒலிபரப்புச் செய்வதில் எடுத்துக் கொண்ட சிரத்தை என்பவை மறக்க முடியாதவை.

பின்னர் பட்டப்படிப்பைத் தொடர்ந்து மேற்படிப்பைத் தொடர்ந்ததும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளர் ஆனதும் அவர் எடுத்த முயற்சியின் பயன்கள். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் மனதில் ஆன்மீக உணர்வே எல்லாவற்றையும் விட விஞ்சிநின்றது. சமயச்பேச்சு, கதாப்பிரசங்கம், ஆலய நேர்முகவர்ணனை, எழுத்திலே சமய நீரோட்டம் என எதிலும் சமயமே ஒன்றி நின்றது. இது தொடர்ந்து இந்து மக்களுக்கு கிடைக்கவும், மேலும் பல்லாண்டு ஆரோக்கியத்துடன் வாழவும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவடியை வணங்கி வாழ்த்துகிறேன்.

'கலாபூஷணம்' மயில்வாகனம் சர்வானந்தா, J. P
ஊடகவியலாளர்.



ஆற்றலும் துடிப்பும் வேகமுங்கொண்ட சிறந்த கல்விமான்

கல்விமான், சொற்பொழிவாளர், ஆய்வாளர், விரிவுரையாளர் என்று பல்வேறு வகிபங்குகளில் வலம் வந்து கொண்டிருக்கும் கலாநிதி நாகேஸ்வரன் அவர்களுக்கு அகவை அறுபது வந்து மணிவிழா நிகழ்வு ஒன்று நடத்துவதிலிருந்து தான் பலருக்கும் தெரியவருகிறது. ஏனெனில், அனைத்துக் கல்விசார் நடவடிக்கைகளிலும் அவர் உற்சாகத்துடன் பங்கேற்றுச் செயற்படும் விதத்தினை நோக்கும் போது, கலாநிதி அவர்கள் அறுபது வயதை அடைந்துவிட்டாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழர் பண்பாட்டு பாரம்பரியத்தில் அகவை அறுபது என்பது வாழ்க்கைச் சக்கரத்தில் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. அறிவும், அனுபவமும், மனமும் முதிர்ச்சி பெறும் காலகட்டம். வாழ்க்கையின் பூரணத்துவம் என்பது அங்கு தான் எய்தப்பெறுகிறது. இத்தகையதொரு தருணத்தில், வாழ்த்திற்கும் வயதுண்டோ! என்ற நிலையில் நின்று, மணிவிழா நாயகன் மதிப்பிற்குரிய கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களைத் தமது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ இறைவன் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

கலாநிதி அவர்களை, அறிவையும், அனுபவத்தையும் நாசூக்காக நகைச்சுவையோடு கலந்து பரிமாறும் ஆற்றல் கொண்ட சிறந்த கல்விமானாகவே நான் தரிசித்திருக்கிறேன். இவருடைய சமூக, சமய, இலக்கிய, ஆய்வுப் பணிகள் மாணவர் சமூகத்தினரிடையே அசையாத சொத்துக்களாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றன. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்ற வாழ்வியல் நெறிசார் கோட்பாட்டிற்கு ஏற்ப, மானுடம் பயனுற வாழுதல் என்பது அர்த்தமுள்ள வாழ்க்கையின் எல்லைக்கோடுகளால் பூரணத்துவம் பெறுகிறது. அந்தவகையில், தமது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, மாணவர் சமூகத்தினரும் பயன் பெறவேண்டி வாழ்ந்துகொண்டிருக்கும் இப்பெருந்தகையாளர் தொடர்ந்தும் தனது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றிடுவதற்குச் சிறந்த உடல், உள ஆரோக்கியத்தினை இறைவன் அவருக்கு வழங்குவாராக! என்று பிரார்த்தித்து, அவருடைய செயலில் துடிப்பும் வேகமும் நெடிது தொடரவும் வாழ்த்துகிறேன்.

நன்றி! நீடுழி வாழ்க!

Ms. Vijitha Sivapalan
Lecturer, Sri Lanka Foundation Institute,
No. 100, Independence Square, Colombo - 07.



அறிவுக்களஞ்சியம்

பரசமே உருவான ஆசான், பண்பின் இருப்பிடம், அறிவுக் களஞ்சியம், மதிப்புக்குரிய மகான். உங்களுக்கு எனது மணிவிழா வாழ்த்துக்கள். நீங்கள் நலமுடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ வேண்டும், உங்கள் சேவைகள் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உங்கள் மடல் கண்டதும் மகிழ்ச்சியடைந்தேன். உங்களை நேரில் பார்த்து போற்ற மகிழ்ச்சியாக இருந்தது. அன்றைய ஞாபகங்கள் எல்லாம் வந்தன. University எப்படி இருக்கிறது மிகவும் பல கட்டிடங்கள் கட்டப்பட்டு விட்டதா? பல தமிழ்ப் பிள்ளைகள் இருக்கிறார்களா? அன்று University இல் இருந்த படித்த ஞாபகங்கள் என்றும் அழியாதவை. நினைத்துப் பார்க்கும் போது இனிமையாக இருக்கிறது.

இப்படிக்கு
G. **சுப தீபா**
யாக்கர வீதி,
கரவெட்டி.

சமகாலத்தில் தமிழில் சிறப்புபட்டம் பெற்றோம்

அன்பிற்கினிய நாகேஸ்வரன்,



அறுபதாவது அகவையில் ஆர்ப்பாட்டமாக கால் நுழைக்கின்றாய். ஆனந்தமாக இருக்கிறது. உனக்கு அறுபதாகிவிட்டதா? நம்பவே முடியவில்லை இன்னும் அதே இருபது வயது பையனைப்போன்ற துடிப்பு நகைச்சுவை உணர்வு. கலகலப்பான பேச்சு! நாம் பல்கலைக்கழக வாழ்விற்கு நன்றி சொல்லிவிட்டு வாழ்வுக்கு ஆதாரமான பணத்தை சம்பாரிக்கும் முயற்சியில் இலங்கை வானொலியில் நேர்முகப் பரீட்சைக்காக நாமிருவரும் முதன் முதலில் சந்தித்த அந்த இனிய நாட்களை மலரும் நினைவுகளாக எனக்குள் மீட்டிப்பாக்கிறேன். நீ கற்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். எனது பேராதனைப் பல்கலைக்கழகம். பல்கலைக்கழகங்கள் வேறுபடலாம் எமது படிப்பு தமிழில், சிறப்புப்பட்டதாரி நீயும், தமிழில் சிறப்புப்பட்டதாரி.

நேர்முகப் பரீட்சையில் நீ தமிழ் நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளனாகத் தெரிவுசெய்யப்பட்டாய்! நான் இலங்கை வானொலியில் வர்த்தக சேவையில் நிரந்தர அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். நாம் சந்திக்கும் போதெல்லாம் உனக்குள் இலக்கிய அருவி ஊற்றெடுக்கும். அப்போதெல்லாம் நான் அதிகம் பேசுவதில்லை. உனது கவிதையில் கம்ப ரசத்தில், காவியச்சுவையில் லயித்து கேட்டுக்கொண்டேயிருப்பேன். அநேக சமயங்களில் சிரித்து. சிரித்து (மனம் விட்டு) உனது பேச்சாற்றலைக் கேட்டு வியந்துபோய் விடுவேன். ஒரு கட்டத்தில் நான் திருமணமாகி புகுந்தவீடு (நுவரெலியா) சென்றுவிட்டேன். நீ சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சென்றுவிட்டாய். ஒரு தடவை மீண்டும் சந்தித்தேன். அப்போது நீ உடம்பு சௌகரியமில்லை என்றாய்.

நான் தெய்வீக சிகிச்சை (Reiki) நிபுணராக இருந்தேன். அந்த தெய்வீகப் பயிற்சியை உனக்குச் சொல்லித் தந்தேன். பதுளை Rock Hill காளியம்மன் மீண்டும் நம்மை சந்திக்க வைத்தாள். நான் பிரதம அதிதியாக பதுளை காளியம்மன் கோயில் இறுவட்டு இசைத்தட்டு வெளியீட்டு விழாவிற்கு பதுளைக்கு வருகை தந்தேன். நீ அங்கே என்னை வரவேற்று உபசரித்ததும், வில்லுப்பாட்டு இசைத்ததும் மறக்க முடியாத இனிய நினைவுகள்.

நாகேஸ்வரன்! நீங்க எப்போதும் இதேபோல இனிமையாகப் பேசி பல்லாண்டு வாழவேண்டும். இதயம் நிறைய வாழ்த்துகிறேன்.


வாழ்க வளமுடன்.

அன்புடன்

உமா



உ
சிவமயம்



மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு
MAVAI SIVANATHAM DEBATE COMMITTE

அமைப்பாளர்:
அருட்செல்வரீ
அருள் நெறித் தமிழருவி
சைவப்புலவர்
சைவசித்தாந்தபண்டிதர்
செ.கந்தசத்தியதாசன் ஆசிரியர் M. A.
B.A.(Hons.) HinduCiv. (Jaf.)
Dip.in Edu.(Jaf.) Sce.Spc.Trd.

பணிமனை
MURUGAN THIDA
PUTTUR EAST
PUTTUR
077613217 6

உபபணிமனை
சைவப்புலவர் நித்தியதசீதரன்
விக்னா கல்வி நிலையம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பல்துறைக் கலைஞர்

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வாக்கிற்கமைய மணிபல்லவம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருளால் அவதரித்தவர் கலாநிதி நாகேஸ்வரன். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள்பெற்று, பண்ணிசை விற்பன்னைராய், கதாப்பிரசங்கியாய், சொற்பொழிவாளராய், விரிவுரையாளராய்ப் பலருக்கும் நல்லாசானாய்த் திகழ்கின்றவர்.

கல்வித்துறையில் மிளிர்ந்து முதுகலைமாணி, கலாநிதிப்பட்டங்கள் பலபெற்றதோடு வாகீசகலாநிதி, 'சொற்பேராழி' அருட்கலைமாமணி ஆகிய கௌரவப்பட்டங்களைப் பெற்று சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முன்னாள் தலைவராக, முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிவதோடு பிறந்த மண்ணாம் மணித்தீவில் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மரபுவழி அறங்காவலராக இருந்து அரும்பணி ஆற்றிவருகிறார். ஆலய விழாக்களில் வானொலித்தொலைக்காட்சி வர்ணனைகளை மிகச்சிறப்பாக ஆற்றிவருகிறார்.

சொல்லும் செயலும் ஒன்றாக, சைவாசாரசீலராகச் சமயதீட்சை பெற்று சைவப் பணியாற்றிவரும் நாயகன் கனகசபாபதியின் அரும்புதல்வனாக ஸ்ரீ நாகபூஷணியின் வலப்புறம் அமைந்த நாகேஸ்வரனாக விளங்கும் பொருமானோ எனப் போற்றக்கூடிய

பக்குவ நெறியில் வாழ்பவர். இன்று அகவை அறுபதில் மணிவிழா நாயகனாக வலம் வரும் நாகேஸ்வர வாரிதியை பல்லாண்டு காலம் கல்விப்பணி, கலைப்பணி, அறப்பணியாற்றி வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்க வளமுடன்

வையகம் போற்ற

அருட்சொல்வாரி, அருள்நெறித் தமிழருவி, அருள்நெறிச் செல்வர், அறநெறிக்குரு, சொல்லமுதவாரி, செஞ்சொற்செல்வர், சைவசித்தாந்த பண்டிதர், தர்மாசியர், சைவசொற்பொழிவாளர், சைவசித்தாந்தவாரிதி, சைவசித்தாந்த கலாநிதி, சைவப்புலவர்

செ. கந்த சத்தியதாசன், J. P

B.A. (Hons)., (M.A. in Shaiva Sithantham Dip.in Edu.(Jaf)Spe.Sce Trd. (Palaly)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம், அதிபர், கன்னியர் வைரவர் அறநெறிப்பாடசாலை, அமைப்பாளர், மாவை சிவநாதம் பட்டிமன்ற குழு, செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், வருணனையாளர் தொலைக்காட்சி, வானொலிகள்.

முருகன்திடல், புத்தூர் கிழக்கு. புத்தூர், யாழ்ப்பாணம்.



யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவனாக நான் அறிந்த நாகேஸ்வரன்

நான் கடந்து வந்த கல்விப்பாதையில் சந்தித்தவர்களைச் சிந்தித்துப் பார்க்கிறேன். இவர்களில் என்மனதில் பதித்தவர்களுட் தமிழ் அறிஞர் கலாநிதி நாகேஸ்வரனும் ஒருவராவர். இவரது நகைச் சுவையும் கூட இவ் உலகில் நல்ல அறிஞர்கள் பலரை நாம் அறிந்திருக்கிறோம். பேச்சிலே வல்லவர் சிலர், எழுத்திலே வல்லவர் சிலர். கவியில் வல்லவர் சிலர், இம்மூன்றிலும் வல்லவர்கட்கு பிறருடன் நயமாக உரையாடத் தெரியாது. மேற்கூறிய நான்கிலும் சிறந்தவர்கட்கு இலக்கியத்திறன், ஆக்கத்திறன் இருக்காது. இவற்றில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக வாகீச கலாநிதி, முனைவர் நாகேஸ்வரன் விளங்குகிறார் என்றால் மிகையாகாது. இவரது நாவண்ணத்தையும், கருத்து வண்ணத்தையும் எம்நாட்டவர் நன்றாகவே அறிவர். அழகுமிக்க சொற்களை ஆற்றலோடு பயன்படுத்தி நகைச்சுவையுடன் கூறிப் பிறரை ஈர்ப்பதே இவரது தனிச்சிறப்பு.

தமிழும், சமயமும் நிலை உயர வேண்டும் என்பதே இவரது பேரவா. இதனை இவரது சொற்பொழிவுகளில் இருந்தும், ஆக்கங்களில் இருந்தும் எம்மால் அறியமுடிகிறது. வானொலி, தொலைக்காட்சியில் இவர் ஆற்றிய சமய நற்சிந்தனைகள், ஆலய உற்சவங்களின் போது இவரது நேரடி வர்ணனைகள் பலரை மெய்மறக்கச் செய்துள்ளன. இவரது நூல்கள் பலரைக் கவர்ந்துள்ளன.

இலங்கையின் வடபகுதியின் முதல் பல்கலைக்கழகமான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது தொகுதி மாணவனாக அறிமுகமான திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் இன்று மொழித்துறையிலே கலாநிதி நாகேஸ்வரனாகிய மணிவிழாக் காணும் சிறப்பைப்பெறுகிறார். அவரது மணி விழாவிற்கு வாழ்த்தும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பல்கலைக்கழகத்தில் தமிழ் மன்றம், இந்துமன்றம் ஆகியவற்றில் நிர்வாக உறுப்பினராக இருந்துள்ளார். இம்மன்ற நிகழ்வுகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது பேச்சு ஆற்றல், ஆக்க ஆற்றல்களைக் காணமுடிந்தது. ஏனைய மாணவர்களுடன் அன்பாகவும், நகைச்சுவையாகவும் பழகி அனைவரது மனங்களையும் கவர்ந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இவரை அறியாதவர்கள் இருக்க முடியாது. இவர் தமிழ்ப்பாடத்தைச் சிறப்பாகக் கற்றதுடன் சிறப்புச் சித்தியையும் பெற்றுள்ளார். அத்துடன்

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்துறையின் முதலாவது தொகுதியின் முதலாவது சிறப்புப் பட்டதாரி மாணவன் என்ற பெருமையையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. படிக்கும் காலத்தில் ஒரு தமிழ் விரிவுரையாளராக வேண்டும் என்பதே இவரது விருப்பம். ஆனால் இன்று அதற்கும் மேலாக மொழித்துறையில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்று சிரேஷ்ட விரிவுரையாளராக இருக்கிறார். அத்துடன் சொற்பொழிவாளர், கலைஞர், நூலாசிரியர், முனைவர், வாகீசகலாநிதி, கலாநிதி என்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக கல்வியின் பின் நீண்ட காலத்தின்பின் கொழும்பில் இவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதே நட்புடனான பேச்சு, அதேநகைச்சுவை, அதே கலகலப்பு, அதே சுறுசுறுப்பு, அதே சிரிப்புடனான பேச்சு, மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது.

மணிவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் இளமையிருந்த தமிழ்பேச்சு, தமிழ் ஆக்கம், நகைச்சுவை, கலகலப்பு இருக்க வேண்டும் எனவும், மொழித்துறையில் சிறப்பாக மேலும் தமிழ்மாணவர், மக்கள் இவரது சேவையைப் பெற வேண்டும் எனவும், மனைவி, மக்களுடன் மேலும் பல விழாக்களைக் கண்டு களிக்க வேண்டும் எனவும் எல்லாம்வல்ல அவர் வணங்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள் பாலிக்க வேண்டும் எனவும் மனதார வாழ்த்துகிறேன்.

சிவா தவேந்திரன்.
ஆசிரியை,
இந்துக் கல்லூரி,
பம்பலப்பிட்டி.



ஒப்பற்ற குணக்குன்று; சால்புக்கு இருப்பிடம்

வெண்பா

நேரோங்கு நயினையம்பதி வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்
சீரோங்கு நந்தன வருஷம் ஆடித்திங்கள் இருப்தோராம் நாள்/ஞாயிறு வாரம்
05.08.2012ல் பாரோங்கு பூமியில் அகவை அறுபதில் மணிவிழா வேளையில் அன்னாரை
நேரோங்கு சபை நலங்களுடன் உடல்நலம் ஒன்றுசேர்ந்து பவளவிழா நூற்றாண்டு விழா
– காணவேணுமென வாழ்த்துகிறேன்.

ஐயா!

ஆழ்ந்து அகன்ற தங்கள் அறிவின் நுண்மையையும், ஆத்மீக வாழ்வின் செம்மையையும் நான் அளந்தறிய வல்லேன்அல்லன் ஆயினும் தங்கள் அன்புசால் தொடர்பினால் நான் உழலுகின்ற நெறியல்லா நெறிகளை நமக்கு எடுத்துக்காட்டிய அருட்செல்வரே!

தாங்கள் ஒப்பற்றதொரு குணக்குன்று, சால்புக்கு இருப்பிடம், தங்கள் அந்தக்கரணங்கள் புனிதமானவை, மறந்தும் மற்றவர்கட்கு உறுகண் செய்யாதவை, பிறன்கேடு சூழாதவை.

பெருந்தகையே !

சமன் செய்து சீர்தூக்கும் கோலாய் மேன்மைகொள் வைவநீதியாய், ஒழுக்க நெறியாய், அறநெறியாய்த் தாங்கள் திகழ்கின்றீர்கள், அவ்வாறே தங்கள் ஆத்மசக்தி மேலும் திகழ்வதாக!

மேலும் தங்கட்கு நோயற்ற திடகாத்திரத்தையும், நீடித்த ஆயுளையும் அருளித் தங்கள் சாதகங்கள் மேலும் மேலும் அபிவிருத்தி எய்துமாறு எல்லாம் வல்ல நயினைத்தாயை வேண்டி வணங்கி வாழ்த்தும்,

சைவஜோதி – ஆன்மீக அருளொளி,
சிவத்தமிழ்மணி– பௌராணிகர்
நாக. சிதம்பரநாதர் குடும்பம்
நீர்வேலி.



சிந்தனைப் பெட்டகமே சிறப்பாக வாழியவே

நயினை நாகபூஷணித் தாயின் பொற்கமலப் பாதம் பணிந்தேத்தி நாளும் சைவப்பணிக்கே தம்மை அர்ப்பணித்துப் பணிபுரியும் எனது ஆப்த நண்பர் கலாநிதி நாகேஸ்வரனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புனிதப் பிறவியாம் மனிதப்பிறவி எடுத்ததன் பயன் இறைதொண்டாற்றுவதே என்பதற்கிணங்க அளப்பரிய சேவையாற்றி இப்பொழுது அறுபதாவது அகவையை எட்டியிருக்கும் இவர் ஒரு சிறந்த பண்பாளர். நயினைத்தாயின் ஆலய மரபுவழி அறங்காவலராகவும் சப்ரகமுவ பல்கலைக்கழத்தின் மொழித்துறை முன்னாள் தலைவராகவும் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும் கடமையாற்றி அருந்தொண்டாற்றிய அண்ணலாக மிளிர்கின்ற இவர் இன்னும் நீண்டநாள் வாழ்ந்து சிறப்புறத் திகழவேண்டுமென்று உளமார வாழ்த்தி மகிழ்கிறேன்.

மனிதனாகப் பிறந்தால் இப்பூவுலகில் வாழ்ந்ததற்கான அடையாளத்தை நாம் உருவாக்குவதல் வேண்டும், அந்த வகையில் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி இன்று பீடு நடைபோட்டு வெற்றி விழா மணிவிழாக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

இலங்கை வானொலியில் அவரது குரல் கணீரென்று ஒலிப்பது இன்றும் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. சைவமும் தமிழும் வளரப் பாடுபடும் இவர் என்னுடைய குரலும் வானொலியில் ஒலிக்கவேண்டுமென்று சைவ நற்சிந்தனை முதலான சமய நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்தமை மறக்க முடியாதது. கவிதை, கட்டுரைகள் மூலம் வாசகர்களின் உள்ளத்தில் இடம்பிடித்த இவர் ஒரு சிறந்த ஆன்மிகப் பேச்சாளராகவும் கதாப்பிரசங்கம் செய்யும் கலைஞராகவும் திகழ்வது பாராட்டுக்குரியது.

எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள் பெற்று நல்லுலகம் வாழ்ந்து செழிக்க அறப்பணியாற்றும் நாகேஸ்வரன் நீடு வாழ்க! மணிவிழா நாயகனே வாழ்க பல்லாண்டு!

"என்றும் வேண்டும் இன்ப வாழ்வு"

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்
சீர்திருத்தப் பணியாற்றும் நற்சிந்தனைப் பெட்டகமே!
உந்தனை வாழ்த்துவதில் உவகையே கொள்ளுகின்றேன்
ஊர் போற்றிப் பார் மகிழ உன்னதமாய் வாழியவே!
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் நற்களிப்புடனே
நாகபூஷணித்தாயின் நற்கருணை மிகப்பெறவே
வந்தனை செய்தே நானும் மணிவிழாக்காணும் நின்னை
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறேன் வாழியவே!

வாழ்க வளமுடன்.

சிவநெறிக்கலாநிதி,
ஆன்மீக எழுத்தாளர், வில்லிசைக் கலைஞர்,
'கலாபூஷணம்' இராசையா ஸ்ரீதரன்



பல்துறை அறிவு கைவரப்பெற்ற கலாநிதி நாகேஸ்வரன்

நீலக் கடலின் மத்தியில் – வடபால் புகழ் மண்டிக் கிடக்கும் மண்ணுக்கு உரித்தாய் அமைந்த சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது நயினாதீவு. அத்தீவின் மைந்தன் மணிவிழாக் காணும் இந்நாளில் நாமும் மகிழ்வுறுகிறோம். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் அளவிற்கு ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஓங்கி வளர்ந்து நிற்கிறது தமிழ். இறைவனால் உருப்பெற்று அரசர்கள் மடிவளர்ந்து ஆலயத்தில் அடி எடுத்து வைத்து பெருஞ் செல்வந்தர்களிடம் நடமாடி போட்டிகளிலும், சமயவாதங்களிலும் புதுப்பொலிவு பெற்று, தன்னுணர்ச்சிப் பாடல், நீதிப்பாடல், இதிகாசம், காவியம், புராணம், சிற்றிலக்கியம், உரை நடை எனும் பல்வேறு அணிமணி பூண்டு நாம் வாழும் காலத்தில் உலக அரங்கில் நடனமாடிக் கொண்டிருக்கும் தமிழ் அன்னையையைப் போல் முனைவர், கல்விமான், வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களது பன்முக அணிகலன்களைக் காண்கிறோம்.

தமிழியலில் மட்டுமன்றிப் பல்வேறு துறைசார்ந்த அறிவைக் கைவரப்பெற்ற கலாநிதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாச் சிறப்பாக நடைபெற அகவிழி ஆசிரியர், சஞ்சிகை சார்பிலும் விழுது அமைப்பின் சார்பிலும் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல்கலைக்கழகப் பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, ஆய்வுத்துறை, தமிழ்க்கல்விமேம்பாடு போன்றவற்றில் அவர் பல சாதனைகளைப் புரிந்து நூறாண்டு காலம் சிறப்புடன் வாழ வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறோம்.

V. S. **இந்திரகுமார்.**
ஆசிரியர்,
'அகவிழி'



ஸ்ரீ நாகபூஷணியின்
திருவருட்செல்வர் நாகேஸ்வரன்

சந்திப்புக்கள் என்பதே தெய்வ சங்கற்பம். அதுவும் முதன் முதலில் ஒருவருடைய சந்திப்பு ஸ்திரமாவது இறைவன் கட்டளையுமாகும். ஆனால் எல்லாச் சந்திப்புக்களுமே நிரந்தரமாவதுமில்லை.

நாம் இவ்வுலகில் ஜனனமானதும் அதனைத் தொடர்ந்து எமக்கும் பிற உயிர்களுக்குமான தொடர்புகளில் பல சாஸ்வதமாவதும் கண்கூடு. இலவை சந்தோஷமானதும், எம்மீது ஒருவர் கொண்டுள்ள அன்பு, பிரேமையின் வலுவைப் புரிந்து கொண்டுள்ளமையுமாகும்.

ஆம். எனது பலருடனான முதல் அறிமுகங்கள் இறை அற்புதங்கள்!

1984ஆம் ஆண்டு என நினைக்கிறேன். யாழ்ப்பாணத்தில் இளம் கலைஞர்கள் மன்றத்தில் ஒரு கலைநிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டுவிட்டு, எனது துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது ஒரு அழகிய இளைஞர் என்பின்னால் வந்தவர் பின்னர் என்னுடன் இணைந்து கொண்டார். அவர்தான் அன்றும், இன்றும் பலரால் புகழ்ந்து வாழ்த்தப்பட்டுக் கொண்டேயிருப்பவர் எனது அருமை நண்பர், வாகீசகலாநிதி, நாவல்லோன், அன்பர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களாவர். அன்றைய தினம் அவரது பேச்சைக் கேட்டபின்பு, அவருடனே ஒரு அறிமுகம் கிட்டும் என நான் நம்பவேயில்லை. அதன்பின்னர் நான் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண பிராக்திய அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றும் போது எனது அருமை நண்பராகத் திரு. நாகரத்தினம் திரு. க. நாகேஸ்வரன் தனக்குச் சகலன் எனத் தெரிவித்த போது அவரிடமிருந்தும் இவர்பற்றிய விடயங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இவர் கடமையாற்றியபோதே இவரது நட்புக்கிட்டியது. அதனைத் தொடர்ந்து இவரது ஆன்மீக, தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள், ஆய்வரங்க அமர்வுகளில் ஆற்றிய உரைகள், பலதடவைகளில் நான் மட்டுமல்ல அனைவருமே கேட்டுவியந்தோம். படுதுணிச்சலான பேர்வழி. இவர் எவர் முகத்திற்காகவும் தான் சொல்ல வேண்டியதில் இருந்து பின்வாங்க மாட்டார். தமிழன் அச்சப்படுவதில்லை. அதற்கு ஒரு அடையாளம் திரு கனகசபாபதி நாகேஸ்வரன் என்றால் அதுமிகையல்ல.

சைவமும், தமிழும் இவர் மூச்சோடு இழையோடுகிறது. சொல்ல வேண்டியதைச் சொல்லவேண்டிய தருணத்தில் அழுத்தி உரைப்பவர்.

இத்தகைய துணிச்சலுடனும் ஏன் சில சமயம் ஆக்ரோஷத்துடனும் பேசுபவரை நேரில் காணும்போது நான் வியப்படைவதுண்டு. எல்லோரிடமும் பாசமுடனும், உரிமையுடனும் பழகும் இளகிய மனசுக்காரன், பண்பாளன். மிகப்பிரமாதமாக தேவார திருவாசக பாராயணங்களைத் தெளிந்த, கம்பீரமான குரலில் பாடும்போது மெய்சிலிர்க்காதவர் எவருளர்?

நான் இவரது மாணவர்களைச் சாந்திப்பதுண்டு. எல்லோருமே இவர் ஆசான் மட்டுமல்ல, தங்களது சொந்தச் சுக நலத்தையும் மிக அக்கறையுடன் விசாரித்து, உதவி நல்கும் பண்பாளர் எனச் சொல்வதுண்டு. குறிப்பாக நான் எனக்கு அறிமுகமேயில்லாத மலைநாட்டு மக்கள் இவரது மாணவர்கள் இவர்பற்றிச் சொல்லும் போது நான் மிகவும் மகிழ்வெய்வதுண்டு.

இன்று மலைநாட்டு எம் தமிழ்ச் செல்வங்களின் நலன் அவர்கள் வளர்ச்சி அவர்கள் கல்வி வளர்ச்சியிலே தங்கியிள்ளதை இவர் நன்கு அறிவார். இந்த நல்நோக்கும் எம் அனைவரிடமும் மேலோங்கினால் மலையகம் மென்மேலும் வளர்ச்சி காணும் என்பதில் ஏது ஐயம்? மேலும், இவர் தமிழை சைவத்தையே காதலுடன் பூரண சரணாகதியடைந்தமையினால் அரசியல் பக்கமே திரும்பிப் பார்ப்பதில்லை. அதற்கான நேரமும் கிடைப்பதுமில்லை. இவரது அனைத்து ஆளுமைகளையும் விவாதித்துப் பேச எனக்கு இன்னமும் காலம் போதாது.

இத்தகைய பல்திறன்கொண்ட கல்விமானும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் அம்மாள் எமக்கு ஈந்திட்ட அரும்பொக்கிஷம். இன்று இவருக்கு மணிவிழா காணும் அன்பர்கள் இவரைப் பல்லாண்டு காலம் வாழப் பிராத்திக்கின்றனர். இன்னும் ஒரு முக்கிய விடயத்தைக் கூறவேண்டும். எங்களுக்கும் நயினை அம்பாளுக்கும் இடையிலேயான தெய்வீகப் பிணைப்பும் மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

